
## ஆத்மீகவள்ளல், ஆத்மஜோதி

# முத்தையா சுவாமிகளின் நூற்றாண்டு விழா மலர்



தொகுப்பாசிரியர்

திருமுறைச்செல்வர் சிவ முத்துலிங்கம்


வெளியீடு:

ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை - கனடா

21-07-2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆத்மீகவள்ளல், ஆத்மஜோதி

# முத்தையா சுவாமிகளின் நூற்றாண்டு விழா மலர்

**தொகுப்பாசிரியர்**

**சிவ முத்துலிங்கம்**

வெளியீடு:

ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை - கனடா

21-07-2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| நூல்: | ஆத்மீகவள்ளல், ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளின் நூற்றாண்டு விழா மலர் |
| தொகுப்பாசிரியர்: | திருமுறைச்செல்வர் சிவ. முத்துலிங்கம் |
| எழுத்தமைப்பு: | மா. கனகசபாபதி |
| அச்சுப்பதிவு: | விவேகா அச்சகம் |
| வெளியீடு: | இந்து சமயப் பேரவை, ஒன்ராறியோ கனடா |
| முதற்பதிப்பு: | யூலை 2018 |

| | |
|---|---|
| Title: | Arthmeegavallal, Arthmajothy Muthiah Swamigal nootrandu Villa Malar |
| Compiled by: | Siva Muthulingam |
| Typesetting: | M. Kanagasabapathy |
| Printed & Bound by: | Viveka Press |
| Published by: | Hindu Religious Society of Ontario, Canada |
| First Edition: | July 2018 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்து சமயப் பேரவை தாபகர், ஆத்மீகவள்ளல், ஞானசுரபி

# ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24 MAY 2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

1. **பதிப்புரை** 4
2. **முன்னுரை** 6
3. **வாழ்த்துரைகள்:**
வடமாகாண முதலமைச்சர் நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன் 7
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை - கலாநிதி ஆறு திருமுருகன் 8
கதிர்வேலாயுத சுவாமி கோயில் 9
பூரண ஆச்சிரமம் 10
ஸ்ரீ சிவகுரு நாதபீடம் 11
ஆத்மஜோதி தமிழர் இணையம் 12
4. **கவிதை:**
ஆத்மஜோதி - திருமதி தங்கமுத்து தம்பித்துரை 13
5. **நாவலர் வழிவந்த சைவத்தின் காவலர்** - சிவ மகாலிங்கம் 14
6. **ஆத்மீகவள்ளல் ஆத்மஜோதி நா. முத்தையா** - திருமதி மு. இந்திராணி 18
7. **முத்தான முத்தல்லவோ முதிர்ந்து வந்த முத்தல்லவோ** - சி. சங்கரலிங்கம் 25
8. **புதுத் துறவு** - சபா அருள் சுப்பிரமணியம் 28
9. **முத்தையா என்னும் முத்தான குரு** - யோகா அருள் சுப்பிரமணியம் 30
10. **ஏழாலையின் ஆத்மஜோதி** - இராஜ்மீரா இராசையா 32
11. **ஆத்மஜோதி நாகமணி முத்தையா** - பேராசிரியர் க. நாகேஸ்வரன் 36
12 **நாம் ஏன் பிறந்தோம் மேலும் பிறவாதிருப்பதற்கே** - பூர்ண சுவாமிகள் 42
13. **ஐம்புல வேடரில் அகப்பட்ட ஒருவர்** - சிவ உதயகுமார் 48
14. **கடமையும் இறைவனும்** - நா. நடேசன் ஆசிரியர் 50
15. **குருநாதருக்கு சிஷ்யையின் சமர்ப்பணம்** - திருமதி கோகுலேஸ்வரி ராம்குமார் 52
16. **நல்லாரைக் காண்பதுவும் நன்றே** - இராமநாதன் 55
17. **சைவத் தமிழ்ச் சூழலைப் பேணுவதற்கு ஆத்மஜோதி அவர்களின் வழிகாட்டல்** - பால சிவகடாட்சம் 56
18. **நடமாடிய ஞானி ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள்** - சு. சிவதாஸ் 58
19. **வெண்ணிற ஆடையில் ஓர் ஈழ மகான்** - வ. உமாகாந்தன் 63
20. **நன்றிமலர் சொரிந்தோம் குருவடி பணிந்தோம்** - கமலாதேவி மகாலிங்கம் 65
21. **ஆத்மஜோதியின் அறிவுரை** - சித்தாந்தரத்தினம் க. கணேசலிங்கம் 69
22. **ஞானசுரபி முத்தையா சுவாமிகள்** - அன்னபூரணம் ஞானசம்பந்தர் 72
23. **ஆதமஜோதி ஐயா அவதாரம் செய்து நூறு ஆண்டுகள்** - செ. சோமசுந்தரம் 76
24. **நிற்கின்ற நின்னை நினைக்கின்றேன் நான்** - வ. ஞானகாந்தன் 77
25. **ஏழாலையூர் ஆத்மீகவள்ளல் நாகமணி முத்தையா** - அ. சிவானந்தநாதன் 78
26. **நூற்றாண்டு காணும் குரு தேவர்** - சிவ முத்துலிங்கம் 80
27. **ஒவ்வொரு ஆத்மாவும் ஜோதியாகப் பிரகாசிக்க வேண்டும்** - நா நடேசன், ஆசிரியர் 83
28. **ஆத்மஜோதி ஓர் அணையா ஜோதி** - சண்முகலிங்கம் இராசலட்சுமி 84
29. **மக்களின் உள்ளம் கவர்ந்த ஞானி** - சு. திருச்செல்வம் 86
30. **தெய்வீகச் சிரிப்பின் மகிமையை உணர்ந்தேன்** - திருமதி தனசக்தி சிவகுருநாதன் 88
31. **பொன்னான முத்து** - திருமதி சந்திராதேவி கணேசராசா 89
32. **நான் என்ன புண்ணியம் செய்தேனோ** - திருமதி இராசேஸ்வரி பத்மநாதன் 91
33. **ஆத்ம ஒளி** - திருமதி தவனேஸ்வரி சாம்பசிவம் 92
34. **ஆத்மீகவள்ளல் ஆத்மஜோதி** - வே பரமேஸ்வரி 93
35. **ஐயாவின் நிர்மலமான உருவம் என் மனதில் பதிந்துள்ளது** - திருமதி அருள்சக்தி வாமதேவா 95
36. **ஆன்மீகத் தொண்டர்** - திருமதி தவமணி தியாகராசா 95
37. **இறை வழிபாட்டிற்கு குரு ஒருவரின் வழிகாட்டல் அவசியம்** - வ. மனோகாந்தன் 96
38. **ஆத்மஜோதி நா. முத்தையா** - இ. செல்லையா 97
39. **ஆத்மஜோதி வித்தக விலாசம்** - வ . ஞானகாந்தன் 98

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

திருமுறைச்செல்வர் சிவ முத்துலிங்கம்
செயலாளர் - இந்து சமயப் பேரவை

என்அன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய என் குருதேவர் ஆத்மஜோதி ஐயா இப்பூவுலகில் தமிழ் மக்களின் நன்மை கருதிப்பிறந்து 100 ஆண்டுகள் ஆகிவிட்டன. அவர் இறைவன் திருவடியை அடைந்து 23 ஆண்டுகள் ஆகிவிட்டன.அவர் எங்களுக்கு உபதேசித்த பணிகளை சிரம் மேல் ஏற்று கடந்த 24வருடமாக எம்மை அர்ப்பணித்து பணியாற்றிக்கொண்டு வருகிறோம். ஐயா ஒரு விதையை ஊன்றி இதை வளர்த்தெடுங்கள் என்று பணித்தார். நாம் அதற்கு பாத்தி கட்டி தண்ணீர் ஊற்றி வளர்த்தோம். இன்று அந்த விதை மரமாகவளர்ந்து கிளை விட்டு படருகின்றது.ஐயா நீங்கள் கூறியது போல இன்னும் பல வருடங்களுக்கு பிறகு விருட்சம் போல வளர்ந்து பணியாற்றும் என்ற தளராத நம்பிக்கை எமக்கு உண்டு.

நூற்றாண்டு விழாக்காணும் விழாநாயகன் ஆத்மஜோதிசுவாமிகள் தன்னலங்கருதாத மகாத்தான தொண்டன். பூரண துறவி. மக்களை மேன்மைப்படுத்துவதே அவரின்ஒரே நோக்கம். தன் 21 ஆவது வயதிலே மலையக நாவலப்பிட்டியில் ஆசிரியத்தொழிலை ஏற்று அத்தொழில் ஊடாகவும் மற்றைய நேரங்களிலும் 43 வருடங்கள் ஒயாது பணியாற்றியவர். மலையகச் சிறார்களுக்கு மட்டுமல்ல மலையகவாழ் மக்களுக்கும் ஞானகுருவாகத்திகழ்ந்தவர். 1948 ஆம் ஆண்டு ஆத்மஜோதிச் சஞ்சிகையை இல்லறஞானி திரு க. இராமச்சந்திராவுடன் சேர்ந்து தொடங்கி 1983 வரை தமிழ் கூறும் நல் உலகெல்லாம் ஆத்மீக விழிப்பூட்டியவர். இலங்கை நாடெங்கும் திருத்தல பாத யாத்திரை சென்று ஆத்மீகப் பயிரை வளர்த்தவர். 1957 ஆம் ஆண்டு மாணவர்களுடனும் ஆசியர்களுடனும் சேர்ந்து நாவலப்பிட்டியில் இருந்து சிவனொளிபாதமலை வரை பாதயாத்திரை சென்றது மிகப் பிரபலமான நிகழ்வாகும். நல்லூர்தேர்த்திருவிழாகாலத்தில் நயினை- நல்லூர் பாதயாத்திரையிலும் ஏழாலை ஞானவயிரவகோயில்-நல்லூர்யாத்திரையிலும் பங்குபற்றிய மக்களையும்யாத்திரையை வீதிகளில் நின்று பார்வையுற்ற மக்களையும் பக்திமயமாக்கியது யாவரும் அறிந்ததே. 1983 ஆம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரத்தின்பொழுது ஆத்மஜோதி அச்சுக்கூடம் ஆத்மஜோதி நிலையம் யாவும் தீககிரையானபின் யாழ்ப்பாணம் திரும்பி சாவகச்சேரியில் சகோதரர் உடன் வாழ்ந்து வந்தார். அங்கே தங்கியிருந்த பொழுது ஆலயந்தோறும் சொற்பொழிவுகளையும் கிராமங்கள்தோறும் சற்சங்கங்களையும் கூட்டுப்பிரார்த்தனைகளையும் வீட்டுப்பிரார்த்தனைகளையும் நடத்தி வந்தார். யாழ் கூடாநாட்டு மக்களிடையே போராட்ட சூழ்நிலையிலும் ஆத்மீக அலை வீசிக்கொண்டே யிருந்தது. ஆத்மீகவள்ளல் அவர்களின் சேவையை போற்றாத பெருமக்கள் இல்லை. இச்சூழ்நிலையில் ஈழ மக்களின் விடிவை வேண்டி வடமாகாணம் முழுவதும் தன் சீடர்களையும் பக்தர்களையும் இணைத்துக்கொண்டு ஆலயம்தோறும் பாதயாத்திரை சென்றார். தொடர்ந்து அவர் செய்த பாத யாத்திரையால் மக்களுக்கு மத்தியில் பெரும் விழிப்புணர்வுடன் அஞ்சாநெஞ்சமும் மனத்தைரியமும் ஏற்பட்டது. நாவலருக்குப் பின் பல சைவப்பெரியார்களும் அறிஞர்களும் தோன்றியுள்ளனர். நாவலர் தன்னை அர்ப்பணித்து இறுக்கமான கொள்கையை வகுத்து பணியாற்றிய உத்தமர். குருதேவர் அவர்களும் தனக்கென ஒரு கொள்கையை அமைத்து அயராது இறைவனடி சேரும்வரை பணியாற்றிய பெருந்தகையாளர். தமிழ்மக்கள் மீது இவர்கள் கொண்ட தீராத அன்பே இதற்குக் காரணம்.

அவருடைய திருத்தல பாதயாத்திரைகள் போக்குவரத்து வசதிகள் உள்ள இக் காலத்தில் ஆய்வுக்குரிய விடயம். சுவாமி சைதன்யப்பிரபு பிரபுபாதா ஆகியோர் வழியில் நாமஜெப பஜணையை மக்களுக்கு மத்தியில் முன்னெடுத்துச்சென்றார். அவருடைய இந்தச்செயல் கலியுகத்தில் இறைவனடி சேருவதற்கு நாமஜெபம் ஒன்றே போதியது என்ற வியாசபகவானின் கூற்றை சிந்திக்கத்தோன்றுகின்றது. ஈழத்தில் இறை நாமஜெபப் பிரார்த்தனையை மக்கள் மயபபடுத்திய பெருமை ஐயாவையேசாரும். வீட்டுப்பிரார்த்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுப்பிரார்த்தனைகள் மூலம் வீடுகள்தோறும் ஆத்மீகத்தை எடுத்துச் சென்ற பெருமையும் ஐயாவையே சாரும். 1948 ஆம் ஆண்டு தொடக்கம் 1983 வரை 35 ஆண்டுகள் இல்லறஞானி திரு க. இராமச்சந்திரா அவர்களுடன் சேர்ந்து நாவலப்பிட்டியில் ஆத்மஜோதி அச்சுக்கூடத்தையும் ஆத்மஜோதி நிலையத்தையும் தாபித்து அதன் ஊடாக ஆத்மஜோதி சஞ்சிகையை தொடங்கித் தமிழ் கூறும் நல்உலகெல்லாம் பரப்பிய பெருமை இவர்களையே சாரும். சஞ்சிகையின் பேரான ஆத்மஜோதிஎன்ற பெயரை தன்பெயருடன் சேர்த்துக்கொண்ட பெருமையும் ஆத்மீகவள்ளல் அவர்களையே சாரும்.

மலையக மக்களினதும் பூர்வீக குடிகளான ஈழத்தமிழ் மக்களினதும் நல்வாழ்வில் அக்கறை செலுத்திய ஐயா அவர்கள் உலகளாவிய ரீதியில் தமிழ்மக்களின் நிலைகளில் கவனம் செலுத்தினார் இந்தியா மலேசியா சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்குச் சென்று பல மகாநாடுகளில் பங்கு பற்றி உரையாற்றி அஙயேுள்ள தமிழ்மக்களிடையே விழிப்புணர்வையூட்டினார். இந்தோனேசியாவில் இரண்டு வருடங்கள் வாழ்ந்து பல தமிழ்ப் பாடசாலைகளை ஆரம்பித்தார். கூட்டுப்பிரார்த்தனைகள் வீட்டுப்பிரார்த்தனைகள் சொற்பொழிவுகளை நடத்தி அஙகேயுள்ள தமிழ் மக்களுக்கு மத்தியில் ஆத்மீகவிழிப்புணர்வையும் தமிழ் மொழியில் தேர்ச்சியையும் உருவாக்கினார். 1994 ஆம் ஆண்டு சைவசித்தாந்த மகாநாட்டில் பங்குபற்றுவதற்காக கனடா வருகை தந்திருந்தவர் என்போன்ற அன்பர்களை இணைத்து இந்து சமயப்பேரவையை அமைத்தார். நாம் பேரவையின் ஊடாக கடந்த 24 வருடங்களாக பல அறப்பணிகளையும் முன்எடுத்து செல்வது யாவரும் அறிந்ததே.

**24 வருடங்களாக பேரவை ஆற்றிவரும் பணிகள்**

1 பத்தொன்பது வருடங்கள் பன்னிருதிருமுறை முற்றோதலை நடாத்துதல்
2. பத்தொன்பது வருடமாக கனடாவில் ஆத்மஜோதி சஞ்சிகையை வெளியிடுதல்
3. ஐம்பத்தாறு சமயம்சார்ந்த நூல்களை வெளியிட்டமை.
4. நாவலர் பெருமானின் வெண்கல திருஉருவச்சிலையைச் செய்து 20 விழாக்களை நடத்தியமை.
5 பேரவைக்கென ஒருசொந்த இடத்தை வாங்கி ஆத்மஜோதி இல்லம் எனப் பெயரிட்டு ஆச்சிரமம் போன்று நடத்துகின்றமை.
6. வருடந்தோறும் திருமுறை விழாக்களையும் மகாநாடுகளையும் நடத்துகின்றமை.
7 மகான்களின் குருபூசைகளுடன் சிறப்பாக சைவசமயம் சார்ந்த வழிபாடுகளை செய்கின்றமை.
8 ஆயிரம் தரத்திற்கு மேல் திருவாசகம் முற்றோதலை நடத்தியமை.
9 இந்திய திருத்தல யாத்திரைக்கு பேரவையின் திருக்கூட்டத்தினரை அழைத்துச் சென்றமை.
10. மூன்று முறை நாயன்மார்கள் கால்பதித்து திருமுறை பாடிய தலங்களில்பன்னிரு திருமுறைகளையும முற்றோதி சிதம்பரத்தில் திருமுறை விழாவை நடத்தியமை. இப்படிப் பல.

நாம் மேற்குறிப்பிட்ட நிகழ்வுகளை செய்வதற்கு தோன்றாத்துணையாக இருந்து எங்களை வழிநடததிய எங்கள் குருதேவர் அவர்களுக்கு நாம் யாவரும் நன்றியுடையவர்களோவோம். இந்நூலை வடிவமைப்புச்செய்த திரு மா. கனகசபாபதி அவர்களுக்கும் நூலை அச்சேற்றிய விவேகா அச்சகத்தினருக்கும் பேரவையின் சார்பில் என் நனறிகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

சைவதுரந்தரர் வி. கந்தவனம்
தலைவர், இந்து சமயப் பேரவை கனடா

இந்த மலர் வணக்கத்துக்குரிய ஆத்மஜோதி முத்தையா அவர்களைப் பற்றியும் அவர்களுடைய ஆத்மீகப் பணிகள் பற்றியும் பலவிதமான பதிவுகளைக் கொண்ட ஓர் அரிய மலராக விளங்குகின்றது. பதிப்புரை முதலாய ஆரம்பக் கட்டுரைகளுக்கு அப்பால் இத் தொகுதியில் அருமையான 34 கட்டுரைகள் அடங்கியிருக்கின்றன. ஆத்மஜோதி ஐயாவுடைய உத்தம சிஷ்யை ஆகிய திருமதி தங்கத்துரை அவர்களுடைய கவிதை ஒன்றுடன் தொடங்குகின்றது.

சிற்சபை ஈசனை சிந்தனை செய்து நற்கதி அடையலாம் நாம் எனக்கூறி சற்சங்க வட்டத்தில் சங்கமம் காட்டி பொற்பாதம் போற்றிப் பாடி மகிழ்வார் என்று பாடும் திருமதி தங்கத்துரை அவர்களும் ஓர் நல்ல கவிதைக்கு மங்கையாக விளங்குவதைக் காணலாம். இவ்விதமே சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம், பேராசிரியர் க. நாகேஸ்வரன், திருமதி மு. இந்திராணி போன்றவர்களும் பிறரும் எழுதிய நல்ல கட்டுரைகள் 34 இத்தொகுதியில் இடம்பெற்று இருக்கின்றன.

ஆத்மஜோதியார் பற்றி அன்றி ஆழமான ஆன்மீகக் கட்டுரைகள் இத்தொகுதியை அலங்கரிக்கின்றன. இவற்றுள் இயல்பான சிந்தனைகள், ஆத்மஜோதி ஐயா உடனான அனுபவங்கள் மற்றும் பல ஆன்ம தத்துவங்களைப் புலப்படுத்தும் பலவிதமான ஆக்கங்களைப் தொகுப்பாசிரியர் திருமுறைச்செல்வர் சிவ முத்துலிங்கம் அவர்கள் இதிலே தொகுத்திருப்பது ஓர் சிறப்பு.

இந்து சமயப் பேரவை வெளியீடுகளில் இது ஓர் தனித்துவமான தொகுப்பாக விளங்குவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

அந்த வகையில் வாசகர்களும் பிற ஆன்மீகச் செல்வர்களும் இத் தொகுப்பினை மதிப்புடன் பெற்று படித்துப் பயன் பெறுமாறு வேண்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண முதலமைச்சர், நீதியரசர்

## க. வி. விக்னேஸ்வரன் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

### ஆத்மஜோதி நூற்றாண்டு மலர்

1950களில் ஆத்மஜோதி இதழ்களை வாசிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அதனைத் தொடக்கியவர் திரு இராமசந்திரா அவர்கள். அவர் என்னுடைய தகப்பனாரின் நண்பர்.

பின்னர் திரு.முத்தையா அவர்கள் நடத்தி வந்தார். அதன் பின்னர் திரு முத்தையாவின் சீடரான சிவமுத்துலிங்கம் பொறுப்பாளராக கடமையாற்றி வருகின்றார். என்னுடைய இளமைக் காலத்தில் எனது தந்தையாரின் ஊக்குவிப்பின் நிமித்தம் ஆத்மஜோதி இதழ்களைத் தவறாமல் படித்துவர நேரிட்டது. சுவாமி சிவானந்தர், கடையிற் சுவாமிகள், யோக சுவாமிகள் போன்ற பல ஆத்மீக சீலர்கள் பற்றியும், ஆத்மீகம் சம்பந்தமான பல விடயங்கள் பற்றியும் கட்டுரைகளைக் கொண்டிருந்த ஆத்மஜோதி இதழ்கள் வெசாக் பண்டிகையின் போது புத்த பெருமானைப் பற்றியும், கிறிஸ்மஸ் பண்டிகையின் போது கிறீஸ்துநாதர் பற்றியும் மேலும் புனித இரமழான் காலத்தில் சல்லல்லாஹு அலைவர் சல்லம் மொகம்மது நபி பற்றியும் கட்டுரைகளை வெளிக் கொண்டு வந்தன.

இவற்றை விரும்பி வாசித்ததால்த்தான் எனக்கு ஓரளவு ஒப்பீட்டுச் சமய அறிவு (Comparative Religion) வளரத் தொடங்கியது. அந்த அறிவே 1957ம் ஆண்டில் றோயல் கல்லூரியில் Mackeen Memorial Prize for Comparative Religion என்ற பரிசைப் பெற உதவியது.

ஆத்மஜோதி ஆத்மீகக் கருத்துக்களை தன் இதழ்களில் வெளியிட்டது மட்டுமல்லாமல் பல ஞானியரின் படங்களையும் அட்டைகளில் வெளியிட்டு வந்தது. அந்த வகையில் ஈழத்துச் சித்தர் பலரின் படங்களும் அட்டையை அலங்கரித்தன.

நான் ஆத்ம ஜோதியுடன் இருந்த தொடர்பை பல வருட காலமாக இழந்து விட்டேன். மீண்டும் ஆத்மஜோதி முத்தையா அவர்களின் நூற்றாண்டு தினத்தில் வெளிக்கொண்டு வரப்படும் மலர் மூலம் ஆத்மஜோதியை நினைவுபடுத்தியதற்காக எனது மனமார்ந்த நன்றி அறிதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வணக்கம்

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர்
வடமாகாணம்

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர்
வடமாகாணசபை
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை

Sri Durgadevi Devasthanam

Tellippalai, Sri Lanka.

E.Mail:- Thurkaiammantemple@gmail.com

Face Book:- tellidurga@gmail.com

T.P No : 021 - 3213151

திகதி:..................................

Fax:- 021 2241909

தலைவர்:
செஞ்சொற் செல்வர்
கலாநிதி. ஆறு திருமுருகன்
Dr. ARUTHIRUMURUGAN

E.Mail:- Aruthirumurugan@gmail.com Hot Line:- 0776258511

**தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவரும், இலங்கை சிவபூமி அறக்கட்டளையின் தலைவரும், அகில இலங்கை இந்துமாமன்றத்தின் உப தலைவரும், சுன்னாகம் ஸ்காந்தவரோதாயாக் கல்லூரியின் முன்னாள் அதிபருமாகிய செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் வழங்கிய பிரார்த்தனைச் செய்தி**

ஈழத் திருநாட்டில் மிக உன்னதமான ஆன்மீகப் பணியாற்றியவர்கள் வரிசையில் அமரர் ஆத்மஜோதி முத்தையா ஐயா அவர்கட்கு தனித்துவமான பெருமையுண்டு. சொல்லாலும், செயலாலும் ஒருமித்து சேவையாற்றிய இப் பெருமகனாரை நாம் என்றும் மறக்க முடியாது. ஆன்மீக சூழல் நிறைந்த ஏழாலைக் கிராமத்தில் இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன் தோன்றிய இப் பெருந்தகை தன் வாழ்நாளில் சாதித்தவை ஏராளம். ஆசிரியப் பணியில் அயராது தொண்டாற்றிய உத்தம ஆசிரியர் இவர். மலையகத்து சிறார்களை அரவணைத்து அவர்களை மான்புறச் செய்தவர் இப் பேராசான். நாவலப்பிட்டியில் கடவுளுக்குச் சமமாக அன்றும் இன்றும் மக்கள் போற்றித் துதிக்கிறார்கள். இப் பெருந்தகையால் வாழ்வில் உயர்வு பெற்றவர்கள் பலர்.

மலையகத்து தோட்டத் தொழிலாளர்களின் வீடுகள் தோறும் சென்று விபூதி தரிக்கச் செய்து கூட்டுப் பிரார்த்தனையில் குழந்தைகளை இணைத்து பாதயாத்திரைகளால் பக்தியைப் பரவச் செய்த இவர் பணியை யார்தான் மறுப்பர். எழிமையான சொற்பொழிவால் பலரது இதயங்களை ஈர்த்த இவர் சொல்வன்மையை எவரும் மறந்துவிட முடியாது. ஆத்மஜோதி எனும் மலரை அச்சிட்டு பலரது அறிவுப் பசியை போக்கிய இவ்வாற்றலாளனுக்கு நிகராக இன்று எம்மிடையே எவரும் இல்லை. நாவலர் வழியில் அச்சியந்திரசாலையை உருவாக்கி பெறுதற்கரிய நூல்களை பதிப்பித்து பெரும்பணி செய்தவர் இவர்.

நைஸ்ரீக பிரம்மச்சாரியாக வாழ்ந்து பாதங்கள் தேயத் தேய பல தலங்களுக்கு பாதயாத்திரை சென்று நடமாடும் ஆன்மீகக் களஞ்சியமாக விளங்கிய மகான் ஆத்மஜோதி ஐயா அவர்களின் ஜனன நூற்றாண்டு குறித்து எனது இதய பூர்வமான பிரார்த்தனைகளை சமர்பிக்கின்றேன். கனடா ஆத்மஜோதி நிலையம் அன்னாரின் பெயரால் ஆற்றிவரும் தொண்டுகள் போற்றுதலுக்குரியது. அன்னாரின் பணிகளை உணர்வுபூர்வமாக மதித்து செயற்பட்டு வரும் கனடா ஆத்மஜோதி நிறுவனத்தின் தொண்டு மெச்சத்தக்கது. ஆத்மஜோதி ஐயாவின் நூற்றாண்டு குறித்து வெளியிடும் மலர் சிறக்க பிரார்த்தித்து நிறைவு செய்கின்றேன்.

ஆறு. திருமுருகன்

**கலாநிதி.ஆறு.திருமுருகன்**
**தலைவர்**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
**தெல்லிப்பழை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சரவணபவ



# Sri Kathirvelautha Swamy Temple

SRI KATHIRESAN KOVIL, NO.24, Kothmale Road, Nawalapitiya. Tel: 054 205 0666

Administrative Trustees
Mr.S.Sockalingam
Mr.M.Srikanthan

Date : ............................

ஆத்ம ஞானியை என்றும் நினைவில் வைத்திருப்பது பணப்பெட்டியில் பொற்காசு இருப்பது போன்றதாகும் என்று ஓர் பேரறிஞன் கூறினான். ஆத்ம ஜோதி ஐயா தமது பூத உடலை நீத்து இருபத்திமூன்றாண்டு முடியும் நிலையில் அவரது நூறாவது ஆண்டு ஜனன தினம் இடம் பெறுவதை அறிகிறோம்.

1983ல் நாவல் நகரில் ஆத்மஜோதி நிலையம் எரியூட்டப்பட்டது. ஒரு சில ஆண்டுகளின் பின்னர் ஆத்மஜோதி சஞ்சிகையை கனடா இந்துப் பேரவை பொறுப்பேற்று நடத்தியது. அத்துடன் கனடாவில் அப்பத்திரிகையை ஆரம்பித்து இருபதாவது ஆண்டு மலரையும் வெளியிட்டீர்கள். இலவசமாக விநியோகித்த இரண்டாயிரம் பிரதிகளை மூவாயிரம் பிரதிகளாக அதிகரித்தீர்கள். கனடாவில் ஆத்மஜோதி இல்லத்தின் சேவை பல்லாண்டு தொடர ஆத்மஜோதி ஐயாவின் இஷ்ட தெய்வமான நாவல்நகர் கதிர்வேலாயுத சுவாமியை வேண்டுகிறோம்.

ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் தாங்கள் நாவல் நகருக்கு வந்த போது நீங்கள் ஆத்மஜோதி ஐயா மலையகத்திற்கு செய்த சேவைக்கு என்ன கைமாறு செய்தீர்கள் என்ற வினாவிற்கு விடையளிக்கும் முகமாக திரு.சங்கரலிங்கம் என்ற வர்த்தகப் பெருமகனால் ஆத்மஜோதி சமய சமூக அமையம் உருவாக்கப்பட்டு ஆத்மஜோதியின் நண்பரான முத்தையாபிள்ளை அமையத்தில் போசகராக நியமிக்கப்பட்டார். என் தந்தை முத்தையாபிள்ளையின் மறைவின் பின் யான் அப்பதவியைப் பொறுப்பேற்றுள்ளேன். அமையம் ஆரம்பித்து அதன் ஏழாவது ஆண்டு விழா மார்ச் மாதம் இருபத்தைந்தாம் திகதி கொண்டாடினோம்.

இறுதியாக ஆத்மஜோதி ஐயா கனடாவுக்கு வரும்போது கொழும்பில் எங்கள் இல்லத்தில் தங்கியிருந்து புறப்பட்டதை மறக்க முடியாது.

நாவலப்பிட்டி கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் கூட்டுப் பிரார்த்தனை சமயப் பிரசங்கத்தை ஆரம்பித்து வைத்தவர் ஆத்மஜோதி ஐயா. அவரின் நிழலின் கீழிருந்து சமய அறிவை பெற்றவர்களே எனது தந்தையும், இன்றைய அறங்காவலர்களும் ஆகும்.

இங்ஙனம்,
திரு.எம்.ஸ்ரீகாந்தன் ஐயா

M. Srikanthan
Administrative Trustees
Sri Kathiresan Kovil
No. 24, Kothmale Road,
Nawalapitiya.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூரண ஆச்சிரமம்
# Purna Ashram
## சுவிற்சர்லாந்து
## Switzerland

# வாழ்த்துரை
## மனித நேயமே மானிடத்துவ சமயம்

மனிதப் பிறப்பு பெரும் மகத்துவமான பாக்கியம். விதையது பசும்தரை மீது வீழ்ந்து முளைவிடும். இது முதலாவது அறிவுப்பயிர். இப்படியாய் படிப்படியாக உயிரணுவானது மனிதர்கள் கருப்பையில் சிசுவாக உருவாகிற போது உயர் நிலையின் ஆறாம் அறிவு உடையதாகிறது. கடந்த பிறப்புக்களின் சஞ்சித பிராப்த கர்மங்களின் தொகுப்பே இப்பிறப்பு. எமது குடும்பம், சூழல், உடல் ஆற்றல்கள், பிறவிச்சூழல்கள் என்ற அனைத்தும் கர்மத்துள் அடக்கம். பந்த பாசக் கட்டுக்களின் இடைவிடாத உந்துதல்களின் விளைவே மீண்டும் பிறப்பு மீண்டும் இறப்பு என்கின்ற வாழ்வியலின் சங்கிலித் தொடராகும். விதிவசப்பட்ட மாந்தர்களது வாழ்வியல் சூத்திரமே இஃதாகும்.

ஆயினும் இலட்சத்தில் ஒரு ஆன்மாவே பூர்வஜென்ம இலட்சியத்தின் தவப்பயனாய் தரணியதில் வந்துதிக்கும். இத்தகைய ஆன்மாக்களே மகாத்மாக்கள் ஆகும். நாம் செய்த பெரும் பேற்றின் பயனாய் புவியதனில் எமக்காக இத்தகையவர்கள் வந்தேகுவர். இறைவன் எம்மீது கொண்ட கருணையினாலேயே இத்தகு வழிகாட்டிகளை பூமிக்கு அனுப்பி வைக்கிறான்.

"நான் வந்தேன்; எனக்குச் சில பணிகள் உண்டு; அவன் செயலே எல்லாம்; அவனின்றி ஓரணுவும் அசையக் காணேன்; இறைபணியின்றி வேறெதுவுமுண்டோ! இன்னுயிர்க்கோர் கேடு செய்யலாகுமோ! முடிந்தவரை மற்றவர்க்கு உதவலாமே! வந்த கடனை அடைத்துவிட்டு செல்லும் வழியைச் சிறப்புடையதாக்கி பெறுதற்கரிய சிவப்பதப் பேறெய்தலாமே."

என்ற வகையில் எண்ணம் சொல் செயலால் வையத்துள் இவர்கள் வாழ்வாங்கு வாழுவர். தெய்வத்துள் தோய்ந்த ஆத்மத்துவ அழகும் பேரண்டப் பேராற்றல்களைப் பணிய வைக்கும் பண்பு ஒழுக்கமும் கொண்ட நேர்த்தியான மகான்கள் இவர்கள். அதீத ஆற்றல்களைப் பெரும் சக்தியின் வீச்சாய்க் கொண்ட மகத்தானவர்கள் தம்முடன் வாழும் சகமனிதர்களையும் பேரானந்தத்திற்கு இட்டுச் செல்லும் பெருமை மிக்கவர்களாய் போற்றப்படுவர்.

**இவ்வகையினதான பெரும் தகையோர் மரபில் ஈழத்தில் வந்துதித்த எமது இன்னாசானே ஆத்மஜோதி நா. முத்தையா ஐயா அவர்கள் என்றால் மிகையாகாது.**

வாழும்கால் அருகமைந்து பழகும் அரும் பாக்கியம் தான் பெற்றோம். ஆத்மதத்துவம் செழிக்க அவரிடத்தில் அந்தர்யோகம் பயின்றோம். சைவத்துக்கும் தமிழுக்கும் செம்மைத்துவ ஊக்கம் ஊட்டினார். சேவைகளின்றிக் கர்மங்கள் விலகாதென்றும் குருவில்லலாது வித்தைகள் பலிக்காதென்றும் உறுதியான மனமும் தளராத பக்தியும் திடமான ஞானமும் வாய்த்து சித்தத்தைச் சிவமாக்குங்கள் என்று எம்மைச் செதுக்கி செப்பனிட்ட எம் குருநாதர் ஆத்மஜோதியாய் ஆயிரமாயிரம் தெய்வீக அன்பர்களின் அகல் விளக்காய் பேரண்டத்தில் அகன்ற பேரொளியாய்த் திகழும் ஆத்மஜோதி நா. முத்தையா ஐயாவினை நினைவேற்றிப் போற்றிப் பணிவோம்.

மண்ணில் தவழ்ந்து நூற்றாண்டுகள் கடந்த நிலையிலும் அவர் தம் மகத்துவப் பணி தொடரும் அருமைச் சீடராய் நித்திய வாழ்வின் சத்தியச் சான்றாய்த் திகழும் சிவ முத்துலிங்கம் ஐயா அவர்களையும் கனடா ஆத்மஜோதி இல்ல ஏனைய செயற்பாட்டு அன்பர்களையும் வாழ்த்தி அவர் தம் பணிகளுக்கு உறுதி சேர்த்து விழா எடுத்து மலர் வெளியிட்டு கொண்டாடும் இம் முயற்சிக்கும் மனமுவந்து பாராட்டிப் பெரும் உவகை கொள்கிறோம்.

பெரியோரை ஏற்றிப் போற்றியே நாளும் தொழுவோமாக!

**பூரண சுவாமிகள் - பூரண ஆச்சிரமம்**
பூர்க்டோர்வ் - சுவிற்சலாந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம்
தத்சத்

# ஸ்ரீ சிவகுருநாதகுருபீடம்

**SRISIVAGURUNATHAGURUPEEDAM**

## வேதாந்தமடம் VEDANTA MADAM

## ஸ்ரீமத் மகாதேவசுவாமிகள் ஆச்சிரமம்

**SRIMATHMAHADEVASWAMIKALASIRAMAM**

Regd. No: 6/2/J/2/18
ஆரம்பம் : 1875
T.P.No : 0212219781, 0779905818
எட்டாவதுகுருபீடாதிபதி ஸ்ரீமத் வேதவித்தியாசாகரர் சுவாமிகள்
Eight Incumbent Guru Peedathipathi
SrimathVethavithiyasagararSwamigal.

18, Kumarasamy Road,
Kantharmadam
Jaffna.
SriLanka
Date: 15.05.2018

# நூறாவது ஜயந்தி தின வாழ்த்து



ஏழாலை ஊர் தந்த பெருந்தகை ஆத்ம ஜோதி நா. முத்தையா சுவாமி அவர்களை சைவ உலகு ஒரு போதும் மறக்க மாட்டாது. ஏழாலை என்னும் ஊர் பல பெரியவர்களைக் கண்ட ஊராகும். சி.வை.தாமோதரம்பிள்ளை, காசி வாசி செந்திநாத ஐயர் போன்ற பெரியார்கள் வாழ்ந்த ஊரில் பிறந்தவர் தான் ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் ஆவார்.

ஊரின் தன்மையோ அல்லது முத்தையா அவரின் பிறப்பின் காரணமோ அவர் சமய வாழ்க்கையில் தனது நாட்டத்தைச் செலுத்தினார். பஜனை செய்பவராக, நூலாசிரியராக, பிரசங்கம் செய்பவராக விளங்கினார். ஈழத்துச் சித்தர்கள் என்ற அரும்பெரும் நூலை எமக்குத் தந்த பேரறிஞர். ஆத்மஜோதி பதிப்பகத்தின் பதிப்பாசியராகவும் பணியாற்றினார். இத்தகு பெருந்தகையின் நூறாவது ஜனன தினத்தை முன்னிட்டு மலர் வெளியிடப் படுவதனையிட்டு பெரும் ஆனந்தம் அடைகின்றோம்.

ஒன்றாறியோ இந்து சமயப் பேரவை ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் நினைவாக இம்மலரினை வெளியிட்டு சுவாமிகளைக் கௌரவப்படுத்தியதுடன் தன்னையும் பெருமைப்படுத்திக் கொள்கின்றது.

இந்துசமயப் பேரவையின் பணிகள் ஓங்க வேண்டும். பேரவையின் உறுப்பினர்கள், அங்கத்தவர்கள் அனைத்து அடியவர்களும் தமது வாழ்வில் சிறப்படைய வேண்டும் என்று வாழ்த்தி இறைவனைப் பிரார்த்தித்து நல்லாசி கூறுகின்றோம். ஜெயந்தி தின மலர் முத்தையா சுவாமிகளின் சிறப்பினை உலகறியச் செய்து சிறப்படையட்டும்.

குருவருளும் திருவருளும் கிடைப்பதாக.

ஸ்ரீவேதவித்தியாசாகரர் சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**L' Association des Athmajothi Tamoule**
**ஆத்மஜோதி தமிழர் இணையம்**
**Athmajothi Tamils Association**

7125 Rue Waverly, Suite 101, Montreal, Quebec, H2R 2X8,
Canada, Tel: (514) 271 9731. NEQ: 3348174270

உ
ஓம் நமசிவாய

# ஓங்குக சைவநீதி

புலம்பெயர் நாடுகளில் நம்மவர்கள் மத்தியில் உண்மையான பக்திமார்க்கம் தழைத்தோங்குவதில் பல்வேறு இடர்பாடுகள் உள்ளன. ஆடம்பரங்கள் மலிந்த ஆன்மீக நிகழ்வுகளே ஆன்மீகத்தின் வெற்றி எனப் பறைசாற்றுமளவிற்கு பக்தி என்பது கேள்விக்குறியாகி உள்ளது. மக்களுக்கு ஆன்மீக விழிப்புணர்வு என்பது அருகிக்கொண்டிருக்கின்ற துர்ப்பாக்கிய நிலை புலம்பெயர் நாடுகளில் தலைவிரித்தாடுகின்றது.

முத்தையா சுவாமிகளின் அடிப்படை நோக்கமே வேதாந்த சித்தாந்த தத்துவங்களை மக்கள் புரிந்துகொண்டு ஆன்மீக விடுதலையை நோக்கி முன்னேற வேண்டும்; எமது தாய்மொழியாம் தமிழ்மொழியையும் உயிர்மூச்சாகக் கொண்டு வாழவேண்டும் என்பதேயாகும்.

அவரது நியாயமான கருத்துக்களை அடித்தளமாகக் கொண்டு ஆன்மீகப் பணிகளில் ரொரொன்ரோவில் ஈடுபட்டுவரும் ஒன்ராரியோ இந்து சமயப் பேரவை செய்யும் அர்ப்பணிப்புகள் அளப்பரியன. திருமுறை முற்றோதல், திருவாச முற்றோதல், விசேட தின வழிபாடுகள், திருத்தல யாத்திரையும் திருப்பதிக முற்றோதலும் மேற்கொள்ளல், திருமுறை விழாவை முறையாக நடத்துதல், ஆத்மஜோதி சஞ்சிகை வெளியீடு என்பன எந்தவித பொருளாதாரப் பின்புலமோ வசதிபடைத்தவர்களின் ஆதரவோ இன்றி பெருந்தவத்தோரின் கணிசமான பங்களிப்புகளுடன் நிறைவேற்றி வருவதே, எல்லாம் வல்ல இறைவனின் பெருங்கருணையே.

இவற்றுக்கு, தள்ளாத வயதிலும் மூத்தோர்-இளையோர் என அரவணைத்து பெருந்தவச் சீலர்களாக கவிநாயகர் கந்தவனம் அவர்களும், முத்தான தொண்டன் சிவ முத்துலிங்கம் அவர்களும், பெரியார் சோமசுந்தரம் ஆசிரியர் அவர்களும் கருவிகளாக இருக்கின்றனர். இவர்களுடன் பல அருந்தொண்டர்களும் தோள்கொடுத்து எம்பெருமான் கருணைமழையில் குளிர்ச்சியடைகின்றனர்.

இந்த 2018 ஆண்டில் முத்தையா சுவாமிகளின் நூற்றாண்டு விழாவையும் முன்னெடுக்கும் வெற்றிகரமான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இந்த முத்தையா சுவாமிகளின் நூற்றாண்டு விழா வெற்றிகரமாக நடைபெற மொன்றியல் ஆத்மஜோதி தமிழர் இணையமும் இதயபூர்வமாக வாழ்த்துகின்றது.

மேன்மை கொள் சைவநீதி; விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஜோதி

திருமதி தங்கமுத்து தம்பித்துரை (ஓய்வுபெற்ற ஆசிரியை)
குப்பிழான் தங்கம்

கதிரவனின் வரவு கண்டு
சிரித்திருக்கும் செம்பருத்தி
வைரவரின் ஆலயத்தில்
ஒயிலாய் மணி ஒலிக்க
துயில் எழுந்து கைகூப்பும்
மக்கள் நிறை ஏழாலையில்

உற்றார் பசிதீர்த்தகங்குளிரும் உற்றவர்
அற்றார்க்குதவும் அன்பர் நாகமணியும்
பொற்புடை நங்கை பொன்னுப்பிள்ளையும்
பெற்றனர் முத்தையா எனும் முத்துப்பிள்ளையை

முத்தான பிள்ளை முத்தையா சிறுவயதில்
சித்தம் சிவன் நினைவே கொண்ட சிறுவர்
புத்திக் கூர்மையுடன் புகட்டும் பாடங்களை
பக்தி சிரத்தையுடன் படித்துத் தேறினான்

ஆசிரியர் பயிற்சிக்கான சாலையிற் படித்த
சீரிய சிந்தைச் செம்மனம் உடையோர்
ஆசிரியராய் அமர்ந்தார் நாவலப்பிட்டியில்
சீராகக் கற்பித்துச் சிறப்பித்தார் மாணவரை

ஆத்மஜோதி எனும் அற்புத நூல் மூலம்
பக்தி வைராக்கியம் பக்குவமாய் வளர
சித்தங் கொண்ட செம்மல் முத்தையா
அந்தர் யோகமதை அற்புதமாய்த் தந்தார்

சித்தர்கள் யோகிகள் ஞானிகளைத் தரிசித்து
முத்தான தொண்டர் முழுஞானியானார்
பக்திநெறியிற் பலரும் வளர்ந்திடப் பல
ஆக்கங்கள் தந்தார் ஆத்மஜோதிச் சஞ்சிகையில்

பாதயாத்திரையின் மகிமையைக் கூறியவர்
பூதநாயகன் பொற்பாதம் போற்றி
நாதன் நாமம்பாடும் அடியவரைக் கூட்டி
பாதை வழிநடந்து வந்தடைவார்

சிற்சபை ஈசனைச் சிந்தனை செய்து
நற்கதி அடையலாம் நாமெனக் கூறி
சற்சங்க வட்டத்திற் சங்கமங்களைக்காட்டி
பொற்பாதம் போற்றிப் பாடி மகிழ்வார்

உற்றார் அயலவர் உறவினர் ஊரார்
பற்பல பேரையும் பாங்குடன் அழைத்து
வீடுவீடாக ஈசனைப் போற்றி இன்புடன்
கூடிப்பாடி பஜனைகள் செய்வார்

இலந்தைக்கட்டி வயிரவர் ஆலயம்
துலங்கிட விளைந்த தூயவர் முத்தையா
மக்களின் நிதியுதவியிற் தொண்டினால்
மிக்க நற்சிறப்பால் மிளிர்திடச்செய்தார்

ஆன்மீகத்தொண்டர் அநாதைகளுக்காய்
தன்னார்வத் தொண்டராய் தான் செயற்பட்டு
கனடா நாட்டில் கண்ணியம் மிக்கநம்
பொன்மனம் படைத்த புகலிட மக்களிடம்

நிதி உதவியை நாடி வந்தவர்
தரிசனம் தந்தார் ஆத்மஜோதியாய்
இந்துசமயப் பேரவை எழுச்சியால் அவர்க்கு
சொந்தமாய் ஆச்சிரமம் மிளிருது இங்கு

ஆத்மஜோதியாய் அமர்ந்திங் கிருந்து
அருள்ஒளி கொடுக்கும் அற்புதஜோதி
ஆத்மஜோதியின் ஜோதி ஒளிருக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் வழி வந்த சைவத்தின் காவலர்

சிவத்தமிழ் வித்தகர். திருமந்திர வாரிதி சிவ.மகாலிங்கம்
ஓய்வுநிலை உதவிப்பணிப்பாளர்
இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம்

## 1. தோற்றமும் வளர்ச்சியும்

ஈழமணித்திருநாட்டைச் சிவபூமி எனத் தவயோகி திருமூலநாயனார் தமது தமிழ் மந்திரமாகிய திருமந்திரத்தில் குறிப்பிட்டுள்ளார். இந்தச் சிவபூமியில் யாழ்ப்பாணக்குடாநாடு ஞான பூமியாக மிளிர்கின்றது. அந்நியர் ஆட்சியில் ஏற்பட்ட மதமாற்றங்களுக்கு எடுபடாமல் சிவ நெறியைப் பேணிய மக்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல கிராமங்களிலும் வாழ்ந்தார்கள். சைவத்தின் காவலர் சைவ சேனாதிபதி ஆறுமுகநாவலரின் சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுத்த பெரியார்கள் பலர் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல கிராமங்களிலும் இருந்து திரிகரண சுத்தியுடன் சிவப்பணி ஆற்றினார்கள். அளவெட்டி, நீர்வேலியைப் போன்று யாழ் மாவட்டத்தில் உள்ள பெரிய கிராமங்களில் ஏழாலையும் ஒன்றாகும். பக்தர்கள், சித்தர்கள், ஞானிகள், யோகிகள், தத்துவவாதிகள், தொண்டர்கள் எனப் பலரும் வாழ்ந்த ஏழாலைக் கிராமத்தின் கிழக்குப் பகுதியிலே நாகமணி பொன்னுப்பிள்ளை தம்பதிகள் செய்த தவத்தின் பயனாக அவர்களின் நான்காவது புத்திரனாக முத்தையா அவர்கள் 25.05.1918 வைகாசி விசாகத் தினத்திலே அவதாரம் செய்தார்கள். துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனம் செய்யும் தெய்வமாகிய ஏழாலை கிழக்கில் அமைந்துள்ள இலந்தைக்கட்டி ஞான வைரவர் பெருமானையே இவர்கள் குடும்பத்தினர் அனைவரும் குலதெய்வமாக வணங்கி வந்தார்கள்.

ஆரம்பக் கல்வியை தான் பிறந்த ஊரிலுள்ள ஆரம்பப் பாடசாலையில் ஆறாம் வகுப்பு வரை கல்வி கற்றார். பின்பு மயிலணி சைவ வித்தியாலயத்தில் மேற்படிபபை மேற்கொண்டார். மேற்படிப்பு முடிந்ததும் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் சேர்ந்து ஆசிரியர் கல்வியைப் பெற்றார். சைவ ஆசிரிய கலாசாலையின் அதிபராக இருந்து மயிலிட்டி சுவாமிநாதன் உப அதிபராக இருந்த தவமுனிவர் கைலாசபதி , தமிழ்மொழி விரிவுரையாளராக இருந்த பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஆகியோரிடம் ஆசிரியப் பயிற்சிக்கான கல்வியைப் பெறும் வாய்ப்பினைப் பெற்றிருந்தார். மலையகத்தின் நகரங்களில் ஒன்றாகிய நாவலப்பிட்டியிலே தனது ஆசிரியத் தொழிலில் பல வருட காலம் பணியாற்றியிருந்தார். நாவலப்பிட்டி கதிரேசன் மகா வித்தியாலயத்தில் பல வருடகாலம் ஆசிரியராக அதிபராக எல்லாம் பணிபுரிந்து மலையக மக்களின் பேரன்பிற்குப் பாத்திரமானார்.

## 2. ஞானிகள் தவயோகிகளின் ஆசீர்வாதம் பெற்றமை

இல்லற ஞானியாக இருந்த நயினாதீவு இராமச்சந்திராவின் தொடர்பினால் இவரிடமிருந்த ஆன்மீக ஒளி பிரகாசிக்க ஆரம்பித்தது. இவருடைய வழிகாட்டலுடன் திருவண்ணாமலைக்குச் சென்று ஞானதீபம் இரமண மகரிஷியைத் தரிசனம் செய்து அவருடைய ஆசீர்வாதத்தினைப் பெற்றார். காஞ்சி காமகோடி பீடத்தின் முதல்வராக இருந்த காஞ்சிப் பெரியவர், இமயஜோதி சிவானந்த மகரிஷி, தவத்திரு யோகர் சுவாமிகள், பகவான் சத்தியசாயிபாபா ஆகிய தவ சிரேஷ்டர்களின் ஆசீர்வாதமும் வழிகாட்டலும் இவர் அகில உலகத்திலும் ஞான தீபமாக பிரகாசிப்பதற்கு வழிகாட்டியது. பாரத நாட்டின் பாடல் பெற்ற திருத்தலங்கள் எல்லாம் தலயாத்திரை செய்து இறையருள் பெற்ற மாந்திய ஞானச்செல்வராக மிளிர்ந்தார். இராமேஸ்வரத்திலிருந்து ரிஷிகேஷம் வரை தல யாத்திரை செய்து மடாதிபதிகளையும் ஆதீனகர்த்தாக்களையும், துறவிகள், ஞானிகள் பலரையும் சந்தித்து அவர்களுடைய அருளாசிகளையும் பெற்றிருந்தார். நமது சமயத்தையும், நாட்டையும், மக்களையும் பீடித்திருக்கும் துன்பங்கள் துயரங்கள், சோதனைகள். வேதனைகள் அனைத்தும் நீங்குவதற்கு பக்தர்கள். தொண்டர்கள், யோகிகள். சித்தர்கள், ஞானிகள் ஆகிய அனைவரும் இணைந்து பணியாற்ற வேண்டும் என்ற சிந்தனை ஆத்மஜோதி அவர்களிடம் தோற்றம் பெற்றது.

## 3. தோட்டத்தொழிலாளர்களாகிய மலையக மக்களின் ஆன்மீக ஒளியைப் பிரகாசிக்கச் செய்தவர்

ஏழையொருவனுக்கு எழுத்தறிவித்தலே அறங்கள் அனைத்திலும் மிகச்சிறந்த அறம் என்பது மகாகவி பாரதியின் வாக்கு ஆகும். கல்வி அறிவில்லாதவன் மிருகம் (வித்யா விஹீன பக) என்று வடமொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுலோகம் ஒன்று குறிப்பிடுகிறது. 'கல்வி அழகே அழகு' என்பதே நாலடியாரின் கூற்றுமாகும்.பூங்கா அமைத்தல், நீர்த்தடாகங்கள் உருவாக்குதல், அன்னதான மடங்கள் நிறுவுதல், பல ஆலயங்களைக் கட்டுவித்தல் ஆகிய தருமங்கள் யாவற்றிலும் பார்க்க பலகோடி பெறுமதிமிக்க பலனைத் தருவது வறுமைத்துன்பத்தில் வாடுபவனுக்கு கல்வி ஞானத்தை வழங்குதல் என்பதைப் பின்வரும் மகாகவி பாரதியாரின் பாடல் தெளிவாக விளக்குகிறது.

"இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கியொளிர நிறுத்தல்
அன்னயாவிலும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கெழுத்தறிவித்தல்"

(பாரதியார் கவிதைகள், வெள்ளைத் தாமரை )

பசித்தவனுக்குத் தான் உணவிட வேண்டும் 'பாத்திரமறிந்து பிச்சையிடு' என்பதுதான் நம்மிடம் உள்ள முதுமையான முதுமொழியும். மலையகத் தொழிலாளர்களின் பிள்ளைகளைக் கல்வி அறிவுடையவர்களாக வளர்த்தெடுப்பதுதான் மிகச் சிறந்த அறம் என்பதை ஆத்மஜோதி அவர்கள் உணர்ந்துகொண்டார். நாவலப்பிட்டி கதிரேசன் வித்தியாலயத்தில் கல்வி பயின்ற மலையக மாணவர்களின் அறிவுக் கண்களைத் திறக்க வைத்து அவர்களில் பலரை மிகச்சிறந்த கல்விமான்களாக உருவாக்கி வைத்தார். மாணவர்களுக்கு வெறும் சான்றிதழைப் பெறும் கல்வியை மட்டும் அவர் போதிக்கவில்லை. வாழ்வில் ஒழுக்கசீலர்களாக வாழ்வதற்குரிய அறவிழுமியங்களையும் போதித்தார். கல்வி அறிவு குறைந்த தோட்டத்தொழிலாளர்கள் பலர் தாம் பாடுபட்டு உழைக்கும் பணத்தின் பெரும்பகுதியை வீண் செலவுகளில் செலவிட்டு வந்தார்கள். மது, போதைப்பொருள் என்பவற்றிற்கு இவர்களின் உழைப்பின் பெரும்பகுதி செலவாகியது. ஆத்மஜோதி ஐயா அவர்கள் தோட்டத் தொழிலாளர்களின் இருப்பிடங்களை நோக்கிச் சென்று அவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து ஆன்மீக போதனைகளைச் செய்தார். வாழ்க்கையில் நெறிதவறிப் போனவர்களை நேர்ப்பாதைக்குக் கொண்டு வந்தார். குடும்பப்பொறுப்புள்ளவர்களாக அவர்கள் செயற்படுவதற்கு திசைகாட்டியாக நின்றார். தோட்டத்து ஆலயங்கள் எல்லாவற்றிற்கும் சென்று ஆன்மீக போதனைகளைச் செய்து வந்தார். புயலும் சூறாவளியுமாக இருந்த மலையக மக்களின் குடும்ப வாழ்க்கையில் அமைதியும் தென்றலும் வீசச் செய்தார். மலையக மாணவர்களுக்கு மாத்திரம் ஆசிரியராக இல்லாமல் மலையக மக்களுக்கும் ஞான குருவாக இருந்து வழிகாட்டினார்.

## 4. ஆத்மஜோதி என்ற சஞ்சிகையை வெளியிடல்

அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றாகிய நயினாதீவு நாகபூஷணி அம்பாளின் அருட்பார்வைக்கு உட்பட்ட இல்லற ஞானி இராமச்சந்திரா அவர்கள் Religious Digest (சமய மஞ்சரி) என்ற சமய சஞ்சிகையை ஆங்கில மொழியில் வெளியிட்டு வந்தார். இந்தப் பத்திரிகையின் ஊடாக இந்து சமய தத்துவங்கள், அருளாளர்களின் அருட்செயல்கள், பக்தி இலக்கியங்களின் சிறப்புக்கள் எல்லாம் வெளியிடப்பட்டன. இராமச்சந்திரா அவர்கள் ரமண மகரிஷி ,மகான் அரவிந்தர் ஆகிய மகான்களை எல்லாம் தரிசனம் செய்து அவர்களுடைய ஆசீர்வாதத் தினையும் பெற்றிருந்தார். பாரத நாட்டைச் சேர்ந்த ஞானியர்கள்,மடாதிபதிகள், அரசியல்த் தலைவர்கள் ஆகிய பலருடனும் இவருக்கு தொடர்பு இருந்தது. 1927 ஆம் ஆண்டு ஈழத்திற்கு வருகைதந்த பாரத நாட்டின் தேசபிதா மகாத்மா காந்தி கொழும்பிலுள்ள இவரது வீட்டிலேயே தங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. 1948ஆம் ஆண்டு இராமச்சந்திரா தனது இல்லத்தில் நடத்திய மகான் அரவிந்தரின் குருபூசை தினத்திற்கு நாவலப்பிட்டியில் ஆசிரியராக பணியாற்றிய முத்தையா அவர்களையும் அழைத்திருந்தார். ஆத்மஜோதி என்ற ஆன்மீக சஞ்சிகையை ஆரம்பித்து நடாத்த வேண்டும் என்ற தனது விருப்பத்தை முத்தையா ஆசிரியரிடம் இராமச்சந்திரா தெரிவித்தார். முத்தையா ஆசிரியர் அவர்களை சஞ்சிகைக்கு பொறுப்பாக இருந்து செயற்படுத்துமாறும் தான் வேண்டிய உதவிகள் அனைத்தையும் செய்வதாகவும் வாக்குறுதியளித்தார். 1965 இல் இராமச்சந்திரா சிவபதம் அடையும் வரை ஆத்மஜோதியின் ஆசிரியர் தலையங்கத்தை அவரே எழுதி வந்தார். 1948ம் ஆண்டு திருக்கார்த்திகை நாளில் ஆத்மஜோதியின் முதலாவது சஞ்சிகை வெளிவந்தது. ஆத்மஜோதி பத்திரிகை 1948ஆம் ஆண்டு முதல் 1983ம் ஆண்டு வரை மாதப் பத்திரிகையாக வெளிவந்தது. எமது சமயத்தில் கூறப்பட்டிருக்கும் ஆத்மஞானக் கருத்துக்களை யெல்லாம் பிழிந்து ரசமாகத் தரும் பத்திரிகையாக ,பாமர மக்களும் விளங்கி வாசிக்கும் எளிய நடையில் வரும் நூலாக ஆத்மஜோதி மிளிர்ந்தது. தவ சிரேஷ்டர்கள், ஞானியர்களின் வரலாற்றினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்கூறும் வரலாற்றுக் களஞ்சியமாகவும் திகழ்ந்தது. மேல் வகுப்புக்களில் இந்துசமயம், இந்து நாகரிகம் ஆகிய பாடங்களைக் கற்கும் மாணவர்களுக்கு உசாத்துணை நூலாகவும் இருந்தது. 1981ம் ஆண்டு ஏறக்குறைய ஒரு இலட்சம் நூல்களைக் கொண்டிருந்த யாழ்ப்பாணம் பொதுசன நூலகம் காடையர்களால் எரியூட்டப்பட்டது. 1983ம் ஆண்டு நமது நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரத்தின் போது ஆத்மஜோதி பத்திரிகை நிறுவனம் தீக்கிரையாக்கப்பட்டது. ஆத்மஜோதி ஐயா தேடி வைத்த அரும்பெரும் நூல்கள் அனைத்தும் அழிந்து சாம்பராகிவிட்டன. இத்தகைய இழப்புக்களை சந்தித்த பொழுதும் சமநிலை தளம்பாத மனநிலையுடன் ஆத்மஜோதி அவர்கள் தனது பணியினைத் தொடர்ந்தார். ஆத்மஜோதி ஐயா அவர்களின் ஞான வாரிசுகள் சிலரின் முயற்சியால் 1991ம் ஆண்டு ஆடி மாதம் கனடாவில் மறுபிரசுரம் செய்யப்பட்டது. 1995ம் ஆண்டு வரை வெளிவந்த ஆத்மஜோதி சிறிது காலம் வெளிவராமல் தடைப்பட்டுவிட்டது. 1994ம் ஆண்டு கனடாவில் நடைபெற்ற அனைத்துலக சைவ சித்தாந்த மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக வருகை தந்திருந்தார். 1989ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்து சமயப் பேரவைக்கு சிவபதம் அடையும் வரை அவரே தலைவராக இருந்தார். 1994ம் ஆண்டு கனடாவில் ஆத்மஜோதி ஐயா அவர்கள் இந்து சமயப் பேரவையை ஸ்தாபித்தார். அது கனடா ஒனரோறியோ இந்து சமயப் பேரவை எனப் பதிவு செய்யப்பட்டது. கனடா இந்து சமயப் பேரவையினர் (11.06.2000) அமரர் முத்தையா அவர்களின் பிறந்த தினமாகிய வைகாசி விசாக தினத்தில் இருந்து ஆத்மஜோதிப் பத்திரிகையை காலாண்டு இதழாகத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறார்கள். புலம் பெயர் நாடுகளில் வாழும் சைவத் தமிழர்களின் ஆன்மீகப் பசியைப் போக்கும் பத்திரிகையாக ஆத்மஜோதி மிளிர்கிறது

## 5. பக்தர்களையும் தொண்டர்களையும் இணைத்து நடாத்திய பாதயாத்திரை

நல்லூர் முருகப்பெருமானுடைய இரதோற்சவத்தில் கலந்துகொள்ளக்கூடியதாக நயினை நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் இருந்து ஸப்த தீவில் உள்ள பக்தர்கள் பலரையும் ஒருங்கிணைத்து பாத யாத்திரையை ஆத்மஜோதி அவர்கள் ஆரம்பித்து வைத்தார். அவரால் ஆரம்பித்துவைக்கப்பட்ட பாதயாத்திரை இன்றுவரை தொடர்ந்து நடைபெறுகிறது. இதே போல தனது குலதெய்வமான ஏழாலை இலந்தைக்கட்டி வைரவர் ஆலயத்திலிருந்து நல்லூர் தேருக்கு இவரால் ஆரம்பிக்கப்பட்ட பாத யாத்திரை தொடர்ந்து பல வருட காலம் நடைபெற்று வந்தது. ஆத்மஜோதி ஐயாவின் மறைவிற்குப் பின்பும் சில வருட காலம் அன்பர் த.தருமலிங்கம் அவர்களால் ஒழுங்குசெய்யப்பெற்று பாத யாத்திரை நடைபெற்று வந்தது. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளால் இந்தப் பாத யாத்திரை காலப்போக்கில் நடைபெறாமல் போய்விட்டது.

யாழ்ப்பாணக் குடா நாட்டிலும் கிளிநொச்சி மாவட்டத்திலும் உள்ள சகல ஆலயங்களுக்கும் அடியார்கள் புடைசூழத் திருமுறைப்பாடல்கள் பஜனைப் பாடல்கள்களைப் பாடிய படியே திருவடி யாத்திரையாகிய பாதயாத்திரையைச் செய்யும் பணியை ஆரம்பித்து வைத்தார். பல்லவர் காலத்தில் ஞானசம்பந்தரும் அப்பரும் இணைந்து மக்களை ஒன்றிணைத்து திருத்தலங்கள் தோறும் தல யாத்திரை செய்து இன்னிசை மலர்களாகிய தேவாரப் பதிகங்களைப் பாடிப் பக்தி நெறியை ஒரு மக்கள் இயக்கமாக வளர்த்தெடுத்தது போல ஆத்மஜோதி ஐயா அவர்களும் இந்தப் புனிதப் பணியினைச் செய்து வந்தார். இதனால் சைவப் பெருமக்களிடையே ஒரு எழுச்சி ஏற்பட்டது. பிரதேச செயலாளர்கள், கிராம சேவையாளர்கள் ஊடாக தல யாத்திரை செய்யும் ஆலய நிர்வாகிகளின் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொண்டார். நாளாந்தம் இரவில் அடியார்கள் தங்கும் ஆலயங்களில் சத்சங்க வகுப்புக்களை நடாத்தினார். வீதியெல்லாம் சிவநாமம் ஒலிக்கச் செய்ததோடு அனைவரும் சிவநெறியில் வாழவும் வழிகாட்டினார். ஆத்மஜோதி ஐயா அவர்கள் பாத யாத்திரைக்குத் தலைமை தாங்கி அடியார்களை வழிநடாத்திச் செல்லும் காட்சி நடமாடும் கோயிலாகத் திகழ்ந்த நாவுக்கரசர் பெருமானின் கோலத்தை நமக்கு ஞாபகப்படுத்தியது.

## 6. நாவலர் வழியில் சமயப் பிரசாரம் செய்தமை

இவர் ஈழமணித் திருநாட்டிலும் உலகளாவிய ரீதியில் பல நாடுகளிலும் சமயப் பிரசாரகராகப் பணியாற்றினார். எமது சமயத்தில் புதைந்திருக்கும் சமய உண்மைகளையும் தத்துவக்கருத்துக்களையும் சாமானிய மக்களும் உணர்ந்து கொள்ளும் வகையில் எளிமையான நடையில் விளக்கிக் கூறினார். ஆலயத்தில் செய்யப்படும் பணிகள் யாவும் தொண்டாகவே இருத்தல் வேண்டும் என்ற கொள்கையுடைய இவர் சமயப் பிரசாரத்தை ஞான யாகமாகவே செய்து வந்தார். இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, சுவிற்சலாந்து ஆகிய நாடுகளுக்கெல்லாம் சென்று சமயப் பிரசாரம் செய்த இவர் இறுதியாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடாவிலே தனது சமயப் பணிகளைத் தொடர்ந்தார். கனடா நாட்டின் சைவத் தமிழர்கள் வாழும் பிரதேசங்கள் எல்லாம் சென்று சமயப் பிரசாரம் செய்து வந்த ஆத்மஜோதி முத்தையா அவர்கள் 1995 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதி கனடா மொன்றியல் பிரதேசத்தில் உள்ள துர்க்கை அம்பாள் ஆலய மகா கும்பாவிசேக வழிபாட்டிற்குச் சென்றிருந்தபோது தொய்வு நோய் காரணமாக இறைவனடி எய்தினார். கனடா நாட்டில் இவரது சமயப் பணியினால் கவரப்பட்ட மெய் அடியார்களும், சிஷ்யர்களும் பலர் இருந்தார்கள். அனைவரும் ஒன்றுகூடி இவருடைய இறுதிக் கிரியைகளை கனடாவில் ரொறன்ரோ மாநகரில் செய்தார்கள். ஐயா அவர்களின் நினைவாக ஆத்மஜோதி தியான நிலையத்தை அமைத்து சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் பணியினைக் கனடாவில் மிகச் சிறப்பாகச் செய்து வருகின்றார்கள். 1983 ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட இனக் கலவரத்தினால் வெளிவராமல் தடைப்பட்டிருந்த ஆத்மஜோதிப் பத்திரிகையையும் மீண்டும் வெளியிட்டுவருகின்றார்கள்.

## 7. சமயத் தலைமை

ஈழமணித் திருநாட்டிலே நமது மொழியும், சமயமும், பண்பாடும் அந்நியர்களுடைய ஆட்சியின் கீழ் மிகவும் நலிவுற்று இருந்தது. இந்த அவல நிலையைப் போக்கி சைவத்தைப் பாதுகாக்க நாவலர் பெருமான் ஞான சூரியன் போலத் தோன்றினார். ஒரு அரசோ, நிறுவனமோ செய்யமுடியாத பணிகளையெல்லாம் தனி மனிதனாக நின்று செயற்படுத்தினார். இவரைச் சைவத் தமிழ் மக்களின் தளபதி என்ற கருத்தில் சைவசேனாதிபதி எனப் பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஐயா அவர்கள் குறிப்பிட்டுள்ளார். நாவலருக்கும் பின்பு சைவத் தமிழர்களின் தலைவராக முத்தையா ஆசிரியர் அவர்கள் செயற்பட்டார். இலங்கை வாழ் இந்துக்கள் அனைவரையும் ஒன்றிணைக்கின்ற சமய நிறுவனம் ஒன்றின் அவசியத்தை உணர்ந்த ஐயா அவர்கள் இந்து சமயப் பேரவை என்னும் அமைப்பினை உருவாக்கி சிவபதம் அடையும்வரை அதன் தலைவராக இருந்து வழிநடாத்தினார். இதன் நிர்வாகத்தின் கீழ் கைதடிச் சிறுவர் இல்லம் சிறப்பாக இயங்கியது. சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு ஆன்மீக வகுப்புக்களை நடாத்தி அவர்கள் நற் பிரஜைகளாக வாழ்வதற்கு வழிகாட்டினார். இவருடைய தலைமையில் இந்துசமயப் பேரவையினர் பல சமய மாநாடுகளை நடாத்தினார்கள். பேரவை யாழ்ப்பாணக் குடாநாட்டின் கந்தர்மடத்தில் பலாலி வீதியில் ஒரு நிரந்தரக் காணியையும் கட்டிடத்தையும் பெற்று இன்று இயங்கி வருவதற்கு இவரே மூலபுருஷராக இருந்து செயற்பட்டார்.

## 8. 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' எனப் பணியாற்றியவர்

கிராமங்கள் தோறும் சத்சங்கங்களை ஸ்தாபித்து மக்கள் அனைவரும் ஆன்மீக நெறியில் வாழ்வதற்கு வழிகாட்டினார். சத்சங்கத்தின் ஊடாக கிராம மக்களிடம் ஏற்படும் சிறிய பிணக்குகளைத் தீர்க்க கூடியவாறு பஞ்சாய சபையை நிறுவிச் செயற்பட வைத்தார். கிராம மக்கள் அனைவரும் ஒருவருக் கொருவர் உதவியாக, ஒற்றுமையாக வாழ்வதே கிராமத்தின் உயர்வுக்கு வழிகாட்டும் என்பதை மக்களுக்கு உணர்த்தினார். அகிம்சை வழியில் அறவிழுமியங்களை எடுத்துக்கூறி மதுபானம், சுருட்டு, பீடி, சிகரெட், போதைவஸ்து என்பவற்றிற்கு அடிமையாக வாழ்ந்த பலரை மீட்டெடுத்து தூய வாழ்வு வாழ வழிகாட்டினார். உடம்பு இறைவன் வீற்றிருக்கும் கோயில், நமது உடம்பினைத் தூய்மையானதாகவும், ஆரோக்கியமானதாகவும் பேண வேண்டியதன் அவசியத்தை அனைவருக்கும் வலியுறுத்திக் கூறினார். எண்ணம், சொல், செயல், ஆகிய மூன்றும் தூய்மையாக இருந்தால் செய்கின்ற காரியங்கள் அனைத்தும் சித்தியாகும் என்றார். மனிதன் புனிதனாக வாழ ஆத்மஜோதி ஐயா அவர்களின் போதனைகள் எல்லாம் வழிகாட்டியாக அமைந்திருந்தன. வாக்கும் வாழ்வும் ஒருமித்து வாழ்ந்த ஆத்மஜோதி அவர்களின் வழிகாட்டலினால் தீயவர்களாக இருந்த பலர் தூயவர்களாக மாறினார்கள். நடமாடும் கோயிலாக, ஞானதீபமாக, பலரின் நல்வாழ்விற்கு வழிகாட்டிய திசைகாட்டியாக, உதாரணபுருஷராக கர்மயோகியாக வாழ்ந்து இறைவனின் திருவடி நீழலில் இணைந்துகொண்டார். ஆத்மீக வள்ளல், ஆத்மஜோதி ஐயா அவர்கள் காட்டிய வழியினை நாம் அனைவரும் பின்பற்றி இம்மை, மறுமை நலன்கள் அனைத்தையும் பெறுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மீக வள்ளல் ஆத்மஜோதி நா.முத்தையா அவர்கள்

திருமதி மு. இந்திராணி, ஏழாலை.

சிறப்புமிக்க சைவ சமயத்தை வளர்க்கவும் மேம்படுத்தவும் காலத்திற்குக்காலம் பல பெரியார்கள் அவதாரம் செய்திருக்கிறார்கள். எமது இலங்கைத் திருநாட்டை ஐரோப்பியர் ஆக்கிரமித்து ஆட்சி செய்த காலத்தில் சைவ சமயம் மிகுந்த கெடுபிடிகளுக்கு ஆளாகி மிகவும் நலிவுற்றிருந்தபோது யாழ்ப்பாணத்து நல்லூரில் ஆறுமுக நாவலர் விடிவெள்ளியாக அவதாரம் செய்து சைவத்தின் வளர்ச்சிக்காக தம் வாழ்வையே அர்ப்பணித்து அரும் பணியாற்றினார். அந்நியரின் ஆதிக்கத்தால் அழிவுறும் நிலையிலிருந்த சைவத்தை தம் அரும்பெரும் சேவையால் மீட்டெடுத்து நாவலர் பாதுகாத்து வளர்த்தார்.

அவ்வாறு அவரால் மீட்கப்பட்ட சைவத்தை அவருக்குப்பின்னரும் வளமாக்கி செழிப்புறச் செய்வதற்காக பல சைவச்சான்றோர்கள் இம்மண்ணில் தோன்றியிருக்கின்றனர். அத்தகைய சைவச்சான்றோர் பலரைப் பெற்றெடுத்த பெருமை கொண்டது எமது ஏழாலைக் கிராமம். இலங்கையின் வடபுலத்தில் தமிழ் பேசும் மக்களை தன்னகத்தே கொண்டிருக்கும் யாழ்ப்பாண மாவட்டத்தின் பிரசித்தி பெற்ற கிராமங்களின் வரிசையில் முதலிடம் பெறும் ஏழாலை, பக்தி மார்க்கத்திலும், இலக்கியத்துறையிலும் மிகச் சிறப்புடையது.

சைவ சமயத்தை பாதுகாத்து உயிரூட்டி வளர்த்த அரும்பணியினை ஆற்றிய ஆறுமுகநாவல ருக்குப் பின் அவருடைய பணியினை முன்னெடுத்துச் செய்யக்கூடிய ஆற்றலும் அறிவும் படைத்த சான்றோர்கள் ஏழாலையிலே வாழ்ந்திருக்கிறார்கள்.

அருளானந்தசிவம் என்ற தீட்சா நாமம் பெற்ற ஐ.பொன்னையா அவர்கள், சித்ததாந்த வித்தகர் மு.ஞானப்பிரகாசம் அவர்கள், இலக்கிய கலாநிதி மு.கந்தையா என்ற பேரறிஞர்களின் வரிசையில், இவர்களது சம காலத்தில் வாழ்ந்தவர் நா.முத்தையா அவர்கள்.

அகவை நூறு நிறைவுபெறும் ஆத்மீக வள்ளல் நா.முத்தையா அவர்கள் எழில்மிக்க ஏழாலைப் பதியிலே நாகமணி - பொன்னுப்பிள்ளை தம்பதியரின் இரண்டாவது புத்திரனாக 1918ம் ஆண்டு வைகாசி மாதம் 25ம் திகதி பிறந்தார். இவர் சின்னம்சிறு சிசுவாக இருக்கும்போதே பெற்றோருக்கு மகிழ்ச்சியும், எதிர்பார்ப்பும் ஏற்படுத்தினார்.

சிவந்த நிறம், முகத்திலே ஒரு தேஜஸ், கண்களிலே தெரிந்த ஒளிச்சுடர் - இவற்றைக் கவனித்த பெற்றோர் தமது மற்றப் பிள்ளைகளிலும் பார்க்க இப்பிள்ளை வித்தியாசமானவராக ஆன்மீகப் பேரொளியாக விளங்குவார் என்பதை உணர்ந்தனர். அதற்கான அறிகுறிகள் சிறுபராயமாக இருக்கும் போதே அவரிடம் தென்பட்டன. அவ்விடயமாக பெற்றோர் மிக்க மகிழ்ச்சியே கொண்டனர். ஏனெனில் அவர்களும் ஆன்மீக நாட்டம் கொண்டவர்களாகவே இருந்தனர்.

தந்தையார் நாகமணி முருகப்பெருமான் மீது அளப்பெரும் பக்தி கொண்டவர். கதிர்காமக்கந்தனே காட்சி கொடுத்த அனுபவம் பெற்றவர். நாகமணி அவர்கள் சுகவீனமுற்றிருந்தபோது செய்த வேண்டுதலின் காரணமாக பக்தர் சிலருடன் சேர்ந்து கதிர்காம யாத்திரை மேற்கொண்டார். அவர்கள் திசமகராமாவிலிருந்து கதிர்காமம் நோக்கி இருண்ட நேரத்திலே சென்று கொண்டிருந்தபோது வழி வழியே கற்பூரம் எரிவது போல் ஒளி தெரிந்ததாம். திடீரென்று அழகான வாலிபர் ஒருவர் காட்சிகொடுத்தாராம். "அதோ முருகப்பெருமான்" என்று கூறிக்கொண்டே அவர் முன்னே போக அந்த வாலிபர் மறைந்து விட்டாராம். நாகமணி அவர்களுக்கு காட்சி கொடுத்தவர் முருகப்பெருமானே என்று எல்லாரும் உணர்ந்துகொண்டனர்.

இத்தகைய பேறுபெற்ற நாகமணி அவர்கள் முருகனையே நினைத்து முத்தையா என்று மகனுக்கு நாமம் சூட்டினார்.

சிறுவராக இருந்தபோதே முத்தையா அவர்களிடம் நற்குணங்கள், கடவுள் பக்தி, அன்பு, இரக்கம் முதலான நற்பண்புகளைக் கடைப்பிடிக்கும் பழக்கம் இருந்தது. பெற்றோர் மற்றும் உறவினரிடம் நற்பெயர் பெற்றிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது ஆரம்பக்கல்வியை தமது இல்லத்திற்கு அருகாமையில் இருந்த கத்தோலிக்க பாடசாலையில் பெற்று, பின்னர் மயிலணி சைவ வித்தியாசாலையில் உயர்வகுப்புக்களில் கற்றார்.

சேவை மனப்பான்மை கொண்ட முத்தையா அவர்கள் ஆசிரிய சேவை மூலம் சமூகத்தில் கல்வியறிவும், விழிப்புணர்ச்சியும் ஏற்படுத்த விரும்பி அத்துறையையே தேர்ந்தெடுத்தார். அதன் ஆரம்பக் கட்டமாக திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையில் ஆசிரிய தராதரப்பத்திர படிப்பை மேற்கொண்டு சித்தியடைந்தபின், திருநெல்வேலி சைவாசிரியர் பயிற்சிக்கலாசாலையில் பயின்று பயிற்றப்பட்ட ஆசிரியரானார், அக்கலாசாலையில் தான் பேரறிஞர்களான பண்டிதமணி கணபதிப் பிள்ளை, கைலாசபதி ஆகியோரின் அன்புக்கும், மதிப்பிற்குமுரிய முதன்மை மாணவராக விளங்கிச் சிறந்த ஆசிரியராக உருவானார்.

1939ம் ஆண்டு ஐப்பசி மாதம் 15ம் திகதி ஆசிரியராகப் பணியேற்றார். அக்கால ஒழுங்கின்படி மலையகத்திலே முதல் நியமனம் கிடைத்தது. அங்கே நாவலப்பிட்டி என்ற இடத்திலே பணியாற்றத் தொடங்கிய காலத்திலேயே அங்குள்ள மக்கள் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ளதை கண்டு கொண்டார். அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே முதற்கடமை எனத் தீர்மானித்து, தமது சேவைகளுக்கெல்லாம் கேந்திர நிலையமாக அவ்விடத்தையே ஆக்கினார். அங்கே இருந்து கொண்டே தமது கல்விப்பணி,சமயப்பணி, சமூகப்பணி ஆகிய முப்பணிகளையும் நாடளாவிய ரீதியில் விரிவுபடுத்தினார்.

நாவலப்பிட்டி புனித மேரீஸ் வித்தியாலயத்தில் ஆசிரியராக நியமனம் பெற்று ஒன்பது வருடங்கள் அங்கு பணியாற்றிய பின் 1948ம் ஆண்டு நாவலப்பிட்டி கதிரேசன் வித்தியாசாலைக்கு மாற்றம்பெற்றுப் பணி புரியும்போது 1960ம் ஆண்டு அப்பாடசாலையின் அதிபராகப் பணியேற்று ஓய்வுபெறும் வரை அங்கேயே கடமை புரிந்தார். ஆசிரியராக அதிபராக தன்னலமற்ற உயரிய சேவையை வழங்கியதோடு அகில இலங்கை ஆசிரியர் சங்க உப தலைவராகவும், செயலாளராகவும் சேவையாற்றி கல்வித்துறையில் அரும் பெரும் பணி செய்துள்ளார்.

முத்தையா அவர்களின் வாழ்க்கையின் அடிநாதமே ஆன்மீகம்தான். ஆறுமுகநாவலரைப் போலவே இவரும் திருமண பந்தத்தைத் துறந்து நைட்டிகப் பிரம்மச்சாரியாக வாழ்ந்தவர். சைவ சமயத்தின் உயரிய கொள்கைகளான புலால் உண்ணாமை, ஜீவகாருண்யம், உண்மை பேசுதல், தருமம் செய்தல் முதலான புண்ணியச் செயல்களைக் கடைப்பிடிப்பதோடு தியானம், ஜெபம், கூட்டுப் பிரார்த்தனை, திருமுறை ஓதல் போன்ற ஆன்மீக நெறி தழுவியதாக இவரது வாழ்க்கை அமைந் திருந்தது. சைவ சமய சின்னங்களான விபூதி, உருத்திராக்கம் தரித்து வெள்ளை வெளேரென்ற வேட்டி சால்வையுடன் சைவத் திருமகனாகக் காட்சிதரும் முத்தையா அவர்கள் உலகியலில் மூழ்கிக்கிடக்கும் மக்களிடையே ஆன்மீக உணர்வைத் தூண்டி அவர்களை சமய நெறியில் திருப்புவதற்காகச் செயற்படுத்திய வழிகளாவன சைவப் பிரசங்கம் செய்தல்,சைவ சமய சஞ்சிகை வெளியிடுதல், சமய நூல்களை எழுதிப் பதிப்பித்தல், பாதயாத்திரை செல்லல், வீடுகளிலும் ஆலயங்களிலும் கூட்டுப்பிரார்த்தனை நடத்துதல் போன்றவையாகும்.

தமது பேச்சாற்றலால் மக்களைக் கவர்ந்து அவர்களிடையே ஆன்மீக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினார். மிக உயரிய சமய தத்துவங்களைக் கூட இலகுவான எளிய மொழி நடையில் அழகாகக் கூறிப் புரியவைக்கும் இவரது நாவன்மையால் பலர் சமயநெறியில் வாழத் தலைப்பட்டனர்

அக்காலகட்டத்திலே வாசிக்கும் பழக்கம் மக்களிடம் கூடுதலாக இருந்ததால் சஞ்சிகை ஒன்றை வெளியிட்டு சமய நெறியை பரப்ப முன்வந்தார்.

இல்லறஞானி இராமச்சந்திரா அவர்களுடன் இணைந்து ஆத்மஜோதி என்னும் சஞ்சிகையை மாதந்தோறும் வெளியிட்டார். அதில் சைவப் பெரி யார்கள் பலர் எழுதிய கட்டுரைகள், பாடல்கள் ஆலயங்கள் பற்றிய கட்டுரை என்று சிறந்த சமய ஆக்கங்கள் இடம்பெற்றிருந்தன. ஆத்மஜோதி இலங்கை முழுவதும் ஞான ஒளி பரப்பியதோடு இந்தியா, சிங்கப்பூர், மலேசியா போன்ற இடங்களுக் கும் அனுப்பப்பட்டு நல்ல வரவேற்பைப் பெற்றது.

அச்சஞ்சிகையின் பெயராலேயே அச்சகமும் நிறுவப்பட்டது. முத்தையா அவர்களின் பணிகளுக்கும் செயற்பாடுகளுக்கும் களமாக அமைந்த நாவலப் பிட்டியிலே அச்சகம் நிறுவப்பட்டு ஆத்மஜோதி அச்சகம் என்று பெயர் கொண்டதோடு அவரோடும் அப்பெயர் இணைந்து ஆத்மஜோதி முத்தையா என்று அடையாளப்படுத்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சாற்றல் போல் எழுத்தாற்றலும் கைவரப் பெற்றவர் இலங்கையின் அதி உயர் விருதான சாகித்திய விருது ஆத்மஜோதி முத்தையா அவர்களுக்குக் கிடைத்தது. காவியுடை தரிக்காத ஞானியாக, துறவியாக அவர் வாழ்ந்தவர். சடை வரத சுவாமிகள், அருளானந்தசிவம் சுவாமிகள் போன்ற சித்தர்களுடன் பழகியவர். பல சித்தர்களின் அற்புதங்கள் நிறைந்த வாழ்க்கை வரலாற்றை ஆய்வு செய்து ஈழத்துச்சித்தர்கள் என்ற நூலை எழுதினார். அந்நூலுக்கு 1980ம் ஆண்டு சாகித்திய மண்டல பரிசு கிடைத்தது. 'ஈழத்துச் சித்தர்கள்' நூல் மறுபதிப்பாகவும் வெளிவந்துள்ளது. அவர் நாவலப்பிட்டியை இருப்பிடமாக்கிப் பணி புரிந்து கொண்டிருந்தபோதும் தாம் பிறந்த ஊரான ஏழாலைக் கிராமத்தின் மீதும் மிகுந்த பற்றும் அக்கறையும் கொண்டவராக விளங்கினார். அதன் உச்சக்கட்ட வெளிப்பாடே 'ஏழாலை' என்ற நூலை அவர் எழுதி வெளியிட்டமை யாகும். புள்ளிவிபரங்களோடு ஏழாலை பற்றிய எல்லா விபரங்களும் இந்நூலில் காணப்படுகின்றன.

அறிஞர்கள், எழுத்தாளர்கள் பற்றிய விபரங்கள், ஊர் மக்களின் இயல்புகள், ஊரின் சிறப்புக்கள் என்று அத்தனையும் ஆய்வுசெய்து எழுதப்பட்ட 'ஏழாலை' எனும் நூல் இவ்வூரின் மத்தியிலே அமைந்திருக்கும் ஏழு ஆலயங்களின் முன்றலிலே சித்தாந்த வித்தகர் ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் மிகக் கோலகலமான விழாவாக வெளியீடு செய்யப்பட்ட போது அங்கேயே முழு நூல்களும் விலைப்பட்டு அத்தனை வரவேற்புப் பெற்றன. இந்நூல் முத்தையா அவர்களின் பிறந்த இடமான ஏழாலையின் கிழக்குப் பகுதியில் அமைந்திருக்கும் ஆத்மஜோதி தியான மணிமண்டபத்தின் சார்பாக அவரது மருமகனான நா.முருகையா அவர்களால் 2003ம் ஆண்டு இரண்டாம் பதிப்பாக வெளியீடு செய்யப்பட்டது.

ஆத்மஜோதி ஐயா அவர்களின் வாழ்க்கையில் பாத யாத்திரைகள், இந்தியத் தலயாத்திரைகள்,தூர தேசப் பயணங்கள் என்பனவும் முக்கிய இடம் பெற்றன. அந்த யாத்திரைகளால் தாம் பெற்ற இன்பத்தை மற்றவர்களும் பெறும் வகையில் நூல்களாக உருவாக்கித் தந்துள்ளார். கேதார் நாத், பத்ரி நாத் முதலான திருத்தல யாத்திரைக்குப்பின் 'கேதார் பத்ரி' யாத்திரை நூலும், இந்தோனேசியப் பயணத்தின் பின் 'இந்தோனேசியாவில் இரண்டு வருட அனுபவம்' என்ற நூலும் அவரால் எழுதப்பட்டன.

அவர் எழுதி வெளியிட்ட 'பன்னிரு மாத நினைவுகள்' என்ற நூல் சைவ மக்களுக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும். மாதம் தோறும் வரும் சைவ சமய விரதங்கள், விழாக்கள் பற்றிய முழு விபரங்களும் அந்நூலில் இடம்பெற்றுள்ளன. உன்னதமானதொரு சமயப்பணியாக சமய நூல்களை அச்சிட்டு வெளியிடுவதற்காக அமைக்கப்பட்ட அச்சகமான ஆத்மஜோதி அச்சகத்தில் மேலும் பல நூல்களை எழுதி அச்சிட்டு வெளியிட்டார்.

ஆத்மஜோதி அச்சகத்தில் அச்சிடப்பட்ட அவரது நூல்கள் ஈழத்துச்சித்தர்கள், ஏழாலை, கந்தனே கலியுகத்தில் கண்கண்ட தெய்வம், திருமுறைச் செல்வம், திருமுறைக்காட்சி, பன்னிரு மாத நினைவுகள், இலங்கையில் ஓர் இல்லற ஞானி, மாணவருக்கேற்ற மாண்புறு கதைகள், இளைஞர் களுக்கேற்ற இந்தோனேசியக் கதைகள், பால யோகேஸ்வரர் சரிதம் முதலியன.

உயர்வான நற்பண்புகள் கொண்ட ஆத்மஜோதி ஐயா அவர்கள் தாமும் ஓர் மகான் ஆகவே வாழ்ந்ததுடன், எங்கெங்கே மகான்கள் இருந்தார்களோ அங்கங் கெல்லாம் சென்று அவர்களைத் தரிசித்து நேரில் அளவளாவி அதனை தம் வாழ்வில் பெற்ற பெரும்பேறாக கருதினார். ரமண மகரிஷிகள், சுவாமி சிவானந்தர், சுவாமி ராம்தாஸ், யோகர் சுவாமிகள், காஞ்சி காமகோடி பீடாதிபதி, பகவான் சத்யசாயிபாபா முதலான மகான்களின் அருட்பார்வையும் ஆசியும் பெற்றவரான முத்தையா அவர்கள் கனடாவிற்குச் சென்றபோது பத்து நாட்களில் பத்து மகான்களைப் பற்றி எழுதி நூலாக உருவாக்கினார். தரிசனம் என்ற பெயர் அந்நூலுக்குப் பொருத்தமாக அமைந்தது. 1995ம் ஆண்டு ரொறொன்ரோவில் பெரும் விழா ஒன்றிலே அந்நூல் வெளியீடு செய்யப்பட்டது.

எல்லோரும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் இலகுவான மொழி நடையில் இத்தகைய அருமையான பல நூல்களை எழுதி அவர் சைவத்திற்கும் சைவ மக்களுக்கும் ஆற்றிய பணி போற்றப்பட வேண்டியதாகும்.

அவரது வாழ்க்கையின் குறிக்கோள் சைவப் பணியாகவே இருந்தபோதும் சமயம் வளர்வதற்கு அடிப்படையாக சமூகம் நற்பண்புகளையுடைய ஆரோக்கியமான சமூகமாக இருக்கவேண்டுமெனக் கருதி சமூகப் பணிகளில் நேரடியாகவே இறங்கினார்.

மக்கள் தொண்டனாக மக்கள் நடுவில் நின்று சேவை புரியும்போது மக்களில் ஒருவராகவே தம்மைக் காட்டிக்கொள்ள விரும்பினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால்தான், தாம் துறவியாக வாழ்ந்தபோதும் காவியுடை தரிக்காமல் வெள்ளை வேட்டி அணிந்து கொள்ளும் வழக்கத்தைக் கொண்டிருப்பதாகக் கூறும் அவர் தம்மை வித்தியாசமானவராகக் காட்டி மக்களிடையே அந்நியப்படுத்திக்கொள்ளாமல் அவர்களைப்போல அவர்களில் ஒருவராக நின்று பணியாற்றும்போதுதான் தம் உபதேசங்கள், வழிகாட்டல்கள் மக்களிடையே எடுபடும் அவர்களால் பின்பற்றப்படும் என்று நம்பினார். அந்த நம்பிக்கை யிலேதான் அவர் தூய வெள்ளையுடை அணிந்து மக்களிடையே நின்று சமூகசேவை புரிந்தார். அவருடைய எண்ணம் போல மக்களும் அவரை தோழமையுள்ள ஆசானாக மதித்து அவரது உபதேசங்களைப் பின்பற்றினர்.

ஆத்மஜோதி ஐயா அவர்கள் தாம் கல்விகற்ற காலமான இருபது வயது வரை பிறந்த ஊரான ஏழாலையிலேயே வாழ்ந்தவர். இளமையிலேயே பொது நோக்கும், ஆன்மீக நாட்டமும் கொண்டவராக விளங்கிய அவர் தமது குலதெய்வமான பாதாள ஞான வைரவர் ஆலயத்தைக் களமாகக் கொண்டு தமது உற்றார் உறவினர் சுற்றத்தவராக இருந்த சமூகத்தை நன்னெறிப்படுத்தும் நோக்கத்தில் கூட்டுப் பிரார்த்தனை, பாத யாத்திரை, பூசை வழிபாடுகளில் ஈடுபடுத்தி தாமும் தொண்டுகளில் ஈடுபட்டார்.

ஆசிரியப்பணியேற்று நாவலப்பிட்டிக்குச் சென்ற பின் அங்கு பெரும்பாலான மக்கள் பொருளாதாரம், கல்வி, ஆன்மீகம் என்று பலதுறைகளிலும் பின் தங்கிய நிலையில் வாழ்வதைக் கண்டு, தம் வாழ்வையே முழுமையாக அர்ப்பணித்து அவர்களுக்காக நாற்பத்துநான்கு வருடங்கள் சேவையாற்றினார்.
முதலில், அந்த மக்கள் மேற்கொள்ளும் மது அருந்துதல், புகைத்தல் முதலான தீய பழக்கங்களைப் போக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அதற்காக அவர் கையாண்ட முறை பெரு வெற்றியை அளித்தது. நாவலப்பிட்டியில் ஆசிரியப்பணி புரிந்ததின் மூலம் அவ்விடத்து மக்களிடையே பரிச்சயமான ஆத்மஜோதி ஐயா அவர்கள் வீடு வீடாகச் சென்று மது குடித்தல், புகைத்தல் முதலான தீய பழக்கங்களால் ஏற்படும் தீமைகள் பற்றியும் அவற்றை விலக்குவதால் வரும் நன்மைகளையும் பக்குவமாக எடுத்துக்கூறி உபதேசம் செய்தார். அந்த முயற்சியில் அவர் மக்களது மனங்களை வென்றார் என்றே சொல்ல வேண்டும். பலர் மது குடித்தல், புகைத்தல் ஆகிய பழக்கங்களிலிருந்து விடுபட்டு நற்பிரஜைகள் ஆகினர். அவர்களை ஆன்மீக நெறியிலே திருப்புவதற்கு கூட்டுப்பிரார்த்தனை, சற்சங்கம், பாதயாத்திரை, பஜனை, பிரசங்கம், சிறு கைநூல் வெளியீடுகள் முதலிய செயற்பாடுகளை நிகழ்த்தியதால் மக்களிடையே ஆன்மீக விழிப்புணர்ச்சி உருவாகியது.

மேலும் மக்களிடையே ஜீவகாருண்ய உணர்வை வளர்க்க விரும்பிய முத்தையா அவர்கள் புலால் உண்ணாமை பற்றியும் உபதேசம் செய்திருக்கிறார். கோபம், ஆத்திரம் முதலான கெட்ட உணர்வுகளைத் தூண்டக்கூடிய காரம், புளிப்பு இவைகளை விலக்கி மென்மையான உணவுகளையே தாம் உண்ணும் வழக்கத்தை கொண்டிருந்த அவர் பலரைச் சைவ போசனம் மட்டுமே உண்பவர்களாக மாற்றியதோடு இந்தோனேசியாவில் அவருடைய அப்போதனையிலே வெற்றிகண்டிருக்கிறார்.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்"

என்ற ஜீவகாருண்ய தத்துவப் போதனையும் அவரது பணிகளிலே முக்கியமானதாக இருந்தது.

இவ்வாறு, கல்வி பொருளாதாரம், ஆன்மீகம் என்ற மும்முனைகளில் அயராது பணிசெய்து நாற்பத்தைந்து வருடகால முயற்சியில் மலையகத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய நிலையில் 1983ம் ஆண்டு நிகழ்ந்த கலவரங்களால் தாம் பிறந்த ஊருக்கு வந்தார். அவ்வேளையில் அவர் அவதாரம் செய்த இடமான ஏழாலையும், ஏழாலையைத் தன்னகத்தே கொண்டிருக்கும் வடமாகாணமும் அவருடைய சேவையை முழுமையாகப் பெறும் பாக்கியம் பெற்றது.

சாந்தி சமாதானம் ஏற்படவும் அவலப்பட்டு நிற்கும் மக்களது மனங்களில் அமைதி நிலவவும் வேண்டி கோயில் கோயிலாக தல யாத்திரை செய்தார். மக்களது இல்லங்கள் தோறும் சென்று கூட்டுப்பிரார்த்தனை நடாத்தினார்.

இக்காலப்பகுதியில்தான் அவரது குலதெய்வமான இலந்தக்கட்டி பாதாள ஞான வைரவர் ஆலயத்தில் அவரது பணிகள் முழுமையாக இடம்பெற்றன.

இலந்தக்கட்டி என்பது ஏழாலையின் கிழக்குப் பகுதியில் அமைந்திருக்கும் ஒரு குறிச்சியின் பெயர். ஏழாலை என்ற பெயரே ஏழு ஆலயங்கள் ஒரே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தில் அடுத்தடுத்து இருப்பதால் ஏற்பட்ட பெயராகும். அப்படியானதொரு ஆலயங்களின் அமைப்பு ஏழாலையின் மத்தியிலே உள்ளது. அத்துடன் ஏழாலையின் நாற்புறமும் பிரசித்திபெற்ற ஆலயங்கள் இருக்கின்றன. மேற்கிலே கருணாகரப் பிள்ளையார் மடாலயம், தெற்கிலே களபாபோடை வசந்த நாகபூசணி அம்மன் ஆலயம், வடக்கிலே ஆலங்கட்டுப் பிள்ளையாா ஆலயம் என்ற வகையிலே ஏழாலையின் கிழக்கிலே இலந்தக்கட்டி பாதாள ஞான வைரவர் ஆலயம் பிரசித்தி பெற்ற ஆலயமாக விளங்குகிறது. அதன் வளர்ச்சிக்கும் முன்னேற்றத் திற்கும் ஆத்மஜோதி ஐயா அவர்கள் அரும்பெரும் பணியாற்றினார்.

அந்த ஆலயச் சுற்றாடலில் இருந்த இளைஞர்கள், சிறுவர்களைச் சேர்த்து, பண்ணிசை வகுப்புக்கள் நடாத்தியதோடு பேச்சுப்போட்டி, பண்ணிசைப்போட்டிகள் நடாத்தி பரிசில்கள் வழங்கி ஆலய வழிபாட்டிலே அவர்களை ஈடுபடச்செய்தார். பல்கலைக்கழகத்தில் படிப்பதற்குத் தெரிவாகும் மாணவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் பல புலமைப் பரிசில் திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தினார்.

அவர் நிகழ்த்திய பாத யாத்திரைகளில் பிரசித்தி பெற்ற பாத யாத்திரை நல்லூர் பாத யாத்திரையாகும். ஏழாலை பாதாள ஞான வைரவர் ஆலயத்திலிருந்து அதிகாலை நான்கு மணிக்குப் புறப்பட்டு புன்னாலைக் கட்டுவன், உரும்பிராய் வழியாக நடந்து சென்று நல்லூர் கந்தசுவாமி கோயிலில் தேர்த்திருவிழாவைக் கண்டு களிப்பார்கள். சிறுவர் சிறுமியர் பெரியோர்கள் என்று யாவரும் முத்தையா அவர்களின் தலைமையில் இறை நாம வழிபாட்டோடு நடந்து சென்று வருடம் தோறும் நல்லூர் கந்தனின் தேர் உற்சவத்தைக் கண்டுகளித்தது மறக்கமுடியாத பக்திமயமான நிகழ்வாகும்.

பல வழிகளில் அரும்பெரும் சமயப் பணியாற்றிய ஆத்மஜோதி ஐயா அவர்கள் தமது பணிகளின் உச்சக்கட்ட நிகழ்வாக செயற்படுத்திய பணிதான் இந்துசமயப் பேரவை ஸ்தாபித்த செயலாகும்.

1992ம் ஆண்டு நல்லை ஆதீன முதல்வரின் ஆசியுடன் சகல இந்துசமய நிறுவனங்களையும் ஒன்றுபடுத்தி இந்துசமயப் பேரவையை நிறுவியதோடு மிகவும் பொறுப்பு மிகுந்த தலைமைப் பொறுப்பையும் தாமே ஏற்று அதனைச் சிறப்பாக இயங்க வைத்தார். இச்செயலுக்காக பெரியோர்கள் பலர் அவரை மிகவும் பாராட்டினார்கள்.

"இந்துக்கள் இருள் சூழ்ந்த ஓர் காலகட்டத்தில் இருந்தபோது இந்துக்களின் தலைமை அமைப்பாக இந்து சமயப் பேரவையை நிறுவி அதன் மூலம் எமது மதத்திற்கு ஏற்படும் இன்னல்களுக்கு எதிராகக் குரல்கொடுக்கும் ஒரு மாபெரும் சக்தியை வளர்த் தெடுத்தவர்" என்று நல்லை ஆதீனத்தின் இரண்டாவது குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள் பாராட்டினார்..

"1992ம் ஆண்டு ஆத்மஜோதி ஐயா இந்துசமயப் பேரவையை நிறுவித் தலைமைப் பொறுப்பை ஏற்றது எமது நாட்டின் சரித்திர வரலாற்றில் செறிவான செயலாகும்." என்று பேராசிரியர் நந்தி அவர்கள் புகழ்மாலை சூட்டினார்.

முத்தையா அவர்கள் நிறுவிய இந்துசமயப் பேரவையை இன்றும் தமது கண்போலப் பேணி வளர்த்து யாழ்ப்பாணத்தில் செயற்படுத்திக் கொண்டிருக்கும் சக்திகிரீவன் அவர்கள் கூறியது "ஆத்மஜோதி ஐயாவின் அவதார நோக்கம் நிறை வேறியது அவரது எழுபத்து நான்காவது வயதிலே தான் இந்துக்கள் நலன்களைப் பேணுவதற்கென இந்து சமயப் பேரவையை உருவாக்கி வளர்த்ததே ஐயாவின் அவதார நோக்கம்"

அவதார புருஷராக விளங்கிய முத்தையா அவர்கள் ஆற்றிய சமயப்பணிகள் தாய்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் இடம்பெற்றுள்ளன.

1954ம் ஆண்டு புத்தகாயாவில் வினோபாவே நடாத்திய சர்வோதய மாநாட்டுக்கு இலங்கைப் பிரதிநிதியாகச் சென்று பங்கு பற்றிய பெருமைக் குரியவர்.

1977ம் ஆண்டு இந்தியாவில் சங்கராச்சாரிய சுவாமிகள் நடாத்திய அகில உலக இந்து சமய மகாநாட்டில் சொற்பொழிவாற்றிப் பாராட்டுக்கள் பெற்றவர்.

மலேசியாவில் அகில உலக இந்து சமய மகாநாடு 1980ம் ஆண்டு நடைபெற்றது. அதன்போது இலங்கையிலிருந்து சென்ற அறிஞர் குழுவிற்குத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமை தாங்கிச் சென்று, பசுவைக் கொன்று உண்ணும் பாவத்தை நிறுத்தக்கோரி அவர் ஆற்றிய உரையினாலும் அவரது சைவத் திருத்தோற்றப் பொலிவாலும் கவரப்பட்டு அங்கு வந்திருந்த இந்தோனேஷியப் பிரதிநிதிகள் ஆத்மஜோதி ஐயா அவர்களைத் தமது நாட்டிற்கு வரும்படி அழைப்பு விட்டார்கள். அந்த அழைப்பினை ஏற்று 1984ம் ஆண்டு இந்தோனேஷியாவிற்குச் சென்று இரண்டு வருடங்கள் அங்கேயே இருந்து அவர் ஆற்றிய சைவப்பணி போற்றப்படவேண்டியதாகும்.

மூன்று வகையான வழிபாட்டு முறைகளை இந்தோனேஷிய மக்களிடையே அறிமுகப்படுத்திச் செயற்பட வைத்தார். குடும்பப் பிரார்த்தனை, வீட்டுப் பிரார்த்தனை, கூட்டுப் பிரார்த்தனை என அவர் வகுத்த வழிபாட்டு முறைகளை அந்நாட்டு மக்கள் ஆர்வத்துடன் செயற்படுத்தினர்.

ஒரு குடும்ப அங்கத்தவர்கள் ஒன்று சேர்ந்து இரவு உணவு உண்பதற்கு முன் தினசரி செய்வது குடும்பப் பிரார்த்தனை பத்துப்பதினைந்து வீடுகளிலுள்ளவர்கள் ஒன்று சேர்ந்து வாரத்திற்கு ஒருமுறை செய்யும் பிரார்த்தனை வீட்டுப் பிரார்த்தனை வெள்ளிக்கிழமைகளில் ஆலயங்களில் நடாத்தும் கூட்டுவழிபாடு கூட்டுப் பிரார்த்தனை.

இந்த மூன்றுவகை வழிபாடும் அந்நாட்டு மக்களைக் கவர்ந்தது. ஆர்வத்துடன் அவர்கள் பங்குபற்றிய வேளையில் இன்னொரு விஷயத்தையும் பிரச்சாரம் செய்தார். மக்களின் மனங்களைத் தொடும்படி புலால் உண்ணாமை பற்றி அவர் செய்த பிரச்சாரம் பலரை ஏற்றுக்கொள்ளச் செய்து சைவ போசனம் மட்டும் உண்பவர்களாக மாற்றியது.

அந்நாட்டில் தாம் பெற்ற அற்புதமான அநுபவங் களையே 'இந்தோனேஷியாவில் இரண்டு வருடங்கள்' என்ற நூலில் கூறியுள்ளார்.

சுவிற்சலாந்திற்கும் சமயப் பயணத்தை மேற்கொண்ட ஆத்மஜோதி ஐயாவின் வாழ்விலே சரித்திரப் பிரசித்தி பெற்ற பயணமாக விளங்குவது கனடா நாட்டுப் பயணமே. சைவ சமய வரலாற்றிலும் பதிவுசெய்யப்பட்ட ஒரு பயணம் அது.

1994ம் ஆம் ஆண்டு சைவசித்தாந்த மகாநாட்டில் பங்குபற்றுவதற்காகத்தான் அவர் கனடாவுக்குச் சென்றார். ஆனால் அங்கே அவருக்குக் கிடைத்த வரவேற்பும் சைவப்பணிகளை முன்னெடுத்துச் செய்வதற்கு அவர்கள் வழங்கிய ஆதரவும் அவரை மிகவும் ஊக்கப்படுத்தின. கனடாவில் பிறந்த எமது சைவத்தமிழ் குழந்தைகள் அவ்விடத்துக் கலாச் சாரங்களில் முற்றாக மூழ்கிவிடாமல் சைவத் தமிழ்ப் பண்பாடுகளையும் கடைப்பிடிக்கவேண்டும் என்பதற்காக அங்கே காத்திரமான பணிகளைச் செயற்படுத்த விரும்பினார்.

அந்த நாட்டில் ஒரு ஸ்திரமான சமய அமைப்பை ஏற்படுத்தும் நோக்குடன் ஒன்ராறியோவில் இந்துசமயப் பேரவையை நிறுவினார். இச்செயல் மூலம் முத்தையா அவர்களுக்கும் கனடா நாட்டிற்கும் நிலையான பலமான ஆன்மீகத் தொடர்பு உருவாகியது.

அவரால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட இந்துசமயப் பேரவையை தொடர்ந்து பொறுப்பேற்று நடாத்துவதற்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் களாகவும் தற்போது அங்கே வாழ்பவர்களாகவும் விளங்கும் திரு. சிவ. முத்துலிங்கம் போன்றவர்கள் முன்வந்து செயற்படுவது ஆத்மஜோதி ஐயாவின் ஆசியும் அவர் வழங்கிய ஆன்மீக சக்தியும் தான் காரணமாகும்.

அவ்வாறு அந்த மக்களிடையே அவர் ஏற்படுத்திய ஆன்மீக விழிப்புணர்ச்சியும் வேறுபல காரண காரியங்களும் மீண்டும் அவரைக் கனடா நாட்டுக்கு வரும்படி அழைப்பு விடுக்கச் செய்தன.

அங்கே கனதியான காத்திரமான காரியங் களுடன் கவலையான ஒரு காரியமும் நடைபெற வேண்டிய நியதி இருந்தது. ஆத்மஜோதி ஐயா அவர்கள் அவர்களது அழைப்பை ஏற்று 1995ம் ஆண்டு மீண்டும் கனடாவுக்குச் சென்றார்.

அங்கே மொன்றியல் துர்க்கை அம்மன் ஆலய கும்பாவிஷேகத்தில் பங்குபற்றும் மகிழ்ச்சியில் இருந்தவரை மேலும் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தினர் கனடா இந்துசமயப் பேரவையினர். முத்தையா அவர்கள் தம் வாழ்க்கைப் பேறாகக் கருதும் பத்து மகான்களின் தரிசனத்தை முன்வைத்து ஒருசில நாட்களில் அவரால் எழுதப்பட்ட 'தரிசனம்' என்ற நூலை அச்சிட்டு ரொறன்ரோவில் பெருவிழா எடுத்து கோலாகலமாக வெளியீடு செய்ததுடன் அதே மேடையில் கவிஞர் கந்தவனம் அவர்களால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதப்பட்ட 'முத்தான தொண்டர்' என்ற ஐயாவின் வாழ்க்கை வரலாற்று நூலையும் அவர் முன்னிலையிலேயே வெளியிட்டுப் பெருமைப்படுத்தினார்.

ஆத்மஜோதி ஐயா அவர்கள் மிகவும் மகிழ்ச்சியான மன நிலையில் இருந்தார்.

ஓர் அந்நியக் கலாச்சாரச் சூழ்நிலையில் வாழும் நம் சைவமக்கள் கனடாவில் தாம் நிறுவிய இந்துசமயப் பேரவையை திறம்படச் செயற்படுத்தி அந்தச் சூழலிலும் சைவநெறியைப் போற்றி வாழ்வதைக்கண்டு மகிழ்ந்தார். அங்கு தாம் தொடக்கி வைத்த அருட்பணிகளைத் தொடர்ந்து செய்வதற்கு தகுந்த சீடர்கள் வாய்த்திருப்பதைக் கண்டு மகிழ்ந்தார்.

அவரது ஆன்மீகக் கனவுகள் பெரும்பாலும் நனவாகும் நிலை ஏற்பட்ட திருப்தியிலும் இருந்தார். தாம் பிறந்த ஊரிலே தம் குலதெய்வமான பாதாள ஞானவைரவரின் ஆலயச்சூழலில் தியான மணிமண்டபம், பூங்கா மற்றும் ஆலயத்திற்குச் சுற்று மதில்,இராஜகோபுரம் எல்லாம் அமைய வேண்டுமென விரும்பினார். அப்பணிகள் நிறைவேறுவதற்கான பூர்வாங்கப் பணிகளையும் கனடாவில் தொடக்கி உரியவர்களுடன் பேசி ஒழுங்குசெய்து வெற்றிகண்டிருந்தார்.

இத்தகையதொரு மனநிறைவானதொரு சூழ்நிலையில், கோலாகலமாக தரிசனம், முத்தான தொண்டர் ஆகிய நூல்களின் வெளியீட்டு விழா நடந்த நான்காம் நாள் - 1995ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 8ம் திகதி ஆத்மீக வள்ளல், அன்புமணி, ஆத்மஜோதி என்றெல்லாம் போற்றப்பட்ட நா. முத்தையா அவர்கள் சிவபதப் பேற்றினை எய்தினார்.

இலங்கைத் திருநாட்டின் யாழ்ப்பாண நகரின் ஏழாலைக்கிராமத்தில் தோன்றிய அவர் கனடா நாட்டில் இவ்வுலக வாழ்வை நிறைவுசெய்தார் என்றால் அதற்குக் காரணம் அவருக்கும் கனடாவுக்குமுள்ள ஆன்மீகப் பிணைப்பேயாகும். அவருடைய அபிமானிகள் கனடாவில் அவரது காத்திரமான பணிகளை முன்னெடுத்து செயற்படுத்துவதுடன் அவரது அகவை நூறு நிறைவையும் கொண்டாடுவதே அதற்குச் சாட்சியாகும்.

இந்து சமுத்திரத்தில் ஒரு முத்தாக விளங்குவது இலங்கைத்தீவு என்று புகழ்ந்தார்கள் ஆங்கிலேயர். எமது ஏழாலைக்கிராமத்தில் விளைந்த பெறுமதிமிக்க நல்முத்துதான் ஆத்மஜோதி முத்தையா அவர்கள் கனடா, ஏழாலை,நாவலப்பிட்டி முதலாக அகில உலகிலும் வாழ்கின்ற ஆன்மீக நெஞ்சங்களில் நல்முத்தாக அவர் ஜொலித்துக் கொண்டிருக்க, ஏழாலை பாதாள ஞானவைரவர் ஆலயச் சூழலில் அவரது கம்பீரமான திருவுருவச்சிலை நினைவுச் சின்னமாகக் காட்சிதருகிறது.

ஏழாலை-குப்பிழான் பெரிய தெருவின் அருகே ஆத்மஜோதி தியான மணி மண்டபம் அறநெறிப் பாடசாலை முதலான நற்காரியங்களைச் செயற்படுத்த அதன் தென்புறம் வைரவர் ஆலயம் ஒழுங்கான பூசை விழாக்களுடன் கண்கொள்ளாக் காட்சியாக விளங்க நடுவில் ஐயா உருவாச்சிலையாக நின்று அருளாசி வழங்கிக் கொண்டிருக்கிறார்.

ஐயாவின் மறைவுக்குப்பின் 2001ம் ஆண்டு அவரது எண்பத்துநான்காவது ஜெயந்தி ஞாபகார்த்த விழா சிறப்பாக நடைபெற்றபோது ஞாபகார்த்த சிறப்புமலர் வெளியிடப்பட்டதோடு தியான மணிமண்டப கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

அவரது உருவச்சிலை கனடா இந்துசமயப் பேரவையின் சார்பாக கனடாவாழ் அன்பர்களது நிதியுதவியில் நிறுவப்பட்டதும் கனடாவுடன் அவருக்கிருந்த ஆன்மீகத்தொடர்பே காரணமாகும்.

தமக்கென்று வாழாமல் தமது முழு வாழ்வையும் ஆன்மீகப்பணிக்கென்றே அர்ப்பணித்து சேவைசெய்து ஆன்மீகப் பேற்றை வள்ளல் போல் வாரி வழங்கி ஆத்மீக வள்ளலாக விளங்கிய ஆத்மஜோதி ஐயாவின் அகவை நூறு நிறைவு விழா கனடாவில் சிறப்பாக நடைபெற வாழ்த்துகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்தான முத்து அல்லவோ முதிர்ந்துவந்த முத்தல்லவோ

# ஆத்மஜோதி ஆசான் முத்தையாவின் முத்தான 100வது பிறந்த தின விழா

சி. சங்கரலிங்கம்
செயலாளர், ஆத்மஜோதி சமய, சமூக மேன்பாட்டு அமையம் - நாவலப்பிட்டி

இலங்கை இந்து மத சமுத்திரத்தின் முத்தையா, நாவல் நகரில் ஒளித்த ஜோதி, ஒலித்த குரல், ஆத்ம ஜோதி முத்தையா சைவத்தையும் தமிழையும் தன் கண்களாகக் கருதிய கனவான். ஆத்மஜோதி முத்தையா வடதிசையில் தோன்றி தென்திசையிலும் ஒளிர்விட்ட ஒப்பற்ற விடிவெள்ளி. ஆத்ம ஜோதி முத்தையா வேத இதிகாசங்களில் மூழ்கி எடுத்த முத்தான மெய்ப்பொருளை விளங்கு தமிழில் விதைந்துரைத்த வித்தகர் ஆத்ம ஜோதி முத்தையா இந்து மதம் எமக்கு என்ன செய்தது என்பதற்கு அப்பால் இந்து மதத்திற்கு நாம் என்ன செய்யவேண்டும் என்பதை செயலில் காட்டிய செயல் வீரராய் இந்து மதம் ஈந்த ஒரு முத்தையா ஆத்ம ஜோதி முத்தையா, அவர் நம் சொத்தையா.

நாவலர் பெருமானை உலகிற்கு அளித்த பெருமை வடபகுதி நல்லூர் மக்களையே சாரும். ஆத்ம ஜோதி முத்தையா சுவாமிகளை சைவத்திற்கும் தமிழுக்கும் அளித்த பெருமை நாவல் நகர் மக்களையே சாரும். காரணம் இவர் புகழ் பூத்து பக்தி மணம் பரப்பியது நாவல் நகர் தொடங்கியே.

உலகிற்கு அன்பு நெறியை காட்டிய புத்தபகவான் சத்திரிய குலத்தில் விசாக நட்சத்திரத்தில் அவதரித்தார். ஆத்ம ஜோதி முத்தையா சுவாமிகள் விசாக நட்சத்திரத்தில் பிறந்து ஆசிரியர் குலாத்தில் ஒழுக்க நெறியில் வாழ்ந்து காட்டினார்.

முத்து குளிப்பது தென்கடலிலே என்றார். "முண்டாசு கவிஞர் பாரதி" வடகரையில் ஏழாலை என்ற ஊரில் 25.05.1918 அன்னை பொன்னுப்பிள்ளை குளியாமல் இருந்து பெற்றெடுத்த முத்து நாகமணி முத்தையா சுவாமிகள்.

நாவல் நகரில் ஆரம்பித்த சமயப்பணி மலையகம் முழுவதும் வியாபித்து இலங்கை முழுவதும் பரவிக் கடல் கடந்தும் பிரகாசித்தது.

தன் உடல் பொருள் ஆவி அனைத்தையும் இந்துவுக்கென்று உடல் உலக பந்துக்கு என வாழ்ந்த உன்னதமான பெரியார் ஆத்ம ஜோதி முத்தையா சுவாமிகள் பல பொறுப்பான பதவிகளை வகித்தார். இவரால் இவர் வகித்த பதவிகள் பெருமைபெற்றன.

நாங்கள் பாடிய முதற்பதிகம் அவர் கூறியபடி கேட்டு நாம் இந்துவென்றானாதெல்லாம் அவர் இயம்பிய இறை அருள் உரை கேட்டு நாம் திருநீறு அணிவதெல்லாம் நேர்த்தியாய் அவர் திருநீறு அணிந்த நெற்றி பார்த்து நாம் ஆசான் என அறிந்தது எல்லாம் அவர் அகம்,புறம், வெண் நிறம் பார்த்து நாம் தலை நிமிர்ந்து நடப்பதெல்லாம் அவர் தளராத நேர் நடைகண்டு, பொருள் பூத்த முகங்கள் கூட பூரிப்படைந்தது. அவர் அருள் பூத்த அகமுகம் பார்த்து எண்பாவாய் என்றிசைக்கும் திருவெம்பாவை இருபாலாரும் இசைக்கலாம் என இடித்துரைத்த இடும்பன் அவர். ஊர் போற்ற உயர்வாழந்த உத்தமர் பார் போற்ற பதிந்துவிட்டார். பண்பால் ஆண்டு கொண்டார் நம் மனதில் அன்பால் வீண் பழி கேட்டும்விடாது நல் ஆத்மீக ஒளி தந்து தமிழ் மொழி வளர்த்த ஆத்ம ஜோதி சுய ஒளி கொண்ட சூரியன்.

தொண்டுக்கென்றே அலைவார் துயருக்கு ஆளாவார் கண்டுகொள்வாய் ஞானத்தங்கமே அவர் கடவுளில் பாதியடி ஞானத்தங்கமே என்னும் கவிஞனின் கவிதைக்கு அமைவாக துன்பம் தமக்கென்றும் இன்பம் இந்துவுக்கென்றும் வீழ்வது தானாகிலும் வாழ்வது இந்துவாகட்டும் என இயம்பியவாறு வாழ்ந்த இசை பாலன், தன் மீது வீசிய கற்களை வீணாகிவிடக்கூடாது என்பதற்காக கலைகூடம் கட்டிய கனவான் கலைத்து விடாமல் கட்டிடத்தை கடல் கடந்தும் அவர் அன்பர்கள் இதயத் திலிருந்து எடுத்தெறிய யாருக்கும் அருகதையில்லை மறையவில்லை மருவி வாழ்கின்றார். நன்றி மறவா நன் மக்கள் மனங்களில் நா.முத்தையா என் முத்தையா என உச்சரிப்போர் உள்ளங்களில் பெயரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழும் விரும்பாத பெருந்தகை பெயர்ந்துவிடலாம் கட்டடத்தைப் புதுப்பிக்க, ஆனால் அவர் போட்ட அடித்தளம் அசைக்கமுடியாமல் அமைந்துவிட்டது. ஓர் அடுக்குமாடியாக அண்ணாந்து பார்க்கும்வண்ணம் ஆசீர்வதிக்கும் ஆன்மா அங்கிருந்து.

எத்தனை எத்தனை ஞானிகள் சமயப் பெரியார்கள் தான் பதிய தளம் அமைத்த பெருமை அழியாமல் அடைவது. ஆத்ம ஜோதி ஆசானுக்கு தான் அதிபராக இருந்தபோது இல்லங்கள் இல்லை என்று இருந்த கதிரேசன் கனிஷ்ட கல்லூரிக்கு கம்பன், இளங்கோ, பாரதி என இல்லங்களை அமைத்து இயக்கி வைத்தார். உள்ளமும் உடலும் மேன்மைபடும் வண்ணம் இன்று இந்து மகளிர் கல்லூரி மலர அன்றே பிள்ளையார் சுளியிட்ட பெருமகன் ஆத்ம ஜோதி முத்தையா சுவாமிகள் ஆத்மீகத்தை அழுத்தமாகவும் மெய்ஞ்ஞானத்தையும் விஞ்ஞானத்தையும் இணைந்தியம்பிய வீரத் துறவி விவேகானந்தரை ஞாபகப்படுத்தும் வண்ணம் காவி அணியாத் துறவி கதர் உடுத்த காந்தியவாதி ஆத்ம ஜோதி முத்தையா சுவாமிகள் வெண்ணிறத்தில் பொன்னிறமாய் பொன்னிறத்தில் செந்நிறமாய் பூத்த நெற்றியுடன் வெண்ணிற உடையில் காட்சிதரும் கனவான். காண்போரைக் கவரும் காந்தரூபன் ஆத்ம ஜோதி முத்தையாவின் ஆரம்பகால ஆத்மீக செயற்பாடு களுக்கு உந்து சக்தியாக விளங்கிய இடம் நாவல்நகர ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமிகள் ஆலயம். அதன் பின்னரே அனைத்து ஆலயங் களுக்கும் அவர் ஆத்மீக சேவை பரவியது. இதனை ஞாபகப்படுத்தும் முகமாக 25.05.2014 அவர் பிறந்ததின விழா நடந்த மேடை இன்று நாவல்நகர் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய மூலஸ்தானமாக காட்சி அளிப்பது இறை ஆசியை உறுதிப்படுத்துகின்றது.

ஆலயங்களால் நாம் புகழ் பூத்தோம் அவரால் ஆலயங்கள் புகழ் பூத்தன நகரால் நாம் புகழ் பூத்தோம் அவரால் நகர் புகழ் பூத்தது.

“மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின் மன்னனிலும் கற்றார் சிறப்புடையார் மன்னனுக்கு தன் தேசமல்லாது சிறப்பில்லை கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு” என்கிறாா ஔவைப்பிராட்டி.

இதுவரை தோன்றிய மகான்களுக்கும் இனியும் தோன்றும் மகான்களுக்கும் அகிம்சை வழியே வீரத்தின் உச்சம் . அகிம்சை இதற்கு மறுபெயர் சைவம். சைவ சித்தாந்தமே முதலும் முடிவும். அனைத்திலும் தலை சிறந்த ஔ'தம் அமிழ்தம்( திருப்பாற் கடலில் கடைந்து பெற்றது) அமிழ்தத்தை கடைந்தால் வருவது தமிழ் (அமிழ்தத் தமிழ்).

சைவத்தையும் தமிழையும் இதயத்துடிப்பாக கொண்ட தூயவர் ஆத்ம ஜோதி “ ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரிலும் ஓம்பப்படும்” என்கிறது வள்ளுவம். தெய்வத்துள் வைக்கப்பட்ட அனைவரும் வையத்து வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள். இது வள்ளுவர் வாக்கு. அவ்வாறே வாழ்ந்தார் ஆத்ம ஜோதி முத்தையா சுவாமிகள். ஆதி சங்கரரின் அத்வைத கொள்கையை அரவணைத்தவர் ஆத்ம ஜோதி ஆசான். புறநானூற்றுக் கீற்றான “யாதும் ஊரே யாவரும் கேளீர்” எனும் தமிழ்ப்புலவர் கனியன் பூங்குன்றனாரின் வாக்கிற்கமைவாகவும் மானிலமெல்லாம் நம் இல்லமே மக்கள் நம் சொந்தமே போகும் இடமெல்லாம் புகழ் சேர்க்கும் மனமே உலகம் நமதாகுமே அன்பு நடமாடும் கலைக்கூடம் என இக்காலக் கவிஞர் வாக்கிற்கமைய புகழ் சேர்த்தார் ஆத்ம ஜோதி முத்தையா சுவாமிகள்.


மகனென்றால் பெற்றோரை மதித்தால் தான் மதிப்பு காவி துறவியெல்லாம் மொழிந்தால்தான் மதிப்பு கொஞ்சம் இருந்தாலும் கொடுத்தால் தான் மதிப்பு. இந்து என்றால் இனங்கண்டு மகான்களை மதித்தால்தான் மதிப்பு எத்தனை, எத்தனை பொன் மொழிகள், சொற்பொழிவுகள், கட்டுரைகள், அத்தனையும் ஆன்மீக மணம் கமழ ஏட்டில் எழுதி ஏடிட்ட (Editor) ஆத்ம ஜோதி.

இராமனைச் சொன்னால் இலட்சுமணனைச் சொல்லித்தான் ஆகவேண்டும். அவரின் ஆத்மீக வாழ்வுக்கு மிகவும் நெருங்கிய உதவியாயிருந்தவர் அருமைத்தம்பி அருமைநாயகம். மற்றும் இராம கிருஷ்ண பரம ஹம்சரையும் சாரதாதேவியையும் தியானித்து தன் இல்லத்திற்குக் கூட சாரதா இல்லம் என நாமம் சூடி மகிழ்ந்த ஆத்மஜோதியின் பக்தையாக விளங்கிய சிவ பூசனம் அம்மையாரும் முத்தையா சுவாமிகள் சத்சங்கத்தில் இணைந்தபோது தானும் சத்சங்கத்தில் இணைந்து பிரம்மகுமாரியாக வாழ்ந்த உறுதியையும் பெருமையையும் இல்லற ஞானி திரு.க.இராமச்சந்திரா அவர்கள் சாட்சி பகன்றுள்ளார்கள், இவரே ஆசான் ஆத்மஜோதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றும் இல்லற ஞானி அத்துடன் ஆத்மஜோதியின் ஆத்ம நண்பராக விளங்கிய இறைபணிச்செம்மல் முத்தையா பிள்ளை அவர்களும் ஆத்மஜோதியுடன் இணைந்து வெளிநாடுகளில் சமயப் பிரச்சாரம் செய்தது இவ்விடத்தில் நினைவுகூரத்தக்கது. மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்ற ஆத்மஜோதியின் வாய்மொழிக்கு அமைவாக எம் உள்ளங்களில் மறையாமல் மருவி வாழும் ஆத்மஜோதி ஆசானுக்கு அவர் நாமம் கூறிப் பிறந்தநாள் வாழ்த்தாக நன்றி மறவாமையை பதிவு செய்யக் கிடைத்தமைக்கு அவன் அருளால் அவன்தாள் வணங்கி எனும் வண்ணம் அவர் பணிகளை உள்ளடக்கி ஆறு வேலைத்திட்டங்களுடன் கடந்த ஏழு வருடங்களாக சேவை செய்துவரும் ஆத்மஜோதி சமய சமூக நல மேம்பாட்டு அமையம் நாவலப்பிட்டி வழங்கும் சேவையையும் இக்கட்டுரையும் ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளுக்கு சமர்ப்பணம்.



சென்னை திருப்புகழ் மன்றத்தில் சொற்பொழிவாற்றுகிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுத் துறவு

சபா அருள் சுப்பிரமணியம் M.A.

**"யான் எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு**
**உயர்ந்த உலகம் புகும்".** *(திருக்குறள்:346)*

நான் எனது என்னும் செருக்குகளை அறுத்தெறிந்து வாழ்பவன் உயர்ந்த உலகம் என்று மக்களால் நம்பப்படும் வானுலகத்தை அடையும் பாக்கியத்தைப் பெறுகிறான் என்று திருக்குறள் கூறுகிறது மேலும் வையகத்திலே அடுத்தவர் வாழத் தன்வாழ்வை ஒறுத்துவாழும் இயல்புடைய ஒருவன் மட்டும் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் பேற்றைப் பெற்றுக்கொள்வான் என்றும் குறள் கூறுகிறது. ஆசை அறுத்துவாழ் என்ற இக்கருத்தையே எல்லா மதங்களும் கூறுகின்றன.

**ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்**
**ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள்**
**ஆசைப் படப்பட ஆய்வரும் துன்பங்கள்**
**ஆசை விடவிட ஆனந்தம் ஆமே.**

*(திருமந்திரம்: 2615)*

என்ற அடிகளும் இதையே முன்னிலைப்படுத்துகின்றன. ஒரு காலத்தில் வீட்டைத் துறந்து, நாட்டைத் துறந்து, சொத்துடமைகளைத் தூக்கியெறிந்து காட்டிற்குச் சென்று வாழும் வாழ்க்கையே உயர்ந்த துறவு வாழ்க்கை என்று நம்பப்பட்டது. ஆனால் இன்று சமூகத்தில் ஒருவனாக இருந்துகொண்டு தான்வாழும் சமூகத்திற்கு வேண்டியதைப் பொதுநோக்கோடு செய்து வாழும் வாழ்க்கையே துறவு வாழ்க்கையைவிட மேலானதாகக் கருதப்படுகிறது. அவர்களுக்கே மக்களும் நடுகல் நட்டும் தமது மரியாதையை வெளிப்படுத்த முன்வருகிறார்கள். இவ்வாறு போற்றப்படுவோர் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத உத்தமராக இருப்பர் என்பதைக் கூறாமலே புரிந்துகொள்ளலாம்.

இத்தகைய உயரிய மனிதர் வரிசையில் வைத்து எண்ணப்படக்கூடியவரே மதிப்பிற்குரிய அமரர் முத்தையா சுவாமி அவர்கள். அன்று 'ஆத்மஜோதி முத்தையா மாஸ்ரர்' என்று அவரோடு கூடிப் பழகியவர்களால் அன்பாக அழைக்கப்பட்ட அமரர் முத்தையா அவர்கள் இன்று 'ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள்' என்று அழைக்கப்படுகிறார் என்றால் அதற்கு ஏதும் காரணம் இருக்க வேண்டுமல்லவா? அதுதான் அவர் வாழ்ந்த வாழ்க்கையாகும். 'அன்பே சிவம்' என்று சிவத்தை அன்பை அடுத்தவன்மேற் செலுத்துவதன் ஊடாகக் கண்ட அந்த வாழ்வே அவரை வெற்றிபெற்ற வாழ்வுக்குரியவராக மாற்றியதென்றால் மிகையாகாது.

சுவாமி முத்தையா அவர்களின் சமூகப்பார்வை எவ்வாறு அமைந்திருந்தது என்பதை அவரது 'மக்களே போல்வர் கயவர்' என்ற கட்டுரைமூலம் அறியமுடிகிறது. அதில் அவர் ........
**"பிறரை அழித்துத் தாம் வாழ நினைப்பவர்கள் துரோகிகள், மற்றவர்களைப் பற்றி எவ்வித கவலையுமின்றி வாழ்பவர்கள் சுயநலமிகள், பிறரும் வாழத்தாம் வாழ்பவர்கள் மனிதர்கள், பிறர்வாழத் தாமே வாழ்பவர்கள் புனிதர்கள், பிறர் வாழ்வுக்காகத் தன்னை அழித்துக் கொள்பவர்கள் தெய்வீகர்கள்"** என்று கூறுகிறார். மனத்துக்கண் மாசிலனாக வாழ்வதே அனைத்து அறன் என்று சொல்வதோடு நின்றுவிடாது அதைச் செயலிலும் பின்பற்றிக் காட்டியவரே சுவாமி அவர்கள். ஆம்! சாதனை மூலமே சமயப்பண்பாட்டைப் பேணலாம் என்பதைத் தன்வாழ்வினூடாக வாழ்ந்து காட்டியதை என்போன்று அவரோடு பழகும் பாக்கியம் பெற்றவர்கள் உணர்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலப்பிட்டி கதிரேசன் வித்தியாலயத்தில் அமரர் அதிபராக இருந்த காலத்தில் அவரோடு பணிபுரியும் வாய்ப்பைப் பெற்றவன் நான். கதிரேசன் பாடசாலை மலையக மாணவர்களையும், பல அரச உத்தியோகத்தர்களின் பிள்ளைகளையும் கொண்ட ஒரு பாடசாலையாக விளங்கியது. அங்கே முஸ்லிம் மாணவர்கள் கல்வி கற்காதபோதும் முஸ்லிம் ஆசிரியர்கள் கடமையாற்றும் வாய்ப்பைப் பெற்றிருந்தார்கள். அவர்களோடெல்லாம் அமரர் அவர்கள் பழகிய, நடந்துகொண்ட விதம் அவர் மானிடத்ததை எவ்வாறு நோக்கினார் என்பதற்கு எடுத்துக்காட்டாக இருந்தது. நட்புடனும், உறவுடனும் அவர் பழகியவிதம் எமக்கெல்லாம் பெரும் படிப்பினையாக அமைந்திருந்தது. அவ்வப்போது தான் சந்தித்த சிக்கல்களையெல்லாம் தவிர்க்கக் கையாண்ட உத்திகள் எம்போன்ற ஏனைய உதவி ஆசிரியர்கட்குச் சிறந்த வழிகாட்டுதல்களாக அமைந்திருந்தன.

நாவலப்பிட்டியில் தங்கியிருந்து கதிரேசனிற் கல்விகற்பிக்கும் வாய்ப்புக் கிட்டியதால் அமரரின் வெளிக்களச் செயற்பாடுகளையும் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அப்போதெல்லாம் பாடசாலை நேரம் தவிர்ந்த வேளையில் தனது ஆத்மஜோதி நிறுவனத்தில் காலம் கழித்த அமரர், மாலையில் கோவில்களில் சமயச் சொற்பொழிவாற்றுவார். என்மட்டில் சமயச் சொற்பொழிவைக் கேட்கவேண்மென்ற ஆர்வம் அன்று பெரிதாக இல்லாதிருந்தபோதும் கோவிலுக்குச் சென்று அவரது சொற்பொழிவுகளைக் கேட்கும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டேன். அதற்கு முக்கிய காரணமாக இருந்தது அவர் தமது சொற்பொழிவுகளின்போது பயன்படுத்திய சிறுசிறு கதைகளும்,. அவதானித்த சம்பவக் குறிப்புகளைப் பிறர் மனம்கொள்ளும்வண்ணம் கூறிய விதமுமேயாகும். கேட்டாரை ஈர்க்கும் தகைமைகொண்ட அவர் பேச்சாற்றல் என்போன்ற பலரை அவரை நாடிச் செவிசாயக்க வைத்தன.

வெளிநாடுகளுக்குச் சென்று சமயச் சொற்பெருக்காற்றி மீண்டும் வந்தபோதெல்லாம் தனது பட்டறிவை அழகாகக் கதைபோன்று கூறும் வழக்கமுடையவராக இருந்தார். இது கேட்போரைக் கட்டிப்போட்டு அவரது கருத்துக்களை அவர்கள் அறியாமலே உள்வாங்க வைக்கும் நுட்பமாகத் தென்பட்டது. வெளிநாட்டு வாழ்க்கை பற்றி மக்கள் மத்தியில் பெரிய அறிவு இல்லாத அந்தக் காலகட்டத்தில் அவர் கூறிய செய்திகள் மெய்மறந்து அவர் குரலுக்குச் செவிமடுக்க வைப்பனவாக இருந்தன. இவ்வேளையில், தான் கூறவந்த சமயக் கருத்துக்களையும் சாதுர்யமாக அதனுள் புகுத்திவிடும் திறமையுடையவராகவும் அவர் காணப்பட்டார்.

ஆத்மஜோதி நிலையத்தோடும், அவர்கள் குடும்பத்தோடும் எனது மனைவி யோகாவிற்கு இருந்த பழக்கமும் நான் பெரியாருடன் கொண்டிருந்த பாடசாலை உறவும் எம்மிடையே ஏற்படுத்திய நெருக்கமும் நாங்கள் கனடா வந்தும் விட்டுப்போகவில்லை. மொன்றியாலில் நாம் வாழ்ந்தபோது தனது சமயப்பணிக்காக மொன்றியல் வந்த நேரங்களிலெல்லாம் எம்மையும் சந்திக்கும் அளவிற்கு நெருக்கமுள்ளவர்களாக இருந்தோம். அவரது கனிவான பார்வையும், அன்பான பேச்சும், நம்பிக்கைதரும் அறிவுரைகளும் எங்கள் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன. 'எதற்கும் கொடுத்துவைக்கவேண்டும்' என்பார்கள் அந்த வகையில் நாம் கொடுத்துவைத்தவர்கள் என்றே நினைக்கத் தோன்றுகிறது.

மக்கள் சேவையே மகேசன் சேவை என்று மனதிலேற்று அதை மெய்ப்பிக்குமாறு வாழ்ந்து காட்டிய ஒரு பெரியாரை மதித்து அவருக்கு என்றொரு மன்றம் அமைத்து அவர்தம் சேவைகளை முன்னிலைப்படுத்திச் செயற்படும் ஒரு அமைப்பின் பணிகள் நிலைத்து நீண்டு செல்லவேண்டு மென்று மனதார வேண்டுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தையா என்னும் முத்தான குரு

**யோகா. அருள்சுப்பிரமணியம்** M.Sc. in Yoga

"நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படும் தானே"

(திருமந்திரம் 85)

தான்பெற்ற இன்பத்தை இவ்வையகம் எல்லாம் பெற வேண்டுமென்ற பெருங்கருணையால், தன்னூரெல்லாம், தன்னாடெல்லாம் ஏன் உலகெல்லாம் சென்று உபதேசம் செய்த ஒரு குருவாக உயர்ந்து ஆத்மஜோதியாக திரு. முத்தையா அவர்கள் விளங்குகின்றார். தான் வாழும் காலத்திலே வாழ்வாங்கு வாழ்ந்து காட்டித் தான் நினைத்த நற்பணிகளைச் சமூகத்திற்கு ஆற்றி நின்றவர் திரு. முத்தையா என்ற குருவானவர். ஆண்டவனிடம் அவர் கொண்ட நம்பிக்கையும் அதனால் அவர் பெற்ற வைராக்கியமும் அவரது ஒவ்வொரு பேச்சுக்களிலும் எழுத்துக்களிலும் செறிந்து நிற்பதை நாம் கண்டு கொள்ளக்கூடியதாக இருக்கிறது. அவரது ஒவ்வொரு கட்டுரைகளிலும் அவரது தெளிந்த ஞானத்தைை நாம் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. ஒரு குருவானவர் எப்படி எப்படி இருக்க வேண்டுமோ அப்படி எல்லாம் வாழ்ந்து காட்டியவரே பெரியாரவர்கள்.

தியானத்தின் மூலம் நாம் எதையும் சாதிக்கலாம் என்னும் உண்மையை உலகத்திற்கு உணர்த்தப் பெரும்பாடுபட்டார். அவரின் சமய அறிவினைத் தரணி எங்கும் பரவிட வேண்டும் என்ற தணியாத வேட்கையால் அவர்பட்டபாடுகள் பற்பல. அவரது ஒவ்வோர் கட்டுரைகளிலும், பேச்சிலும் அதன் தாக்கத்தை அனைவரும் கண்டுகொள்ளலாம்.

"அன்பானது தன்னால் விரும்பப்பட்டவரிடத்தே தோன்றும் உள்ள நெகிழ்ச்சியாகும். இடையறாது முறுகிவளரும் அன்பின் முதிர்ச்சியிலேதான் சிவம் விளங்கும். ஆதலால் அன்பும் சிவமும் இரண்டற அபேதமாய் விளங்கும்" என்பது அவர் கூற்று. இதையேதான் திருமந்திரமும் இயம்புகின்றது.

**அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலர்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்து இருந்தாரே.**

(திருமந்திரம் 270)

அது மாத்திரம் அல்லாது, தான் வாழும் காலத்துச் சமூகநிலையை நோக்கினார். சமுதாயம் சீரழிகின்றதே எனச் சமூகத்திற்குச் சீர்திருத்தக் கருத்துக்களை வாரிவாரி வழங்கினார். இளைஞர் சமுதாயத்திற்கு ஒரு இலக்கணம் வகுத்துக் காட்டினார். விழிப்புணர்வு ஊட்டும் வீரம் மிக்க ஒரு குருவாகச் சுவாமி விவேகானந்தர் தான் கண்ட இளைஞர் சமுதாயத்திற்கு எத்தகைய வீறுகொண்ட கருத்துக்களை விதைத்தாரோ அதேபோன்று காலத்தோடு ஒட்டிய கருத்துக்களை இவரும் வித்தாக இட்டுவந்தார். இளைஞர்கள் சாதனை மூலமே சமயப் பண்பாட்டைப் பெறலாம் என்று அடிக்கடி கூறுவார். அவ்வாறே அவர் சாதனை மூலமே தன் கருத்துக்கள் அனைத்தையும் உலகிற்குச் சாதித்துக் காட்டிய ஒரு சாதனை மிக்க குருவாக விளங்கினார்.

இன்றைய சிறார்களே நாளைய இளைஞர் என்ற உண்மையை மனதில் இருத்திச் சிறார்களை நெறிப்படுத்தவேண்டும் என்னும் கருத்தைக் கொண்டதாய் இவரது செயற்பாடுகள் அமைந்திருந்தன. அதற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழமான பொருள்பொதிந்த முத்தான கதைகளூடாகச் சிறார்கள் மனதில் நற்போதனைகளை விதைத்துவந்தார். இதற்காகத் தனது கோயிற் சொற்பொழிவுகளில் கணிசமான நேரத்தைச் செலவிட்டார். இவரது சிறுகதைகள் சிறியோரை மட்டுமன்றிப் பெரியோரையும் நெறிப்படுத்தும் இயல்பும் திறனும் கொண்டவையாக அமைந்திருந்தன. இதற்காகத் தமது 'ஆத்மஜோதி' என்னும் இதழைப் பயன்படுத்தினார். அத்துடன் மாணவரை நெறிப்படுத்தும் கதைகளை ஒன்றாக்கி வெளியிடுவதிலும் ஆர்வம் காட்டினார். இவ்வாறு கனடா வந்திருந்தபோதும் பெரியாரால் சிறுவருக்கான நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன.

அவர் சமயத்தில் ஊறித் திளைத்து சமூகத்திற்கென எழுதிய எழுத்துக்களும், பேச்சுக்களும் ஏராளமேராளம். ஒவ்வொரு சித்தர்களையும் தரிசித்துக் கண்ட அனுபவங்களையும் எல்லாம் 'தரிசனம்' என்னும் நூலாக்கி வடித்துச் சென்றுள்ளார். அதைப் படிக்கும்போதே மெய் சிலிர்க்கும். அவரது எளிமைமிக்க வாழ்வும், தன்னடக்கமான சிந்தனைகளும் யாவராலும் மதிக்கப்படும். தான் ஒரு எளிமை வாழ்வை வாழ்ந்து கொண்டு ஏழை எளியவர்களுக்கெல்லாம் தான தருமங்கள் செய்து கொண்டு ஓர் தன்னலமற்ற தியாக வாழ்வை அவர் வாழ்ந்து சென்றார்.

இத்தகைய ஒரு குருவின் பெருமைகளை உலகிற்கு எடுத்தியம்பும் இந்த ஆத்ம ஜோதி நிலையத்தின் அனைத்து அங்கத்தினர்க்கும் நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்**
**வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"**

என்னும் திருக்குறளிற்கேற்ப வாழ்ந்து காட்டி மறைந்த முத்தையா என்னும் முத்தான குருவை நாம் போற்றுவோம்! வாழ்த்துவோம்!! அவர் எங்கள் நெஞ்சங்களிலெல்லாம் வாழ்வாங்கு வாழ்வார் என்று நம்புவோம்.

வாழ்க அவர் திருநாமம்! வளர்க ஆத்ம ஜோதி நிலையம்!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழாலையின் ஆத்மஜோதி

திருமதி இராஜ்மீரா இராசையா

மனிதம் மாநிலத்து நிலைப்பதற்குப் புனிதர்களை இப்புவியிற் படைப்பது இனியராகிய இறைவனின் செயல்களுள் ஒன்றெனநாம் காண்கிறோம். அறிவு முதிர்ச்சியும் அன்பு மிளிர்ச்சியும் ஆன்மிகத் தெளிவும் அறத்தில் நாட்டமும் மிக்கவராகத் திகழ்ந்து, தனக்கும் தன் குடும்பத்திற்கும் தன்னூருக்கும் தன்னினத்திற்கும் தனது நாட்டிற்கும் மொத்தத்தில் மனித குலத்திற்கே மாண்பினை ஏற்படுத்திய புனிதராக மதிப்புப் பெறுபவர் ஆத்ம ஜோதி முத்தையாப் பெரியார். இவர் மனிதகுல மேன்மைக்கு மட்டுமன்றி விலங்கினத்தின் உன்னத உயிரைப் பாதுகாப்பதற்கும் தமிழர்தம் பண்பாகிய பல்லுயிர் ஓம்பலுக்கு ஏற்ப முன்னின்று உழைத்த உத்தமர்.

தான் பிறந்து வளர்ந்த மண்ணின் மகத்துவத்தை வருங்கால சந்ததியும் அறியும் வகையிலும் ஏனையோர் ஊர் பற்றி எழுத வழிகாட்டியாகவும் தமிழின் இருப்பிற்கும் சமயத்தின் நிலைப்பிற்கும் உழைத்தோரை மனமுவந்து பாராட்டும் வகையிலும் 'ஏழாலை' என்ற உன்னத நூலை ஆக்கி, 1977ல் வெளியிட்டார். ஆத்மஜோதி ஐயா விரும்பியவாறே, அவரின் பின்னால் யா.்.சைவமகாஜனா வித்தியாலய அதிபராகப் பணியாற்றிய அமரர் முத்துசாமி அவர்கள் ஏழாலை பற்றி இன்னும் சற்று விரிவாக ஆராய்ந்து நூலொன்றினை ஆக்கியளித்துள்ளார்.

''எம்மூரவர்களிற் சிலர் அடியேனைச் சந்திக்கும் போதெல்லாம் நீர் மலைநாட்டில் மாத்திரம் சேவை செய்தால் போதுமா? எங்களூரும் பயன்பட வேண்டுமே. இடம் மாற்றலாகி வந்தால் என்ன என்று அடிக்கடி நச்சரிப்பார்கள். எங்களூரில் சேவை செய்வதற்குப் பல பெரியார்கள் பரம்பரையாகவே இருந்து வருகிறார்கள். அங்குதான் சேவைக்கு ஆள் தேவை என்று தட்டிக்கழித்து விடுவேன். இன்னுஞ் சிலர் எங்கள் ஊருக்கு உன்னால் என்ன பிரயோசனம்? பிறந்த ஊரை மறந்து விடலாமா? என்றெல்லாம் கூறுவார்கள். அவர்களுடைய வார்த்தைகள் மனதில் ஊன்றிப் பதிந்தன. என்னையும் அறியாத ஓர் ஆசை அடிமனத்திலே கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்தது. அதுதான் ஏழாலை வரலாற்றைப் புத்தக உருவிலே பார்க்க வேண்டும் என்பது'' என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆத்மஜோதி ஐயா அவர்கள் மலையகத்தில் ஆசிரியத் தொழிலொடு ஆன்மிகத் தொண்டு, அம்மக்களின் குடும்பச் சிக்கல்களைத் தீர்ப்பது, மதுபானத்திற்கு அடிமையானவர்களை மீட்பது, சுகாதார அறிவுரைகளைப் பரப்புவதற்காக திறமைவாய்ந்த வைத்தியராகிய நந்தி என்பவரின் உதவியுடன் செயற்படுவது போன்ற தொண்டுகளை மலையகத்து மக்களுக்கு ஆற்றினார். இதனால் மலையக மக்கள் மனதிலும் குடிகொண்டார்.

## 'ஏழாலை', பெயர்க்காரணம்

"சிதம்பரத்தில் தான் அண்ணாமலைச் சர்வகலாசாலை உண்டு. சிதம்பரம் புகையிரத நிலையத்தில் உள்ள பெயர்ப்பலகையில் அண்ணாமலை நகர் என்றே பெரிய எழுத்தில் எழுதியுள்ளார்கள். அப்படி இருந்தும் சிதம்பரம் என்றதும் எமது உள்ளத்தில் நடராஜப் பெருமானுடைய திருக்கோயிலே முன்னிற்கிறது. பழனி என்றதும் பழனி முருகனே நினைவுக்கு வருகிறார். திருப்பதி என்றதும் வெங்கடேசப் பெருமானையே நினைவு கூருகிறார்கள். காசியில் சர்வகலாசாலையும் கங்கையின் சிறப்பும் உலகப் பிரசித்தி பெற்றவை. காசி என்று குறிப்பிடும்போது காசி விசுவநாதரே உள்ளத்தில் முதலிற் தோன்றுகிறார். இது போன்றதொரு மகிமை எங்கள் ஊராகிய ஏழாலைக்கும் உண்டு என்பதைப் பெருமையுடன் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஏழு ஆலயங்கள் ஒரு சூழலில் இருந்தமையால் 'ஏழாலையம்' என்று வழங்கி வந்தது. காலகதியில் 'அம்' கெட்டு ஏழாலை என மருவி வழங்கி வரலாயிற்று. யாழ்ப்பாணத்து கிராமங்களுடைய பெயர்களை எடுத்து ஆராய்ந்து பார்த்தால் கோயிலால் பெயர்பெற்ற பெருமை ஏழாலை ஒன்றிற்கே உரியதாகும்". என்று ஏழாலை என்ற தனது நூலில் பக்கம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

கடலினுள் அமிழ்ந்த குமரிக்கண்டத்தில் ஏழ்தெங்குநாடு, ஏழ்மதுரைநாடு, ஏழ்முன்பாலைநாடு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழ்பின்பாலைநாடு, ஏழ்குணகரைநாடு, ஏழ்குறும்பனை நாடு என நாற்பத்தொன்பது நாடுகள் இருந்ததாக ஆய்வாளார்கள் குறிப்பிட்டுள்ளனர். அப் பெயர்களோடு பொருந்தும் வகையில் அமைந்துள்ள ஊர்ப் பெயராக ஏழ் + ஆலயம் = ஏழாலையம் அமைந்துள்ளமையும் ஆய்வுக்குரியது. ஒரே சூழலில் அமைந்துள்ள ஏழு ஆலயங்களாவன: அம்பலவாணேசுவரர் ஆலயம், அம்மன் ஆலயம், பிள்ளையார் ஆலயம், முருகமூர்த்தி ஆலயம், பெரியதம்பிரான் ஆலயம், வீரபத்திரர் ஆலயம், வைரவர்ஆலயம். இவ்வாலயத் தொகுதி தவிர ஏழாலை முழுவதும் பரந்துபட பாதாள ஞானவைரவர் ஆலயம், துர்க்காதேவி ஆலயம், தேவி ஆலயம், சிவகண்ணகை அம்மன் ஆலயம், காளி ஆலயம், முத்துமாரி அம்மன் ஆலயம், முனியப்பர் ஆலயம், பூதவராயர் ஆலயம், முடிமன்னர் ஆலயம் போன்ற பல ஆலயங்கள் அமைக்கப் பெற்று மக்கள் வழிபாடு நடத்தி வருகின்றனர்.

ஏழாலைப் பெரியதம்பிரான் கோயிற் பொங்கலன்று படிக்கும் பாடல்களுள் ஒன்று, சங்ககால இலக்கியமாகிய புலவர் கபிலர் இயற்றிய குறிஞ்சிப்பாட்டை நினைவுக்குக் கொண்டு வருகிறது. சான்றோன் கபிலர் தொன்னூற்றாறு வகைப் பூக்களை அந்நூலில் பதிவு செய்துள்ளமையை அறிஞர் போற்றிவருகின்றனர். பெரியதம்பிரான் கோயிலில் படிக்கும் பாடலின் சில வரிகள் கீழ்வருமாறு உள்ளன:

"மல்லிகை எருக்கு அத்தி மாதுளை பலா அரசு
அல்லி அகில் வாழை கமுகு மயிலை கரவீரமொடு
பாதிரி செவ்வந்தி மா நல்ல மாவிலங்கை
புன்னை தாதகில் தென்னை மரமுட்கிளுவை முளரி
கூவிளை நரந்தை பாலை பயறி பட்டிகை புளி
நொச்சியும் வேற்கடம் இவை சூழவே
நீடரும் உலாயநிழல் உகந்தடியா் வாழ்கவே!"

பழைய ஏட்டில் உள்ள பாடல் இதுவென ஆத்மஜோதி ஐயா அவர்கள் குறிப்பிட்டுப் பதிவு செய்துள்ளார்.

"அன்பால் மிகுந்திருப்பவா் உயிர்கள் எல்லாம் தொழும் உத்தம ஞானி ஆகின்றனர். அறிவால் மிகுந்திருப்பவர் உலகத்திற்கு வழிகாட்டி நடத்திச் செல்லும் ஒப்பற்ற தலைவர் ஆகின்றனர். ஆண்மை மிகுதியாக உள்ளோர் தீயோரை அழித்து நல்லோரைக் காத்து நிற்கும் சிறந்த வீரர் ஆகின்றனர். இத்தகைய ஞானிகளும் தலைவர்களும் வீரர்களும் நிரம்பிய ஊர், நமது ஊர். இது உண்மை. வெறும் புகழ்ச்சி இல்லை. இதற்கு மூலகாரணம் ஊர் நிரம்பிய கோயில்கள் உள்ளமையே. அதனால் கோயில் பழக்கம் எல்லாக் குடும்பங்களிலும் இருந்தது" என்கிறார் ஏழாலை நூலில்.

பசு கன்று ஈன்றால் முதற்பால் கோயிலுக்கு, வாழைத்தோட்டத்தில் முதற்குலை கோயிலுக்கு, பலா மாமரத்தில் முதற் பழம் கோயிலுக்கு, தென்னை மரத்தில் முதல் இளநீர் கோயிலுக்கு என்று தம் வாழ்க்கையைக் கோயிலுடன் இணைத்து வாழ்ந்த பெருமை நம் ஊரவர்களுக்கு உரியதாகும் என்பதைக் கண்டுணர்ந்து கூறி, மகிழ்வடைந்தார்.

ஏழாலைக்கும் ஈழத்திற்கும் பெருமை தேடித் தந்த பல அறிஞர்கள் குடத்துள் விளக்குப் போல இருக்கின்றனர். அவர்களை மலைமேல் வைத்த விளக்குப் போல உலகிற்கு அறிமுகஞ் செய்து வைப்பதே தனது ஏழாலை என்ற நூலின் முக்கிய குறிக்கோளாகும் என்று குறிப்பிட்டுப் பல அறிஞர் களையும் அவர்தம் அளப்பரிய சேவைகளையும் தேடிக் கண்டெடுத்துப் பதிவு செய்துள்ளார். இராவ் பகதூர் சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்களை அறிமுகப்படுத்தி, அவர் தமிழுக்கு ஆற்றிய பணிகளையும் அவரது பணிகளை ஏனையோர் பாராட்டிய குறிப்புக்களையும் அவர் தனது தாயின் ஊராகிய ஏழாலையில் கட்டி இயக்கிய ஏழாலை சைவப் பிரகாச வித்தியாசாலை பற்றியும் அங்கு கல்வி பயின்று உயர்ந்தோர் பற்றிய தகவல்களையும் திரட்டித் தந்துள்ளார், ஏழாலை நூலில். சாதுக்கள் பரம்பரையினரையும் பதிவு செய்து வைத்துள்ளார். கணிதத்துறையில் உலகப் பிரசித்தி பெற்றவர்களுள் ஒருவராகவும் பேராதனைப் பல்கலைக்கழகத்தினுள் குறிஞ்சிக்குமரன் கோயிலை நிறுவிப் பரிபாலித்த பேராசிரியர் கனகசபாபதி, பௌதிகத்துறையில் உலகப் பிரசித்தி பெற்றவர்களுள் ஒருவராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் துணை வேந்தராகவும் விளங்கிய பேராசிரியர் கந்தையா குணரத்தினம் பற்றியும் தனது நூலிற் பெருமையுடன் கூறியுள்ளார். ஈழத்துச் சிறுகதை முன்னோடிகள் எனப் பெயர்பெறும் திரு. சி. வைத்தியலிங்கம் (இரவீந்திரன்), திரு. சி. சிவஞானசுந்தரம் (இலங்கையர் கோன்) ஆகியோர் உட்படப் பலரது படைப்புக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் அவற்றின் சிறப்புக்களையும் ஏழாலை ஆலயங்கள் மீது பாடல்கள் பாடியோரையும் அப்பாடல்களையும் எழுதியுள்ளார்.

பல்வேறு கல்வியாளர்களையும் அறியத்தந்து அவர்களுக்கு மதிப்பளித்துள்ள ஐயா அவர்கள் முருகேசு உபாத்தியாயர் பற்றிக் கூறுமிடத்துச் சங்கப் புலவர் பிசிராந்தையார் பாடிய புறநானூற்றுப் பாடல் நினைவிற்கு வருகிறது.

"யாண்டு பலவாக நரையில ஆகுதல்
யாங்கா கியரென வினவுதிர் ஆயின்
மாண்ட என் மனைவியொடு மக்களும்
நிரம்பினர்
யான்கண் டனையர் இளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும் அதன்தலை
ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே"
(புறம்: 191)

"இன்று 88 வயதினை எட்டியிருக்கும் இப்பெரியாரைப் பார்ப்போர் 50 வயதுதான் மதிக்கக் கூடும். ஒழுக்கத்தினாலும் நேர்மையாலும் கடவுள் பக்தியாலும் தம்மை புனிதப்படுத்திக் கொண்ட ஒரு பெரியார். அவரிடத்திலே கல்வி கற்ற பலர் நீதிபதிகள், பணிப்பாளர்கள், வைத்தியக் கலாநிதிகள், அதிபர்களாக இன்றும் விளங்குகின்றார்கள். ஏழாலை அத்தியடி விநாயகப் பெருமானின் திருப்பணியைத் தானொருவராக நின்றே செய்து முடித்தார்கள்" என்று முருகேசு உபாத்தியாயர் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

**சாதி பேதமின்மை**

1927ம் ஆண்டு மகாத்மா காந்தி அவர்கள் இலங்கை வந்த போது ஏழாலையின் அயற் கிராமமாகிய மல்லாகத்தில் அவருக்கு வரவேற்பு நிகழ்ந்ததாகவும் அவ்வரவேற்பு நிகழ்ச்சிக்கு ஏழாலையூர்ப் பெரியவர்கள் எல்லோரும் திரண்டு சென்றதாகவும் குறிப்பிட்டு, "மகாத்மாவின் தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம் எமது ஊரில் தகுந்த பலனைக் கொடுத்தது. கோயில்களைக் ஹரிசனர்களுக்குத் திறந்து விடவேண்டும் என்ற கிளர்ச்சி மற்றைய கிராமங்களில் தொடங்குவதற்கு முன்பே எங்களூர்க் கோயில்களுக்குள் சைவ சமயத்தவர்கள் சாதிபேத மின்றி வந்து வழிபடத் தொடங்கி விட்டனர்" என்றும் எழுதியுள்ளமையில் இருந்து ஆத்மஜோதி ஐயா சாதிபேதமற்ற உலகைக் காண விரும்பியமையை அறிய முடிகிறது.

**நடுவுநிலைமை**

'ஏழாலை' என்ற நூலை நடுவுநிலைமையில் நின்று எழுதியுள்ளார். நல்லாரையும் நல்லன வற்றையும் மட்டுமன்றி நல்லன அல்லாதனவற்றை ஆற்றியோரையும் அச்செயல்களையும் பதிவு செய்துள்ளார். ஏற்க முடியாச் செயல்களைச் செய்தவர்களை நல்வழிப்படுத்தியமை பற்றியும் குறிப்பிட்டுள்ளார். ஐயா அவர்கள் பிற சமயத்தவரையும் மதித்து பண்பாகப் பழகியதை ஏழாலையூர் மக்கள் இன்றும் உயர்பண்புக்குச் சான்றாக்கிக் காட்டுவர்.

**தர்மம்**

சூழலை எவ்வாறு உற்று நோக்கியுள்ளார் என்பதனை அறிவதற்குப் பின்வரும் விடயம் உதாரணமாகி நிற்கிறது. "எனது தகப்பனாருடைய தகப்பனாரிடம் பல பால் தரும் பசுக்கள் இருந்தன. மருந்துக்கு என்றும், கோயிலுக்கு என்றும், நோயாளிக்கு என்றும் மக்கள் காசு கொடுக்காமலே பால் பெற்றுச் சென்றனர். பால் காசுக்கு விற்றால் பாவமென்று கருதப்பட்டது அந்தக் காலம். தகப்பனாருடைய காலத்தில் கோயிலுக்கென்று கேட்டபோது பால் பணம் பெறாமல் கொடுத்தாலும் பால் விற்பது பாவமென்று கருதப்படவில்லை. நமது காலத்தில் பலரிடம் பசுக்களே இல்லை. பசு வைத்திருப்பவர்களும் தண்ணீர் கலக்காமல் பால் விற்றால் பாவமென்று கருதும் அளவுக்கு மனோநிலை மாறியுள்ளார்கள். மூன்று தலைமுறைகளில் தர்மம், எவ்வாறு மாற்றமடைந்துள்ளது என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும்". (ஏழாலை, பக். 12)

**நாடகம் - சமய, சமுகக் கருத்துக்கள்**

அந்தக் காலத்தில் ஏழாலையில் திறமை வாய்ந்த ஆசிரியர்களால் சிறப்பான நாடகங்கள் எழுதப்பட்டு திறமை வாய்ந்த நடிகர்களால் நடிக்கப்பட்டதையும் அந்நாடகங்கள் ஊடாக ஆத்மீகக் கருத்துக்களையும் சமூக சீர்திருத்தக் கருத்துக் களையும் பரப்பியமை பற்றியும் அறியத் தந்துள்ளார். குப்பிழானைச் சேர்ந்த இராமநாதன் பொன்னையா எழுதிய 'சயந்தன்' நாடகம் தனி மதிப்புப் பெற்ற நாடகமெனக் குறிப்பிட்டுள்ளார். ஏழாலைச் சண்முகம் கந்தவனம் என்பவர் நல்லாசிரியர், கவிஞர், நாடகாசிரியர். இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியில் மது விலக்கு நாடகத்தை மேடையேற்றினார். மதுவிலக்கு நாடகத்தின் காப்புச் செய்யுள் வருமாறு:

"மண்ணுலகிலே பெரிய மயக்கமுறும் மதுவகையால்
நண்ணுபல கேடுகளை நாடகமதாய்ப் பாட
விண்ணுலவு மண்டகோடி விதங்களெலாம் படைத்து
கந்த
எண்ணரிய முதற்பொருளின் இணையடிகளது
துணையே"

குடியினால் எல்லாப் பொருள்களையும் இழந்த நிலையினை பாடலிற் பொருத்தி நடித்த மையை ஐயா அவர்கள் பின்வருமாறு குறிப் பிட்டுள்ளார்:

"கையிலுள்ள பொருள்களெல்லாம் அழிந்து போச்சு
ஆடுகளும் மாடுகளும் காணிகளும் தானும்
போச்சு
தையலரின் அணிகளுடன் சேலை வீட்டுத்
தட்டுமுட்டுச் சாமான்கள் எல்லாம் போச்சு
நெய்யகத்தின் எரிபோலும் நிலைமை யெல்லாம்
குடிவகைக்கே இரையாய்ப் போச்சு
வையகத்தில் ஒருவழியும் இல்லைத் தோழா
வாருமினிக் கறுப்பனிடம் போய்ப் பார்ப்போமே"

குடிப்பழக்கத்தில் இருந்து மக்களை மீட்கப் பாடுபட்ட ஆதமஜோதி ஐயாவின் மனதில் இந்நாடகம் ஆழப்பதிந்தமையை அறிய முடிகிறது.

**இடப்பெயர்**
**குப்பிழான்**

ஏழாலையுடன் பின்னிப் பிணைந்த குப்பிழான் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். குப்பிழாய் என்பது ஒரு செடி. அச்செடி மிக நெருங்கி வளர்ந்த இடமாகை யால் அப்பகுதியை குப்பிழான் என்றே அழைத்தனர் என்றும் தொடக்கத்தில் ஏழாலையோடு சேர்ந்து ஒன்றாகவே கருதப்பட்டது என்றும் குறிப்பிட்டு அவ்வூரின் சிறப்புக்களையும் அறியத்தந்துள்ளார்.

**இலந்தைகட்டி**

ஏழாலை கிழக்கைச் சேர்ந்த குறிச்சியிது. இலந்தை மரங்கள் ஏராளமாக நின்று காடு போல் காட்சி கொடுத்தமையால் இலந்தைக்காடு என்று பெயர் பெற்று காலகதியில் இலந்தைகட்டி ஆகிவிட்டது எனவும் தந்துள்ளார்.

'ஏழாலை' என்ற இவரது நூல் பற்றிப் பேராசிரியர் கலாநிதி சு.வித்தியானந்தன் "ஏழாலை ஊரின் சமய வரலாறு, நிர்வாகப்பிரிவுகள், மக்கட் பண்பாடு, தொழில், புகழ்பூத்த பெருமக்கள் பற்றிய வரலாறு என்பன இந்நூலிலே விரிக்கப்படுகின்றன. வரலாற்றுப் பண்பும் இலக்கியச் சுவையும் இந்நூல் முழுவதிலும் மிளிருகின்றன. ஈழத்துத் தமிழர் பண்பாட்டுப் பாரம்பரியம் பற்றிய மிக விரிவான ஆழமான ஆய்வுக்கு 'ஏழாலை' நூல் ஒரு தொடக்க முயற்சியாக அமைகின்றது" எனக் கூறியுள்ளார்.

ஏழாலையின் மைந்தனாகப் பிறந்து அம்மண்ணின் மாண்புகளைத் தேடி ஆராய்ந்து, தானும் மாண்புமிகு மைந்தனாக வாழ்ந்து, பிறர்க்கும் பயனளித்த பெருமகனார் ஆத்மஜோதி ஐயா. அவர் தான் பிறந்த ஊருக்கு நன்றியுடையவராக, நடுவுநிலைமையாளராக, புலவோரை, கல்விப் பணியாளரை, இலக்கியக் கர்த்தாக்களை, ஆன்மீக ஈடுபாட்டாளரை, அறப்பண்பு உடையோரை, சமூக சீர்திருத்தவாதிகளை மனத்திலிருத்திப் போற்றும் சீலராக வாழ்ந்துள்ளார். இடப்பெயராய்வுக் குறிப்புக்களோடு, இலக்கியச் சுவையோடு தரமான எழுத்தாளராகத் தன்னை நிலைநிறுத்தி இவர் ஆக்கியளித்துள்ள 'ஏழாலை'என்னும் நூலின் ஊடே இச்சிறப்புக்களை நாம் தரிசித்து மகிழலாம்.

தக்கன தன்னகம் தாங்கித் தரணியில்
மிக்கதாய்ப் பல்பதிவு முன்வைத்து – பக்குவமாய்
எக்காலும் எல்லோரும் ஏற்றித் தொடர்ந்திடச்
சிக்கனச்சீர் தந்தார் சிறப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஜோதி நாகமணி முத்தையா

## (1918 - 1995)

## சைவசமய ஆன்மிக நெறியைத் தமது அறிவாழத்தால் உணர்த்திய பேராசான்

பேராசிரியர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்

### 1.1 குடும்பம்:

யாழ்ப்பாணத்து ஏழாலை மண்ணில் குடிகொண்டு, கோலோச்சி வாழ்ந்த சீலம்மிகு நாகமணி பொன்னுப்பிள்ளை தம்பதியர்க்கு 1918.05.25ஆந் திகதி உலகம் போற்றும் உத்தம சீலர் ஆத்மஜோதி முத்தையா வள்ளல் தோன்றினார். இவரது அண்ணன் கந்தையா. அக்காமார் செல்லமுத்து, சின்னம்மா. தம்பி அருமைநாயகம்.

### 1.2 இளமைக்கல்வி:

ஏழாலை கத்தோலிக்கப் பாடசாலையில் ஐந்தாம் வகுப்பு வரையும், மயிலணி வித்தியாசாலையில் 6ஆம் வகுப்பிலிருந்தும் கல்வி கற்றார். மரபும், மாண்பும், பண்பும், பழக்கவழக்கமும், ஆன்மிகமும், தெய்வ நம்பிக்கையும், அடியார் பக்தியும், சீலமும், சிந்தனை வளமும், கிராமியப் பின்னணியிலே ஆழமாகவே சிறுபராயத்தில் பெற்றுக் கொண்டார். ஆழ்ந்த அறிவும், ஞானத் தேடலும் வாய்க்கப் பெற்ற வள்ளல் முத்தையா தனித்துவமிக்க தன்மையினராகவே திகழ்ந்தார்.

### 1.3 சைவாசிரிய கலாசாலைப் பயிற்சி:

போதனையுடன் சாதனையையும் இணைத்து வாழ்ந்த ஞான வள்ளல் முத்தையா, ஆசிரியத்துவப் பணியிலே ஈடுபடும் பெருநிலை எய்தினார். யாழ்ப்பாணத்துக் கல்வி மரபின் உதாரண புருஷராகத் திகழ்ந்தார். யாழ்ப்பாணத்துக் கல்விப்பின்னணி இன்றும் விதந்து பாராட்டிப் பேசப்படுகிறது. நாவலர் மரபில் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் சைவாசிரிய கலாசாலையில் பேராசானாகத் தலைமை விரிவுரையாளராகவிருந்து இத்தேசத்தின் ஒளிவிளக்குகளாக இன்றும் அறிவூட்டும் ஆசிரியமணிகளை உருவாக்கிய செய்தி பிரசித்தமானது. கலாநிதி பண்டிதமணியின் அத்தனை தனித்துவச் சிறப்புக்களையும் ஆசிரியப் பயிலுனர் நிலையில் சைவாசிரிய கலாசாலையிலே தமக்குள் அடக்கிக் கொண்டவர் வள்ளல் முத்தையா அவர்கள். உள்ளுணர்வும், ஆன்மிகத்தில் நாட்டமும், ஆசிரியத்துவமும் இவரைச் சேவை நோக்கிலே யாழ்ப்பாணத்திற்கு வெளியே கடமையாற்றும் பேற்றினை நல்கியது. 1939ஆம் ஆண்டு சைவாசிரிய கலாசாலையில் பண்டிதமணியிடம் ஆசிரியத்துவத்தை அனுபவித்த வள்ளல் முத்தையா, தாம் கற்றவற்றை இறுக்கமாகவும் விளக்கங்களுடனும் சிக்கெனப்பிடித்துக் கொண்டதுடன் தமது கடமைகளாகவும் பண்டிதமணியின் கோட்பாடுகளை வரித்துக் கொண்டார். இலக்கணம் இலக்கியம், சமயம், தத்துவம், காப்பியங்கள், பேரிலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள், சித்தாந்த சாத்திர நூல்கள் எனத் தமிழ்ப்பரப்பில் காணப்படும் மிகப் பரந்து விரிந்த சிந்தனைகளையெல்லாம் ஆழமாகவும் தெளிவுறவும் கற்றுத் தேர்ந்தார். சைவாசிரிய கலாசாலை வடமொழி, தென்மொழி அறிவு வளத்தைப் பெருக்கெடுக்கச் செய்தது. இலக்கிய மரபில் பெரியதொரு புரட்சியை அக்காலத்தில் நிறுவியது. அந்த வகையிலே பண்டிதமணி இலக்கிய கலாநிதி சி.கணபதிப்பிள்ளையிடம் கற்ற பலர் இன்றும் நிலை தளம்பாத அறிவு வாணர்களாகவும் இலங்குவது பிரத்தியட்சம்.

தாய்மொழி அறிவுவளம் சகல சிறப்புக்களையும் நல்குவது என்னும் கோட்பாட்டோடு ஆங்கிலம், சமஸ்கிருதம் என்பவற்றுடன் இணைந்து நோக்குகின்ற ஒப்பீட்டுநிலை சைவாசிரிய கலாசாலையின் தனிச் சிறப்புக்களாகவே இருந்துள்ளது. தமிழ் மொழியின் நெளிவு சுழிவுகளையெல்லாம் அக்குவேறு ஆணிவேறு என்ற வகையிலே பிரித்தும், வகுத்தும், பாகுபடுத்தியும், ஒற்றுமை, வேற்றுமை கண்டும், கற்கின்ற மரபு இன்னும் யாழ்ப்பாணத்துக் கல்விமான்களிடையே நிலைபெற்றிருப்பது பண்டிதமணி இலக்கிய கலாநிதியின் வழிகாட்டலின் பயன் என்பதே பொருத்தமாகும்.

தமிழ், சமயம் எனும் இரு கண்களை நாவலர், பண்டிதமணி மரபுக் கல்வி இறுக்கமாகவும் விளக்கமாகவும் பின்பற்றிக் கொண்டுள்ளமை மனங்கொள்ளத்தக்கது. இதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஸ்தரிப்பும், வெளிப்பாடும் சைவாசிரிய கலாசாலையிலே ஆசிரியப் பயிற்சி பெற்றுள்ள கல்விமான்களிடையே இன்றும் காணமுடியும். தமிழிலே பேருரை, சொற்பொழிவு, விரிவுரை, பிரசங்கம், பேச்சு நிகழ்த்தும் திறன் வாய்ந்த ஆசிரியர்களையே சைவாசிரியர் கலாசாலை உருவாக்கியது. இதன் வரலாறு விரிக்கிற் பெருகும். ஆண்களும் பெண்களும் ஆசிரிய கலாசாலையிலே பேச்சுப் பயிற்சியும், வாய்மையும், வளமும், திறமும், தகைமையும், துணிவும் பெற்று இலங்குகின்றனர். இது ஆசிரியத் தொழிலிலேயே பயன் விளைவிப்பது. பலரையும் அம்முயற்சியில் ஈர்ப்பது, வளர்ப்பது, உருவாக்குவது, உதவுவது. அந்த வகையிலும் வள்ளல் முத்தையா அவர்கள் பெயர் குறிப்பிட்டுக் கூறத்தக்கது ஆகும்.

இளமையும், அழகும், வடிவும் ஈர்ப்புங் கொண்ட தோற்றமுடைய எமது பேராசான் வள்ளல் முத்தையா அவர்கள் தமது கட்டிளமைப்பருவத்தில் கடைப்பிடித்த கொள்கைகள் ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் இன்று சொல்லி வைக்க வேண்டிய அத்தியாவசிய தேவையாகவுள்ளது. அதாவது உடற்பக்குவத்தைவிட மனப்பக்குவம் என்பதுதான். தத்துவம், தாற்பரியம் பேணப்பட வேண்டியது. இதன் விளக்கமும் விவரணங்களும் எமது ஞானகுருவின் வாழ்வியல் வரலாற்றிலே இருந்து கற்றுத் தெளிய முடியும். பண்டிதமணி மரபு தமிழறிவு, சிவஞானம், ஒழுக்கசீலம், உளப்பக்குவம், பரந்த நோக்கு, நுண்மை நோக்கு, மொழி, ஆளுமை, ஒப்பீட்டு இலக்கியச் சிந்தனை, மரபு நூற் கல்வி ஆழம் என்ற வகையிலே மாணாக்கர்களைச் சிந்திக்க வைத்தது. இவற்றின் பாரிய தாக்கம் வள்ளல் முத்தையா அவர்களிடம் ஊடுருவிப் பாய்ந்து செழித்தது. அதன் பேறாக இலங்கைக்கு கல்வி வரலாறும், மலையகக் கல்வி வரலாறும் ஆன்மிக வளர்ச்சி வரலாறும் தொண்டின் சிறப்பும் அறிவு விருத்தியும் இவரால் உண்டாக்கப்பட்டன. சைவசித்தாந்த மரபுடன் கல்வி கற்கும் நிலை யாழ்ப்பாணத் திலேயே தோன்றியுள்ளது. கிராமியப் பண்பாடும் பழக்க வழக்கங்களும் நல்லுணர்வுகளும் இன்றும் உலகளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு, விஸ்தரித்திருப் பதுவும், யாழ்பபாணத்துக் கல்வி மரபின் தொடர்ச்சியும் வளர்ச்சியு மெனலாம். சுருங்கக் கூறின் நாவலர், பண்டிதமணி, கலாநிதி பண்டிதர் ஏழாலை கந்தையா, ஆத்மஜோதி ஆத்மீக வள்ளல் நா. முத்தையா எனும் வாழையடி வாழை மரபு இன்றும் என்றும் எல்லா நாடுகளிலும் நிலை பெற்று வாழ்வதற்கு இவர்களது கல்வி ஞானம், சமயப்பற்று, அனுபவம், ஆழமான நுண்ணறிவு போதனை நலன், வாழ்வொழுக்க சீலம் என்பன பேருதவி புரிந்துள்ளமையினைக் கண்களூடாகவே கண்டு கொள்கிறோம்.

இளமைக்கல்விப் பின்னணியும் சைவாசிரிய பயிற்சியின் விளைபயனும் வள்ளல் முத்தையா அவர்களின் வாழ்வில் புதியதோர் திருப்புமுனையை ஏற்படுத்தியதெனலாம். கிறிஸ்தவக் கல்விமுறையின் ஒழுங்கு (Discipline) முறைமையை உன்னிப்புடன் உணர்ந்து செயற்படுத்தும் திறன் ஆசான் முத்தையாவிடம் குடிகொண்டிருந்தமை அவரது குணநலன்களின் வெளிப்பாட்டிலேயே தொனித்தது. அமைதி, சாந்தம், புன்முறுவல், தெளிவு, ஈர்ப்பு, செந்தன்மை, பணிவு, மதிப்பு, மரியாதை என்பன வாய்க்கப் பெறுவது எல்லோருக்கும் எளிதன்று. ஆனால் இயல்பாகவே இத்தனைச் சிறப்பு நலன்களுக்கும் உரித்தானவராகவே வள்ளல் முத்தையா இலங்கினார். இது அவரது புகழையும் பணிகளையும் உலகளாவிய வகைக்கு இட்டுச் சென்றதென்பது முற்றிலும் பேருண்மை. சாதாரண மனித உணர்வு நிலையிலே செய்ய முடியாத காரியங்களையும் கருமங்களையும் செயற்படுத்தியவர் வள்ளல் முத்தையா ஆசான் அவரக்ள். ஆசிரியத்தத்துவத்தின் தனிமாணப்பு **'நலலறிவுச் சுடர் கொளுத்துதல்'** என்பதாகும். தமது ஆத்மிகச் சுகத்தையும் ஈடுபாட்டையும் சமூகத்திற்கு குறிப்பாகப் பாடசாலைகளில் பயிலும் மாணவர்களுக்கும் கிராம மக்களுக்கும் பிறருக்கும் பயன்படும் வகையிலே செயற்படுவதற்குரிய வளங்களையும், வசதிகளையும் எமது பேராசான் வள்ளல் முத்தையா அவர்களுக்கு அவரது தகைமையினாலும் திறமையினாலும் கிடைத்தது. அரசின் கல்வி அமைச்சிலே ஆசிரியர், அதிபர் பதவிகள் இவருக்குக் கிடைத்தன.

இலங்கைக் கல்வி வரலாற்றிலே இன்றைக்கும் மலையகக் கல்வி பற்றிப் பேசும் எவரும் வள்ளல், ஆசிரியர், அதிபர், ஆத்மஜோதி முத்தையா அவர்களைப் பற்றிக் கூறாதிருக்க மாட்டார்கள். எமது பேராசானுக்கு 1939.08.15ஆந் திகதி ஆசிரிய வேலை - அரசாங்க உத்தியோகம் நாவலப்பிட்டி சென்.மேரிஸ் மகாவித்தியாலயத்திலேயே கிடைத்தது. நாவலப்பிட்டி மண் செய்த பூர்வபுண்ணிய பலனாய், ஆசிரிய மாண்பால், உயர் கல்விச் சிறப்பினால், நிர்வாகத் திறமையினால் 1945இல் கௌரவ செயலாளர் பதவி மத்திய மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கத்தில் கிடைத்தது. ஆசிரியர்களுக்கும் ஆசிரியர் என்ற வகையிலேயே இவரது வழிகாட்டல்கள் மத்திய மலையகத்தில் - நாவலப்பிட்டியில் நன்கு வேரூன்றியது. கல்விப் பணியின் பயனாக 1948ஆம் ஆண்டு தொடக்கம் 1976ஆம் ஆண்டு வரை இக்கட்டுரையாளர் இளமையில் கற்ற நாவலப்பிட்டி கதிரேசன் குமார மகா வித்தியாலயத்தில் அதிபராகவும் ஆசிரியராகவும் பணிபுரிந்தார். 1942இல் நாவலப்பிட்டி ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் பதவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகித்தார். அதன்பின்னர் சங்கத்தின் தலைவரானார்.

## 1.4 ஆன்மிகச் செயற்ப்பாடுகள்:

வள்ளல் முத்தையா பேராசானுடைய வாழ்வில் 1948 ஆம் ஆண்டு மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. இலங்கையின் சுதந்திரம் கிடைத்த ஆண்டாகவும் அது விளங்கிற்று. ஆங்கிலக் கல்வி மோகமும், பிற சமய ஊடுருவலும், அதிகார வெறியும் நிலவிய காலகட்டம். அது மாற்றுச் சமயத்தின் ஊடுருவல், கல்வியிலும், சமூகத்திலும் பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்திய வேளை வள்ளல் முத்தையா அவர்களது ஈடுபாடும், செயற்பாடும் இலங்கையின் அனைத்துப் பாகங்களிலும் சைவ சமயத்தின் எழுச்சியை உண்டு பண்ண வேண்டும் என்ற உந்துதலை ஏற்படுத்திற்று. இதற்கு உபாயம் சமய அறிவைப் பரப்புவதற்கு ஒரு சஞ்சிகை, கூட்டுப்பிரார்த்தனை, வீட்டு வழிபாடு, சத்சங்கம், பாதயாத்திரை, ஞானிகள் தொடர்பு, வானொலிப் பேச்சு, கட்டுரைகள், மகாநாடுகள், கூட்டங்கள், விழாக்கள் ஏற்படுத்துவது என்று பன்முகநோக்கிலே தொழிற்பட்டார்.

1948இல் சமய சஞ்சிகையான ஆத்மஜோதி நாவலப்பிட்டியில் ஆரம்பிக்கப்பட்டது. 1945இல் ரமண மகாரிஷியைத் தரிசனம் செய்தார். 1948இல் பகவான் அரவிந்தர் தரிசனம் கிடைத்தது. 1948இல் நாவலப்பிட்டியில் திருக்கேதீச்சரத்திலும் அந்தர் யோகப் பயிற்சி வகுப்புக்களை ஒழுங்கு செய்து நடத்தினார். திருக்கேதீச்சரத்திலேயே அறிமுகப்படுத்தப்பட்ட அந்தர் யோகப் பயிற்சியிலே பித்துக்குளி முருகதாஸ், சுகப்பிரம்மம், பாலயோகி இராமதாஸ் ஆகியோர் வகுப்புக்களை நடத்தினார். 'அந்தர் யோகம்' என்றால் என்ன என்பது பற்றி விளக்கம் கொடுத்தனர்.

பிரார்த்தனை, நாமஜெபம், இஷ்டமூர்த்தி உபாசனை, நாடிசுத்தி, தியானம், அந்தர் யோக உபாசனை விளக்கம், தோத்திரப் பாராயணம், ஐயம் தெளிதல் என்பன பற்றிய விளக்கங்கள் தெளிவுபடுத்தப்பட்டன. மன அமைதி, சாந்தம், நிம்மதி, தெளிவு, பயமின்மை, பக்தி, ஆசாரம், நேர ஒழுங்கு, நடைமுறை ஒழுங்கு, வரிசைக்கிரமம் என்பன இவ் வகுப்புக்களிலே போதிக்கப்பட்டன. சாதனையும் போதனையும் செய்து ஆன்மிக நெறியைப் புரியவைத்தவர் வள்ளல் முத்தையா ஆசான். மக்கள் மத்தியில் சைவச் சமூகத்தினரிடையேயும் எழுச்சிமிகு சமய அறிவு நிலையை உருவாக்குவதிலே முன்னின்று தலைமையேற்று உழைத்தவர் பேராசான் வள்ளல் முத்தையா அவர்களாவார். ஒரு பாடசாலை, ஒரு ஊர் என்று பணிபுரியாது கிராமம், பிறதேசம் என்று மூலை முடுக்கெங்கும் சென்று தமது சமயம் பரப்புதல் கொள்கையை மதிப்போடும், மாண்போடும் நிலைநிறுத்தித் தொண்டு புரிந்தவர் வள்ளல் முத்தையா ஆசான். பிரம்மச்சரிய வாழ்வு அவரது ஆன்மிகப் பணிகளுக்கு அனுசரணையாயிற்று; பேருதவி யாயிற்று. குடும்பம், பொறுப்பு என்பன அவரிடம் இடையூறாக அமையவில்லை. தொண்டு, பணி, சேவை, சத்சங்கம், ஆத்மஜோதி வெளியீடு என்று முழுநேரமும் தமது நேரத்தை, வாழ்வை ஆன்மிக நலப் பணிகளுக்கே செலவு செய்து வாழ்ந்தார்.

1948ஆம் ஆண்டு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் ஆத்மஜோதி முத்தையா வள்ளலுக்குப் பொன்னாடை போர்த்தி அவரது பணிகளைக் கௌரவித்தார். 1948 ஆகஸ்ட் 15,16,17ஆந் திகதிகளில் திருவண்ணாமலையில் அருணகிரி நாதர் விழாவிலே பங்கேற்றார். 1954ஆம் ஆண்டு புத்தகாயாவில் வினோபாவேயின் சர்வதேச மகாநாட்டிலே பங்கேற்றார். 1955இல் இமாலய யாத்திரை சென்று திரும்பினார். 1954 இல் ஆலய உற்சவ நிகழ்வுகளை ஒட்டிய பாதயாத்திரையை ஆரம்பித்தார். 1954 இல் நல்லூர் ஏழாலை பாதயாத்திரையைத் தலைமையேற்று நிகழ்த்தினார். 1960இல் ஆத்மஜோதி நிலையத்தின் அச்சுக் கூடத்தினை சுவாமி சச்சிதானந்தரை அழைப்பித்து திறந்து வைத்தார். ஆத்மஜோதி சஞ்சிகை மாதம் ஒருமுறை 2000 பிரதிகள் இலவச வெளியீடு என்ற நிலையிலே பிரசுரித்து விநியோகித்தார். உலகம் புகழும் சமய சஞ்சிகையான ஆத்மஜோதியின் தோற்றமும், முகிழ்ப்பும் என் பேராசானுடன், இல்லற ஞானி நயினை இராமச்சந்திரா அவர்களுடைய தொடர்பும் ஆலோசனைகளும் கூட இணைந்திருந்தமை சுட்டிக் காட்டத்தக்கது. இரு பெருஞ் சிந்தனையார்களதும் ஆர்வத் தினாலும், ஊக்கத்தினாலும், உழைப்பினாலுமே ஆத்மஜோதி சமய சஞ்சிகை உலகப் புகழ்பெற்றது. சுருங்கக் கூறின் ஆத்மஜோதி சஞ்சிகையினைக் கேள்விப்படாத சைவத் தமிழர்கள் இருக்கமாட்டார்கள் என்றளவு அதன் புகழ் விரிந்தது.

ஆத்மஜோதியிலே சமயக் கட்டுரைகள், விளக்கங்கள், ஞானிகளின் வாழ்க்கைச் சரிதங்கள், திருமுறை விளக்கம், செந்தமிழ் மொழியின் பெருமைகள், ஆலய தரிசனங்கள், அநுபூதிச் செல்வர் வரலாறு, விழாக்களின் விபரங்கள் என்பன இடம்பெற்று வாசகர் மனதிலே சமயத் தெளிவை உண்டு பண்ணியது. இக்கட்டுரையாளரும், ஆத்மஜோதி இதழ்களை வாசித்தமையினாலேயே ஏதாவது ஆன்மிகம் சார்ந்த கருத்துக் களைத் தெளிவுறக் கூறக் கூடிய அறிவையும் ஆளுமையையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுள்ளமை ஈண்டு இவ்விடத்திலேயே சுட்டிக்காட்டப்பட வேண்டியேயுள்ளது. பல்கலைக்கழகக் கல்வி ஆன்மிக நல ஈடுபாட்டைக் கேள்விக்குறிக்குள் இடும். ஆனால் வள்ளல் பேராசான் ஆத்மஜோதி முத்தையா அவர்களது வழிகாட்டு தலையும் சைவப்பிரச்சாரத்தையும் போராசிரியர்கள் கா.கைலாசநாதக் குருக்கள், பேராசிரியர் கனகசபாபதி கைலாசபதி போன்றோர் அங்கீகாரமளித்ததுடன்வாழ்த்தியும், மதித்தும் எழுதியுள்ளனர்.

சைவசமய நெறியை வீதிதோறும் முழங்கச் செய்து விழிப்புணர்ச்சியையும், எழுச்சியையும், உணர்ச்சியையும் ஏற்படுத்திய தீரர் வள்ளல் ஆத்மஜோதி நா.முத்தையா அவர்கள். 1964ஆம் ஆண்டிலே நயினை - நல்லூர் பாதயாத்திரை மேற்கொண்டு பல்வேறு ஆலயங்களுக்கும் சென்று பஜனை மூலம் பக்தி மார்க்கத்தைச் செழிக்கச் செய்தவர். புதிய மறுமலர்ச்சிகளையும், சீர்திருத்தங்களையும் கிராமிய ஆலய மட்டத்திலே சென்று வழிகாட்டியவர் இவர். 1965 ஆம் ஆண்டு இலந்தைகட்டி ஞானவைரவர் ஆலயத்தின் உயிர்ப்பலியை நிறுத்தினார். "செய் அல்லது செத்துமடி" என்ற வாசகத்திற் கிணங்கச் செயல்வீரராகவே இத்தகு ஆலய உயிர்ப்பலி விவகாரங்களைக் கையாண்டு உயிர்ப்பலியை நிறுத்தினார். இவர் மகாநாடுகள், விழாக்களில் இலங்கையிலே மட்டுமன்றித் தமிழ்நாட்டு வைபவங்களிலேயும் கலந்து சிறப்பித்தார். 1965இல் சா.கணேசன் (கம்பனடிப் போடி) நாட்டரசன் கோட்டையில் நடத்திய கம்பன் விழாவிலே கலந்து கொண்டார். எங்கும் எதிலும் ஆத்மஜோதி முத்தையாவின் பெயர் இலங்கிற்று. ஆத்மஜோதியையும் முத்தையா அவர்களையும் வேறுபடுத்திப் பிரித்துக்கூறமுடியாத அளவிற்கு அத்து விதமாகவே இணைந்துள்ளமையை ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

தமிழை அழித்தல், எரியூட்டல், நாசஞ்செய்தல் என்னும் வேலைகள் மலையகத்திலே ஆத்மஜோதியையும் பாதித் தமையைக் காணலாம். 1939ஆம் ஆண்டு முதல் 1995ஆம் ஆண்டுவரை 44 ஆண்டுகள் மலையகத்து நாவலப்பிட்டியிலே வாழ்ந்த இவரது ஆத்மஜோதி நிலையமும் நூலகமும் 1983இல் எரியூட்டி அழிக்கப்பட்டன. இலங்கையின் இனவாதத்தின் கோரத்தாண்டவம் கண்மண் தெரியாத நிலையிலே அகோரத் தாண்டவமாடி அனைத்தும் அழித்தொழிக்கப்பட்டன. உயிர்தப்பியதும் ஈசன் செயல். சகிக்க முடியாதவர்கள் செய்த ஈனச் செயல். இன்று ஆத்மஜோதி கனடாவிலே வெளிவருவதும் உலகத் தமிழர்களுக்கு நிம்மதி தரும் செய்தியேயாம். நாவலப்பிட்டியில் வேரறுந்த நிலையிலே வள்ளல் முத்தையாவின் ஞான தீட்ஷண்யத்தினால் கனடா **இந்து சமயப் பேரவையின் அனுசரணையுடன்** ஆத்மஜோதி சஞ்சிகை வெளியிடப்பட்டு விநியோகிக்கப்படுகிறது. அருமையும் அனுபவமும் கொண்டவர்களாலே எழுதப்படும் அரிய பல கட்டுரைகள், கவிதைகளைத் தாங்கி வெளிவருகிறது ஆத்மஜோதி சஞ்சிகை. எதற்கும் அஞ்சாத இறை நம்பிக்கை யுடன் தமது நற்பணிகளையே மேற்கொண்ட வள்ளல் முத்தையா ஆசான் உயிர்ப் பயம், அவலம், போக்கு வரத்தின்மை, இடப்பெயர்வு, மரண ஓலம் என்பனவற்றுக் கிடையேயும் தமது கடமைகளைக் கைவிடாது மேற்கொண்டார். 1984 இல் சாவகச்சேரி செருக்கற் பிள்ளையார் ஆலயத்திலிருந்து கச்சாய் வீரபத்திரர் சுவாமி கோயிலுக்குப் பாதயாத்திரையை மேற்கொண்டார். 1986இல் ஆயாக் கடவையிலிருந்து சுன்னாகம் கதிரைமலைச் சிவன் கோயிலுக்குப் பாத யாத்திரையை மேற்கொண்டார். 1987இல் ஊரடங்குச் சட்டம் 14 நாட்கள் அமுலில் இருந்தது. அக்காலத்து அவல நிலையை எண்ணிப் பார்ப்பதற்கு இவ் வரலாறு இடந் தந்துள்ளமை முக்கியமானது. சைவசமயத்தின் வளர்ச்சி வரலாறு, அமைதி நிலையிலே சுதந்திரமாக மேற்கொள்ள முடியாத அவல நிலைமையை இப்பின்னணி சுட்டும். பாதயாத்திரையின் நோக்கம் பற்றிப் பலரும் பலவாறு விமர்சிப்பதுண்டு. அவரவர் மனம் போன போக்கிலே கருத்துக்களைக் கூறுவர். ஆழ்ந்திருக்கும் நோக்கம் காணமுடியாத பலர் வெறும் பகட்டு உலகியற் கொள்கைகளை ஆசான் வள்ளல் முத்தையா அவர்களின் தலையில் இட்டுக்கட்டுவர். எனினும் தமது ஈடுபாட்டாலும், குறிக் கோளாலும் நன்னோக்கங்களாலும் பெருவெற்றி கண்ட அருமையான கொள்கைகளையும், கருத்துக்களையும் முன்னிறுத்தி வெற்றி கண்டவர் அவர் என்பதுவே பேருண்மை.

பாதயாத்திரை செய்வதன் மூலம் சமய உணர்வுடன் ஒன்று சேரும் உணர்வை வளர்த்தல், இறைபக்தியை அனுபவிக்கச் சந்தர்ப்பம் கொடுத்தல், எதனையும் தாங்கி இடர்பொறுக்கும் பண்பை வளர்த்தல், ஒருவர்க்கொருவர் உதவும் மனப்பாங்கை வளர்த்தல், நல்லுறவைப் பேணல், ஒற்றுமையுணர்வை வளர்த்தல், நல்விணக்கத்தை உருவாக்குதல் என்பனவே பாதயாத்திரையின் பயன் என்பதனைப் பேராசான் விளக்கினார்.

1979 ஆம் ஆண்டு மகான் சங்கராச்சாரியாரின் அகில உலக இந்துசமய மகாநாடு இடம்பெற்றபோது அதில் கலந்து கொண்டார். தமக்கென வாழாப் பிறர்க்குரியவராகவே வாழ்ந்த ஆத்மஜோதி முத்தையா அவர்களின் நோக்கம் "சித்தர்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகான்கள், ஞானிகளைத் தேடிச் சென்று தரிசனம் பெறுவது" என்னும் நோக்கில் இயங்கியது என்றால் மிகையன்று. அவரது செயற்பாடுகள் மூலம் இதனை நாம் தெளிவாகவே அறிந்து கொள்ளமுடிகிறது. மகான்களை மதித்தவர். சைவமே மூச்சு என வாழ்ந்தவர். 'கடவுள் அனுபவிக்கப்படும் பொருள்' என்று விளக்கியவர் அவர்.

1980இல் மலேசியாவில் நடைபெற்ற மகாநாட்டிலே கலந்துகொண்டார். 1984 முதல் 1986 வரை இந்தோனேசியாவில் வாழ்ந்தார். எங்கும் சமயப்பணியை புரிந்து வந்தார். நூல்கள் எழுதினார். ஆன்மிகத்தைப் பரப்பினார். பிரசாரம் செய்தார். உற்சாகமாகவே இயங்கினார்.

1994இல் கனடாவில் சைவசித்தாந்த மாநாட்டில் பங்குபற்ற வருகை தந்தார். 1994 ஜீலை மாதம் கனடா இந்து சமயப் பேரவை ஆரம்பிக்கப்பட்டது. மேற்குலகமான கனடாவில் சைவசமயத்தின் பற்றுக்கும், எழுச்சிக்கும் அடிகோலியவர் எமது குருநாதன் பேராசான் வள்ளல் ஆத்மஜோதி நா.முத்தையா என்றால் அது மிகையாகாது. அதன்பின்னர் இன்று பல்வேறு அமைப்புகளும் ஆலயங்களும் எழுச்சிபெற்று, வளர்ச்சி கண்டு வருவது நமது சமய வரலாற்றிலே குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

எமது வள்ளலின் பணிகளிலே குறிப்பிடத்தக்க பெரும்பணிகள்,

1. கனடா இந்துசமயப் பேரவை
2. மொன்றியல் தமிழ் கல்வி இணையம்
3. ஆத்மஜோதி சஞ்சிகை வெளியீடு
4. சற்சங்கம் நிகழ்த்துதல்
5. நல்லிணக்கத்தைக் கட்டி வளர்த்தல்
6. இறைபக்தியை எல்லோருக்கும் ஏற்படுத்தல்

என்பவற்றைக் குறிப்பிடலாம்.

புன்முறுவலும், அரவணைப்பும், ஈர்ப்பும் கொண்ட வள்ளல் முத்தையா அவர்களுக்கு ஞானசுரபி, ஆத்ம ஜோதிக்கதிர், சைவத்திருமணி, நற்குணக்குன்றம், அன்பின் வெள்ளம், முத்தான தொண்டர், சித்தஞானவித்தகர் என்று பல கௌரவ பட்டங்கள் உள்ளன. சமூகத்தின் கௌரவம் இப்பட்டங்களிலே உணரப்படும். அரும்பெருஞ் சேவைக்குக் கிடைத்தவையே இப்பட்டங்களாகும். ஓயாது, இடைவிடாது, எழுத்தும், பேச்சும், பஜனையும், சத்சங்கம் என்றும் ஈடுபாடு கொண்டு சமயத்தையும் மக்களிடையே பக்தியுணர்வையும் இடைவிடாது வளர்த்தவர் வள்ளல் முத்தையா ஆசான் ஆவார். 1983இல் அகதிமுகாம் அமைத்தார்.

### 1.5 நூல் வெளியீடுகள்

23 வருடங்கள் ஆத்மிகம் சார்ந்த 58 நூல்களை வெளியிட்டார்.
1960இல் திருமுறைக் காட்சி
1978 பன்னிருமாத நினைவுகள்
1980 ஈழத்துச் சித்தர்கள்
மாணவர்களுக்கான மாண்புறு கதைகள்
ஸ்ரீகேதார பத்திரி யாத்திரை
திருவடிப்பெருமை
இந்தோனேசியாவில் இரண்டு வருடங்கள்
இலங்கையிலே ஓர் இல்லற ஞானி
இளைஞர்களுக்கு ஏற்ற இந்தோனேசியக் கதைகள்
ஈழத்துச் சித்தர்கள்
ஏழாலை
கந்தனே கலியுகத்தில் கண்கண்ட தெய்வம்
சிவபாலயோகேஸ்வரர்
தத்துவக் கதைகள்
தரிசனம்
திருமுறைக்காட்சி
திருமுறைச் செல்வம்
நிழலின்பின்னே மனிதன்
முப்பெருஞ் சித்தர்கள்
தெய்வீக வாழ்க்கை
என்னை எனக்கு அறிவித்த எங்கள் குருநாதன்
உலக ஒழுக்கம்
ஞான விளக்கம்
என்பன சில நூல்களாகும்.

இவரது 4 நூல்களுக்கு இலங்கைச் சாகித்திய மண்டலத்தின் விருது கிடைத்தமையும் குறிப்பிடற்பாலது. இவரது எழுத்துக்களும் நூல்களும் எப்போதும் வாசிப்பதற்கு உகந்தவை. அனுபவ ஞானம் பிறக்கும் வகையிலே நூல்களின் விடயங்கள் அமையும்போது, அவை எமது அனுபவத்திற்கு எட்டாதவையாயும், மேம்பட்டனவாயும் இருந்து சிறப்பது எழுத்தினது மேன்மை எனலாம்.

### 1.6 ஆத்மஒளி! ஆன்மிகஒளி!! ஆத்மஜோதி!!! நாம் தேடவேண்டியவை:

'யாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற கோட்பாட்டுடன் தொழிற்பட்டு பணிகளாற்றியவர் ஆத்மஜோதி நா.முத்தையா வள்ளல் என்றால் அது மிகையாகாது. உலகிலே நாம் பல மனிதர்களையும், பல நூல்களையும் பல்வேறு சிந்தனைகளையும் கண்டும் கேட்டும் வாழ்ந்து கொண்டிருக் கின்றோம். என்ன உலகமிது? என்று சில வேளைகளில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூக்கில் விரல் வைத்து வியப்பதும் உண்டல்லவா? ஆனால் எமது குருநாதர் வள்ளல் முத்தையா அவர்களது சிந்தனைகளும் கருத்துக்களும் எழுத்தும் நம்மை ஓரளவு நல்ல முறையான, தெளிவான, ஒழுங்கான தடத்திலே நெறிப்படுத்தி வழிப்படுத்தும் தன்மையிலே அமைந்துள்ளமையை நாம் கண்டு சிறக்க வேண்டும். என்ன இந்தப் பூமி? என்றும் சிலவேளை தளம்பலாம். உலகம் இது தான். நாம் தான் சரியான நெறியை - வழியை - பாதையை - முறையை ஏற்ப்படுத்தி வாழப் பழகிக்கொள்ள வேண்டும் என்பதே வள்ளல் முத்தையாவின் வாழ்வு நெறி. மகான் முத்தையா அவர்கள் ஓரினம், ஒருமொழி, ஒருமதம் என்ற நிலையில் வாழாதவர். உயர்ந்த முடிவுகள் எல்லா மனிதர்களுக்கும், தேசங்களுக்கும் பொதுவானவை. ஏற்புடைமையானவை என்பது வள்ளலின் அறிவுத் தெளிவும் நம்பிக்கையுமாகும். அதனாலேயே இந்தோனேஷியா, மலேசியா, கனடா என்று சென்று சைவ சமய நெறி பரப்பினார்; வளர்த்தெடுத்தார். 'மேன்மைகொள் சைவநீதி' என்று பேசப்படும் பொருள் உலக வியாபகம் கொண்டது. எல்லோர்க்கும் ஏற்புடைமையானது. இத்தகு மகோன்னத நெறிமுறையைப் பரப்பவும், வளர்க்கவும் வகை செய்தல் வேண்டும். ஞானச் செல்வர்களது உதவியால் இன்று அமெரிக்காவிலும், கனடாவிலும், அவுஸ்திரேலியாவிலும், இலண்டனிலும், ஜெர்மனி, பிரான்ஸ், டென்மார்க், சுவிஸ் நாடுகளிலும் சைவசமயநெறி பரவுவதைக் காணலாம். கலைவளமும், கல்விவளமும் பின்பற்றத்தக்க ஆசாரமுங் கொண்டது சைவநெறி. மனமகிழ்ச்சி தரவல்ல கொள்கைகளைக் கொண்டது. சைவசித்தாந்தம் என்னும் விஞ்ஞான பூர்வமான விளக்கங்களைத் தன்னகத்தே கொண்டது. இத்தகு சமய வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டு வாழ்ந்த எமது பேராசான் ஆத்மஜோதி முத்தையா வள்ளல் 1995 இல் சிவபதப் பூர்த்தியெய்தினார் என்ற செய்தி பேரதிர்ச்சி தந்தது. உலகம் வியக்கும் ஆத்மஜோதி முத்தையா வள்ளலின் நூற்றாண்டு விழா அவரது பணிகளை மேலும் மெய்ப்பிக்க எடுக்கப்படுகிறது. மனிதனை நல்மனிதனாக வாழ்விக்க உதித்த மகான் வள்ளல் முத்தையா ஆத்மஜோதி என்றால், அவரது சிந்தனைகளைப் பின்பற்றி நமது மனமாகிய குரங்கைக் கட்டுப்படுத்தி மன மாசு அகற்றி 'ஆன்ம ஒளி' பெற்று வாழ முயற்சிப்போமாக. ஆத்ம ஒளி! ஆன்மிக ஒளி! ஆத்மஜோதி! இதுவே மனிதர்களுக்கு அவசியமானது. நூற்றாண்டிலே எமது பேராசானின் திருவடி தொழுதிறைஞ்சி ஆசி வேண்டி நிற்கின்றோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் ஏன் பிறந்தோம்? மேலும் பிறவாதிருப்பதற்கே!

(ஆத்மஜோதி நா.முத்தையா சுவாமிகள் திருவாக்கு)


## பூரண சுவாமிகள்

பூரண ஆச்சிரமம்

பூர்க்டோர்வ், சுவிற்சலாந்து


**தெய்வீக வழிச் சிந்தனைகள்** ஆளுமையானவை. மனித மேம்பாடுகள் குறித்தவை. சமூகநல சிந்தனைகளைத் தம்முள் கொண்டவை. பாண்டித்தியத்தை அறிவுப் பாரம்பரியமாக்கி வாத விவாத மேடைகளை பெருமளவிற்கு களம் கண்டவை. ஆதலால் காலம் காலமாக பல நூற்றாண்டுகள் கடந்தும் நீடிப்பவை. இத்தகைய தெய்வீக கோட்பாடுகளை நிலை நிறுத்தவும் அதன்படியாக வாழ்ந்து காட்டவும் உதித்த பரம்பரையே குருசீட தெய்வீக பாரம்பரிய உறவு முறையாகும்.

இத்தகைய உறவை ஈழத்தில் கடையிற் சுவாமிகளில் ஆரம்பித்து செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள், வடிவேற் சுவாமிகள், பெரியவர் இராமச்சந்திரா, நா.முத்தையா சுவாமிகள் என்று பரந்து கொடியாகி இன்று கனடாவில் இயங்குகின்ற ஆத்மஜோதி நிலையத்தின் சிவ முத்துலிங்கம் ஐயா வரையிலும் பக்த சித்த யோக ஞான குருசீட வரலாறுகள் அடம்பன் கொடியாய் திரண்டு ஆன்மீகப் பிடிமானமாய் உறுதியாகி விரிந்து காணப்படுகிறது.

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக வேரூன்றிய **ஈழத்துச் சைவத்தமிழ் ஆன்மீக வரலாறுகள்** அகழ்ந்து ஆராய்ந்து இவற்றைப் பதிவுகளாக்க வேண்டிய பெரும் பணியானது எமது மடியில் கனமாக விழுந்திருக்கிறது. நிதானமாக மிகக்கவனத்துடன் காக்க வேண்டிய பக்குவப் பொக்கிஷமிது. சுமைகள் அழுத்தினாலும் சுகமான சுவாரசியங்களும் இத்தகு வரலாற்றை ஆராய்ந்து தேடுவதிலும் அவற்றைத் தொகுப்பதிலும் நிறைந்தே இருக்கிறது.

இவ்வகையில் ஈழத்துச் சைவ சித்தாந்த பாரம்பரிய வரலாற்றில் **நாவலர் பெருமான்** அவர்களுக்கோர் முக்கிய பங்குண்டு. ஒரு குடும்பம் மற்றும் சமூகச் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதில் 19ம் நூற்றாண்டில் இவர் பணி மேலோங்குகிறது. பிறசமயப் பாதிப்புகளிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ளும் சைவத்தையும் பிறமொழி ஆதிக்கம் கொள்ள முனைவதிலிருந்து தமிழ் மொழியின் ஆளுமையை பேணவும் மேலும் ஆழப்படுத்தவும் அரும்பாடுபட்டார். இக்காலப்பகுதியில் சைவ சித்தாந்தம் கோட்பாடு ரீதியாக மறுமலர்ச்சியாக நெருக்கடிகளைத் தாண்டி உறுதிப்பாடாய் நிலைக்க வைப்பதில் நாவலர் பெருமானின் தொண்டு அளவிட முடியாது. ஈழத்தில் சைவ சாம்ராச்சியத்தை நாவன்மையும் எழுத்தாற்றலும் கொண்டு எதிர்த்து நிலைநிறுத்தியது மட்டுமன்றி இந்தியா வரையும் எடுத்துச் சென்று கோலுயர்த்திய பெருமை இவரால் எமக்கு ஏற்பட்டதெனலாம்.

மறுபுறமாக **அத்வைத வேதாந்தம்** சமகாலத்து சிந்தனை வடிவமாக பரிணமித்து வளர்ந்ததையும் மறுத்துவிட முடியாது. இஃது தன்நிலைத்தேடலாக 'ஆத்மவிசாரம்' என்ற கோட்பாட்டை முன்வைக்கிறது. உள்கடந்து பேதங்கள் களைந்த தத்துவமானது தன்னுள்ளேதான் பொதிந்து கிடப்பதாக அனுபவங்களை போதனைகளாக்குவதே வேதாந்தமாகிறது. தென்னிந்திய மற்றும் ஈழத்துதித்த மகான்களிடத்தும் இத்தகு தத்துவார்த்தம் தன்னிலை கொண்டதையும் இந்தியாவிலிருந்து இங்கு விரிவாக்கம் பெற்றதையும் அறியமுடிகிறது.

மேலும் **சித்தர் மரபு** வழிவழியாக தமிழகத்திலிருந்தும் ஈழத்தில் இயல்பாக மிளிர்ந்தும் ஒரு ஆன்மீக வரலாற்றுப் போக்கை ஆழப்படுத்தியது. சித்தர்கள் யோகிகள் ஞானிகள் மகான்கள் அனைவரையும் கோட்பாட்டு வேறுபாடுகள் கடந்து சித்தர் மரபு என்ற பொதுநிலையில் ஆராய்வதை நாமும் தேவை கருதி இங்கு இக்கட்டுரையில் பயன்படுத்துகிறோம். ஒரு சுருக்க நிலைகருதி பரந்த தேடலை நிறுத்தி மூலக்கருவாம் ஆத்மஜோதிக்கு தேவை கருதி நாமும் ஒருங்குகிறோம்.

பதினெட்டு பத்தொன்பதாம் நூற்றாண்டுகளின் நிறைவு முற்பகுதிகளில் அக்கால சமயப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குகளையும் மொழிப்பிடிமானங்களையும் தக்க வைத்துக் கொள்ளும் முயற்சியாக ஆத்மஜோதி யானது எண்ணக்கருவாக முகிழ்ந்து எழுந்ததை அழுத்தமாய் சொல்ல வேண்டியுள்ளது. செல்லப்பர் யோகர் சுவாமிகளைத் தொடர்ந்தவர் பலரில் தமிழையும் சைவத்தையும் உள்வாங்கிக் கொண்டவர்களில் குறிப்பிடத்தக்கவர் **பெரியவர் இராமச்சந்திரா** அவர்களாவார். உயர்ந்த பண்புகளையும் ஆன்மீக நலன்களையும் கொண்ட குடும்பத்தவராதலால் இல்லறஞானி என்றும் புகழ்ந்துரைக்கப்பட்டார். ஈழத்தில் நயினாதீவை பிறப்பிடமாகக் கொண்டவர் இவர்.

பெரியவர் இராமச்சந்திரா அவர்கள் திருவண்ணாமலை ரமணமகரிஷியை குருவாகக் கொண்டு ஞானப் போக்கையும் பாண்டிச்சேரி அரவிந்தரைப் போன்ற யோகிகளையும் உள்வாங்கிக் கொண்டு கொழும்பில் தமது ஆன்மீகப் பணியை அழகுபடுத்தினார். மகாத்மா காந்தியடிகள் ஈழத்திற்கு வந்த போது கொழும்பில் இவரது இல்லத்திலே தங்கினார் என்பதிலிருந்தே இல்லறஞானி அவர்களது பக்குவமான முக்கியத்துவத்தைப் நன்கு புரிந்து கொள்ள முடிகிறது. கொழும்பு இராமச்சந்திராவின் எழுத்துக்களைப் படியுங்கள் என்று ஒருமுறை ரமணமகரிஷியே தன்னைச் சுற்றியிருந்தவர்களிடம் குறிப்பிட்டுச் சொல்லும் வகையில் உயர்ந்து நின்றவர் என்பது இவர் மேன்மைக்குப் போதிய சான்றாகும்.

1948இல் பெரியவர் இராமச்சந்திரா அவர்கள் கொழும்பில் கொள்ளுப்பிட்டியில் தனது இல்லத்தில் ஆவணி பதினைந்தாம் நாளில் அரவிந்தர் குருபூசையை வழக்கம் போல் நடாத்திய தினத்தில் திரு நா. முத்தையா அவர்களின் ஆன்மீக வரலாற்றுச் சந்திப்பு நிகழ்கிறது. அன்றுதான் ஆத்மஜோதி என்கிற எண்ணமானது செயல்வடிவமாக பரிணமிக்கிறது. அப்போது 1939ம் ஆண்டிலிருந்து நாவலப்பிட்டியில் ஆசிரியராகப் பணியிலிருந்தவர் திரு முத்தையா அவர்கள். சைவமும் தமிழும் எழில் கொழித்தோங்கும் ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். செழித்த சமயத்துப் பாரம்பரியம் இவருடைய பெரும் சிறப்பு.

ஆறுமுக நாவலரின் குரு சிஷ்ய பரம்பரையில் குமாரசாமிப்புலவர் அமைகிறார். அவர் மாணவர் பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஆவார். அவரின் மாணாக்கரே பெரும் பக்குவத்துக்குரிய ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களாவர். இவர் தனது 21வது வயதிலே ஆசிரியத் தொழிலை ஆரம்பித்தார். தனது இளமைக்காலத்தில் சைவத்தையும் தமிழையும் வளர்க்கவும் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் ஒரு சமயப் பத்திரிகை வேண்டும் என்ற ஆதங்கத்தை தன் நண்பர்களுடன் பேச்சு வழக்காகவும் எழுத்தால் பத்திரிகைகளிலும் வலியுறுத்தி வந்தார். இக்காலப் பகுதியில்தான் அவரது பெருமதிப்புக்குரிய இராமச்சந்திரா அவர்களுடனான மேற்படி சந்திப்பு நிகழ்ந்தது. அன்றைய தினத்தில் நெருக்கமான வேண்டுதலோடு **ஆத்மஜோதி** என்கிற பத்திரிகைப் பணியை 1948 இல் ஆரம்பித்த நா. முத்தையா அவர்களது தெய்வீகப் பணியானது முழுமையாய் வெளிப்பட ஆரம்பிக்கிறது. தமிழ்ச்சமூகம் செய்த பெரும் பாக்கியமே இந்நிகழ்வு. எம்மைப்போன்ற வித்துக்கள் முளைவிட நீர்வார்த்தவர்கள் அவர்கள்.

**நைஷ்டிகப் பிரமச்சாரியாக காவி கட்டாத வெளிரும் துறவியாக வாழ்ந்த திருத்தொண்டர் நா. முத்தையா அவர்கள் சைவத்துக்கும் தமிழுக்கும் காலத்தால் அழிக்க முடியாத பெரும் தொண்டுகள் ஆற்றினார்.** மேற்படி ஆத்மஜோதி சஞ்சிகையின் மூலவித்தாய் முளைவிட்டது முதற் கொண்டு உலகெலாம் உணர்ந்து அறிந்து அம்மலர் பயன்தரும் வகையில் வளர்த்தெடுத்த வகையில் ஆத்மஜோதி நா. முத்தையா என்ற அடைமொழியை சைவத்தமிழ் உலகு அவருக்கு ஓங்கு புகழாய் வழங்கியது எனலாம்.

இத்தகைய ஒரு பெரும்பணியின் அவர்களது ஆக்கபூர்வமான சிந்தனைகளும் புடம்போட்ட தங்கமென ஓங்கும் முயற்சிகளும் ஆத்மஜோதி என்கின்ற ஆன்மீக இதழாக அடுத்தடுத்த தலைமுறையாகவும் எம்மைச் செவ்வனே வழிநடத்தி வந்தது. இவ்வேளையில் தான் 1983இல் அப்பெரும் அனர்த்தம் நாவலப்பிட்டியில் நடந்தேறியது. அன்றைய பெரும் இனக்கலவரச் சூழலில் ஆத்மஜோதி நிலையமும் அதன் அச்சுக்கூடமும் அங்கிருந்த நூல் நிலையமும் தீக்கிரையாக்கப்பட்டது. பல்லாயிரக் கணக்கான புத்தகங்களும் பல இலட்சம் பொருளாதார இழப்புக்களும் ஏற்பட்டன. ஆயினும் ஆத்மஜோதியின் பிரகாசத்தை அணைத்துவிட முடியவில்லை.

பல்வேறு இன்னல்களையும் சோதனையான காலகட்டத்தையும் இடைவிடாத தொடர் முயற்சியாலும் தனது உள்ளூர உதிரும் புன்னகையாலும் வென்றவர் ஆன்மீக வள்ளல். ஆகையால் மீண்டும் கனடாவில் நின்றுபோயிருந்த ஆத்மஜோதி பத்திரிகைப் பணியைத் தொடர்ந்தார். **70 வருடகால நீண்ட வரலாறு கொண்டதான ஆத்மஜோதி** நா. முத்தையா அவர்கள் சிவபதமடைந்த பின்னும் இன்று வரையும் தொடர்கிறது. இவற்றை விடவும் இடைவிடாத எழுத்துக்களால் இருபத்தைந்துக்கு மேற்பட்ட நூல்களை எழுதிப் பதிப்பித்தார். மற்றும் ஏனைய ஆன்மீக கட்டுரைகள் பலநூற்றுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்கானவை ஐயாவின் பணிச்சான்றுகளாக இன்றும் எம்மிடம் உள்ளன.

மேலும் தாம் பார்த்துக் கண்டு கேட்டறிந்த வற்றையெல்லாம் நினைவில் வைத்து அழகுபட உரிய காலத்தில் மற்றவர்களுக்குத் தேவைப்படும் போது வழங்கும் திறனே **பிரசங்க தானம்** ஆகும். இதில் மிளிர்ந்தவரே பெரியவர் ஆத்மஜோதியார். எளிமையான சொல்லாடல், சிறு வசனச்சேர்க்கை, நகைபட உரைத்தல். பாடும் திறன், தவறுகளைத் தட்டிக் கேட்கும் துணிவும் ஐயாவின் பிரசங்க பணியின் சிறப்புறு மேன்மைகளாகும்.

ஆன்மீக வள்ளலின் தேடல்கள் யாத்திரை களாகப் பரிணமித்தன. இந்திய திருத்தல தரிசனங்களின்போது தாம் ஏற்கனவே அறிந்திருந்த ஸ்ரீ ரமணர், அன்னை அரவிந்தர், சுத்தானந்த பாரதியார், சிவபாலயோகி, காஞ்சிமகா பெரியவர், பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா, யோகி சிவானந்தா யோகிராம் சுரத்குமார், ராமானந்தர், அன்னை கிருஷ்ணாபாய், ஞானானந்தகிரி, இராமதாசர் இவர்களது நட்பும் அருகாமையும் ஆசிகளும் பெற்று மேன்மையுற்றார். இவர்களுடனான தனது ஆன்ம அனுபவங்களைப் புத்தகங்களாக ஆக்கி ஏராளமானோரை படித்துப் பயன்பெற வழிவகை செய்தார்.

ஈழத்திலும் சித்தானைக்குட்டி சுவாமிகள், யோகர்சுவாமிகள், திருவாசக ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகள், கௌரிபாலாசுவாமிகள், கடவுள்சுவாமிகள், குடைச்சுவாமிகள் போன்ற ஈழத்து சித்தர்களினதும் மகான்களினதும் உடனிருப்புகளும் அளவளாவல் களும் நிரம்பப்பெற்றவர் எங்களது ஐயா. இந் நிலையில் இவர்களது நயனதீட்சை, ஸ்பரிச தீட்சைகளால் ஆட்கொள்ளப்பட்டுத் தேடித் தேடவொணாத தேவனை தம்முள்ளே கண்டுகொண்ட மகான்களின் பெரும் தெய்வப்பேராற்றல் இவரையும் ஈர்த்து தடுத்தாட்கொண்டது போலும்.

இவரதுள்ளமானது உலகபந்தங்களால் நிர்ப்பந்திக்கப்படாது கட்டுப்பாடுற்ற பிரமச்சாரியத்தில் நிலைத்து எப்போதும் தைலதாரையாகி இடைவிடாது இறைவனுக்காய் பெரிதும் ஏங்கிய வண்ணமாய் அழுதது. இதனால் ஆத்மத்துவத்தில் உள்ளூரக் கனிந்து ஞானப்பழமாய் ஆகிற்று. ஆதலால்தான் ஐயாவின் வாழ்வும் வாக்கும் நாம் உருசிக்க வேண்டி இறைவன் எமக்களித்த பெரும் பாக்கியமாக அமைந்து ஆழ்கடல் முத்தாய் எமது ஆன்மீக தேடலின் திரவியமாயானது.

வசதியான வாழ்வில் பிறந்து ஏழைகளுக்காய் உள்ளூர அழுதவர் என்ற நிலையில் உயர்ந்து நிற்பவர் சிலரில் முன்னிலைப்படுபவர் ஆத்மஜோதியார் என்பது ஆய்வுநிலை உண்மையாகும். நடுத்தரவர்க்க மனோபாவ நிலையின் யாழப்பாணத்து சமூகத் திலிருந்து திருமணபந்தத்தில் அகப்பட்டுக் கொள்ளாமல் இருந்தார். **தனது 28வது வயதில் திருக்கேதீஸ்வரத்தில் 7 நாட்கள் தொடர்ந்த அந்தர்யோக நிகழ்ச்சியின் நிறைவில் பிரமச்சாரியாக வாழ்வேன் என்ற உறுதி மொழி மேற்கொண்டார்.** இதற்கான முழுமையான அர்ப்பணிப்புக்கு மலையகம் நோக்கிய ஆசிரியத் தொழில்நிலை நகர்வு அவரது மனநிலையையும் மேலும் உயர்த்தியிருக்க வேண்டுமென்றே தெரிகிறது.

ஈழத்தில் மலையக தோட்டத் தொழிலாளர் களது வாழ்வு அட்டைக் கடிகளுக்கிடையிலான அவலம் நிறைந்தது. அங்கு கிழிந்த உடைகளுக்குள் நலிந்து நடமாடிய வறுமையில் வாடிய சீவன்களைப் பார்த்து மனம் மிகவும் நொந்தார். குறைந்த ஊதியமும் கூட்டிக்கொள்ள முடியாத அறிவு நிலைப்படாத மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நெம்பு கோலாய்த் தன்வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டார் என்பதே சாலப்பொருந்தும்.

தோட்டத்தொழிலாளர் லயங்களுக்குள் தாமாகவே தேடிச்சென்று ஏழைக் குழந்தைகளை அழைத்து வந்து பள்ளிச் சூழலுக்கு பழக்கப் படுத்தினார். தேவைப்பட்ட பாடசாலை உபகரணங் களை தன் செலவிலும் வழங்கினார். பிற அன்பர் களிடமும் ஏழை மக்களின் உதவிக்காய் பரிந்துரைத் தார். மாலை நேரத்தில் படிப்புவாசனை அறிந்திராத முதியோருக்கும் எழுதப்படிக்கக் கற்றுக்கொடுத்தார். சுத்தம், சுகாதாரம், ஒற்றுமை, சமயப்பற்று, மொழியறிவு, சேவைப்பற்று, நல்லொழுக்கமான வாழ்வென ஏழைத் தொழிலாளர்கள் குடும்பங்கள் மேன்மைபெற இரவுபகலாய் சொற்பொழிவுகள் ஆற்றி உன்னத விழிப்புநிலையை உருவாக்கினார். தீயபழக்கங்களான மது, போதை, புகைத்தல், விரோத மனப்பான்மை, பெண்ணடிமைத்தனம், மூடநம்பிக்கை கள் என்பனவற்றை அவர்களிடமிருந்து விலக்கி நெறிப்படுத்தி சமூகப்பணியில் பெரும் புண்ணியனானார்.

மலையகத்தில் ஆலயங்களில் நித்ய நைமித்ய வழிபாடுகளைத் தமிழில் ஆற்றவும் விசேட தினங்கள் இறைவனடி சேர்ந்த நாயன்மார்கள் அடியவர்களது குருபூஜைகள் என்பவற்றை கூடிப்பாடிப் பணிந்து நினைவுடன் நிறைவு சேர்த்தார். ஏழை, பங்காளர், அறிஞர், உயர்ந்தவர் என்று எல்லோர் மனக் கதவுகளையும் தட்டி சமயப் பண்பு மொழித் தொடர்ச்சி சமூக அக்கறை என்ற விதைகளைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூவினார். தரிசு நிலமாய்ப் போயிருந்த கடினமான மனங்களைக்கூட அயராத உழைப்பில் பக்குவப் படுத்தி அழகுறப் பயிர் செழிக்க வைத்து பண்பாட்டளர்களாய் அவர்களை மிளிர வைத்தார். உயர்கல்வி பட்டப்படிப்பு என்ற அளவிற்கு மலையகத்து இளைஞர்களை அறிவுக்குரியவர் களாக்கிய பெருமைக்குரியவர் ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் என்றால் மிகையுறுமோ.

நாயன்மார்கள் வழியில் சைவத்தமிழ் தொண்டுகளாற்றினார். யோகர் நெறியில் சிவத்துள் திகழ்ந்தார். ஆனாலும் அவரது அகமுகப் பார்வையோ விசாலமானது. வேதாந்த ஆய்வுகளும் அதன் நிறைவுகளும் அந்தர் யோகமாய் தன்னுணர்வு நிலைக்குள் புகுந்து தான் அறிந்ததை தன்னுள் நிறைந்ததை எங்கும் உறைந்ததை எல்லாம் வல்லதை எடுத்தியம்பும் பாங்கில் ஆன்மீக வள்ளலின் எழுத்திலும் ஏட்டிலும் சொற்பொழிவுகளிலும் செயல்களிலும் பொதிந்து கிடப்பதே ஆய்ந்து பார்க்கின் பக்தனாய் சித்தனாய் யோகியாய் ஞானியாய் மகானாய் எவ்வகையாய் நோக்கினும் அவ்வகையாய் மிளிர்வதை விழிகளை உயர்த்தி உற்று நோக்க வேண்டியுள்ளது. இதனால் மறுத்து விட முடியாத ஈழத்து சைவத் தமிழ் வரலாறு முத்தையா சுவாமிகளை உள்வாங்கி ஏற்றுக் கொண்டது.

பாடசாலை ஆசிரியர்களை அழைத்தும் அவர்கள் கல்லூரிகளுக்குச் சென்று ஆன்றோர்களை சான்றோர்களாக்கும் முயற்சியை துணிந்து முன்னெடுத்தார். **அறிவு ஆணவத்துக்கு வித்திடக் கூடாது. ஊதியத்துக்காய் மட்டும் பணி கொள்ளக் கூடாது. உவந்து ஏற்றித் தொண்டாற்றுங்கள். கற்றதில் பெற்ற வாழ்வியல் அனுபவங்களை பாடமாகப் போதியுங்கள். பட்டம் பெற்று விட்டோம் படிப்பு முடிந்தது என்று இருந்து விடாமல் நித்தம் மிகத் தேடி நிறைவுபடக் கற்றிடுங்கள்** என்றெல்லாம் தட்டிக்கேட்டும் அறிவுரை தந்தும் ஊக்கம் கொடுத்தும் பெருந்தகையவர் என்ற பேரிலக்கணத்தவர்க்கு வழிசமைத்தார்.

"மனிதர்கள் மட்டுமன்றி மற்றைய உயிரினமும் நிறைவாக வாழ்ந்திடவே உயிர் செய்தான் இறைவன். ஆகையால் ஏனைய உயிர்களுக்கு ஒரு தீங்கும் செய்யலாகாது. உயிர் கொன்று புசித்தலாகாது. பசுக்களானது தெய்வத்துக்கு நிகராகும். புலால் உண்ணல் விலக்கி வாழ்வீர். பொய், களவு, கூடாவொழுக்கம், பிறர் கதைகள் பேசி உங்கள் புண்ணிய வாழ்வை பாவக்கடலாய் பெருக்கு வதேனோ?" என்று தட்டிக்கேட்கும் துணிச்சல் பிரமச்சாரியத்தில் விளைந்த கடும் தவத்துதித்தது என்று ஆன்மீக வள்ளலின் வாழ்வை உவந்து நோக்கின் மிளிரும்.

ஈழத்தில் தமிழ்ச்சமூக வரலாறானது, மொழி, இன, கலைகலாச்சார பண்புகளின் வேர்களோடு பின்னிப் பிணைந்தது. கடந்த அரை நூற்றாண்டுகளாக இத்தகைய வாழ்வு நிலையில் தொந்தரவுகள் நிறைந்த இன்னல்கள் ஏராளம் சூழ்ந்தது. இந்நிலையில் விலகியிருந்து தானுண்டு தன் வாழ்வு உண்டென்று சகவுயிர்களை மிகவும் நேசிப்பவர்களால் சுயநலமாய் இருந்துவிட முடியாது. வெந்த சோற்றுக்கு விதி வந்து சாவதுவோ என்று புகட்டிய சித்தர்கள் வாழ்ந்த பூமியலலவா எமது. திண்ணிய நெஞ்சனார் ஆத்மஜோதியாரும் இதற்கு விதிவிலக்கல்ல என்பதை நிரூபிக்க சற்றும் தவறவில்லை.

நால்வர் வழியில் தேவார திருமுறைகள், பஜனைகளைப் பாடிய வண்ணமாக பக்தர்களுடன் கூடித் தமிழ் தாயகத்தில் இராணுவக் கட்டுப்பாடுகள் நிறைந்த பகுதிகளுக்குள் அமைந்த ஆலயங்கள் தோறும் **சமாதானப் பாதயாத்திரைகள்** மேற்கொண்டார். கடுமையான அரச உத்தரவுகளையும் அழுத்தங்களையும் கொண்ட போராட்ட சூழல் களையும் கடந்து துணிச்சலாக மக்கள்பணிகள் மிகவு மாற்றினார். வீடுகள்தோறும் கூட்டுப் பிரார்த்தனைகள் செய்யும்படி ஊக்குவித்தார். பேராபத்தான காலங்களிலும் எமது மக்களின் இன்னல்களில் தாமும் பங்கெடுத்தார். ஆன்மீகப் பெரியவர் என்ற முறையிலும் மற்றும் வயோதிபர் என்றவழியிலும் தமக்குக் கிடைத்த அனைத்து அரச விடுதலை அமைப்புகள் தந்த தனிச்சலுகைகளை எல்லாம் ஏற்காது வரிசையோடு வரிசையாக வெயிலிலும் மழையிலும் குண்டுகள் போட்டளிக்கையிலும் ஓடியெங்கும் ஒளித்திடாது துன்பத்தை தோள்களில் சுமந்த துயருற்ற மக்களோடு மக்களாய் அவர்கள் பக்கதுணையாய் நின்றார். இதனால் இன்னல்கள் சூழ்ந்தபோது தோன்றாத் தெய்வீகத் துணையாய் ஐயாவின் இருப்பை உணர்ந்த பலதரப்பட்ட மக்களது மனங்களிலும் என்றும் நீக்கமற நிறைந்தார்.

சுவாமிகள் பணியில் அடுத்து முக்கியத்துவம் பெறுவது **சர்வதேச நாடுகளுக்கும் சென்று தாம் எடுத்த பணிகளை விரிவாக்கம் செய்தமை** பெருமையுடன் கவனிக்கப்பட வேண்டியது. ஆரம்பத்தில் சமய மகாநாடுகளுக்காக உரையாற்றுவதற்காக சென்று வந்தார். ஒரு முறை மலேசியாவில் பசு வதைகள் பற்றிய கடுமையான தன் பதிவை மக்கள் மத்தியில் முன்வைத்தார். "பசுவைக் கொன்று ஒரு நூறு பேர் உணவாய்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதைவிட அதனை வாழ வைப்பதன் மூலம் ஓராயிரம் பேர் அதன் பாலை அருந்திடல் முடியு மல்லவா! பாவமும் தவிர்க்கப்படும் போசாக்கான உணவும் கிடைத்து விடுமே!" என்று கேள்வியாய் கருத்தாய் ஆலோசனையாய் ஆய்வுத்திறனுடன் முழங்கிய பெருமையும் மகாநாட்டு அறிஞர்கள் மத்தியில் பெரும் பாராட்டுதல்களைப் பெற்றிருந்தது.

இந்த **மலேசியா மகாநாட்டுக்கு** வந்திருந்த இந்தோனேசியர்கள் அழைப்பை ஏற்று அங்கும் சென்றார். சைவத்து பாரம்பரியத்தில் பழமையில் ஊறிப்போன உன்னதமான பக்தி நிரம்பிய மக்களை கண்டு வியந்தார். ஆகையால் 1984 முதல் 1986 வரை இரண்டு வருடங்கள் அங்கு சென்று பாலித் தீவில் தங்கியிருந்து வீடுகளிலும் ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் கூட்டு வழிபாடுகளிலும் சமய சம்பிரதாயங்களிலும் அந்த மக்களை ஈடுபடுத்தினார். சில சமயப்பள்ளிகளையும் அங்கு நிறுவினார். இத்தகைய அரிய அனுபவங்களைத் தொகுத்து **இந்தோனேசியாவில் இரண்டு வருடங்கள்** என்ற நூலில் அன்றைய விபரங்களைப் பதிவுசெய்தார்.

பின்னர் கனடாவிற்கு சென்றார். அங்கு புலம் பெயர்ந்து வாழும் தமது சந்ததியினரை தமிழ் மொழி சமய பண்பாட்டு கலாச்சாரங்களை பின்பற்ற வைக்க ஆவன செய்தார். **கனடா ஒன்ராறியோவில் 1994ம் ஆண்டில் இந்து சமயப் பேரவை ஒன்றை உருவாக் கினார்.** இதன் தலைவராக மேன்மைமிகு கவிஞர் திரு வி. கந்தவனம் அவர்களும் செயளாளராக சிவ முத்துலிங்கம் ஐயா அவர்களும் அமர்ந்தனர். இவர்களினதும் ஏனைய பக்தர்களினதும் பெரும் முயற்சியின் பயனாலும் அயராத உழைப்பினாலும் தமக்கென சொந்தமான ஒரு நிலத்தில் **ஆத்மஜோதி நிலையம்** அமைந்து சான்றாகியது. மக்கள் பணிகள் இடைவிடாது தொடர்ந்தன.

அவ்வில்லத்தில் **சைவத்தின் காவலரான நாவலருக்கு வெண்கலத்தில் திருவுருவச் சிலை** செய்து பல்வேறு நகரங்களில் 20க்கு மேற்பட்ட சமய விழாக்களைச் செய்து நாவலர் புகழ் பாடி இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டு பெருமையுடன் மிளிர்ந்து விளங்குகின்றது. இங்கு ஆத்மஜோதி இல்லத்தின் தொண்டராய் காவலராய் குருவாய் தன்னலம் கருதாத் தவத்திருச்சான்றோனாக அமர்ந்து **திருமுறைச்செல்வர் சிவ முத்துலிங்கம் ஐயா** அவர்கள் உடல் பொருள் ஆத்மத்துவத்தினையும் அர்ப்பணித்து சிறப்புற இன்றுவரை செயற்படுத்தி வருகிறார். நித்திய நைமித்ய மற்றும் குருமார்கள் பூசைகள் திருவாசகம் ஓதுதல் திருமுறைகளை முற்றும் படித்தல் என்று தமிழில் பூசைகள் செய்து பங்குபற்றுவோர் மனம் மிக நெகிழ வைக்கிறார்கள் ஆத்மஜோதி இல்லத்தினர்.

அடுத்து ஐயா அவர்களுடைய பணி **சுவிற்சர்லாந்து** நாட்டிலும் பரந்து விரிந்தது. இங்கு பலவாரங்கள் எம்முடன் தங்கியிருந்து சாயி நிலையங்களிலும் ஆலயங்களிலும் பக்தர்களது இல்லங்களிலும் இடைவிடாது சொற்பொழிவுகளும் கலந்துரையாடல்களும் கருத்தரங்குகளும் அந்தர் யோக பயிலரங்குகளும் கூட்டு வழிபாடுகளும் செய்வதில் ஓய்வின்றி இரவு பகலாய் தெய்வீக சேவைகள் ஆற்றினார். எமது இன்றைய ஆன்மீக உருவாக்கமானது ஐயாவினது கரங்கள் பதிந்த செம்மையான அன்றைய செதுக்கல்களே என்பதனை முன்வைப்பதில் பெருமையடைகிறோம்.

அவரது விதைப்பில் நூற்றுக்கணக்கானோர் ஆன்மீக எழுச்சி பெற்றனர். அத்தகைய சிலரது தேடலே எமது ஆச்சிரமத்தின் அடித்தளமானது மனதளவில் தோற்றம் பெறுவதில் ஏதுவாகினர். இதில் ஐயாவின் மானசீகமான பங்கு அளப்பரியது. அவரது வாழ்வு தந்த வழிநடத்தலை அருகிலிருந்து பார்த்தறிந்து உணர்ந்து ஊறிய இன்பத்தின் ஊக்கமும் தந்த தாக்கமுமே **சுவிசில் எமது பூரண ஆச்சிரமம்** தோற்றம் பெறுவதற்கு ஏதுவாகியது என்பதனை மனம் மிகவேற்று பணிவன்போடு தெரிவித்துக் கொள்வதில் மகிழ்வடைகிறோம்.

சுவிசிலிருந்து மீண்டும் தாயகம் சென்று ஐயா அவர்கள் தமது யாழ் இந்து சமயப் பேரவை தலைமையின் கடமைகளையும் கைதடி ஆதரவற்றோர் இல்லப் பொறுப்பையும் ஆற்றி வந்தார். வெளிநாடுகளில் பக்தர்களது சேவை நிமித்தமான பங்களிப்புக்களைப் பெற்று அப்போது போர்க்கால சூழலை பாதிக்கப்பட்டிருந்த சிறார் களுக்கான கல்வி அவசிய தேவைகளை நிறை வேற்றிக் கொடுக்கவும் முனைந்து செயற்ப்பட்டார்.

இவ்வேளை அனைத்துலக சைவ சித்தாந்த மகாநாட்டில் கலந்து கொள்ள ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் 1994ம் ஆண்டு கனடாவிற்கு வருகை தந்திருந்தார். இரண்டாவது தடவையாக அங்கே அவர் அமைத்த பேரவை அன்பர்களின் அழைப்பை ஏற்று கனடாவிற்கு சென்றார். பல்வேறு ஆன்மீக முன்னெடுப்புக்களை ஆற்றி வரும்கால் **1995ம் ஆண்டு கனடாவிலேயே பூதவுடலை விட்டு நிறை நிலை எய்தினார்.** தென்னாடுடைய சிவனாய் எந்நாட்டிற்கும் உரியவனாய் எம் இறைவன் திகழ சிவத்திலே பிறந்து சிவத்தையே நினைந்து தோய்ந்து வாழ்ந்து சிவத்தின் திருவடியில் தன்னை ஐக்கியமாக்கிக் கொண்டார் ஐயா அவர்கள். அவரது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதவுடல் அங்கேயே பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ உயர்மரியாதைகளுடன் அக்கினிக்கு ஐக்கியமாகியது.

இதுபற்றி மனம்மிக நெகிழ்ந்து கூறும்போது எமது ஒவ்வொரு இந்து சமயப் பேரவை நிகழ்விலும் அதன் உருவாக்க கர்த்தாவான ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் சூக்கும தரிசனமாய் எமக்குள்ளிருந்து செயற்படுத்தி வருவதாக தாம் உணர்வதாக **ஐயாவின் சீடரும் தற்போதைய கனடா ஆத்மஜோதி இல்ல குருவுமான திருமுறைச்செல்வர் சிவ முத்துலிங்கம் ஐயா** அவர்கள் மனமுருகிப் புளகாங்கிதமாய் பயபக்தியோடு தம் கருத்தை முன்வைக்கிறார். குருவுக்கேற்ற சீடராய் மதித்தும் வியந்தும் நாம் அவரை நோக்குகின்றோம்.

இன்றளவும் சமய மத பண்பாட்டு நிகழ்வு களை செம்மையாகவும் செழுமையாகவும் பெரு விருப்புடன் கலந்து கொள்ளும் படியாக கனடா ஆத்மஜோதி இல்லத்தில் நடத்தப்பட்டு வருகிறது. நித்திய வழிபாடுகள் சமய குரவர்கள் ஈழத்து சித்தர்கள் ஞானிகள் இவர்களது குரு பூஜைகளும் இடம் பெறுகின்றன. மற்றும் நின்று போயிருந்த ஆத்மஜோதி இதழ் மீண்டும் வெளிவந்து தன்பணியை தொடர்ந்து ஆற்றிவர 1994இல் கனடாவில் ஏற்பாடு செய்யப்பட்டது நாமறிந்ததே. 3000 ஆத்மஜோதி சஞ்சிகை காலாண்டு இதழாக வெளியிட்டு இலவசமாக இன்றுவரை வழங்கி வருகிறார்கள். சைவ சமயம் சார்ந்த அறிஞர்களால் எழுதப்பட்டும் தொகுக்கப்பட்டும் மீள்பதிவு செய்யப்பட்டும் நூற்றுக்கணக்கில் ஆன்மீக நூல்கள் பதிப்பிட்டு வெளியீடு செய்து வைக்கப்பட்டுள்ளன.

திருமுறை விழாக்கள், திருமுறை மகா நாடுகள், திருமுறை முற்றோதல்கள், போன்ற பல நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. தென்னிந்திய திருத்தல யாத்திரைகள் முன்னெடுக்கப்பட்டன. மாணவர் களுக்கான திருமுறை மனனப் போட்டிகள் பேச்சுப் போட்டிகள் போன்ற திறன் வளர்த்தல் நிகழ்வுகளும் ஊக்குவிக்கப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டு வருகின்றன. இங்கு பேரவையின் கீழ் திருக்கூட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு பக்திமயமான திருக்கூட்டத் தினரால் நிரம்பி வழிகிறது.

இவ்வழியாக ஆத்மஜோதி திரு நா.முத்தையா ஐயா அவர்களுடைய பிறப்பும் வாழ்வும் சிவபத மெய்தி ஏறத்தாழ 23 வருடங்கள் நிறைவுறுகின்றது. ஆயினும் அவரது நினைவுகளும் எம்மைப்போன்ற ஆயிரமாயிரம் ஆன்மீக இதயங்களை நன்றாய் விளைவித்திருக்கிறது திண்ணம். ஆகையால் தான் சமயம் மொழி சமூகம் சார்ந்த கலை கலாச்சார பண்பாட்டு விழுமியங்கள் தோறும் அவரது இருப்பை எம்மால் நன்குணர முடிகிறது. பல்வேறு நாடுகளிலும் வாழும் தமிழ் சமூகம் கொண்டாடும் பெரியோரில் முதன்மை நிலையில் எமது ஆன்மீக வள்ளலுக்கோர் தனியிடமுண்டு.

ஒன்ராறியோ இந்து சமயப் பேரவையின் தலைவராக இருக்கக்கூடிய சைவதுரந்தரர் கலாநிதி வி. கந்தவனம் ஐயா அவர்கள் வசாவிளான் மத்திய கல்லூரியில் அடியேனின் உப அதிபராக விளங்கினார். சிவபதமடைந்த பேரவையின் போசகர் பேரறிஞர் முருக வே. பரமநாதன் ஐயா அவர்கள் ஊரெழு கணேச வித்தியாசாலையில் அடியேனின் வகுப்பாசிரியராக இருந்தவர். திருமுறைச்செல்வரும் ஆத்மஜோதி இல்லத்து ஆசானுமான சிவ முத்துலிங்கம் ஐயா அவர்கள் ஆன்மீகப்பணியில் என் மூத்தவழிகாட்டியாவார். இப்படியாக மூன்று தலைமுறையினராகிய நாம் இத்தகைய ஆத்மஜோதித் திருக்கூட்டத்தினருடன் இணைந்து மூன்று தசாப் தங்கள் தாண்டியும் புலம் பெயர் தேசங்களில் எமது சமூக இருப்புக்களைத் தக்கவைத்துக் கொண்டு பெரியவர் ஆன்மீக வள்ளல் தெய்வீகப் பணிபுரிவதில் நிறைந்த ஆத்ம திருப்தியில் உள்ளம் மகிழ்ந்து உறைகிறோம்.

இதற்கெல்லாம் காரணமாக எங்கெங்கோ பூத்திட்ட மலர்களையெல்லாம் ஒன்றாய் சேர்த்தும் மாலை தொடுத்த ஆத்மஜோதி நா. முத்தையா ஐயா என்ற நல்லாசானைப் பணிவோம். உறுதியான பக்தி, தளராத மனது, திடமான ஞான வைராக்கியம், கடும் தவத்துடன் கூடிய பிரமச்சாரியம் இவற்றின் மொத்த உருவமாய் எம்முடன் வாழ்ந்து வழிகாட்டிய **ஞானசுரபி** அவராவார். அத்தகைய எம் குருநாத ருடைய 100வது ஜனன ஆண்டில் அவரைப்பணிந்து அவர் புகழ்பாடி அவர்பணி தொடர்வோம. காலத்தால் அழியாத ஆத்மஜோதியில் பயணிப்போம்.

எடுத்தலும் கொடுத்தலும் ஏற்றுபுகழ் சேர்த்தலும்
அடுத்த தலைமுறைக்கு ஆற்றுகடமை ஈட்டலும்
ஊற்றெடுத்துப் பாயும் உணர்வு மிகவடக்கலும்
நாமேன் பிறந்தினிப் பிறவாதிருத்தலுக்கே

**அனைத்துயிரும் இன்புற்றிருக்க ஆனவரையில் பாடுபடுவோமாக.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐம்புல வேடரில் அகப்பட்ட ஒருவன்

## ஆத்மாசிரியன் சிவ உதயகுமார்

"ஐம்புல வேடரில் அகப்பட்ட ஒருவன் வெம்புதல் இன்றி விடுபட முடியுமா?"

யாவர் அந்த ஐம்புல வேடர்? அகப்பட்டவன் யார்? இந்த உலகின் ஒரு மனிதனின் இயக்கத்திற்கு ஆதாரமாக இருக்கின்ற மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்களும் வேடர்கள். இந்தப் புலன்கள் ஐந்தும் தான் மனதைத் வில்லாகக் கொண்டு, ஆத்மாவை இலக்கு வைத்து அங்கும் இங்கும் அங்கலாய்க்க வைக்கின்றன. இந்த அங்கலாய்ப்பு நிலையிலிருந்து ஆத்ம விடுதலை பெறுதலே ஆன்மீக உயர்நிலையாகும்.

மானிடராகப் பிறந்த எமக்கு உய்யும் வழிதருவது ஆன்மீகமாகும். அதை முறையாக, வைராக்கியத்தோடு கடைப்பிடிக்கும் ஒருவருக்குத் தான் ஆன்ம விடுதலைகான வழிபிறக்கும். அம்முயற்சியில் தான் இறைவனால் ஆட்கொள்ளப் படுதல் நிகழமுடியும் என்பது சைவசமய நாயன்மார்களில் வாழ்வியல் நமக்குப் புகட்டி நிற்கும் உண்மையாகும். அதில் சந்தேகம் கொள்ளுதல் என்பது இறைவனின் கருணையையே சந்தேகிப் பதாகும்.

நாம் ஏன் பிறந்தோம்? நமது இறுதி இலக்கு என்ன? நாம் காணும் அனுபவங்களுக்குக் காரணம் என்ன? அந்த அனுபவங்கள் தரும் பாடங்கள் என்ன? எமக்கு இறை உணர்வைப் பெற, காட்டப்பட்ட பாதை என்ன? அப்பாதையில் நாம் உறுதியாக முன்னேறு கின்றோமா? எமக்குள் மயக்கத்தை உண்டு பண்ணிக் கொண்டிருக்கும் மும்மலங்களை வென்றோமா? அல்லது வெல்ல முயற்சி செய்தோமா? முக்குணங் களில் புரளும் மனதில் உயர்ந்த குணத்தைப் பெற்றோமா? அதிலிருந்து மேலே செல்ல முனைந்தோமா? என்று பலப்பல கேள்விகளும் அவற்றிற்கான விடைகளைத் தேடும் முயற்சியும் ஆன்மீகவாதிகளுக்கு ஆத்ம விசாரமாகின்றது. மற்றவர்கள் உலக இன்ப நாட்டங்களில் திளைத்து மாற்றான கேள்விகளிலும் விடை தேடுவதிலும் பொழுதைக் களிப்பர். இறுதியில் சுடலை ஞானம் பெற்றவர்கள் போல் ஏதோ பிதற்றிச் சமாளிப்பர். இதுவரைகாலமும் கைகூடாத ஆன்மிகப் பயிற்சிகள், ஆச்சார ஒழுக்கங்கள் இறுதிநேரத்திலா கைகொடுக் கும். அதனால் தான், பிறந்த நாள் முதல் இறுதிக் காலம் வரைக்கும் மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய அனுட்டானங்களை வேதங்கள் வகுத்துத் தந்தன. இவற்றை இன்று மனித சமுதாயத்தில் அனுட்டிப் போரோ ஆதரிப்போரோ மிக மிக அரிது. இதனா லேயே உலக அமைதி கேள்விக் குறியாகியுள்ளது.

அறிவு தரும் மயக்கத்தால் ஆத்மாக்கள் தெளிவடைதல் என்பது எவ்வளவு சாத்தியம்? முன் சென்ம வாசனைகள் குறுக்கிட்டு ஒரு திருப்புமுனை ஏற்பட்டால் அன்றி அந்த மனிதன் உய்யும் நிலை ஏது? ஒருவன் எவ்வளவுதான் உலக மயக்கத்தில் இருந்தாலும் அவனுக்குள் இருந்து ஒரு குரல் அவன் எண்ணத்திற்கு மாறாக ஒலித்துக் கொண்டேயிருக்கும். ஆனால் அதற்கு முக்கியத்துவம் கொடுக்காதபடி மும்மல நூல்களால் நெய்யப்பட்ட முக்குணக் கோடுகளைக் கொண்ட ஒரு போர்வையை போர்த்திக் கொண்டுள்ளான். இந்நிலையைத் சிவபுராணம் எப்படி உணர்த்துகிறது பாருங்கள்.


"மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
"மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டி
புறந்தோல் போர்த்து எங்கும் புழுஅழுக்கு மூடி
மலம்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தானிலாத சிறியேற்கு நல்கி"

என்றவாறு அவரவர் தேடுதலுக்கேற்ப அவரவர் வழியில் சென்று ஆட்கொள்ளும் இறைவனை மாசில்லாத அன்பு செய்தலே உண்மையான ஆத்மராகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுடைய எல்லோருக்கும் அவர்களது அறிவு வந்து, ஆபத்துக் காலங்களில் காப்பாற்றுவது இல்லை. அறிவோ பலதும் கலந்தது. குற்றமற்ற கள்ளங்கபடமற்ற மனத்தை அறிவுள்ள எல்லோரும் பெற்றிருப்பதில்லை. ஆனால் ஆன்மவிசாரணை செய்கின்ற ஒவ்வொருவரும் உலகின் நிலையில்லாத் தன்மையையும் இறைவனின் மாறாத இருப்பையும் முதலின் உணரச்செய்கின்றது. இந்த நிலையில் வெளி உலக விடயங்களில் உரசிக்கொண்டிருந்த மனது தனக்குள்ளேயே தெய்வீக ஒளியைக் காணத் துடிக்கும். இதுவே ஆன்மஞானத்தின் தொடக்கம். இதன் முடிவே ஆத்மதரிசனம். அந்தர்யோகம் என்ற உள்ளொளி பெற்ற உணர்வு (ஆத்மஜோதி) பெறும் தியானம் கைகூடும் போது, இந்த ஆத்மதரிசனம் நிகழும். இதனை வலியுறுத்தியே முத்தையா சுவாமிகள் கனடாவிற்கு வந்தபோது, அந்தர்யோகம் என்ற வகுப்பை நடத்தியதன் மூலம் உணர்த்தினார். மொன்றியலிலும் சுவாமிகள் அந்தர்யோக வகுப்பை நடத்தி ஆத்மஜோதி தமிழர் இணையத்தை இயங்க வைத்தார். உலக மயக்கங்களுக்கு மத்தியில் இயங்கும் மக்களுக்கு ஆன்மீக இலக்கை எட்டுதல் என்பது ஒருசிலருக்குக் கசப்பானதாகவும் வேறு சிலருக்கு முடியாத காரியமாகவும் இருக்கின்றது. ஆனால், இந்த அந்தர்யோகம் இன்றும் இருபத்து மூன்று வருடங்களாக பிரதி வெள்ளிக்கிழமை தோறும் மாலையில் நடைபெற்று வருகின்றது.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மாலையிலும் மொன்றியல் ஆத்மஜோதி தமிழர் இணைய தியானாலயத்தில் சனாதன வழிபாட்டு முறையில், இறையுணர்வை எழுப்புதலாகிய திருப்பள்ளி எழுச்சியுடன் தொடங்கி பஞ்சபுராணம் ஓதுதலுடன் பிள்ளையார், சக்தி, சிவன், முருகன், நாராயணர், சூரியன் என விளித்துப் போற்றிப்பாடி தியானம் செய்யப்படுகிறது. தொடர்ந்து சற்சங்கம் தீபாராதனை யுடன் முடிவடையும். ஐம்புல வேடரில் அகப்பட்ட ஒவ்வொரு ஆத்மாவும் சீவன்முத்தி அல்லது ஆன்மவிடுதலை என்ற நிலையான பேரின்பத்தை அடையவேண்டும் என்பது எமது இலட்சியமாகும். ஆத்மஜோதி தமிழர் இணையம் இந்த அந்தர்யோக வழிபாட்டின் மூலம் ஒரு உன்னதமான ஆன்மீக சமுதாயத்தை உருவாக்க இன்றுவரை முயன்று வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமையும் இறைவனும்

நா. நடேசன், ஆசிரியர்

ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்க்கையை செவ்வனே நடத்துவதற்கு ஏதாவது ஒரு தொழில் அவசியம். தான் மட்டுமல்ல தன் குடும்பம், லௌகீக வாழ்வைத் துறந்த துறவிகளுக்காகவும் உணவளிப்பதற்கும் அவன் பொருள் ஈட்ட வேண்டும். ஆசிரியப் பெருந்தகையான நாகமணி முத்தையா அவர்களை லௌவீக வாழ்க்கைக்கு இட்டுச் செல்ல அவருடைய தாய் தகப்பன் எடுத்த முயற்சிகள் சொல்லும் தரமன்று. துறவி வடிவேற் சுவாமிகளும் சித்தங்கேணி வேலுப்பிள்ளை ஓவசியரும் முயன்றனர். எனினும் ஆத்மஜோதி தன் குறிக்கோளில் இருந்தும் சிறிதும் தளம்பவில்லை.

இப்படிப்பட்டவருக்கு ஏன் உத்தியோக மோகம் என்று கேட்டோரும் உண்டு. இவர் தன் ஜீவனோபாயத்திற்கு ஆசிரியத் தொழிலையே தேர்ந்தெடுத்தார். புரியும் தொழிலை இறைவனுக்கு பூசைனையாகக் கொண்டு வாழ்ந்தார்

இவர் இருவிதமான தொழிற்பாட்டிலும் ஆசிரியர் என்ற புனிதமான பெயரையே பெற்றார். முதலாவதாக எதிர் காலச் சந்ததியினருக்கு கல்வி ஊட்டினார். இரண்டாவதாக ஆத்மஜோதி என்ற மாதாந்த சமய சஞ்சிகைக்கு ஆசிரியராகக் கடமையாற்றினார்.

ஆசிரியர் என்றால் குற்றங்களை நீக்குபவர் என்று பொருள்படும். ஆனால் இன்று ஆசிரியர் என்றால் எல்லாவிதமான குற்றங்களுக்கும் உறைவிடமோ என்று எண்ணத் தோன்றுகிறது. மலையகத்தில் பலதிறப்பட்ட மாணவர்கள் இந்துக்கள், இஸ்லாமியர்கள், கத்தோலிக்கர் எனப் பலவேறு சமய மாணவர்கள் கல்வி கற்றனர். சாதி சமய அடிப்படையில் வேறுபாடு காட்டாது கல்வி போதித்தார். அதனால் அவருக்கு பெயரும் புகழும் தானே வந்து சேர்ந்தது.

தன்னுடைய கடமைக்குச் சென்றாலும் விபூதி அணியாமற் செல்லமாட்டார். அவரைச் சுவாமி என அழைத்த சிங்களவரும், முஸ்லீம்களும் இருந்தனர். கடன் என்ற சொல்லில் இருந்து வந்ததுதான் கடமை. கடன் பட்டவன் கடமை தான் என்ன. கடன் தந்தவனுக்கே நன்றி உள்ளவனாகவும் விசுவாசம் உள்ளவனாகவும் இருக்கவேண்டும். வட்டியும் முதலும் கொடுக்க முடியவில்லை என்றாலும் முதலை என்றாலும் கொடுத்துவிட வேண்டும். உலகில் பிறவி எடுத்த எல்லா ஜீவராசிகளும் இறைவனிடம் கடன் பட்டவையே. பிரதானமாக மானிட வர்க்கம் அவற்றுள் ஒன்று. உலகில் உள்ள ஜீவராசிகளும் ஏதோ ஒரு வழியில் கடன் பட்டவையே. தன் பெற்றோருக்கு, சகோதர சகோதரிகளுக்கு, உறவினர்களுக்கு, ஏன் இறைவனுக்கும் கடன்பட்டவையே.

கடமையைச் செய்பவன் எந்தவித எதிர்பார்ப்புகளுமின்றி, கடமை உணர்வுடன், கரிசனையுடன் கடமையை நிறைவேற்ற வேண்டும். பல தனி மனிதர்கள் சேர்ந்தால் ஒரு குடும்பம். பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்தால் சமூகமாகிறது. ஒவ்வொரு தனிமனிதனும் அறவழிநின்று ஒழுக்க சீலர்களாய் வாழ்ந்தால் குடும்பம் சீரும் சிறப்பும் அடையும். பல குடும்பங்களும் இவ்வாறே வாழ்ந்தால் சமூகம் மேன்மை உறும்.

ஆத்மஜோதி மன மகிழ்ச்சியுடன் மாணவர்களுக்கு கல்விபுகட்டினார். மாணவர்களும் ஆர்வத்துடனும் மகிழ்ச்சி உடனும் கல்வி கற்றனர், மேன்மை உற்றனர், செய்யும் தொழிலே தெய்வம் என்பர். ஏமாற்றுதல் செய்யும் தொழிலில் இருக்கக் கூடாது. ஆசிரியர் ஆத்மஜோதி அவர்கள் தான் செய்யும் தொழிலை இறைவனுக்குச் செய்யும் ஆராதனையாகக் கருதினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் நம்மை நற்காரியங்களுக்காகப் படைத்துள்ளான். அதை உணர்ந்து, நாம் இறைவனின் கருவி, அடிமை என்று வாழ வேண்டும். பலன் எதிர் பாராமலே செய்வது கர்ம யோகம். தன் வாழ்க்கைக்குத் தேவையான அளவு பொருளை ஈட்டினார். எனினும் தன் கடமைகளைத் தன்னலமின்றி செய்தார். அதன் பலன்களை இறைவனுக்கே அர்ப்பணித்து விட்டார்.

ஆசிரியனாக, பல்லாயிரக் கணக்கான குழந்தைகளுக்கு அறிவொளி ஊட்டினார். ஞானகுருவாக இருந்து ஆத்மஜோதி பத்திரிகைமூலம், சொற்பொழிவுகள் மூலம், கூட்டுப்பிரார்த்தனைகள் மூலம் பல்லாயிரக் கணக்கான ஆத்மாக்களுக்கு ஞானஒளி ஏற்றினார்.

ஊர் ஊராக நடை பஜனையில் சென்று ஆலயங்களைத் தரிசித்தார். 1957ம் ஆண்டு நாவல் நகரில் இருந்து, முப்பத்தைந்து மாணவர்களும் ஐந்து ஆசிரியர்களும் சிவனொளிபாதமலைக்குச் சென்ற நிகழ்ச்சி வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்ச்சியாகும். வருடா வருடம் நல்லூர்த் தேர்த் திருவிழாவுக்கு ஏழாலையிலிருந்து நடை பஜனை செல்லும் வழமையை ஏற்படுத்திச் செயற்படுத்தினார்.

இவ்வாறு பட்டியலிட்டுக் கொண்டே செல்லலாம். அவரது நூற்றாண்டு விழாவின் போது ஆசிரியர், ஞானசுரபி முத்தையா ஐயாவின் சேவைகளை நினைவு கூர்வதற்குச் சந்தர்ப்பம் அளித்த சகலருக்கும் நன்றி உரித்தாகுக.



**இந்தோனேசியாவில் கோயில் பணியாளர்களுடன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருநாதருக்கு சிஷ்யையின் சமர்ப்பணம்

**திருமதி கோகிலேஸ்வரி ராம்குமார்**
**கண்டி**

நெஞ்சக் கனகல் லுநெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமா லைசிறந் திடவே
பஞ்சக் கரவா னைபதம் பணிவோம்

- கந்தரனுபூதி

எம்மையும் எம் சுற்றத்தையும் அரவணைத்து சைவத்தையும் தமிழையும் வளர்த்தலினூடே எமது நாவல் நகர் (நாவலப்பிட்டி) கிராமத்திற்கு அறிவுப் பேரொளி பாச்சி அன்பு காட்டி வளர்த்திட்ட பெருமகான் நா. முத்தையா மாஸ்டர் பற்றி எழுத ஆசைப்பட்டுவிட்டேன். கம்பரது கூற்றிற்கிணங்க இப்பணியானது பாற்சமுத்திரத்தை தன் நாவால் நக்கிக்குடித்து முடிக்கத் துணியும் ஒரு சிறு பூனைக்கொப்பானதே இந்த அவா. எனினும் பேரவா கொண்ட எனது குரு நாதரைப் பற்றி எழுத்துருவில் எடுத்துரைப்பதில் பேரானந்தமும் பெருமையும் கொள்கின்றேன்.

எங்களது தாத்தா ஒரு வைத்தியர். முத்தையா மாஸ்டரில் பைத்தியம் கொண்ட ஒரு வைத்தியர். சைவ பாரம்பரியத்தில் தம் குடும்பத்தை வழி நடத்திய அவர் தம் பேரக் குழந்தைகளான எம்மை நாவலப்பிட்டி பாடசாலைகளில் கல்வியூட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் எங்கள் குல தெய்வத்திற்கு பாரம் கொடுத்து முத்தையா மாஸ்டரின் வழிகாட்டலில் வளரச்செய்து ஆனந்தம் கொண்டார். எமது தாத்தாவின் டயறிக் குறிப்பின்படியும் எமது பெற்றார் கூறியதற்கேற்ப நான் தாய் வயிற்றில் கருவுற்றிருந்த போதே முத்தையா மாஸ்டரின் ஞான உபதேசம் பெற்றிருந்தேன் என்பது உண்மை. 1961ம் ஆண்டு முத்தையா மாஸ்டர் தலைமையில் நாடு முழுவதும் ஒரு தல யாத்திரை ஏற்பாடாகியிருந்தது. அதில் எனது பெற்றாரான மகாலிங்கம் (அமரர்) கமலம் இருவரும் ஏனைய நாவலப்பிட்டி வாசிகளும் சென்றனர். அதன் பேறாக நான் கருவிலேயே அன்னாரது கதா காலாட்சேபத்திற்கும் ஈர்க்கப்பட்டிருப்பேன். 1962.02.16 நான் பிறந்த நாள் தொட்டு கோயிலில் மாஸ்டரை சந்திப்பேன். பாராட்டும் பெறுவேன். பக்திப் பரவசமூட்டும் பல்வேறு நிகழ்ச்சிகளை பல சவால்களுக்குள்ளும் மிகவும் துணிச்சலாய் அமைதியாய் ஆற்றுவார்.

**'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்'**

என்ற பொய்யா மொழியான வள்ளுவரின் வாக்கிற்கேற்ப அவரது நடத்தைக்கோலம் இருக்கும்.

விரத நாட்கள் என்றால் நாவல்நகர் சைவப் பெருமக்களுக்கு அந்நாள் ஒரு திருவிழாக்காலம். மாஸ்டர் பாடசாலை மாணவர்களின் நிகழ்ச்சிகளை ஒன்றிணைத்து தமிழ் ஒலிபரப்புச் சேவையிலிருந்து நல்ல இசைக் கலைஞர்களை கொணர்ந்து இறை சிந்தனையுடன் எமது ஆற்றல்களை வெளிப்படுத்தவும் வளர்க்கவும் செய்தார். மகா நோன்பான மகா சிவராத்திரியை மிகவும் சிறப்பாக நடாத்துவார். ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில் மண்டபம் கோலாகலம் கொள்ளும் காலமது. அன்று ஊரிலுள்ள அனைவரும் இன வேறுபாடு மறந்து நித்திரை விழிப்பர். அந்த அளவுக்கு நான்கு சாம பூஜையும் பாடசாலை மாணவரது நிகழ்ச்சிகளும் மிகத் திறமையாய் இருக்கும். இம்மகா பொறுப்பினை முத்தையா மாஸ்டரும் அவர்தம் தம்பி அருமைநாயகம் மாஸ்டரும் சேர்ந்து வெற்றிகரமாகச் செய்து முடிப்பர்.

நாம் குடியிருந்த வீடும் அவர்தம் வீடும் ஒரே வீதியில் அமைந்திருந்தது. செவ்வாய் வெள்ளிக் கிழமைகளில் கோயில் விசேடமாகப் பூசை முடிந்ததும் கூட்டுப்பிரார்த்தனை இடம்பெறும். அடிக்கடி நம்நாட்டு, பிறநாட்டுப் பெரியார்கள் எமது ஆலயத்திற்கு வருகை தருவார்கள். நாவலப்பிட்டி நகரைச் சூழ அனைத்துக் கிராமங்களிலிருந்தும் பெருந்திரளான மக்கள் கோயிலில் ஒன்றுகூடுவர். தம் ஊர்களுக்கும் அப்பெரியார்களை முத்தையா மாஸ்டர் தலைமையில் அழைத்துச் செல்வர். இறையருளாலும் மாஸ்டரின் ஆசியாலும் நானும் எனது தங்கை சுபத்ராவும் பக்திப்பாடல்கள், தேவாரம் என்பவற்றை சிரத்தை யுடன் பாடுவோம். எம்மோடு எமது தோழியரும் நிறையப்பேர் பாடுவதில் ஆர்வம் கொண்டு எம்மோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலுக்கு வருவார்கள். நாங்கள் முறையாக தேவாரம் பாடவும், பக்திப்பாடல்கள் இசைக்கவுமென சிறந்த சங்கீத ஆசிரியர்களை யாழ்ப்பாணத்திலிருந்து நாவலப்பிட்டிக்கு அழைத்து வந்து அவர்களுக்கு தமது வீட்டை இருப்பிடமாகக் கொடுத்து எமக்குப் பயிற்சியளிக்கச் செய்வார். அது மட்டுமன்றி பாடுவதற்கு கோயிலிலும் ஏனைய போட்டிகளிலும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தருவார். நன்றாகப் பாடிவந்தவர்களுக்கு தாளம் பரிசாக வழங்கப்படும். அப்போது முத்தையா மாஸ்டருடன் மிக நெருங்கிய உறவினை மில்க்வைற் சவர்க்காரத் தொழிற்சாலை அதிபர் வைத்திருந்தார். அன்னார் வளர்ந்துவரும் எமக்கு அக்காலத்தில் தாளத்தை பரிசளித்து திருஞானசம்பந்தர் சிவபிரானிடம் பொற்றாளம் பெற்றதை ஞாபகப்படுத்துவார். தமது வீட்டில் பிரத்தியேகமாக சங்கீத நாட்டிய வகுப்புக்கள் நடைபெறும் ஆசிரியர்களுக்கு கொடுக்கவேண்டிய வேதனப் பணத்தையும் மாஸ்டர் அவர்களே கொடுத்தார். இதனால் நாவல் நகர் என்ற நாவலப்பிட்டி கலை கலாச்சாரம் மேம்பட்ட நகரமாய் திகழ்ந்தது. இதற்கு அங்கு அமைந்திருந்த முத்தையா மாஸ்டரது ஆத்மஜோதி அச்சகமும் மூலகாரண மாயிற்று. நாட்டிய அரங்கேற்றங்கள், கர்நாடக இசை, பண்ணிசை, வில்லுப்பாட்டு, பட்டிமன்றம், கதாகாலாட்சேபம், சொற்பொழிவுகள், நாடகங்கள், நாட்டுக்கூத்து என்பன மாஸ்டரது தலைமையில் மிகச் சிறப்பாக மேடையேற்றப்பட்டன. களைப்பின்றி அவற்றை செம்மையாக மேடையேற்றும் திறன் அவருடையது. ஆத்மஜோதி அச்சகம் இவர் எமக்களித்த அரும் பெரும் பொக்கிஷமாகும். இறை பக்தியை வளர்ப்பதற்கு 'ஆத்மஜோதி' மலரும் நவராத்திரி திருவிழாக் காலங்களில் பக்திப் பாடலடங்கிய புத்தகங்களும் ஆத்மஜோதி வெளியீடாக பள்ளி மாணவராக எமது பக்திப் பசியைத் தீர்ப்பனவாய் அமைந்தன.

அதுமட்டுமல்லாது உலகில் எந்த நாட்டைச் சார்ந்த இறைச்செம்மல்கள் இலங்கைத் திருநாட்டிற்கு வருகை தந்தாலும் அதற்கு மூல காரணகர்த்தா முத்தையா மாஸ்டராவார். இவருக்கு உலகரீதியிலி ருந்து நல்லுறவுகள் இருந்தன.எம்மையும் அதனுடன் இணையச் செய்தன. குன்றக்குடி அடிகளார், சச்சிதானந்தர், முருகதாஸ் சுவாமிகள், சிவபால யோகி சுவாமிகள், கிருபானந்தவாரியார் இன்னும் பல பல பேர் நாவல் நகர் வந்து எமக்கு நல்லாசி வழங்கிச் சென்றமை இன்றும் ஒரு புதுமையாகவே உள்ளது. இன்றுபோல் அறநெறி வகுப்புக்கள் பிரசித்தமில்லாத அந்த நாட்களில் எமக்கு நல்ல முறையில் பஜனை பாடவும் நல்ல பிள்ளையாய் வளரவும் ஸ்ரீ பகவான் சத்ய சாய்பாபாவின் பால விகாஸ் வகுப்புக்கள் ஏனைய சின்மயா மிஷன், ராமகிருஷ்ண மிஷன், ராஜ யோக வகுப்புக்கள் என்பன உதவின. எம்மை அற வழி நிற்கவும் ஆன்மீகப் பயிற்சி பெறவும் இந்நிறுவனங்கள் பரவலாக நாவலப்பிட்டியில் அமைய இடம் தந்த மகான் முத்தையா மாஸ்டராவார். இன்று இவை பெரு விருட்சங்களாக வளர்ந்து தளைத்தோங்கி யிருப்பதற்கு அன்று ஆழமாக வித்திட்டவர் எமது குருநாதர் முத்தையா மாஸ்டராவார்.

அமைதியான பேச்சு, அடக்கமான செயற்பாடு, வெண்ணிற கதர் ஆடை, நெற்றி நிறைய விபூதி, எப்போதும் ஒரு புன்னகையுடன் கூடிய மலர்ந்த முகம் இதுவே முத்தையா மாஸ்டரது தோற்றமாகும். ஹர ஹர நமப் பார்பதிபதயே என அவர் ஓத ஹர ஹர மகா தேவா என நாம் முழங்க மும்முறை அவர் இதனைக் கூற வைத்து கூட்டுப் பிரார்த்தனையை ஆரம்பித்து நிறைவுசெய்யும் அழகே தனி. முத்தையா மாஸ்டர் நாவலப்பிட்டி கதிரேஷன் கனிஷ்ட வித்தியாலயத்தில் அதிபராய் இருந்தார். அது அப்போது ஓர் ஆண்கள் பாடசாலை. எனது சகோதரர் மகேந்திரன்,ஜெயக்குமார் இருவரும் அங்கு ஆரம்பக் கல்வியைக் கற்றனர். அது ஓர் அரச பாடசாலை என்பதை விட ஓர் அழகிய குருகுலம் என்றே கூறலாம். அந்தக் காரியாலயத்தில் பக்திப் பரவசமாய் முத்தையா மாஸ்டர் அமர்ந்திருப்பார். பிள்ளைகளுக்கு இவர் அன்பையே போதித்தார். மாணவரும் பணிந்து பணிவிடை ஆற்றினர். கதிரேசன் கல்லூரி கல்வியிலும் ஒழுக்கத்திலும் பக்தியிலும் முறையாக வளர்ந்தது. இதன் பயனாக அங்கு கல்வி கற்றோர் சர்வதேச ரீதியில் உயர்ந்தவராய் மட்டுமன்றி நல்லவர்களாய் வாழ்ந்து வருகின்றனர். இன்றும் தமது குருநாதரை மனத்திலிருத்தி வழிபடுகின்றனர்.

அந்தக்காலத்தில் பெண்கள் பாடசாலை வேறாகவும் ஆண்கள் பாடசாலை வேறாகவும் செயற்பட்டுக் கொண்டிருந்தது. உயர் வகுப்புகளுக்கு இறுக்கமான ஆசிரியர் பற்றாக்குறை காணப்பட்டது. அவ்வேளை மாஸ்டர் அரச பணியில் ஓய்வு பெற்றுச் சமூகப் பணியில் தம்மை முற்றுமுழுதாக ஆக்கியிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளை ஒரு பக்தரின் வீட்டில் மாணவருக்கு தமிழ் கற்றுத் தந்தார். இது எமக்குக் கிடைத்த பெரும் பாக்கியம். எமக்கு வேம்பாய் கசந்த இலக்கணப் பகுதியை தித்திக்கும் கற்கண்டாய் ஆக்கித் தந்த பெருமை அவரைச்சாரும். கோகிலா இந்த தமிழ் என்றாவது ஒரு நாள் உமக்கு சோறு போடும் என்பார். உண்மையிலேயே நான் ஆசிரியப் பணியேற்று இலங்கைக் கல்விக் கலைத்திட்டத்தில் தமிழ்ப்பாட நூலுக்கு எழுத்தாக்கக் குழுவில் ஒருவராகக் கடமையாற்ற கிடைத்த போது முத்தையா மாஸ்டரது தமிழ் தான் என்னை எழுத வைத்தது, எனக்கு சோறு போட்டது. அன்று உயர்தரம் முடித்து பல்கலைக் கழகம் சென்றபோது முதலில் அவர்களது ஆசியைப் பெற ஆத்மஜோதி நிலையத்திற்குச் சென்றேன். அவரது பெறா மகள் வத்சலா சிவானந்தன் என்னை அழைத்துச் சென்றார். அங்கு என்னை பல்கலைக் கழகத்தில் பதிவுசெய்வதற்கான முதற்கட்டணமான முந்நூற்றைம்பது ரூபாவை (அன்று அது மிகப் பெறுமதி மிக்க பணம்) எனக்குத் தந்து உற்சாகமூட்டி ஆசிவழங்கி அனுப்பியதை எண்ணும் பொழுது இன்று போல் என் நெஞ்சை நெகிழச் செய்கிறது. இன்று நான் முதுமாணிப் பட்டமும் பெற்று சமூக அந்தஸ்து பெற பிரதான காரணகர்த்தா முத்தையா மாஸ்டர் அவர்களேயாவர். மொழி என்பது மனிதனின் ஆளுமை. வளர்ந்த ஆளுமையுடன் பணிவையும் கைக்கொண்டால் வாழ்க்கையில் வெற்றி நிச்சயம். இந்த வெற்றி இறை பக்தியுடன் கூடியதாயிருந்தாலே நிரந்தரமாகும். அல்லாது போனால் நல்லதோர் வீணை செய்து நலம் கெடப் புழுதியில் எறிவதற்குச் சமன் என அன்று கூறியது இன்றும் பசுமரத்தாணி போல் பதிந்துள்ளது. இலக்கண சூத்திரங்கள் அவர் வாயில் ஒழுகும். சந்தி பிரித்து செய்யுள்களை விளங்கும் ஆற்றலே தனி. இதில் அவருக்கு நிகர் அவரே. டியூஷன் மாஸ்டர்கள் தாம் கற்ற கல்வியை போட்டி போட்டு உயர்ந்த விலையில் விற்கின்ற இக்காலத்தில் அன்று கட்டணமே அறவிடாது எம்மை தமிழ் மொழியில் கரைசேர்த்த பெருமை முத்தையா மாஸ்டரையே சாரும்.

அன்று மனித விழுமிய மேம்பாட்டிற்கான ஆன்மீகக் கல்வி நாவல்நகர் வாசிகளுக்கு தாராளமாகக் கிடைத்தது. தூய ஆன்மீக சிந்தனை எம் உயிரினுள் விதைக்கப்பட்டது. பல்லின சமூகமும் ஒற்றுமையாய் ஒருகுலமாய் வாழ்ந்து வந்தோம். யார் கண்பட்டதோ என்னவோ, 1983ஆம் ஆண்டு இனக்கலவரம் எம்மை சிதறடித்தது. எமது உயிர் நாடியான ஆத்மஜோதி அச்சகம் தீக்கிரையானது. நாவல் நகர் தமிழ் மக்கள் முதன் முறையாக இடம்பெயர்ந்தனர். மாஸ்டரும் யாழ்நகருக்கு குடிபெயர்ந்தார். நாங்கள் கண்டி நகர் நோக்கி நகர்ந்தோம். இன்றும் எம் நெஞ்சை விட்டகலாத நம் குருநாதர் நா.முத்தையா அவர்கள் இட்டுச்சென்ற எச்சங்களாக ஆங்காங்கே என்றும் அவர் புகழ் பாடி அவர் வளர்த்த சைவ தர்மத்தை வளர்த்துக் கொண்டிருக்கின்றோம். **சைவமும் தமிழும் வளர்ந்தோங்க அரும்பாடுபட்ட எமது குருநாதர் புகழ் என்றும் இந்தப் பிரபஞ்சத்தில் என்றும் ஒளிவீட்டுப் பிரகாசிக்கும்.**

அவரது நூறாவது ஜனன தின நிகழ்விற்கு கனடா இந்துசமயப் பேரவை நடத்தும் நூற்றாண்டு விழாவில் வெளியிடப்படும் விழா மலரில் கட்டுரை எழுத கிடைத்தமைக்கு எமது குடும்பம் சார்ந்த மகிழ்ச்சியை அகமகிழ தெரிவிக்கின்றேன். இதற்கு என்றும் நான் கடமைப்பட்டுள்ளேன். வாழ்க வளமுடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாரைக் காண்பதுவும் நன்றே

**இராமநாதன்**

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே, நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே'' என்றார் ஔவைப்பிராட்டி. அந்த வகையில் எங்கள் ஆத்மஜோதி வள்ளல் நா. முத்தையா மாஸ்டர் அவர்களின் குணாதிசயங்களை மட்டும் ஒருமுறை மீள நினைப்பது சாலவும் பொருந்தும்.

அப்போழுது நான் கண்டி இலங்கை வங்கியில் கடமை ஆற்றிய காலம். திருக்கேதீச்சர ஆலயப் புனருத்தாரண நிதிக்கு பணம் சேர்ப்பதற்காக நாடகங்கள் வைத்து அதன் மூலம் பணம் திரட்டி புனருத்தாரண சபைக்கு அனுப்பி வைப்போம். கண்டியில் நாடகம் வைத்த பிறகு நாவலப்பிட்டியில் வைக்க எண்ணி விடுமுறை நாட்களில் அங்கு சில நண்பர்களோடு போய் கடைகளில் ஏறி, இறங்கி டிக்கற் விற்பனை மூலம் பணம் சேர்த்தோம். அப்போ எமக்கு அறிமுகமான ஒருவர் சொன்னார், "நீங்கள் இங்குள்ள தேயிலைத் தோட்ட முதலாளிகளிடம் போய் அவர்களிடம் உதவி கேட்டால் அவர்கள் தொகை யாகத் தருவார்கள். அதற்கு நீங்கள் உங்களோடு முத்தையா மாஸ்டரை கூட்டிப்போனால் அவரது முகத்தைக் கண்டு அவரது முகத்துக்காக தராதவர் களும் அள்ளித் தருவார்கள்'' என்று. அதன்படி நாங்களும் பால் தொட்டு பால் கறக்கலாம் என்று முத்தையா மாஸ்டரை அணுகி எம்மோடு தேயிலைத் தோட்டங்களுக்கு வரும்படி கேட்டோம். அவரும் மனமுவந்து எங்களோடு வந்து பல தோட்ட முதலாளிமாரைக் கண்டு ஒரு தொகைப் பணம் சேர்த்தோம். சேர்த்த இப்பணத்தை புனருத்தான சபைக்கு அனுப்பினோம். அதன் தலைவர் சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் எங்கள் முயற்சியை பெரிதும் பாராட்டிக் கடிதம் எழுதினார்.

அந்த விடுமுறை நாட்களில் முத்தையா மாஸ்டரின் ஆத்மஜோதி நிலையத்தில் இரவைக் கழிப்போம். அப்போதுதான் மாஸ்டர் அவர்களின் தினசரி வாழ்க்கை முறையைக் காணமுடிந்தது. அந்தக் குளிர் நாட்டில் அதிகாலை 4 மணிக்கு எழுந்து ஸ்நானம் செய்வார். ஏன் மாஸ்டர் இந்தக் குளிரில் எழும்பி குளிக்கிறீர்கள் என்றால், ''இதைத் தவறவிட்டால் பிறகு எனக்கு நேரம் வராது" என்பார். பின்னர் சுவாமி அறைபோய் அரை மணிநேரம் பிராத்தனையில் ஈடுபடுவார். நாங்களும் விழித்து எழும்பிவிட்டால் தானே சமையல் அறைக்கு போய் சுடச்சுட கோப்பி தயாரித்துக் கொண்டு வந்து தருவார். பிறகு தன் கடமைகளுக்குச் செல்வார். சனி, ஞாயிறு தினங்களில் வீட்டில் இருக்கமாட்டார். எங்கெல்லாம் இருந்தோ அழைப்புவரும். அங்கெல்லாம் மனம் சலிக்காமல் உடல் சலிக்காமல் போய் வருவார் மலையகத்தில் வாழ்ந்த தமிழ்த் தோட்டத் தொழிலாளர் களிடையே இவருடைய போதனையும் சாதனையும் சமய உணர்ச்சியையும் சமய எழுச்சியையும் ஏற்படுத் தியது. அங்கு வாழ்ந்த சிங்கள மக்களும் முத்தையா மாஸ்டர் என்றால் "ஏயா சாது வாகே" என்பார்கள். இவருடைய பெயருக்கு முன்னால் இருக்கும் நாவன்னா என்பது நாவலப்பிட்டடி முத்தையா என்பதை குறிக்கும் போல. இவருடைய வாழ்வின் ஒரே நோக்கம் தொண்டு, அதுவும் சமயத் தொண்டு.

"உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்"

என்ற குறளுக்கு எடுத்துகாட்டு இவரே.

அன்னார் அமரத்துவம் அடைந்தபோது நான் பாடிய சில இரங்கற் பாக்கள் நினைவுக்கு வருகின்றன.

"நாவன்னா முத்தையா நம்மைவிட்டு ஏகினால்
ஆஎன்னா தாரிருப்பார் ஐயையோ – ஓவென்னும்
ஓசை முழக்கம் உலகெல்லாம் கேட்குதே
வீசுபுகழ் தா ரான் விறல்"

"தொண்டின் அழகும் தூவெள்ளை நீற்றழகும்
அண்டினரை ஆதரிக்கும் ஆரழகும் – மண்டுபுகழ்
பூத்தஅழகும் பொன்னழகும் முத்தையற்கு
ஏத்த அழகென்றே இசை"

"வெள்ளை நிறவேட்டி விளங்குதிரு வெண்ணீறு
கள்ளமிலா உள்ளம் கனிவார்த்தை – தெள்ளுதமிழ்
நாளும் வளர்க்கும் நாவன்னா முத்தையன்
வாழும் புகழென்றே வழுத்து"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத்தமிழ்ச் சூழலைப் பேணுதற்கு ஆத்மஜோதி அவர்களின் வழிகாட்டுதல்

பால. சிவகடாட்சம் Ph.D (London)

நல்லூர் முருகன் திருவிழாக்காலத்தில் தேவாரத் திருமுறைகளைப் பாடிக்கொண்டு யாழ் மாவட்டத்தின் பல்வேறு கிராமப்புறங்களில் இருந்தும் அடியார் கூட்டம் நல்லூரை நோக்கிப் பாதயாத்திரை செய்யும் வழக்கத்தை ஏற்படுத்தியவர்களுள் ஆத்மஜோதி முத்தையா அவர்கள் பிரதானமானவர். தனது பிறந்த ஊரான ஏழாலையில் இருந்து ஒருசில அடியார்களோடு பாத யாத்திரையை ஆரம்பித்து வைப்பார் முத்தையா அவர்கள். வழிநெடுக அந்த அடியார் கூட்டத்தைக்கண்டு பரவசமுற்று அக்கூட்டத்துடன் தம்மையும் இணைத்துக்கொள்வோர் பலர். தூர இடங்களில் இருந்து வரும் அடியார்களின் களைப்பையும் தாகத்தையும் போக்க ஆங்காங்கே தண்ணீர்ப்பந்தல்கள் அமைத்து மோர்த்தண்ணீரும் சர்க்கரைத்தண்ணீரும் வழங்கி உபசரித்து இளைப்பாற்றி அனுப்பும் வழக்கம் சைவப்பெருமக்களிடையே நெடுங்காலமாக இருந்துவந்துள்ளது என்பதை நம்மவருள் பலரும் அனுபவபூர்வமாகக் கண்டறிந்திருப்போம்.

எங்கெல்லாம் சைவமும் தமிழும் குன்றும் நிலை காணப்படுகின்றதோ அங்கெல்லாம் முந்திச் செயல்பட்டவர் ஆத்மஜோதி அவர்கள். சைவத்தினதும் தமிழினதும் மறுமலர்ச்சியை வேண்டி முத்தையா அவர்கள் இந்தோனேசியாவில் ஆற்றிய பணி மகத்தானது. இற்றைக்குப் பலநூற்றாண்டுகளுக்கு முன்னர் இந்து மதத்தின் இருபெரும் கிளைகளான சைவமும், வைணவமும் ஓங்கிப் பரவியிருந்த நாடு இந்தோனேசியா. அந்தக்காலத்தின் நினைவுச்சின்னங்கள் இன்றும் இந்தோனேசியாவில் பரந்து கிடப்பதைக் காணமுடியும். இந்தோனேசியாவின் தீவுகளுள் ஒன்றான பாலித்தீவில் வாழும் மக்களுள் பெரும்பான்மையானோர் இந்துக்களாவர். தற்போது இந்தத் தீவில் வாழும் 42 இலட்சம் மக்கள் வாழ்வதாகவும் இவர்களுள் 83.5 வீதமானோர் இந்துக்கள் என்றும் சமீபத்தைய தரவுகள் அறியத்தருகின்றன. ஆத்மஜோதி முத்தையா அவர்கள் 1977 ஆம் ஆண்டில் இந்தோனேசியாவில் வாழ்ந்த சைவத்தமிழ் அன்பர்களின் அழைப்பை ஏற்று இந்தோனேசியாவுக்கு வருகை தந்தார். முதன் முறையாகச் சென்றபோது வடக்கு சுமாத்திராவின் தலைநகரான மெடான் என்னுமிடத்தில் 28 நாட்கள் தங்கியிருந்து ஆன்மீகப்பணியில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டார் ஆத்மஜோதி அவர்கள் பாலித் தீவின் இந்து வழிபாடுமுறைகளில் இருந்து சற்று வேறுபடும் மேடான் வாழ் இந்துக்களின் வழிபாட்டில் முருகன், சிவன், மாரிஅம்மன் ஆகியோர் முக்கியத்துவம் பெறுகின்றனர். இன்று 20 இலட்சம் மக்களுக்கு மேல் வாழும் மேடான் நகரில் 50 ஆயிரம் மக்கள் தமிழர்களாவர். 1977 இல் தாம் சந்திக்க நேரிட்ட மேடான் வாழ் தமிழ் மக்களைப்பற்றிய ஆத்மஜோதி முத்தையா அவர்களின் அவதானிப்புக்கள் இன்றைய கனடா வாழ் தமிழர்களுக்கும் பொருந்துவனவாகவே உள்ளன.

மேடான் நகரத்துத் தமிழர் பற்றி திரு. முத்தையா அவர்கள் எழுதும்போது "இங்கு வாழும் தமிழ் மக்களுள் 50 வயதுக்கு மேற்பட்டோர் தமிழில் பேச எழுத வாசிக்கக் கூடிய வல்லமையுள்ளவர்களாக இருக்கின்றார்கள். வாலிபர்களுக்குத் தமிழில் பேசினால் விளங்கக்கூடிய ஆற்றல் இருக்கின்றது. சிறார்களுக்குத் தமிழில் பேசவோ எழுதவோ வாசிக்கவோ தெரியாது. அவர்களிடம் உனது பெயர் என்ன என்று தமிழில் கேட்டால் தமது பெற்றோரைப் பார்ப்பார்கள். பெற்றோர் இந்தோனேசிய மொழியில் என் கேள்வியை மொழிபெயர்த்துக் கூறியபின் தமது பெயரைச் சொல்வார்கள்". என்று பதிவு செய்துள்ளார். இன்று புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர் இல்லங்களில் பெரும்பாலும் இதே நிலையைத்தான் காண்கின்றோம்.

தாய் மொழியாந் தமிழ் தெரியாதவன் தமிழனாக வாழமுடியாது என்கிறார் ஆத்மஜோதி அவர்கள். தேவாரங்களை மலாய் மொழியில் எழுதிப் பாடஞ்செய்யும் பழக்கத்தை மலாயாவில் கண்ட அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது தமிழ்ப்பண்பாட்டை வளர்க்க உதவப்போவதில்லை என்று உறுதியாகச் சொல்லுகின்றார். கனடா, இங்கிலாந்து போன்ற நாடுகளிலும்கூட ஒருசிலர் தமிழ்ப்பாடல்களை ஆங்கில வரிவடிவத்தில் எழுதிப்படிப்பதைக் காண்கின்றோம். இது மிகவும் தவறான ஒரு நடைமுறையாகும். இவ்வாறு செய்வதால் ஒருபொழுதும் தமிழ் உச்சரிப்பை மேம்படுத்த முடியாது என்பதை அனைவரும் உணரவேண்டும்.

தமிழை மறந்துவிட்ட இந்தோனேசியத் தமிழ் மக்களுக்கு முத்தையா அவர்கள் வழங்கிய அறிவுரைகள் இன்று புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களையும் அடையவேண்டியது அவசியம். பெற்றோர் வீட்டில் தமது பிள்ளைகளுடன் தமிழிலேயே பேசவேண்டும் என்பதை வலியுறுத்திய ஆத்மஜோதி அவர்கள் காலையில் தாம் வாழ்ந்துகொண்டிருக்கும் நாட்டின் மொழிப்பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகள் மாலையில் தமிழ்மொழியில் பாடங்களைக் கற்பிக்கும் பாடசாலைகளுக்கு செல்லலாம் என்றும் அதற்காகப் பல கல்வி நிலையங்கள் புதிதாக அமைக்கப்படல்வேண்டும் என்றும் எடுத்துரைத்தார். சொன்னதோடு நின்றுவிடாமல் சைவத் தமிழ்ப் பள்ளிக்கூடங்களை இந்தோனேசியாவில் நிறுவும் பெரும்பணியில் தாமே முன்னின்று வழிகாட்டி உதவினார். ஆத்மஜோதி திரு. முத்தையா அவர்களைப் போன்ற தமிழன்பர்கள் பலர் நாடுகள்தோறும் உருவாகினால் மட்டுமே இன்று தமிழ்மக்கள் புலம்பெயர்ந்துவாழும் நாடுகளில் தமிழையும் சைவத்தையும் நிலைபெறச் செய்யமுடியும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடமாடிய ஞானி ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள்

சு. சிவதாஸ், B.A

ஈழத்து தேவாரப் பாடல் பெற்ற திருத் தலங்களுள் ஒன்று திருக்கேதீஸ்வரம், மற்றையது திருக்கோணேஸ்வரம். திருக்கேதீஸ்வரம் சம்பந்தப் பெருமானாலும் சுந்தரமூர்த்தி சுவாமிகளாலும் சிறப்பித்துப் பாடப்பெற்றது. சம்பந்தப் பெருமான் 'விருது குன்றமா' என்ற பதிகத்தாலும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் 'நத்தார்படை ஞானன் பசு' என்ற பதிகத்தாலும் திருக்கேதீஸ்வர நாதனைப் பாடித் துதித்தார்கள். அவ்வாறான அருட்கடாட்சமுள்ள ஆலயத்திலே, நா.முத்தையா என்ற இளம் வாலிபன் அங்கு இடம்பெற்ற அந்தர் யோகத்திலே பங்கு கொண்டு தன்னை ஆன்மீக வழிபாட்டில் ஈடுபடுத் தினார். அந்த அந்தர் யோக வழிபாட்டில் கலந்துகொள்வதற்காக இந்தியாவிலிருந்தும் பல மகான்கள் வந்திருந்தார்கள். தமிழகத்து பித்துக்குளி முருகதாசும் அந்தர்யோகத்தில் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது. அந்தர்யோக முடிவிலே அதில் பங்குபற்றியவர்கள், தாம் ஏதாவது ஒன்றைப் பின் பற்றுவதாக எல்லோர் முன்பும் சபதம் எடுக்க வேண்டும். நா.முத்தையா என்ற இளம் வாலிபர் தாம் திருமணம் செய்யாது நித்திய பிரமச்சாரியாக இருந்து ஆன்மீக வழிபாட்டில் இறங்குவதாகச் சபதம் எடுத்தார். அன்று ஆரம்பித்த அந்த உத்வேகம் இறுதி மூச்சுவரை தொடர்ச்சியாக இயங்கிக்கொண்டே இருந்தது. அவர் தொடங்கிய ஆன்மீகப் பயணம், பல பல மகான் களைத் தரிசித்தலாலும் சொந்த ஆன்மீக முயற்சி யாலும் முற்றுப்பெற்றது. அந்த ஆன்மீக விழுச்செல்வத்தை மக்களுக்கு வாரி வழங்கிக் கொண்டு இருந்தார். சிலர், இருந்த இடத்திலேயெ இருந்துகொண்டு மக்களைத் தம்பால் ஈர்த்தார்கள். அதற்கு உதாரணமாக பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளைச் சொல்லலாம், சிலர் நடமாடித் திரிந்தும், எழுத்துக்கள், உரையாடல்கள் மூலமாகவும் மக்களை கவர்ந்தார்கள். இதற்கு உதாரணமாக சுவாமி விவேகானந்தரைச் சொல்லலாம்.

நித்திய பிரமச்சாரியாக இருந்து ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் அடைந்த ஆன்மீக நிலையும் அவர் மக்கள்பால் அன்பு கொண்டு வாரி வழங்கிய அருளும், அறிவும் இன்னது தான் இவ்வளவு தான் என்று சொல்லமுடியாத அளவுக்கு மகாமேரு மலை போன்று உயர்ந்தது.

நாவலப்பிட்டியில் ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கின்ற காலத்தில், கொழும்பில் இல்லற ஞானி இராமச்சந்திரா அவர்கள், தமது இல்லத்தில் நடாத்திய அரவிந்த மகானின் குருபூசையில் கலந்து கொள்ளத் திருவருள் கைகூட்டி யது. மாலையே குருபூசை நிகழ்ச்சியாயிருந்தும் மதியம் அளவிலே ஆசிரியர் முத்தையா அவர்கள், அந்த இல்லத்துக்கு போய்விட்டார். இராமச்சந்திராவும் இவருமாக உரையாடிக்கொண்டிருக்கையில், ஆசிரியர் முத்தையா அவர்கள் பத்திரிகை ஒன்றில் எழுதிய கட்டுரை பற்றிய பேச்சு எழுந்தது. நாவலர் பெருமானின் கருத்துக்களைக் காவி வந்த 'இந்து சாதனம்' என்ற பத்திரிகை போல், மக்களுக்கு ஆன்மீகக் கல்வி வழங்க, ஒரு பத்திரிகையின் அவசியம் பற்றி ஆசிரியர் முத்தையா அந்தக் கட்டுரையில் எழுதியிருந்தார். அதனை சுட்டிக்காட்டிய இராமச்சந்திரா அவர்கள், 'ஆத்மஜோதி' என்ற பெயரிலே ஒரு மாத சஞ்சிகையை வெளியிடும் படியாகவும், அதற்கு தாம் உதவி வழங்குவதாகவும் ஆசிரியர் முத்தையாவுக்கு ஆலோசனை கூறினார். அதற்கமைய 1948ஆம் ஆண்டே சஞ்சிகை வெளி யிடப்பட்டது. அதற்கு ஆசிரிய தலையங்கத்தை க. இராமச்சந்திரா அவர்கள் வழங்கி வந்தார்கள். இவ்வாறாக உருப்பெற்று இயங்கி வந்த ஆத்மஜோதி சஞ்சிகை மூலம் ஈழத்து மக்களுக்கு ஆன்மீக அறிவை விதைக்கத் தொடங்கினார். முத்தையா ஆசிரியர், கூட்டுப்பிரார்த்தனை, பாத யாத்திரை, அந்தர் யோகம், சத்சங்கம் என்பனவற்றையும் கோயில்கள், பாடசாலைகள் இல்லங்களில் நடத்தி மக்களை ஆன்மீகப் பாதையில் முன்னேற ஊக்கமளித்தார்.

சிவயோக சுவாமிகள் மறைந்த 1964ஆம் ஆண்டே, நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்திலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபாதையாகத் தொடங்கும் பாத யாத்திரை நல்லூர் தேர்த் திருவிழாவிற்கு வந்துசேரக்கூடியதாக அமைக்கப்பெற்றது. தேர்த் திருவிழாவிற்கு முதன் நாள் சப்பரத் திருவிழாவன்று காலையில் நயினையிலிருந்து புறப்படும் பாத யாத்திரை ஈழத்து ஞானிகளையும், இந்திய ஞானிகளையும் உள்ளடக்கி இருக்கும். போர்ச் சூழல் காரணமாக சில வருடங்கள் இடை நிறுத்தப்பட்ட அந்த யாத்திரை தற்போது முன்னைய முறையிலே தொடர்ந்து நடத்தப்படுகிறது. இறைவன் நாமம் எதுவாகவும் இருக்கலாம் அது சிவன் நாமமாயிருக்கலாம், அல்லது சக்தி நாமமா யிருக்கலாம், அன்றி விநாயகர், முருகன், வயிரவர், நாராயணன் நாமமாக இருக்கலாம். மக்களை நாமத்தினூடாகத் தூய்மை யாக்கி, மக்களைக் பீடித்துள்ள துன்பதுயரங்களை போக்கி சந்தோஷமாக வாழச் செய்வதே அவரது நோக்கமாயிருந்தது. "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற கோட்பாடே அவரது நோக்கமாயிருந்தது.

1983 யூலைக் கலவரத்தில் நாவலப்பிட்டியில் அமைந்திருந்த ஆத்மஜோதி நிலையமும் ஆத்மஜோதி அச்சுக்கூடமும் தீக்கிரையாக்கப்பட்டன. அரும் பெரும் சமய நூல்கள் அடங்கிய நூலகமும் கருகியது. அத்துயர சம்பவத்தை தொடர்ந்து ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள், யாழ்ப்பாணத்தில் சாவகச்சேரிப் பகுதியில் இருந்து ஆத்மஜோதி சஞ்சிகை வெளியிடுவதைத் தவிர்ந்த ஏனைய பணிகளில் மக்களை ஈடுபடுத்தினார். இந்தோனேசி யாவிலும் இருவருடங்கள் இருந்து சமயப் பணிகளைச் செய்தார். மலேசியா, சிங்கப்பூர், இந்தியா ஆகிய நாடுகளுக்கும் சென்று சமயப்பணி புரிந்தார். 1994 யூலை மாதம் கனடாவில் நடைபெற்ற சைவ சித்தாந்த மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக கனடா வந்த ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் ஈழத்தில் 1992ல் நிறுவிய இந்து சமயப் பேரவையைப் போன்று கனடாவிலும் ஸ்தாபித்தார். இது ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை என்ற பெயரில் இயங்கி வருகிறது. இதே காலப்பகுதியில் கனடா மொன்றியலிலும் சுவாமி அவர்கள் அந்தர் யோக வகுப்புக்களை நடாத்தி வந்தார். அது மக்கள் மயப்படுத்தப்பட்டு ஆத்மஜோதி அந்தர்யோக சபை என அழைக்கப் பட்டது. பின்னர் ஆத்மஜோதி அந்தர் யோகக்கல்வி நிலையம் எனப்பெயர் மாற்றப்பட்டது. இறுதியாக 'ஆத்மஜோதி தமிழர் இணையம்' என்ற பெயரிலே வேரூன்றி நிற்கிறது. நாடு திரும்பிய முத்தையா சுவாமிகள் மீண்டும் 1995 இல் கனடா வந்தார். சமயப் பணிகளைத் தொடர்ந்து செய்யும் வேளையிலே கனடா மொன்றியலிலேயே தனது உடலை நீக்கிவிட்டு விதேக முக்தி அடைந்தார். அவரது உடலுக்குரிய கிரியைகள் ரொறன்ரோவிலே செய்யப்பட்டு, அவரது உடல் இங்கேயே அக்கினிப் பிரவேசத்திற்கு உட்படுத்தப்பட்டது. ஈழத்திலே பிறந்து கனடாவிலே முக்தி அடைந்த காரணத்தினாலோ என்னவோ கனடாவில் அவர் விதைத்த பயிர்கள் வேரூன்றி தழைக்கின்றன. 1994இல் நடந்த முதல் வருகை யிலேயே ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை யூலை 30ம் திகதி ஒரு பெரிய பாராட்டு விழாவை அவருக்கு எடுத்தது. ஐந்து மணித்தியாலங்கள் வரை பத்மாசனத்தில் இருந்து அருள் பாலித்த முத்தையா சுவாமிகள் சைவத் தமிழ் மக்கள் சமயப் பாரம் பரியங்களை பின்பற்றி மேலோங்க வேண்டுமென ஆசி கூறினார். அடுத்த வருடம் 1995இல் கனடா வந்து மக்களின் ஆன்மீக எழுச்சிகளைக் கண்ட அவர் மனமகிழ்ந்தார். அவரது முன்னிலையிலேயே அவர் கனடாவில் எழுதிய 'தரிசனம்' என்ற நூலும், கவிஞர் கந்தவனம் ஐயா அவர்கள் எழுதிய 'முத்தான தொண்டர்' என்ற நூலும் இந்து சமயப் பேரவையால் வெளியீடு செய்யப்பட்டன. 'முத்தான தொண்டர்' என்ற நூல் ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளின் பணிகள் பற்றிய ஒரு நூலாகும். அவரது பணிகள் அதில் இரத்தினச் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் இங்குள்ள மக்களின் ஈடுபாட்டை உணர்ந்த சுவாமிகள் "நான் இதுவரை எனது தலையிலே சுமந்து வந்த பாரத்தை இப்பொழுது இங்கே இறக்கி வைத்துவிட்டேன் என்றும் தனக்கு இப்பொழுது மனம் ஓய்வடைந்து சாந்தி ஏற்படுவதாகவும்" சபையிலே கூறினார். இவ்வாறு கூறிவிட்டு மொன்றியல் சென்று பணிகளைச் செய்துவரும் வேளையில், சாட்டுக்காக வந்த தொய்வு நோய் காரணமாக உடலை நீக்கிவிட்டு பிரிந்து சென்றார். யோகிகள், ஞானிகளின் கூற்றுப்படி, அவர்கள் உடலோடு இருந்து செய்யும் பணிகளின் பன் மடங்கு பணியை உடலை நீக்கிவிட்டு சூக்குமத்தில் இருந்து செய்து கொண்டிருப்பார்கள். அது தான் உண்மை என்பது இங்கு கனடாவில் கண்கூடாகத் தெரிகிறது. ஒன்ராறியோவில் இந்து சமயப் பேரவை ஆரம்பிக்கப்படுவதற்கு மூல காரண மாயிருந்தவர் தொழிலதிபராய் இருந்த சிவ. முத்துலிங்கம் என்பவர் விமான நிலையத்தில் வைத்து சுவாமிகளிடம் பாத தரிசனம் பெற்றபொழுது சுவாமியின் பாதத்தில் பரிசம் காரணமாக ஒருவித சமாதி அனுபவத்தைப் பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல மணித்தி யாலங்கள் நீடித்த அந்த நிலை குருவினால் சீடனுக்குக் கொடுக்கப்பட்ட சக்தியாகும். பின்னர் சிவ முத்துலிங்கத்துக்கு மடல் வரையும்போது தான் கிடைத்தற்கரிய முத்து ஒன்றை கனடாவில் கண்டுகொண்டதாகவும் அது தான் செய்த தவப்பயன் என்றும் முத்தையா சுவாமிகள் குறிப்பிட்டிருக்கிறார்.

ஒரு ஞானியின் நிலையை நாங்கள் அறிவதற்கு காரணமாய் இருப்பது அவர் விட்டுச்சென்ற ஆன்மீகப் பணிகளின் வளர்ச்சி, 500 கிலோ மீற்றருக்கு இடைப்பட்ட கனடாவின் நகரங்களாகிய ரொறன் ரோவிலும் மொன்றியலிலும் இடம்பெறும் ஆத்மீக பணிகள் அளவிட முடியாததாய் உள்ளன. ரொறன்ரோவிலுள்ள இந்து சமயப் பேரவையின் பணிகளும் அதனுடைய நல்ல தாக்கத்தையும் நாங்கள் பார்க்கும்போது முதலாவதாகக் காலாண்டுக்கு ஒருமுறை வெளியாகும் ஆத்மஜோதி சஞ்சிகையைச் சொல்லலாம். மிகவும் தரமான கட்டுரைகளை தாங்கி வருகிறது. அதுவும் இலவசமாக விநியோகிக்கப்படுகிறது. காசுக்கு விற்பனையாகும் போது, பலர் அதனை வாங்கி வாசிக்க விரும்ப மாட்டார்கள். இந்த சஞ்சிகை கனடாவில் சைவத் தமிழர் வாழும் இடங்களுக்கு விநியோகிக்கப் படுகிறது. இதனூடாகவும் குறிப்பிட்ட பிற நாட்டில் வசிக்கும் சில பெரியவர்களுக்கும் அனுப்பி வைக்கப் படுகிறது. இலங்கை,இந்தியப் பெரியவர்களின் கட்டுரைகளும் கனடாவில் வசிக்கும் அன்பர்களின் கட்டுரைகளும் இடம்பெறுகின்றன. மறைந்த மகான் களின் முன் பிரசுரமான கட்டுரைகளும் வெளிவரு கின்றன. இந்த ஞான தானமே இந்தப் பேரவையின் முதன்மையான பணியாகப் போற்றப்பட வேண்டியது ஏனென்றால் பலருக்குப் பயன்தரக்கூடிய ஒன்று இது. பதினொரு வருடங்களாக பல கோயில்களில் செயற்பட்டுவந்த திருமுறை முற்றோதல் 2010ம் ஆண்டிலிருந்து பேரவைக்குச் சொந்தமான 'ஆத்மஜோதி இல்லம்' என்ற ஆச்சிரமத்தில் இடம்பெறுகிறது. இந்த ஆத்மஜோதி இல்லத்தில் திருமுறைச் செல்வர் சிவ முத்துலிங்கம் நிரந்தர வாரியாக இருந்து வருடாவருடம் பன்னிரு திருமுறை முற்றோதல்,அருணகிரிநாதர் அருளிச்செய்த திருப்புகழ் முதலிய ஆறு நூல்களின் முற்றோதல், சிவயோக சுவாமிகளின் நற்சிந்தனை முற்றோதல், தாயுமான சுவாமிகளின் பாடல் முற்றோதல் போன்ற இன்னும் பல முற்றோதல், சமயகுரவர் நால்வரின் குருபூசைகளோடு சேக்கிழார், அருணகிரிநாதர், திருமூலர் ஆகிய சைவப் பெரியார்களின் குருபூசை இந்திய மற்றும் ஈழ ஞானிகளான ஸ்ரீ ரமண மகரிஷி, சிவயோகர் சுவாமி, ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள், குடைச்சுவாமிகள் போன்ற பல ஞானிகளின் குருபூசை என்பன அந்தந்தத் தினத்திலே இடம்பெறுகின்றன. முற்றோதல்களும் குருபூசைகளும் சிவலிங்க அபிடேக பூசையோடு இடம்பெறுதல், ரொறன்ரோவில் வாழும் சைவ அடியார்களுக்கு ஆன்மீக சாதனமாகத் திகழ்கிறது. நாம் அங்கு மிங்குமாக கேள்விப்பட்ட சமய ஸ்தோத்திர நூல்கள் எல்லாம் அடியார்களின் கரங்களிலே தவழ்கின்றன. இந்தப் படிப்பும் குருபூசைகளும் சைவ அடியார்களின் ஆன்மீக வளர்ச்சிக்கு பெரிதும் பங்களிக்கின்றன. ஒவ்வொரு வருடமும் பன்னிரு திருமுறை முற்றோதல் பூர்த்தி விழாக்கள் ரொறன்ரோவில் உள்ள பெரிய மண்டபங்களில் இடம்பெறும். காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி இரவு 9.00 மணிக்குப் பின்னரே அவ்விழா முற்றுப்பெறும். சமய அறிவுப்போட்டி, திருமுறை மனனப்போட்டி, சமயப் பேச்சுப்போட்டி ஆகிய போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு வெற்றிக் கிண்ணங்களும் முதற் பரிசு பெறுபவர்களுக்கு பொற்கிழிகளும் வழங்கப்படும். பங்குபற்றிய எல்லோருக்கும் பரிசில்கள் வழங்கப்படும். இதன்மூலம், சைவசமய, தமிழ் விழிப்புணர்ச்சியை இளம் பிள்ளைகளின் மனதிலே ஏற்படுத்தும் முயற்சி இடம்பெறுகிறது. இந்தத் திருமுறை முற்றோதல் பூர்த்தி விழாவிற்கு இசை, நாடகம், சொற்பொழிவுகள், நடனம் என்பவற்றோடு ஒன்று அல்லது இரண்டு சமய நூல்கள் வெளியீடும் செய்யப்படுகிறது.

2008இல் கந்தபுராண படனம் ஆறு காண்டங்களும் முற்றுப்பெற்று விழா எடுக்கப்பட்டது. 2016 பிற்பகுதியில் இருந்து இன்றுவரை ஒவ்வொரு ஞாயிறுகளிலும் கந்தபுராண சத்சங்கம் முழு நேரமாக இடம்பெறுகிறது. ஒவ்வொரு பாடலும் பாடப்பட்டு, பாடலின் கருத்து விரித்துரைக்கப்படும். வினா எழுப்புபவர்களுக்கு விடை அளிக்கப்பட்டு சத்சங்க வடிவத்தில் இடம்பெற்று வருகிறது. முதல் மூன்று காண்டங்களும் முற்றுப்பெற்று நான்காவது யுத்த காண்டம் ஆரம்பித்துள்ளது. வருடத்தில் வரும் ஆறு நடேசர் அபிடேக நாட்களிலும்,ஒவ்வொரு மாதம் வரும் இரு பிரதோச விரத நாட்களிலும், சிவராத்திரி தினத்தன்றும், குடைச்சுவாமியின் குருபூசையன்றும், பங்குனி உத்தரத்தன்றும், திருவெம்பாவை பத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்களும் திருவாசகம் முற்றோதப்படும். ஆத்மஜோதி இல்லத்துக்கு வரும் அடியார்களுக்கு திருவாசகம் வாய்ப்பாடு போல் பாடமாக வருவதையும் நாங்கள் காணலாம். ஆத்மஜோதி இல்லத்துக்கு தற்கால ஞானியர்கள் வந்து ஆசி சொல்லி உரையாற்றுவதும் ஆன்மீக உயர்வுக்கு பெரிதும் உதவுகிறது. இந்த வரிசையில், 2010ஆம் ஆண்டிலிருந்து இல்லத்துக்கு வருகை தந்த ஞானியர்களில், சுவிஸ் நாட்டில் இருந்து வருகை தந்த பூரண சற்குரு சுவாமிகள், ஹவாய் போதி நாத வேலன் சுவாமிகள், ரிஷிகேசத்து நித்தியானந்தா சுவாமிகள் (பிறந்த இடம் அக்கரைப் பற்று, இலங்கை), கேரளாவைச் சேர்ந்த குருஜீ அவர்கள் மற்றும் ரிஷி தொண்டுநாதன், ஆறுதிருமுருகன் போன்றோர் உள்ளடங்குவர். ஆத்மஜோதி இல்லத்திலே அமைந்திருக்கும் நூலகத்திலிருந்து பயன்பெறுவோரும் உளர். இது இவ்வாறு இருக்க , ரொறன்ரோவிலிருந்து 500 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள மொன்றியல் நகரில் ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளால் ஏற்படுத்தப் பட்ட 'ஆத்மஜோதி கல்வி இணையம்' மொன்றியல் வாழ் சைவத் தமிழ் மக்களிடையே பரந்த அளவிலான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. சசி கிருஷணா, உதயகுமார் இவர்களை நெறிப் படுத்தும் திரு.விஸ்வநாத பிள்ளை, சசி கிருஷ்ணா விற்கு முன்னோடியாக இருந்த குலம் அண்ணர், இவர்களோடு இன்னும் பலர் ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளின் ஆசிகளைப் பெற்று இன்னும் பல சைவப் பெருமக்களின் உதவியோடு நடாத்தி வரும் ஆத்மஜோதி கல்வி இணையத்தின் பங்களிப்பு சொல்லும் தரமன்று. இணையத்தில் இணைந்து கல்வி கற்கும் சிறார்களுக்கு அந்தர்யோக வகுப்புக்களும், சைவம், தமிழ் வகுப்புக்களும், நடனம் போன்ற இசை வகுப்புக்களும் அளிக்கப்பட்டு வருகிறது. நூற்றுக் கணக்கான மாணவர்களை சமய, கலாச்சார நெறிமுறையில் வாழச்செய்வதோடு மட்டுமல்லாமல், அவர்கள் பாடசாலைக் கல்வியில் உயர்வடையச் செய்யும் இணையத்தின் இம்முயற்சி ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் நாவலப்பிட்டியில் செய்த முயற்சிகளோடு ஒட்டிப்போகிறது. முத்தையா சுவாமிகளின் இரு கண் போன்று விளங்கும் ஒன்ராறியோ இந்துப் பேரவையும் ஆத்மஜோதி கல்வி இணையமும் அந்தந்த நகரத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றன.

இவ்வகையான மாற்றங்களை ஈழத்திலும் பிற நாடுகளிலும் ஏற்படுத்திவரும் முத்தையா சுவாமிகளது திருவருட் சக்தி இவ்வளவு அசாதாரணமாக இருப்பது அவர் பெற்ற ஆன்மீக உயர்ச்சியேயாகும். 'மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம் பழித்தது ஒழித்து விடின்' என்பது தெய்வப் புலவரின் குறளால், பெரி யோர்களால் பாவம் என்று சொல்லப்பட்ட காவியங்களை விலக்கி நன்னெறி நடப்பாராயின், அவர்கள் மொட்டையடித்து அல்லது தாடி வளர்த்து சந்நியாசிகளாக வேண்டிய அவசியம் இல்லை என்பது கருத்து. இந்த இலக்கணத்துக்கு அமை வாகவே வாழ்ந்தவர் தான் ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள். இவர் தமது வாலிபப் பருவத்திலிருந்தே பெரும் ஞானிகளை தரிசித்து, பரிசித்து, சம்பாஷித்துப் பலம் பெற்றவர். நாவலப்பிட்டியில் வாலிப ஆசிரியராக இருந்தபோதே திருவண்ணாமலைக்குச் சென்று பகவான் ரமண மகரஷியின் அருட் கண்ணால் நயன தீட்சைபெற்று, ஆழ்நிலைத் தியானத்தில் லயித்தவர். அது மட்டுமல்லாமல், ரமண பகவான் 1950ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14ஆம் திகதி மறையும் நேரத்தில் வானத்தில் தோன்றிய வால்வெள்ளி போன்ற ஒளியை நேரே தமது கண் களால் பார்த்தவர். அந்த நேரத்திலே ரமணாச்சிரமத் திலே இருந்த ஈழத்துப் பெரியார்களில் இவரும் ஒருவர். எழுந்த ஒளி தெற்குக் கோபுர உச்சியுள் சென்று மறைந்தது என்பர். கனடாவில் சிவ முத்துலிங்கம் அவர்கள் 'நீங்கள் வியந்து கூறும் ஞானிகள் தரிசனம் பற்றி ஒரு நூல் ஆக்கித்தர முடியாதா' என்று கேட்டபோது பத்து நாட்களில் 10 ஞானியரிடம் பெற்ற தரிசன அநுபவங்களை 'தரிசனம்' எனும் நூலாக ஆக்கித்தந்தார். அந்த நூல் 1995ஆம் ஆண்டு அவர் முன்னிலையிலேயே வெளியிடப் பட்டது. எது வித குறிப்புக்களும் கையில் இல்லாது மனத்தில் எழுந்த வேகத்தில் எழுதிய நூலே தரிசனம் எனும் நூலாகும். முதலாவது கட்டுரை ரமண பகவான் பற்றியதேயாகும். அக்கட்டுரையில் பகவான் திருக்கண்ணோக்கம் செய்து ஆழ்நிலை தியானத்திற்கு உட்படுத்திய காரணத்தால், அவர் தனது மானச குரு என்று எழுதியிருக்கிறார். பகவான் அரவிந்தர், அன்னை மீரா, சுத்தானந்தர், சிவானந்தர், அன்னை கிருஷ்ணாபாய், ஞானானந்தகிரி யோகிராம் சுரத்குமார், பித்துக்குளி முருகதாஸ், அவதார புருஷராகிய பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா போன்ற நூற்றுக்கணக்கான ஞானிகளை இந்தியாவில் தரிசித்தார் முத்தையா சுவாமிகள். ஈழத்தில் சந்தித்த ஏராளம் ஞானிகளில் சிவயோகர் சுவாமி, சித்தானைக்குட்டிச் சுவாமி, செல்வச்சந்நிதி முருகுப் பிள்ளை (கடவுள் சுவாமி)சுவாமி, செல்வச்சந்நிதியில் இருந்த ஜேர்மன் சுவாமியாகிய கௌரிபாலா சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியோர் அடங்குவர். ஞானியர் தரிசனம் பற்றி நூற்றுக்கணக்கான கட்டுரைகள் எழுதப்பட்டு ஆத்மஜோதி என்ற தனது சஞ்சிகையில் காலா காலம் பிரசுரித்தார். 'முப்பெரும் சித்தர்கள்', 'ஈழத்துச் சித்தர்கள்', 'தரிசனம்', 'என்னை எனக்கறிவித்த எங்கள் குருநாதன்', 'யோகி ராம் சுரத்குமார்', 'இல்லறத் துறவி இராமச்சந்திரா' போன்ற ஒன்ராறியோ இந்து சமயப் பேரவையின் வெளியீடுகள் அவர் அனுபவித்த ஞானியர் தரிசனம் பற்றி எடுத்தியம்பிய நூல்களாகும்.

ஞானியர்கள் பற்றிய அவர் எழுதிய நூல்களை நாம் வாசிக்கும்போது எமக்கு இருள் நீங்குகிறது. உதாரணத்திற்கு முத்தையா சுவாமிகள் எழுதிய 'யோகி ராம் சுரத்குமார்' என்ற நூலை நோக்குவோம். அதிலே வரும் வரிகளைக் கீழே தருகிறேன்.

"பரிபூரணம் உணர்ந்த ஞானிகளை வழிபட, புணர்ந்த பாவமெல்லாம் பஞ்சாய்ப் பறந்துபோகும், கோடி கோடி நன்மைகள் உண்டாகும்' என்ற அருட்பாடலில் உள்ள கூற்றை யோகிராம் சுரத்குமார் நிரூபித்துள்ளார்.

"எவர் தம் பொருளை இரவிலும் பகலிலும் பிறர் அறியாத வகையில் தான தருமம் செய்கிறார் களோ அவர்களுக்கு இறையருள் கிடைப்பது உறுதி, மறுமையில் அவர்களுக்கு எந்தவொரு பயமும் இல்லை, அவர்கள் துக்கப்படமாட்டார்கள்".

"வாழ்க்கை வாழ்வதற்கு என்பதுபோல் வாழ்க்கை ஒரு நாள் சாவதற்குத்தான், நாம் ஏன் பிறந்தோம்? இனி பிறவாமல் இருப்பதற்கு இத் தத்துவத்தை எல்லாரும் உணர்ந்துகொண்டால் கடவுளையோ அவன் அடியார்களையோ வணங்காமல் இருக்க முடியாது"

மேலே தந்த மேற்கோள்கள் போல் முத்தையா சுவாமிகளுடைய ஒவ்வொரு சொல்லும் வாசகர்களை ஆன்மீக உயர்வுக்கு இட்டுச்செல்வனவாகும்.

எப்படி திருமுறைகளின் பாடல்களுக்கு எம்மை மேல்நிலைக்கு உயர்த்தும் சக்தி இருக்கிறதோ, அப்படியே முத்தையா சுவாமிகளின் சகல எழுத்துப் படைப்புக்களுக்கும் அபாரமான சக்தி உண்டு. வேறு எந்த நூல்களும் படியாமல், அவருடைய நூல்களைப் படிப்பதாலேயே ஆன்மீக உயர்வு அடையலாம். ஆன்மீகத்தை அனுபவித்து எழுதும் சொற்களுக்கு சக்தியுண்டு.

இந்தக் கட்டுரையில் மேலே ஆராயப்பட்ட விடயங்களைக் கொண்டு பார்க்கும்போது சுவாமி விவேகானந்தரைப் போல, சைவத்தமிழ் மக்களைக் தட்டியெழுப்ப எழுந்த அவதாரமே ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் என்று அடித்துக் கூறமுடியும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வெண்ணிற ஆடையிலோர் ஈழமகான்

வடிவேலு உமாகாந்தன்
இந்து சமயப் பேரவை ஆயுட்கால உறுப்பினர்

ஆத்மஜோதி சுவாமிகள் என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கபடும் நா முத்தையா சுவாமிகள் எந்த மக்களுக்குத் தேவை அதிகமாக இருக்கிறதோ அங்கேயே சென்று சேவை செய்ய வேண்டும் என்கிற உயரிய நோக்கில், இப் பூவுலகில் தான் வாழ்ந்த காலத்தின் பெரும் பகுதியை மலையக மக்களின் உயரிய வாழ்விற்கும், அவர்களின் ஆத்மீக வளர்ச்சிக்குமாக அற்பணித்தார். இதே போல் இதர நாடுகளில் வாழும் தமிழர்களும் அறநெறியுடன் கூடிய பக்குவமான வாழ்வு வாழ வேண்டும் என்கின்ற நோக்கில் சைவத்தையும், தமிழையும் அவர்களிடத்திலும் எடுத்துச் சென்றார். பிரமச்சரியத்தை மேற்கொண்ட ஆத்மஜோதி சுவாமிகள், மக்களிடம் இருந்து தன்னை வேறுபடுத்திக் காட்ட விரும்பாமல் காவி உடை தரிக்காது வெண்ணிற உடையிலேயே இறுதிவரை வாழ்ந்து தனது ஆத்ம போதனைகளால் மக்களை இறைவன்பால் இட்டுச் சென்றார்.

மக்கள் எங்கும் உள்ள பரம்பொருளைக் கண்டு உணர்ந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கிலான சமயப் பணிகளில் பாதயாத்திரையும் ஒன்றாகும். இலங்கையிலே நடைபெறுகின்ற பல புகழ் பெற்ற பாதயாத்திரைகளில் ஆத்மஜோதி சுவாமிகளால் ஆரம்பிக்கப்பட்ட நயினை - நல்லூர் பாதையாத்திரை குறிப்பிடத்தக்கது. இப் பாதயாத்திரையை சுவாமிகள் தலைமை யேற்று, திவ்விய ஜீவன் சங்கம், சுவாமி சதானந்தர், நமசிவாய தேசிகர், பெரியோர்கள் உதவியுடன் நடத்திச் செல்வார். இச்சிறப்பு மிக்க பாதயாத்திரையில் அடியேனும் எனது பத்து வயதுகளில் இருந்து பங்கு பற்றியதால் ஆத்மஜோதி சுவாமிகளின் தரிசனம் எனக்கும் கிடைத்தது.

சுவாமிகளால் முன்னெடுக்கப்படும் இப் பாதயாத்திரையின் சிறப்பு என்னவெனில் இலங்கையின் எல்லாப் பாகங்களிலிருந்தும் வந்து பங்குகொள்ளும் ஞானிகள், சாதுக்கள், அறிஞர்களைத் தவிர, தமிழ் நாட்டிலிருந்தும் பல ஞானிகள், பெரியோர்கள் வந்து பங்கு பெறுவதாகும். ஆண்டு தோறும் நடைபெறும் இப்பாதயாத்திரையில் ஆயிரக் கணக்கான பக்தர்கள் கலந்து சிறப்பிப்பதுடன், தமிழ்நாட்டில் இருந்தும் பித்துக்குளி முருகதாஸ், சுவாமி சச்சிதானந்தர், காரைக்கால் தியாகராச சுவாமிகள், செட்டிநாடு பனங்குடிப் பெரியார் கறுப்பையாபிள்ளை, வல்லநாடு கல்லல் சோம் இராஜாராம் சுவாமிகள், பெங்களூர் ரமணி அமமாள் மற்றும் இலங்கையின் இதர பகுதிகளிலிருந்தும் சாதுக்கள், ஞானிகள், அறிஞர்கள் போன்றோர் கலந்தும் சிறப்பித்திருக்கின்றார்கள்.

நயினை நாகபூசணி அம்பாள் திருக்கோயிலில் இருந்து ஆரம்பிக்கும் இப்பாதயாத்திரை செல்லும் வழிகளில் அருகருகே உள்ள திருக்கோயில்களுக்கெல்லாம் சென்று பஜனை வழிபாடு செய்து இறுதியாக நல்லூர் கந்தனின் தேரடியைச் சென்றடையும். ஆத்மஜோதி சுவாமிகளுடன் இப் பாதயாத்திரையில் பங்கு கொள்ளும் சாதுக்கள், ஞானிகளால் ஆடப்படும் சிவதாண்டவ நடனமும், ஆடலுடன் பாடலும், ஓதப்படும் சிவநாம சங்கீர்த்தனமும், முருக நாமமும் சேர்ந்து, எந்த வயதினரையும் களைத்து சோர்வுறாமல் எந்நேரமும் உற்சாகத்துடன் கலந்து கொள்ளும் படியான தெய்வீக சக்தி அச் சூழலில் நிறைந்திருப்பதை பங்குபற்றுவதால் உணரக் கூடியதாகவிருக்கும். வழி நெடுகிலும் சைவ மக்கள் ஆங்காங்கே நிறை குடம் வைத்து அமுது படைத்து பக்தர்களை வரவேற்பார்கள். இப்பாத யாத்திரை ஐம்பது வருடங்களுக்கு மேலாக நடைபெறுகின்றது.

சிவபூமி என்று அழைக்கப்பட்ட இலங்கையில் இருந்து குடிபெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்கின்ற தமிழர்கள், அறநெறியுடன் கூடிய எமது சமய வாழ்வையும், தமிழ் மொழியையும் மறந்து அடையாளம் இல்லாதவர்களாக மாறிவிடக் கூடாதென்கின்ற உயரிய நோக்கில் மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, சுவிஸ், தமிழ்நாடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற பல இடங்களுக்கு எவ்வாறு சமயத்தையும், தமிழையும் எடுத்துச் சென்று அம்மக்களிடம் சேர்த்தாரோ

அதேபோல், 1994, 1995 ஆம் ஆண்டுகளில் கனடாவிற்கு வருகை தந்து ரொறன்ரோ நகரிலே இந்து சமயப் பேரவை என்றும் மொன்றியல் நகரிலே ஆத்மஜோதி தமிழர் இணையம் என்றும் அமைப்புக்களை உருவாக்கி அதன் மூலம் இக் கனேடிய நகரங்களிலே வாழ்கின்ற தமிழர்களில் வயதானவர்கள், இளையோர் எனப் பலரும் இன்றளவும் பயன் பெற்று வாழுகின்ற வழிவகைகளைச் செய்தருளினார்.

எனது பத்து வயதுகளில் ஆத்மஜோதி சுவாமிகளின் தரிசனம் கிடைத்ததும், பின்னாளில் இருபது வயதுகளில் மலையகத்தின் நாவலப்பிட்டியில் சுவாமிகள் தரிசனம் கிடைத்ததும், இதன் பின் முப்பது வயதுகளில் கனடாவிலே சுவாமிகளைத் தரிசித்து, அவர்களால் வீடுகளில் நடத்தப்பட்ட கூட்டுப் பிரார்த்தனையில் பங்கு பற்றியதும், சுவாமிகளின் இறுதி நிகழ்வில் சுவாமிகளுக்கு மலர்களைத் தூவி அர்ச்சித்ததும் தவப்பயனால் கிடைத்த பேறாகும்

ஆத்ம ஜோதி சுவாமிகளின் திருநாமம் என்றும் வாழும்
ஓம் நமசிவாய!



**காரைநகர் மணிவாசகர் சபையினரால்**
**காரைநகர் ஆலயங்களுக்கு பாதயாத்திரை ஆரம்பிக்கும் போது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி மலர் சொரிந்தோம் குருவடி பணிந்தோம்

**கமலாதேவி மகாலிங்கம்,** இளைப்பாறிய ஆசிரியை
நிர்வாக சபை உறுப்பினர், இந்த சமயப்பேரவை - கனடா.

"அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டு விட்டால்
இன்ப நிலை தானே வந்து எய்தும் பராபரமே"

என்பது தாயுமானவர் சுவாமிகளின் திருவாக்கு.

நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென் கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே

என்று உழவாரத்தின் படியறாத் திருக்கரத்தார் திருநாவுக்கரசர் அருள் வாக்கில் உதித்த தேவாரம். இவ் அருள் வாக்குகளை மனதில் கொண்டு தம் வாழ்நாள் இறுதி நிமிடம் வரையும் செயற்பட்டவர் எங்கள் முத்தான தொண்டர் முத்தையா சுவாமி அவர்கள்.

இவர் மனிதருள் ஓர் மாணிக்கம். மெய் அடியார்களில் ஓர் சிவனடியார். ஏழு ஆலயங்கள் ஒலி பரப்பிய ஏழாலையில் 1918ஆம் ஆண்டு வைகாசி மாதம் 25ம் திகதி பெரியார் நாகமணிக்கும் பொன்னுப்பிள்ளை அம்மையாருக்கும் பிறந்தார். இவ் ஆண்டு இவர் நூற்றாண்டு ஜெயந்தி விழாவாகும்.

திருநெல்வேலி சைவ ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் கல்வி கற்று ஆசிரியர் தகைமையைப் பெற்றார். இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் உத்தம மாணாக்கர். 1939ம் ஆண்டு சென் மேரீஸ் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பதவி ஏற்றார். 1948ஆம் ஆண்டு நாவலப்பிட்டி கதிரேசன் குமார மகாவித்தியாலத்திற்கு மாற்றம் பெற்று பிற்காலத்தில் அதிபராக பதவி உயர்வும் பெற்று ஓய்வுபெறும் வரை அங்கேயே கடமையாற்றினார். 44 வருடங்கள் மலையகத்தில் கடமையாற்றிய சுவாமிகள் மலையகத்தின் மூலை முடுக்கெல்லாம் அலைந்து சமய சமூக விழிப் புணர்வை ஏற்படுத்தியுள்ளார். 1983 கலவரத்துடன் சாவகச்சேரியில் தம்பியாருடன் வந்து தங்கினார். அங்கும் போராட்ட சூழ்நிலை பதட்டப்பட்ட மக்களுக்கு சமயத்தை சமூகத்துடன் இணைத்த கூட்டுப் பிரார்த்தனை, வீட்டுப்பிரார்த்தனை, சத்சங்கங்கள், பாத யாத்திரைகள் போன்றவற்றால் அமைதியுடன் வாழவழிவகுத்தார். இவர் ஆசிரியராக, அதிபராக, ஆத்ம ஜோதி சஞ்சிகையின் பத்திராதிபராகப் பல அரிய நூல்களின் அச்சாணியாக,அச்சக நிறுவுனராக, சமய பிரசாரகராக, சன்மார்க்க நெறியாளராக, பெற்றோரையும் சொந்த பந்தங்களையும் இழந்த பிஞ்சுக் குழந்தைகளின் காவலராகவும் பாதுகாப்பாள ராகவும் மற்றும் இன்னோரன்ன ஆன்மீக பணிகள் மூலம் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்த பெருமையாளர்.

தன்னை வருத்தி பிறரை மகிழ்விக்கும் உத்தம பண்பு இவரிடம் இருந்தது. யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் எனப்படும்போது நான் பெறாத இன்பம் பெறட்டும் ஆனால் நான் பெற்ற துன்பத்தை இவ்வையகம் பெறாதிருக்கட்டும் என்ற பண்புள்ளம் இயல்பாக உள்ளது. அவர் சொன்னதைச் செய்தார் செய்வதைச் சொன்னார். இவர் எழுதிய நூல்களில் எளிய நடை பெரிய தத்துவம் சிறிய கதைகள் நாசூக்கான நகைச்சுவைக் கருத்துக்கள் நடை முறைக்குப் பொருத்தமான விளக்கங்கள் யாவும் அவருக்குரிய தனிப் பண்புகள்.

அவரது பெற்றோர்கள் செம்மனச் சிவபக்த சீலர்கள். இவர்கள் வழித்தோன்றலான சுவாமிகளும் பெற்றோரைப் பின்பற்றியே கைதடி சிறுவர் இல்லத்தின் காவலராகவும் பாதுகாவலராகவும் தன்னை மாற்றிக்கொண்டார். இவரது குடும்பம் ஏழைகளுக்கு உதவும் குடும்பம். சமூக நலன்களில் அக்கறை காட்டுவது அவர்கள் இரத்தத்தோடு கூடிய ஒன்று. முத்தையா சுவாமிகள் தங்களூரில் சமயப்பணி செய்தார். எனினும் நாவலப்பிட்டியையே முதன்மை இடமாக எடுத்து அங்கு தன் சேவையை ஆசிரியப் பணியோடு சமூகப்பணி சமயப் பணி என்பவற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பித்தார். முக்கியமாக மலையக மண்ணில் விரக்தியுற்று தொழிலாளர் மத்தியில் குடியும் சூதும் வாதும் குடிகொண்டிருந்தன. அவர்கள்மேல் கொண்ட அன்பின் காரணமாக அவர்களை திருத்த வேண்டிய கட்டாயத்திற்கு உட்பட்டார். மலையக மக்களின் குடும்பப் பிரச்சனைகளைத் தீர்த்தல், நீதி நியாயங்களை விளக்குதல், நல்வழிப்படுத்தல்,வீட்டுப் பிரார்த்தனை கூட்டுப்பிரார்த்தனை, திருமுறை ஓதுதல், சற்சங்கம் நடத்தல் மற்றும் பிற தொண்டுகள் செய்து அவர்களை ஆன்மீக வாழ்வுக்குள் கொண்டு சென்றுள்ளார். அவர்கள் மேல் கொண்ட தீய பழக்க வழக்கங்களை அன்பெனும் ஆயுதத்தால் இவரால் விரட்ட முடிந்தது. இதனால் மலையக மக்களின் வழிகாட்டி என்று பலராலும் பாராட்டப்பட்டார். இவர் மலையக மக்களுக்குச் செய்த சேவைகள் அளப் பரியது. இவர் மலையக மாணவர்களுக்கு மட்டுமன்றி மலையகப் பெரியார்களுக்கும் ஆசானாக விளங்கினார்.

நேர்மையும் நம்பிக்கையும் முத்தையா சுவாமிகளின் சமூகப் பணிகளுக்கு ஆதாரமாக இருந்தன. நாம் வாழும் இந்த கலியுகத்தில் நாம செபத்தை இடைவிடாது கூறினால் இறைவனை அடையலாம் என்பதில் தளராத நம்பிக்கை கொண்ட சுவாமிகள் நாம செபம், கூட்டுப்பிரார்த்தனை, வீட்டுப்பிரார்த்தனை ஆகியவற்றை மலையகத்தின் மூலை முடுக்கெல்லாம் பரப்பினார். அத்துடன் நிற்காமல் நயினாதீவைச் சேர்ந்த பெரியார் க. இராமச்சந்திரா அவர்களுடன் சேர்ந்து ஆத்ம ஜோதி என்னும் சஞ்சிகையைத் தொடங்கி அதன்மூலம் மக்களை நல்வழிப்படுத்தினார். இதற்காக அல்லும் பகலும் அயராது உழைத்த பெருந்தகையாளர்.

இப்படிப்பட்ட பணிகளை இலங்கை மக்களுக்கு மட்டும் செய்யவில்லை. புலம் பெயர் தமிழர் எங்குள்ளனரோ அங்கு அவர் சமயத் தமிழ் பணிகளை விஸ்தரித்தார். இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியா, கனடா சுவிற்சலாந்து போன்ற நாடுகள் இவரை வரவேற்றன. சுவாமிகள் 1994ஆம் ஆண்டு யூலை மாதம் கனடாவில் நடைபெற்ற நான்காவது சைவசித்தாந்த மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக வந்திருந்தார். கனடாவிலும் மொன்றியலிலும் கலந்து கொண்ட பின் பல பல சமயப் பணிகளில் ஈடுபட்டார். அதில் ஒன்று இந்து சமயப் பேரவை அமைத்தல். சுவாமிகளின் தீர்க்க தரிசனமும் தூர நோக்கும் நற்சிந்தனையும் இங்கு தனி நபரால் சமயம் தமிழ் பணிகள் செய்ய முடியாது எனப் புரிந்துகொண்டார். நாங்கள் இப்போ கலியுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். யுகங்கள் நான்கு அவை,

த்ரேத்தாயுகம், க்ருதயுகம், துவாபரயுகம், கலியுகம்.

த்ரேத்தாயுகத்தில் - மந்திரங்கள் சக்திபெற்றுத் திகழ்ந்தன
க்ருதயுகத்தில் - ஞானம்(அறிவு) சக்தி பெற்றுத் திகழ்ந்தன
துவாபரயுகத்தில் - யுத்தம் சக்தி பெற்றுத் திகழ்ந்தன
கலியுகத்தில் - ஒன்றே ஒன்றைத் தவிர வேறு எதைச் செய்தாலும் நம்மால் பலம் பொருந்திய ஆன்மீக சமுதாயமாக மாறமுடியாது. அதுதான் அமைப்பு ரீதியாக ஒன்றுபட்டால் தான் நாம் எமது இலக்கை அடைய முடியும் என்பதை தெள்ளத் தெளிவாகப் புரிந்து கொண்டார். இங்கு கனேடிய நீரோட்டத்தில் மக்களின் நேரமின்மையும் வேலைப் பழுவும் மன அழுத்தங்களும் வாழ்க்கை இறுக்கங்களும் குடும்பச் சுமைகளும் உள்ள மக்களைக் கண்டார். உடல் நோய்களை மருந்துண்டு மாற்றுவது போல் உலகியல் நோய்களை மாற்று மருந்தாய் சிவனை வழிபட்டு மாற்ற முடியும்,தீர்க்கமுடியும். நாயன்மார்கள் இந்த வழியில் சென்று ஆன்மீக வெற்றி கண்டுள்ளார்கள்.

எனவே இயந்திரம் போல் நேரத்தோடு போட்டி போட்டுக்கொண்டு அன்றாடம் தம் கடமை களைச் செய்யும் பக்தர்களுக்கு இடையூறு செய்யா மலும் நமது சைவத் தமிழ் கலாச்சார பண்பு சிதைந்து போகாமல் அதனைக் காப்பாற்றும் பொருட்டும் செவிக்கு விருந்தும் மனித மனங்களை செம்மைப் படுத்தி அறிவிற்கு ஆத்மீகத்தை அள்ளிக்கொடுக்கவும், அடியார்களின் வேண்டுகோளுக்கு இணங்கி ஓர் அமைப்பை ஸ்தாபனம் செய்தார். 1994ஆம் ஆண்டு யூலை 3ம் திகதி அவ் அமைப்பின் பெயரே இந்து சமயப் பேரவை.

இவ் அமைப்பு இன்று அடியார்களின் உள்ளங்களை உழுது அறநெறிப் பாத்தி கட்டி சிவநெறிப் பயிர் வளர்த்து பக்தி என்னும் நீர் பாய்ச்சி திருமுறைப் பசளை தூவி ஆசைகளைப் பிடுங்கி அல்லல் அறுத்து ஆனந்தம் தரும் அமுத சுரபியாய் தனக்கென சொந்த இல்லத்தில் ஆத்மஜோதி இல்லமாய் சுடர் விட்டுப் பிரகாசிக்கின்றது. சுவாமி களின் சிரேஷ்ட சீடரான பேரவையின் செயலாளரும் திருமுறை ஒருங்கிணைப்பாளரும் திருமுறைச் செல்வருமான திரு.சிவ முத்துலிங்கம் ஐயாவின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிநடத்தலின் பிரகாரம் 250 இற்கும் மேற்பட்ட அடியார்களை தனது ஆன்மீக அலைக்குள் உள்வாங்கி வைத்துள்ளது. இதனால் இங்கு இன்று தமிழ் சைவம் பக்தியின் மூலம் அடியார்கள் ஒற்றுமை,பொறுமை,புரிந்துணர்வு, ஆன்மீகப் பெரியார்களுடன் உரையாடல், ஒருவரை ஒருவர் மதித்தல்,ஆத்மார்த்த முன்னேற்றமான சிந்தனை களைப் பகிர்ந்துகொள்ளல், ஒருவருக்கொருவர் உதவி செய்தல், ஆன்மீக ஊக்குவிப்பு, தலைமைத்து வத்தன்மை, ஆன்மீகச் செம்மல்களின் சேர்க்கை, தன்னம்பிக்கை, நேர்மை, உண்மை பேசுதல், இடை விடாத முயற்சி இன்னும் இன்னோரன்ன ஆத்மார்த்த விடயங்களில் சுவாமிகள் அமைத்த பேரவை மூலம் பயனடைந்துள்ளோம். மொன்றியலில் தமிழர் கல்வி நிலையத்தையும் ஆரம்பித்தார். இதுவும் இன்று பல நூற்றுக்கணக்கான மாணவ மாணவிகளை உள்ளெடுத்து மிகவும் பெரிய அளவில் பார் போற்ற சுவாமிகளின் எண்ணத்திற்கமைய செயற்பட்டு வருகின்றது என்பது யாவரும் அறிந்த உண்மை.

சுவாமிகளின் கனடா வருகையினால் தமிழ் சைவ வழிபாடுகள் முதலியன கடந்த 24 வருடங்களாக நிலைத்து வாழுகின்றது. அன்று நாவலர் பெருமான் செய்தது போல் சுவாமிகளும் தான் செல்லும் இடமெல்லாம் இவ் விதைகளை விதைத்து மக்களை நல்வழிப்படுத்திய பெரு மகான். இந்தோனேசியாவிலும் இதே பணிகள் அங்கு சுவாமிகள் 2 வருடங்கள் தங்கியிருநதுள்ளார். அங்கு இருந்த நாட்கள் பற்றியும் மக்கள் பற்றியும் சமயப் பணிகள் பற்றியும் அழகான புத்தகமும் எழுதி யுள்ளார். இன்றும் அங்குள்ள மக்கள் இவர் படங்களை பூசை அறைகளில் வைத்து வழிபடு கின்றார்கள் என்றால் அவரது ஆன்மீக சேவையை விளக்க இச்சிறியேனால் முடியுமா?

தன் வாழ்நாள் முழுவதும் மகான்கள், ஞானிகள், சித்தர்களை தரிசனம் செய்து அவர்கள் ஆசி பெற்று ஞானம் அடைந்தார். அத்துடன் நிற்காமல் தான் தரிசித்த மகான்களை தான் மட்டும் அனுபவிக்காமல் தான் பெற்ற அந்த பேரானந்தத்தை தரிசனம் என்ற நூல் மூலம் எமக்கும் அள்ளிக்கொடுத் துள்ளார். இதனால் இவருக்கு இந்து சமய பேரவை யினால் ஞான சுரபி என்ற பட்டமும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. பிள்ளையார் சுழி போட்டது போல் மெய் சிலிர்த்து உள்ளத்தை உருக்கும் இந்த நூலைக் கனடா இந்துசமயப் பேரவையின் முதல் வெளியீடாக வெளியிட்டது. இந்து சமயப் பேரவை ஸ்தாபிக்கும் போது தன் திட்டங்களில் தமிழ், சைவ நூல்கள் வெளியிடுவதும் ஒன்று. எனவே இன்று வரை சுவாமிகள் எழுதிய நூல்கள் உட்பட 55 தமிழ் சைவ ஆன்மீக அறிவியலுடன் கூடிய காலத்திற்கு ஏற்ற கருத்துக்கள் அடங்கிய அருமையான புத்தகங்களை வெளியிட்டுள்ளது. எந்த அமைப்பிலும் இப்படி நடந்ததை நான் அறியேன்.

தன்னலம் கருதாத சமய சேவைக்கு தன்னை அர்ப்பணித்து அல்லும் பகலும் அயராது உழைத்த சுவாமிகளை நான் சம காலத்தில் இருந்தும் என்னால் தரிசிக்கவோ, காணவோ,அறியவோ இல்லாத பாவம் செய்தவளாவேன். இப்படி எத்தனை பேர் இருக்கின் றார்களோ நான் அறியேன். எனினும் சிறு புண்ணியம் என்னை இந்து சமயப்பேரவை அடியார் கூட்டத்துடன் சேர வைத்த படியால் இம் மகானின் பக்தி வலையில் சிக்கி இருக்கிறேன். நான் மாத்திரம் இல்லை எம் திருக்கூட்ட அடியார் உட்பட சுவாமிகளை தெரியாத எத்தனையோ பேருக்கு ஒரு தாய் தான் பெற்றெடுத்த குழந்தைக்கு இவர் தான் உன் தந்தை என்று கூறுவது போல் எங்களுக்கு தன் பேச்சாலும்,எழுத்தாலும் ஆத்மீகத்தையும் சமயத்தையும் பரப்பிய நாவலர் பெருமானின் குரு பீட பரம்பரையில் வந்த சுவாமிகளை வெளிச்சம் காட்டியவர் எம் குரு போன்ற திரு.சிவத்திரு முத்துலிங்க ஐயா தான். இவரைப்பற்றி கூறுவதானால் இவர் குருவை மிஞ்சிய சீடர் எனலாம்.

கடந்த 56 ஆண்டுகளாக தமிழும் சைவமும் காத்து வளர்க்கும் ஆத்ம ஜோதியாகத் திகழ்ந்து குன்றின் தீபமாக மிளிர்ந்து வந்த சுவாமிகளின் நூற்றாண்டு ஜெயந்தி விழாவை கொண்டாடும் நாம் பாக்கியம் பெற்றவர்களாவோம். கடல் கடந்து வந்து எமது சமயம்,மொழி,கலாச்சாரம் எமது பண்பாட்டு விழுமியங்களுக்கு உட்பட்டு அவற்றினை ஊக்கப்படுத்தி இனத்தின் அடையாளங்களை தக்க வைப்பதில் அவரால் ஸ்தாபிக்கப்பட்ட பேரவை இன்றுவரை காட்டும் அக்கறை நிகழ்வுகள் பல பல. அவரின் நூற்றாண்டு விழாவே இதற்கு உதாரணம். சுவாமிகளின் சமயத் தமிழ் விதையானது (அன்று இலங்கையில்) இன்று கடல் கடந்து இப்புலம்பெயர் மண்ணில் முளைத்து, வளர்ந்து, பெருகி விருட்சமாகி, விழுது பரப்பி இமயம் போல் வளர்ந்து பார் போற்றும் வகையில் ஆத்மஜோதி இல்லமாக சிவஜோதியாக பிரகாசித்துக்கொண்டிருப்பதை நாம் கண்கூடாக கண்டு ஆத்மீக இன்பம் அடைகின்றோம். கனடாவில் இயங்கி வரும் சமய நிறுவனங்களின் மத்தியில் தனக்கென ஓர் தனித்துவமான இடத்தை பெரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேற்புடன் கூடிய அங்கீகாரத்தை பெற்று இலாப நோக்கற்ற முறையில் இயங்கி வருகின்றது என்ற முத்திரை பதித்துள்ள இந்து சமயப் பேரவையானது ஸ்தாபகர் ஆத்மஜோதி சுவாமிகளின் நூற்றாண்டு விழாவை கோலாகலமாகக் கொண்டாடும் இத் தெய்வீகச் சூழ்நிலை நவரத்தினத்தால் அலங்கரிக்கப் பட்ட பேரவையின் மகுடத்தில் கூடுதலாக ஓர் வைரக்கல் பதித்தது போல் இந்த ஆண்டும் மீண்டும் தொடர் சாதனையாக ஓர் புதிய வெற்றியின் சின்னத்தை பதித்துவிட்டது. சுவாமிகளின் நூற்றாண்டு ஜெயந்தி விழா கனடா வாழ் சைவ தமிழ் மக்களின் மைல்கல்.

எமது சமயம் தமிழ் பண்பாடு,கலாச்சார விழுமியங்களை அடுத்த சந்ததிக்கும் வளர்த்து கட்டிக்காத்து அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை இறை பக்தியும், கண்ணியமும். தூரநோக்கும், தீர்க்க தரிசனமும் கொண்ட சுவாமிகள் இவர் தான் இதற்கு சரியான தகுதி உடையவர் எனச் செயலாளர் சிவ முத்துலிங்கம் ஐயாவை தனது சிரேஸ்ட சீடனாக ஏற்றபடியால் தான் நாம் இன்றைய பேரவையின் வளர்ச்சியைக் கண்டு தெய்வீக ஆனந்தம் அடைகின்றோம். "நல்ல விதை எங்கு விதைத்தாலும் முளைக்கும் விதைத்தவன் தூங்குவான் ஆனால் விதை தூங்காது" அது போலவே ஐயா அவர்களும் பேரவையை பல பல கஷ்டங்களுக்கு மத்தியில் பெரும்பாலும் பொருளாதார நெருக்கடி களுக்கூடாகவும் உடல் நலக்குறைவு காரணமாகவும் சோர்ந்து விடாமல் அல்லும் பகலும் அயரா முயற்சியுடன் தன் உயிரே பேரவை என்ற அர்ப்பணிப் புடன் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டமையே இன்றைய பேரவையின் தெய்வீக அருளுடன் கூடிய ஆன்மீக வளர்ச்சியின் முக்கிய காரணியாகும்.

ஆத்மஜோதி இல்லத்தின் நுழை வாசலிலே சுவாமிகளின் தெய்வீகப் படம் வருவோரை அன்புடன் ஆசியுடன் வரவேற்கின்றது. உள்ளே சென்றால் அவர் தரிசித்த யோகர் சுவாமி, ரமண மகரிஷி, நடுநாயக மாக நாவலர் சிவனார், நாற்புறமும் எல்லாச் சித்தர்கள், சமயகுரவர்கள், ஞானிகள், சைவப் பெரியோர்களின் படங்கள் எனப் பிரார்த்தனை மண்டபமே தெய்வீக சூழ்நிலையை உண்டாக்கி எமை அறியாமலே எம் கையை கும்பிட வைக்கும்.

எனவே ஆரோக்கிய அறிவிற்கும் ஆன்மீகப் பற்றுதலுக்கும் தலை வணங்கி ஆத்மஜோதி இல்லம் வந்து இக் குருபீடத்தையும் மகான்களையும் வணங்கி வழிபட்டு விளக்கேற்றி வேண்டிக்கொண்டால் வேண்டுதல்கள் நிறைவேறுவது உறுதி. பக்தியுடன் சங்கல்ப்பம் செய்துகொண்டு எல்லாக் குருமாரையும் வணங்கிட நம் ஆன்மீக மனோபலம் அதிகரிக்கும், சித்தம் தெளிவாகும்,செயல்களில் உறுதி பிறக்கும். குருவருளால் வாழ்க்கை வளமாகும் என்பது உறுதி. மகான்களின் ஆசி எம்மை விட்டு நீங்காதிருக்கும். இங்கு நடக்கும் அற்புதங்கள் சொல்லில் அடங்கா. சோதனைகள் பல கடந்து அற்புத ஆன்மீக சாதனைகள் புரிந்துகொண்டிருக்கின்றது.

நமது ஆன்மாவாலும், மனத்திலும், உடலிலும், வாக்கிலும், செயலிலும் இரண்டறக் கலந்து வாழ்ந்து மொன்றியலிலே 08.09.1995 அன்று அடக்கமாகி கனடாவிலே தகனம் செய்யப்பட்டார் ஆத்மஜோதி சுவாமிகள். இந்த ஜோதி அஞ்ஞான இருள் அகற்றி அடியவர்களை காக்கும் அருட்செயல்களைப் புரிகின்றது. இந்த ஜோதியின் அருள் லீலைகள் பக்தி மணம் கமழ பட்டியல் போட்டாலும் முடியாது. பூத உடல் அழிந்தாலும் ஆன்மா அழிவதில்லை சுவாமிகளின் ஆத்ம சக்திதான் எம் குரு போன்ற திரு.சிவ முத்துலிங்கம் ஐயாவை வழிநடத்திச் செல்லுகின்றது என்பதை நாம் முற்றும் முழுதாக உணர்கின்றோம். எத்தனை நெருக்கடிகள்,உடல் உபாதைகள்.பொருளாதாரப் பிரச்சனைகள் மற்றும் இன்னோரன்ன பிரச்சனைகளுக்கு மத்தியிலும் ஜோதிமயமாக ஆத்மஜோதி இல்லம் எடுக்கும் காரியங்கள் அனைத்தும் ஒருவித பிரச்சனைகளும் இன்றி நடக்கும் அதிசயந்தான் என்ன? வேறு என்ன? சுவாமிகள் சூக்கும உடலில் இருந்து காப்பாற்று கின்றார் என்பதை நாங்கள் தெட்டத்தெளிவாக உணருகின்றோம். இதையே ஐயாவும் சொல்லு கின்றார்.

சுவாமிகளின் ஆசி சைவத் தமிழ் மக்களாகிய அனைவரையும் வருங்கால சந்ததியினரையும் வழிநடத்தி எமது சமயம் தமிழ் கலாச்சார பண்பாடு களையும் காப்பாற்றும். திடமாக நம்புவோமாக.

முத்தையா சுவாமிகள் திருவடி வாழ்க!<br>
குருதேவர் திருநாமம் வாழ்க!<br>
மேன்மைகொள் சைவ நீதி வாழ்க1<br>
வாழ்க! வாழ்க! இவ்வையகம் வாழ்க!

ஓம் நமச்சிவாய ஓம் சாந்தி ஓம் சாந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஜோதியின் அறிவுரை

**சித்தாந்தரத்தினம், கலாநிதி க. கணேசலிங்கம்**

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த பெரியார். அவர் அப்பரடிகள் போல் *"என்கடன் பணி செய்து கிடப்பதே"* என்ற சிந்தையுடன் சிவதொண்டு செய்தார். *"தாவில் சராசரங்கள் எல்லாம் சிவம் பெருக்கும் பிள்ளையார்"* ஆகிய ஞானசம்பந்தர் போல் சென்ற இடமெல்லாம் சிவநெறி பரப்பினார்.

'ஆத்மஜோதி' என்ற சஞ்சிகையை வெளியிட்டு சைவம் பரப்பிய இச்சான்றோன் '**ஆத்மஜோதி**' என்றே அழைக்கப்பட்டார். சைவத்தமிழ் மக்கள் தமது பெருமைமிகு சைவத்தை அறிந்து ஒழுகவும், சிறுவர்கள் சைவ நெறியில் நின்று ஒழுக்க சீலர்களாக வளரவும் தன்னால் ஆன பணிகளை மனம் மொழி மெய்களால் ஆற்றினார்.

அவரின் ஆசிரியர் பண்டிதமணி கணபதிப் பிள்ளையைப் போல், ஆத்மஜோதி அவர்களும் இல்லற வாழ்வில் ஈடுபடாமல் வாழ்ந்தார். பலருக்கும் பயன்படும் நூல்கள் பலவற்றை எழுதினார். சிறுவருக் கேற்ற நூல்களும் படைத்தார். பிறந்த நாட்டிலும் பிற நாடுகளிலும் பல இடங்களுக்குச் சென்று சொற்பொழிவுகள் ஆற்றினார். அவரின் பேச்சைக் கேட்ட பலர் ஆன்மீக வழிக்குத் திரும்பிப் பயனடைந்தனர்.

சிறு வயது முதலே ஆன்மீகத் தேடலில் அவர் பொழுது பெரிதும் கழிந்தது. அருள்ஞானிகளை நாடித் தரிசிப்பது அவரின் இயல்பாக இருந்தது. இவற்றால் பல சான்றோர்கள், அறிஞர்களின் தொடர்பு ஏற்பட்டது. அத்தகையவரில் ஒருவர் கொழும்பு இராமச்சந்திரா என்றழைக்கப்படும் திரு க. இராமச்சந்திரா ஆவார். அவர் மகரிஷி இரமணரிடம் அதிக ஈடுபாடு கொண்டவர். கொழும்பிலுள்ள தனது இல்லத்துக்கு 'இரமண மந்திரம்' என்று பெயர் வைத்திருந்தார். ஆத்மஜோதி அவர்களின் ஆன்மீகத் தேடலுக்கும் பணிகளுக்கும் அடித்தளம் அமைத்து வழிப்படுத்தி யவர் திரு இராமச்சந்திரா என்றால் மிகையாகாது. (இது தொடர்பான செய்திகளுக்கு இந்து சமயப் பேரவையின் 'ஆத்மஜோதி, மணிவிழா மலரில்' வெளிவந்த '**ஆன்மீகத் தொடர்பு**' என்ற கட்டுரையைப் பார்க்கவும்).

சிறந்த ஆசிரியராக விளங்கிய ஆத்மஜோதி அவர்களின் பேச்சும் எழுத்தும் எவரும் எளிதில் விளங்கக் கூடிய வகையில் அமைந்திருக்கும். அவர் பதிப்பித்த நூல்களிலும் வெளியிட்ட 'ஆத்மஜோதி' இதழிலும் சைவமும் அதன் தத்துவக் கருத்துக்களும் எவரும் புரியும் வகையில் தரப்பட்டிருந்தன.

'**நமசிவய**' என்பது சைவத்தின் உயர்ந்த ஒரு மந்திரம். உச்சரிக்கும் போது இது '**நமச்சிவாய**' என்றா கிறது. இது போன்றதே '**சிவாயநம**' என்ற மந்திரமும். இது சூக்கும பஞ்சாட்சரம் என்றும் முன்னையது தூல பஞ்சாட்சரம் என்றும் அழைக்கப்படும். பஞ்சாட்சரம் என்பது ஐந்து எழுத்துக்கள் (அட்சரங்கள்) கொண்டது. தமிழிலே **ஐந்தெழுத்து** என்றும் **திருவைந்தெழுத்து** என்றும் இம்மந்திரம் குறிக்கப்படும்.

சைவ நாயன்மார்கள் ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதிப் பல அற்புதங்களைச் செய்துள்ளனர். சிவனின் திருப்பெயராகிய நமச்சிவாயத்தை உள்ளம் உருகி ஓதும்போது அது மந்திரமாகிறது. அது காவலாகவும் நல்வழி காட்டுவதாகவும் நால்வேதத்தின் மெய்ப்பொருளாகவும் விளங்குகிறது என சம்பந்தப் பெருமான் தனது '**காதலாகி**' என்று தொடங்கும் பதிகத்தில் கூறுகிறார். அவரின் பூணூற் சடங்கு முடிந்த பின் அவர் பாடிய தேவாரத்தில் அது மந்திரங் களில் உயர்ந்த மந்திரம் என்று உணர்த்துகிறார்.

***"மந்திர நான்மறை யாகி வானவர்***
***சிந்தையுள் நின்றவர் தம்மை யாள்வன***
***செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்(கு)***
***அந்தியுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே".***

காயத்திரி மந்திரத்தை மேலான மந்திரமாகக் கொண்டு, தீ வளர்த்துத் தொழுவது பொதுவாக அந்தணர்களின் வழக்கம். அதனிலும் மேலானதும் கடைசி காலத்தில் கைகொடுப்பதும் திருவைந் தெழுத்து மந்திரமே என்றும் அந்தணச் சிறுவனான சம்பந்தர் குறிப்பிடுவது கருதற்பாலது.

அப்பரடிகளைக் கல்லிலே கட்டிக் கடலிலே விட்டபொழுது, அவருக்குத் துணையாய் நின்று கரை சேர்த்தது நமச்சிவாய மந்திரம் என்று அவரே சொல்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"சொற்றுணை வேதியன் சோதி வானவன்**
**பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழ**
**கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்**
**நற்றுணை யாவது நமச்சி வாயவே".**

சிவநாமமான திவைந்தெழுத்தை படைக்கலமாகத் தன் நாவிலே கொண்டதாகவும் பாடுகிறார். **"படைக்கலமாக உன் நாமத்து எழுத்தைஞ்சும் நாவிற் கொண்டேன்"** என்பது அவரின் தேவாரத் தொடர். சுந்தரரும் **"நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே"** என்று பாடுகிறார்

திருவைந்தெழுத்தை ஓடமாகக் கொண்டிருக்கும் தன்னை இறைவன் ஆட்கொண்டதாக மாணிக்கவாசக சுவாமிகள் கூறுகிறார். **"ஐந்தெழுத்தின் புணை பிடித்துக் கிடக்கின் றேனை ....."** என்ற திருவாசகத் தொடர் இதனை விளக்குகிறது. இவ்வாறே அருளாளர் பலரும் திருவைந்தெழுத்தைப் போற்றிப் பாடியுள்ளதைக் காணலாம்.

இத்தகைய சிறப்பு மிக்க திருவைந்தெழுத்தான **நமச்சிவாய** என்னும் மந்திரத்தை முதலாகக் கொண்டு மாணிக்கவாசகர் தனது சிவபுராணத்தை அருளிச் செய்துள்ளார். சிவபுராணம் பற்றி ஆத்மஜோதி அவர்கள் பின்வருமாறு எழுதுகிறார்.

*சிவபுராணம், சுவாமிகளிடம் (யோகசுவாமிகளிடம்) வந்தவர்களுக்கும் ஒரு மருந்து. உங்கள் கருமம் கைகூடுவதற்கு சிவபுராணம் தினமும் ஓதுங்கள் என்பதுதான் அந்த மருந்து. அவர்கள் அதனை நிச்சயமாக உணர்ந்திருக்க வேண்டும். அடியேனுக்கும் அதில் ஒரு பாடம்.*

***சிவபுராணத்தை தினமும் ஓது, நேரம் கிடைத்த போதெல்லாம் ஓது, போக்கிலும் வரத்திலும் ஓது,*** *என்பதுதான் அந்தப்பாடம். சிவபுராணம் வழிக்குத் துணை, விழிக்குத் துணை என்றெல்லாம் உணர முடிகிறது.*

மாணிக்கவாசக சுவாமிகளின் **சிவபுராணம்** சைவத்தில் உயரந்த இடத்தில் வைத்துப் போற்றப் படுகிறது. சைவமக்களின் இறை வழிபாட்டில் முதலிடம் பெறும் முக்கிய தோத்திரப் பாடல் இது. யோகசுவாமிகள் இதனை ஓதுமாறு தனது அடியவர்களிடம் வலியுறுத்துவதுண்டு. ஆத்மஜோதி அவர்களுக்கும் இந்த அனுபவம் ஏற்பட்டதுண்டு.

ஒருமுறை சுவாமிகளுடன் இருக்கும்போது, அவர் திடீரென, *"வாறாங்கள் காணும், சிவபுராணம் படிப்போம்"* என்றார். அவரும் சுவாமிகளும் மாறி மாறி சிவபுராணம் படித்தார்கள். ஒரு பெரிய காரில் ஒரு குடும்பம் வந்திறங்கியது. வந்தவர்கள் சுவாமியை வீழ்ந்து வணங்கிவிட்டு, ஆத்மஜோதியின் அருகில் வரிசையாக அமர்ந்தனர். அவரும் "பல்லோரும் ஏத்தப் பணிந்து" என்று சிவபுராணத்தைப் படித்து முடித்தார். உடனே சுவாமிகள், *"என்ன காணும், களைத்துப் போனீரோ? படியுங்காணும்"* என்றார். ஆறு ஏழு முறை படித்தபின், வந்தவர்கள் எதுவும் பேசாமல் எழுந்து போனார்கள்.

ஆத்மஜோதி அவர்கள் படித்து முடிந்ததும், திரும்பவும் படிக்கத் தொடங்கினார். சுவாமி உடனே *"என்ன காணும் தொடங்கினால் முடிக்கத் தெரியாதோ? என்னிடத்தில் சாத்திரம் கேட்க வருகினம் காணும்"* என்று கூறினார். இந்த நிகழ்வு எதனையும் அறிந்து மக்களுடன் தொடர்வு கொள்ளும் யோக சுவாமிகளின் தன்மையையும் ஆத்மஜோதியின் குருபக்தியையும் உணர்த்துவதாக உள்ளது. இந்தச் செய்தி 'என்னை எனக்கு அறிவித்தான் எங்கள் குருநாதன்' என்ற ஆத்மஜோதியின் நூலில் இடம் பெற்றுள்ளது. இந்தத் தலைப்பு யோகசுவாமிகளின் நற்சிந்தனை நூலின் தொடக்க வரியாக உள்ளது.

யோகசுவாமிகளிடம் தான் கேட்ட செய்தியாக சிலவற்றை ஆத்மஜோதி அவர்கள் குறிப்பிடுவதுண்டு. சிவபுராணத்தின் விரிவாகத் திருவாசகம் உள்ளது. சிவபுராணம் அதிலுள்ள முதல் இரு வரிகளின் விரிவாக உள்ளது. எனவே பஜனைகளில் சிவபுராணம் முழுவதையும் ஓதுவதற்கு நேரம் போதாவிடில்,

**'நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க**
**இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க'**

என்னும் இரு வரிகளையும் ஓதிவிட்டுப் பஜனையை நிறைவு செய்கிற ஒரு வழக்கம் உண்டு.

இரண்டாவது வரியைப் பொருளுணர்ந்து சொன்னால் இறைவன் திருவடித் தியானத்திலேயே இருந்துவிடலாம். அதன்பின் அடுத்த வரிகளைச் சொல்ல வேண்டியது தேவையற்றதாகிவிடும். இப்படிக் கூறும் ஆத்மஜோதி அவர்கள், இந்த இரண்டு வரிகளை ஓதுவதுகூட இயலாது என்பவருக்கும் வழி சொல்கிறார்.

**"இந்த இரு வரிகளையுமே பொருளுணர்ந்து சொல்வது கஷ்டமானால் முதல் வரியையாவது சொன்னால் போதும். அதுவும் கஷ்டமானால்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அரைவரியை 'நமச்சிவாய வாழ்க' என்று சொன்னால் போதும். அதுவும் கஷ்டமானால் கால் வரியையாவது சொல்லுங்கள். நமச்சிவாய மந்திரத்தை மணிவாசகர் திருவாசகத்துக்கு முதலாகவும் சிவபுராணத்தில் முதலாகவும் வைத்த இரகசியம் இதுவேதான்.

படுக்கையிலிருந்து கொண்டே சிவபுராணத்தை ஓதிய பின் நித்திரைக்குச் செல்லலாம். அதுவும் இயலாதவர்கள் நமச்சிவாய மந்திரத்தை 108 முறை ஜெபம் செய்துவிட்டுத் தூங்கலாம். அதுவும் இயலாதவர்கள் 54 முறையாவது ஜெபம் செய்க! அதுவும் இயலாதவர்கள் 27 முறை ஜெபம் செய்க! அதுவும் சோம்பலாயின் 9 முறை ஜெபம் செய்க! அதுவும் இயலாதாயின் மூன்று முறையாயினும் ஜெபம் செய்க! அதுவும் சோம்பலாயின் 'நமச்சிவாய' என்று தலையைத் தலையணையில் சாய்க்கும் போது சொல்க!"

சிவபுராணத்தையும் திருவைந்தெழுத்து என்னும் பஞ்சாட்சர மந்திரத்தையும் ஓதுவது அவசியம், அவற்றை எப்படி ஓதினாலும் அவற்றுக் கேற்ற பலனுண்டு. இவற்றை, மாணவனுக்குப் போதிக்கும் நல்லாசிரியன் போல், மனதில் படியுமாறு விளக்கு கிறார் ஆத்மஜோதி முத்தையா அவர்கள்.

ஒழுக்க சீலராக வாழ்ந்து அனைவரையும் சிவநெறியில் நிற்க வழிகாட்டிய இச்செம்மல் எமக்கும் அறிவுரை வழங்கி வழி காட்டுகிறார்.

ஐந்தெழுத்து ஓதுக! சிவபுராணம் பாடுக!



சென்னை திருப்புகழ் மன்றத்தில் சொற்பொழிவாற்றுகிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானசுரபி முத்தையா சுவாமிகள்

திருமதி அன்னபூரணம் ஞானசம்பந்தர்

திருவாளர் சின்னத்தம்பிப் பெரியாருக்கும் பார்வதி அம்மையாருக்கும் பிறந்த பிள்ளைகளில் ஒருவர் நாகமணி என்பவராவர். இவரின் தெய்வ மனைவி பொன்னுப்பிள்ளை அம்மையார். இருவரும் செய்த தவத்தின் பயனால், சைவம் தழைக்கவும் அறங்கள் மேலோங்கவும், அநாதைகள் பிழைக்கவும், 1918ம் ஆண்டு வைகாசி மாதம் 25ஆம் திகதி விசாக நட்சத்திரத்தில் காலை ஆறு மணியளவில் ஞானக் குழந்தையொன்று இப்பூவுலகில் பிறந்தது. இதனால் பெற்றோர் மிகவும் மகிழ்ந்தனர், உற்றார் உவந்தனர், மற்றவர் மகிழ்ந்தனர், ஞானிகள் போற்றினர், தேவர்கள் வாழ்த்தினர்.

இக்குழந்தைக்குப் பெற்றோர் முத்தையா எனப் பெயர் சூட்டினர். முத்தையா என்னும் செல்வப் புதல்வன் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வெள்ளைக் குழந்தையாக வளர்ந்து வந்தார். இக்குழந்தைக்கு அண்ணன் கந்தையா, அக்காமார் செல்லமுத்து, சின்னம்மா தம்பி அருமைநாயகம் என்பவர்கள் சகோதரர்கள் ஆவார்.

முத்தையா சுவாமி அவர்கள் கத்தோலிக்க பாடசாலையில் ஐந்தாம் வகுப்பு வரை கல்வி கற்று வந்தார். நன்றாகத் திருநீற்றைப் பூசிக்கொண்டுதான் பாடசாலைக்குச் செல்வார். அப்போது சக மாணவர் களால் கோலி பண்ணுப்படுவதும் உண்டு. ஆனால் முத்தையா சுவாமிகள் சிரித்த முகத்தோடு அமைதியாக இருப்பார். இவரின் பெற்றார் பசுமாட்டுப் பண்ணையை வைத்திருந்தும் பாலை ஏழைகளுக்கு இலவசமாகக் கொடுப்பார்கள், அத்தகைய தரும சீலர். ஏழாலை கிழக்கில் இலந்தைக்கட்டி என்னும் இடத்தில் எழுந்தருளி இருக்கும் ஞான வைரவர் இவர்களது குல தெய்வமாகும்.

ஒவ்வொரு மனிதனும் பிறக்கும்போதே, அவர்கள் செய்ய வேண்டிய காரியங்களை இறைவன் அவர்களின் தலையில் எழுதி விடுகின்றார்.

இப்படி இவர் படித்துவரும் காலத்தில், சரவணச்சாமி என்பவர் ஒருநாள் வீட்டுக்கு வந்திருந்தார். பெற்றோர் விழுந்து அவரை வணங்கினர். முத்தையா சுவாமியும் அப் பெரியாரை விழுந்து வணங்கினார். அப்பொழுது சாமியார் முத்தையா சுவாமியின் தலையைத் தடவி நீ சட்டம்பியாராய் வருவாயடா,உலகம் சுற்றுவாயடா, ஒரு குறையுமில்லாமல் வாழ்வாயடா என்று சொல்லி வாழ்த்திச் சென்றார்.

முத்தையா சுவாமிகள் மயிலணி வித்தியா சாலையில் கல்வி பயிலும் காலப்பகுதியில் யோகர் சுவாமிகளால் மிகவும் மதிக்கப்பட்ட சுன்னாகம் செல்லாச்சி அம்மையாரை தரிசிக்கும் வாய்ப்பு கிடைத்தது. இவரின் தரிசனம் முத்தையா சுவாமி களின் உள்ளத்தில் சமய உணர்வுகளை வளர்க்கத் தூண்டியது. இவர் படிக்கும் காலத்திலே கணக்குப் பாடத்தில் ஒரு புலி. முத்தையா சுவாமி அவர்கள் ஆசிரியர் பயிற்சிக் கல்வியைச் சிறப்புற முடித்துக்கொண்டு 1939ஆம் ஆண்டு ஆசிரியராகும் தகைமையைப் பெற்று, அக்டோபர் மாதம் 15ஆம் திகதி நாவலப்பிட்டியிலுள்ள சென் மேரீஸ் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பதவி ஏற்றார். 1948ஆம் ஆண்டு நாவலப்பிட்டி கதிரேசன் குமார மகா வித்தியாலயத்திற்கு மாற்றம் பெற்று, 1976இல் ஓய்வு பெறும் வரை அங்கேயே கடமையாற்றினார். இளம் வயதிலேயே முத்தையா சுவாமி அவர்கள் அனைவரையும் ஆட்கொள்ளும் பக்குவத்தைப் பெற்றார்.

மலைநாட்டுப் பிள்ளைகளின் கல்வியில் முழுமையான ஆர்வம் காட்டிய ஆசிரியர்களில் முதன்மையானவர் முத்தையா சுவாமிகளே. இவர் புன்முறுவலையும் அரவணைப்பையும் ஆயுதங்களாக பயன்படுத்தி மாணவர்கள் மத்தியில் ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் நிலைநாட்டினார். தைப்பொங்கல், தீபாவளி ஆகிய தினங்களில் அறிஞர் சொற்பொழி வுகள், கலை நிகழ்ச்சிகள், பரிசளிப்புகள், உள்ளடங்கிய விழாக்களாகக் கொண்டாடப்பட்டன.

சுவாமிகளின் முயற்சியின் பயனாக, நாவலப்பிட்டிப் பகுதிகளில்

1. இந்துசமயத் தொண்டர் படை உருவாக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பல ஆடவர் குடிப்பழக்கத்தை கைவிட்டு நல்லவர்களாக மாறினர்.

3. சண்டை சச்சரவுகள் குடும்பங்களிடையே குறைந்தன.

4. அந்தர் யோகப்பயிற்சிகளில் அதிகமானோர் ஈடுபட்டனர்

5. சமய உணர்வுகள் வளர்ந்தன

6. கோயில்களில் தமிழில் அர்ச்சனை தொடங்கியது

7. தமிழ் மொழியில் பற்று உண்டாகியது

8. மதமாற்றங்கள் மறைந்தன

முத்தையா சுவாமி அவர்களை 'நாவலப்பிட்டிக் காவலர்' எனறால் மிகையாகாது. அவர்கள் அறிவுக் கொடையாளி மட்டுமல்லாது, பொருட்கொடையாளியு மாவார். மலைநாட்டில் மட்டுமல்லாது, இவரது பணிகள் ஈழ நாட்டின் பிற பகுதிகளுக்கும் விரிவடைந்தன. இன்று வெளிநாடுகளிலும் இவரது தொண்டுகள் தொடர்கின்றன.

ஆத்மீக வள்ளல் ஆத்மஜோதி சுவாமிகள் பிறக்கும்பொழுது கருவிலே திருவுடைய பெரியார் ஆவர். துறவு என்பது அவருடைய போன பிறப்பிலே குடிகொண்டது. நைட்டிகப் பிரமச்சாரியான பெரியார் தன் வாழ்நாள் முழுதும் பிரமச்சாரியாகவே வாழ்ந்தார்.

1948ஆம் ஆண்டு தொடக்கம் ஆத்மஜோதி சஞ்சிகையை இல்லற ஞானி திரு. க. இராமச்சந்திரா வுடன் இணைந்து 1983ஆம் ஆண்டு யூலை மாதம் இனக்கலவரம் ஏற்படும்வரை 35 வருடங்கள் நடாத்தி வந்தார். ஆத்மஜோதி இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், இந்தோனேசியா போன்ற நாடுகளில் சந்தாக்காரர் களைக் கொண்ட சஞ்சிகையாக இருந்தது.

1983ஆம் ஆண்டு யூலாய்க் கலகத்தினால் பாதிக்கப்பட்டு அனைத்தையும் இழந்தநிலையில் அகதியாகத் தமிழ்ப்பகுதிகளுக்கு திரும்பியவருக்கு சாவகச்சேரி தொகுதியில் தங்க இருப்பிடங்கள் அமைக்கப்பட்டன. தென் இலங்கையில் பாதிக்கப்பட்டு அகதிகளாக வந்தவர்களுக்கு உதவி புரிய கிறிஸ்தவத் தொண்டர்கள் முன்வந்தனர். ஆனால் இந்து சமய நிறுவனங்கள் எதுவும் முன்வரவில்லை. முத்தையா சுவாமிகளுக்கு மிகவும் விருப்பமானது கூட்டுப்பிரார்த்தனையேயாகும் அடுத்தது பாதயாத்திரையாகும்.

ஈழத் திருநாட்டில் மிகவும் பெயர் பெற்ற யாத்திரை கதிர்காம யாத்திரையாகும். திருக்கோணேஸ்வரம், முனீஸ்வரம், திருக்கேதீஸ்வரம், மாமாங்கம், நல்லூர், மாவிட்டபுரம், கீரிமலை, செல்வச்சந்நிதி, நயினாதீவு மற்றும் பிற தலங்களுக்கும் யாத்திரைகள் மேற்கொள்ளப்படுவது வழக்கம். அதிகமான பாத யாத்திரைகளுக்கு முத்தையா சுவாமிகளே தலைமை தாங்கி நிற்பார். காலப்போக்கில் போக்குவரத்து வசதிகள் பெருக, பாத யாத்திரைகளும் குறைய லாயின. 1964ஆம் ஆண்டு நயினாதீவு நாகபூசணி அம்மன் கோயிலில் இருந்து நல்லூர் முருகன் ஆலயத்திற்கும் பாத யாத்திரையை அடியார்களுடன் மேற்கொண்டார்.

1986ஆம் ஆண்டு வலிகாமம் வடக்கிலுள்ள புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவையிலிருந்து சுன்னாகம் கதிரமலைச் சிவன்கோயிலுக்குப் பாதயாத்திரையை அடியார்களுடன் மேற்கொண்டார். 1984ஆம் ஆண்டு ஊரடங்குச்சட்டம் இருந்தபோதிலும் நெடுந்தூரப் பாதயாத்திரை ஒன்றை அடியார்கள் சகிதம் மேற்கொண்டார். மீசாலை, தடாங்குளம், பிள்ளையார் கோவிலிலிருந்து அதிகாலை 6 மணிக்கு ஆரம்பமாகி வரணி வழியாக வழியில் உள்ள கோயில்களைத் தரிசித்துக்கொண்டு கச்சாய் வீரபத்திரர் கோயிலை வந்தடைய 14 நாட்கள் எடுத்தன. ஆனால் ஊரடங்கு அமுலில் இருந்த போதிலும் அடியார்களை யாரும் மறிக்கவுமில்லை, எதுவும் நடக்கவுமில்லை. அவரின் மன உறுதியையும் இறை பக்தியையும் நன்றாக அறியக்கூடியதாக இருக்கின்றது.

முத்தையா சுவாமிகளின் மொழி, சமயம், சமூகம் எனும் முத்திறப்பட்ட பணிகளின் விளக்க மாகவும், தொடர்புப்பாலமாகவும் அமைந்தது அவரது ஆத்மஜோதி எனும் பத்திரிகையாகும். பத்திரிகை நடாத்திய ஆசிரியரையே ஆத்மஜோதி என அனைவரும் அழைக்கலாயினர். ஆத்மஜோதி என்றால் முத்தையா, முத்தையா என்றால் ஆத்மஜோதி. முத்தையா சுவாமி அவர்கள் ஆத்மஜோதி பத்திரிகை மூலம் அவர் ஒரு அரிய எழுத்தாளர் என்பதையும் நிலைநாட்டி இருக்கின்றார். உண்மையில் அவர் ஒரு இலட்சிய எழுத்தாளர் ஆவார்.

முத்தையா சுவாமி அவர்கள் பல நூல்களை எழுதியிருக்கின்றார். அவற்றில் சில பின்வருமாறு:

1. இந்தோனேசியாவில் இரண்டு வருடங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. இலங்கையில் ஓர் இல்லற ஞானி
3. இளைஞர்க்கு ஏற்ற இந்தோனேசியக் கதைகள்
4. ஈழத்துச் சித்தர்கள்
5. ஏழாலை
6. கந்தனே கலியுகத்தில் கண்கண்ட தெய்வம்
7. சிவபால யோகேஸ்வரர்
8. தத்துவக்கதைகள்
9. தரிசனம்
10. திருமுறைக் காட்சி
11. திருமுறைச் செல்வம்
12. நிழலின் பின்னே மனிதன்
13. பன்னிரு மாத நினைவுகள்
14. மாணவருக்கு ஏற்ற மாண்புறு கதைகள்
15. முப்பெருஞ்சித்தர்

முதலியன. முத்தையா சுவாமி அவர்கள் பற்று மிகுந்த ஒரு துறவி தெய்வப்பற்று, ஒழுக்கப்பற்று, தருமப்பற்று, சமூகப்பற்று, அநாதைப்பற்று, தமிழ்ப்பற்று, தமிழர் பற்று என்று பல வகைப் பற்றுக்களை கொண்டவர். அவர்கள் தேவை அறிந்து, அவை அறிந்து பேசவல்ல சிந்தனையாளர். குழந்தை அரங்கில் குழைந்து நிற்பார், வளர்ந்தோர் அரங்கில் வளர்ந்து நிற்பார், உலக அரங்கில் உயர்ந்து நிற்பார் இவர் ஓர் அவையத்து அறிஞர். இஸ்லாமிய நாடாகிய மலேசியாவில் 1980ஆம் ஆண்டு நடந்த மகாநாட்டில் பசுவதையை நிறுத்துவது பற்றி உரை நிகழ்த்தத் திட்டமிட்டிருந்தார். ஆனால் மலேசியா இஸ்லாமிய நாடாகும். அப்படியிருந்தும் மிகுந்த அவதானத் தோடும், புத்தி சாதுரியத்தோடும் முத்தையா சுவாமி அவர்கள் பேசினார். அவர் பேசியதாவது:-

"ஒரு பசு உயிரோடு வாழ்ந்தால் 1000 பேருக்குப் பால்கொடுக்கும். அது கொல்லப்பட்டால் 25 பேருக்கு மட்டுமே உணவாகும். சமய ரீதியில் அன்றி பொருளாதார நன்மை கருதியாவது பசு வதை நிறுத்தப்படல் வேண்டும்" அவர் பேசியதில் நியாயம் இருக்கிறதென்று பாராட்டி உதவிப்பிரதமர் பேசினார். அவையோர் கைதட்டி ஆரவாரித்தனர்.

இது மட்டுமல்லாமல் பத்துமலையிலுள்ள சிவானந்தாச்சிரமத்தில், அந்தர் யோகப் பயிற்சி வகுப்புக்களையும் நடத்தினார். பினாங் பல்கலைக் கழக இந்து மாணவர்கள் மத்தியில் உபநிஷத்துக்கள் என்னும் பொருளில் உரை நிகழ்த்தினார். சிங்கப்பூரில் இவர் உரை நிகழ்த்திய திருவிடம் செண்பக விநாயகர் ஆலயமாகும். அதன் பின் இந்தோனேசியாவிலும் அவர்களின் சமயப் பணிகள் தொடரலாயின. இந்தோனேசியா உலகத்திலேயே மிகப்பெரிய தீவு நாடாக விளங்குகின்றது. அங்கு இரு வருடங்களுக்கு மேல் தங்கியிருந்து சமயப்பள்ளிகளின் வளர்ச்சிக்கும் ஆன்மீக நன்மைப்பாடுகளுக்கும் அயராது உழைக்க லாயினார். இந்தோனேசியாவில் 'முத்தையா' என்னும் பெருமகன் ஒரு சுவாமியாகும். ஆனால் ஞானசுரபி முத்தையா அவர்கள் சுவாமிப்பட்டம் தரிக்காதவர், காவி உடையோ, கண்டிகையோ அணியாதவர், கமண்டலம் தாங்காதவர், தாடியோ மீசையோ வளர்க் காதவர் ஆனால் மக்கள் அவரைச் சுவாமிகளாக மதித்தனர், வணங்கினார்கள். அன்பர்களுக்கு அவர் ஒரு சுவாமிப்பட்டம் தரியாத சுவாமி, தம்மளவில் ஒரு யோகி; அந்தர் யோகி.

ஈழத்திலே முதன்முதலாக அந்தர்யோகம் திருக்கேதீஸ்வரத்தில் 1948ஆம் ஆண்டு அறிமுகப் படுத்தப்பட்டது. இப்பயிற்சியில் ஆர்வத்துடன் பங்குபற்றியவர்களில் முத்தையா சுவாமி அவர்களும் ஒருவர். பயிற்சி தொடர்ந்து ஏழு நாட்கள் நடை பெற்றன. பயிற்சி முடிவில் எல்லோர் முன்னிலை யிலும் ஒவ்வொருவரும் ஒரு வாக்குறுதி எடுக்க வேண்டும். அப்போது முத்தையா சுவாமிகளின் முறை வந்தபோது "நான் நித்திய பிரமச்சாரியாக வாழ்வேன்" என்று உறுதி அளிக்கின்றேன் என்று கூறினார். அன்றே அவர் தனது வரும் காலத்தை நிர்ணயித்துக் கொண்டார். அத்துடன் நாவலப்பிட்டியில் அந்த ஆண்டே அந்தர் யோக வகுப்புக்களைத் தொடங்க லானார். இந்தோனேசியா, சுமாத்திரா, மலேசியா, சிங்கப்பூர், கனடா ஆகிய நாடுகளிலும் அந்தர்யோக வகுப்புக்களை நடாத்தியிருக்கின்றார்.

முத்தையா சுவாமி அவர்கள் பல மகான்களது தரிசனத்தைப் பெற்றவராவர். மகான்களை குருமாராகப் போற்றும் மகிமையுள்ளவர். அவரின் வாழக்கையில் எத்தனையோ அற்புதங்கள் நடந்திருக் கின்றன. 'தரிசனம்' எனும் நூலில் சிலவற்றை வெளிக்காட்டியிருக்கின்றார். பல்லோரும் ஏத்தும் தொண்டர் ஆத்மஜோதி முத்தையா சுவாமி அவர் களை பாராட்டியவர்களில் சிலர் பின்வருமாறு

1. ஜகத்திரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள், காஞ்சிபுரம்
2. இலக்கியக் கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கி. வா. ஜகந்நாதன்
4. பித்துக்குளி ஸ்ரீ முருகதாஸ் சுவாமிகள்
5. வைத்தியக் கலாநிதி சிவஞான சுந்தரம்(நந்தி)
6. ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் (நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்)
7. சிவாகம கலாநிதி சிவஸ்ரீ கா.சர்வேஸ்வரக் குருக்கள் (சுன்னாகம் கதிரமலைச் சிவன் தேவஸ்தானம்)
8. துர்க்கா துரந்தரி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி (J.P)
9. சைவப்பெரியார் பண்டிதர் மு.கந்தையா(B.A)
10. ஆ. மகாலிங்கம் (பிரதேச செயலாளர், மேலதிக அரசாங்க அதிபர், வலிதெற்கு உடுவில்)
11. திரு. நா. சிவலிங்கம் (கனடா றிச்மன்ட் ஹில் இந்து ஆலய அறங்காவலர் சபைத்தலைவர்)
12. திரு. அருணாசலம் சோமசுந்தரம்(கனடா) கிளிநொச்சி

ஆத்மஜோதி சுவாமிகள் 1994ஆம் ஆண்டு கனடா வந்தபோது இந்து சமயப்பேரவையை ஆரம்பித்து வைத்தார். 1995ஆம் ஆண்டு கனடா வந்தபோது மொன்றியலில் ஆத்மஜோதி கல்வி இணையத்தை ஆரம்பித்தார்.

திரும்பவும் கனடாவிற்கு 1995ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் வருகை தந்திருந்தார். ஆனால் ஆத்மஜோதி சுவாமிகள் 1995ஆம் ஆண்டு மொன்றியல் துர்க்கை அம்மன் கோயில் குடமுழுக்கு விழாவிற்கு கலந்து கொள்ளச்சென்றிருந்தபோது கடும் தொய்வு நோய் காரணமாக செப்ரெம்பர் 8ஆம் திகதி ஞானசுரபி முத்தையா அவர்கள் இறைவனடி சேர்ந்தார். அம்பாளுக்கு குடமுழுக்கு நடக்கும் நேரத்தில் ஞானசுரபி அவர்கள் எல்லாம் வல்ல சிவபுரத்தரசன் திருவடிகளைத் தழுவிக்கொண்டார். அவர் பிறந்த ஏழாலைக்கோ அல்லது தொழில் பார்த்த நாவலப்பிட்டிக்கோ அல்லது பிற்காலத்தில் வாழ்ந்த சாவகச்சேரிக்கோ இத்தலைமகனின் பூதவுடலைத் தாங்கும்பேறு கிடைக்கவில்லை. ஞானசுரபி அவர்களின் பூதவுடல் மொன்றியலில் இருந்து ரொறன்ரோ நகருக்கும் கொண்டுவரப்பட்டு மலர்த் தண்டிகையில் அடியார்கள் ஊர்வலமாக தோள்களிற் சுமந்து மயானத்திற்குக் கொண்டுசென்று, மயான மண்டபத்தில் இரங்கற் கூட்டம் நடாத்தி பூதவுடல் அக்கினி பகவானுடன் சங்கமமாக்கப்பட்டது.

முத்தான தொண்டர் மறையவில்லை. அவர் நிறுவிய அமைப்புக்கள், எழுதிய நூல்கள், ஆற்றிய பணிகள், அனைத்தும் அவரை வாழவைத்துக் கொண்டே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஜோதி ஐயா அவதாரம் செய்து நூறு ஆண்டுகள்

செ. சோமசுந்தரம்
பேரவையின் பொருளாளர், இளைப்பாறிய அதிபர்

இப் பூவுலகில் ஆசிரியப் பெருந்தகை அவதரித்தது 1918ம் ஆண்டு வைகாசிப் பூரனை விசாக நட்சத்திரமாகும். சிறப்பான நட்சத்திரங்களில் விசாகமும் ஒன்றாகும். விசாக நட்சத்திரத்தின் அதிபதி குரு பகவான். குருபகவான் அறிவுத் தெய்வம். முருகப் பெருமானுடைய நட்சத்திரமும் விசாகமே. முருகப் பெருமானை நாம் விசாகன் என்றும் அழைக்கின்றோம். புத்தபகவான் பிறந்தது ஞானம் பெற்றது பரிநிர்வாணம் அடைந்தது எல்லாம் வைகாசி விசாகமே. வைகாசி விசாகத்தை வெசாக் பண்டிகை என்று ஒளி விளக்கேற்றி பௌத்தர்கள் வணங்குவார்கள். அமுதசுரபி என்ற வற்றாத பாத்திரம் மணிமேகலைக்குக் கிடைத்தது இந்த வைகாசி விசாகத்தில் தான் மனிதப் பிறவி இறைவனின் அருட்கொடையாகும். ஆத்மஜோதி ஐயா வைகாசி விசாகத்தில் அவதரித்தார் என்றால் என்னே ஆத்மஜோதி ஐயாவின் பூர்வ புண்ணியம்.

ஆத்ம ஜோதி சுவாமிகள் அவதரித்து 100 ஆண்டுகள் ஆகின்றன. அவர் அவதாரம் செய்த 100வது ஆண்டை இன்றைய தமிழ் உலகிற்கு நினைவூட்ட, ஓர் உன்னத விழாவாகக் கொண்டாடி இந்தப் பெருமகனின் ஆற்றலையும் பெருமைகளையும் தமிழ் உலகிற்கு உணர்த்த வேண்டும் என்று எண்ணிய அவரது ஒரே ஒரு உத்தம சீடர் திருமுறைச்செல்வர் சிவ முத்துலிங்கம் அவர்களை நாம் பாராட்டி வாழ்த்த வேண்டும். ஐயா அவர்கள் தம் கைப்பட எழுதிய முதல் அரிய நூல் திருமுறைக்காட்சி என்னும் நூலாகும். திருமுறைகளின் பெருமையை உலகிற்கு உணர்த்தும் அரிய நூல். நாளைய சமுதாயம் நாத்தீகக் கோரப் பிடியால் சிக்கித் தவிக்காமல் வாழ வேண்டும் என்ற நோக்கில் எழுதப்பட்ட அரிய நூல். திருமுறைகளின் பெருமையை உணர்த்த அவரது உத்தம சீடரும் திருமுறைகளைப் போற்றி வணங்குகின்றார். இறைவனை அடைவதற்கு உரிய நெறிகளில் சிறந்த நெறி பக்தியுடன் பாடுவதேயாகும் என்கிறார் சுநதரர். பாத மலர் மீதில் மலர் தூவிப் பாடுமவர் தோழன் என்கிறார் அருணகிரிநாதர் திருப்புகழில். திருமுறைச் செல்வரும் தன் குருவின் வழியில் நின்று 20 ஆண்டுகளுக்கு மேலாகத் தன் குருவினால் ஸ்தாபிக்கப்பட்ட இந்து சமயப் பேரவையின் தொண்டர்களை ஈடேற்ற, பன்னிரு திருமுறைகளையும் ஆண்டு தோறும் ஓதி, விழா எடுத்து நமது சமயத்துக்கு அரும் பெரும் தொண்டு ஆற்றுகின்றார் என்றால் என்னே அவரின் குருபக்தி.

இப் பூவுலகில் 77 ஆண்டுகள் மட்டும் வாழ்ந்த ஆத்மஜோதி ஐயா சிறந்த கல்விமான் என்பது எல்லோரும் அறிந்ததே. கல்வியின் பயன் அறிவு, அறிவின் பயன் ஒழுக்கம், ஒழுக்கத்தின் பயன் அன்பு, அன்பின் பயன் அருள், அருளின் பயன் துறவு, துறவின் பயன் இறைவனுடன் ஒன்று சேர்தல் என்பதனை உலகிற்கு நிரூபித்துக் காட்டியவர். சீலம் என்ற பண்பு நிறைந்தவர். நற்குலத்தால் வருவதே சீலம். அப்பரும் சுந்தரரும் சிவபெருமானை சீலமே என்று அழைப்பதை நாம் திருமுறையில் படித்தும் இருக்கின்றோம். சீலம் என்ற பண்பு உள்ள இடத்தில் தருமம் இருக்கும். தருமம் உள்ள இடத்தில் சத்தியம் இருக்கும். சத்தியம் உள்ள இடத்தில் ஒழுக்கம் இருக்கும். ஒழுக்கம் உள்ள இடத்தில் மனப்பலம் இருக்கும். மனப்பலம் உள்ள இடத்தில் இறைவன் இருப்பான். ஆத்மஜோதி ஐயாவின் உள்ளத்தில் இறைவன் இருப்பான். ஆத்மஜோதி ஐயாவின் உள்ளத்தில் இறைவன் இருக்கிறான் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். அன்பால் எதையும் சாதித்து விடுவார்.

மலை நாட்டில் ஒரே பாடசாலையில் இறுதிவரை கடமையாற்றி, மலைநாட்டு மக்கள் மத்தியில் சமய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியவர். கோயில்களில் கூட்டுப்பிரார்த்தனை, பஜனைகள், சமயப் பேச்சுகள், கலந்துரையாடல்கள் செய்தவர். அன்பும் பண்பும் நிறைந்த ஒழுக்கசீலர்., பழுத்த பேச்சாளர், பற்றற்ற துறவி. நாவலப்பிட்டி மக்களும் மனதால் உயர்வடைந்தார்கள். இவர் ஆற்றிய பணிகளில் அந்தர் யோகமும் பாதயாத்திரையும் மிகவும் பிரபல்யம் அடைந்தது. 1983 யூலை கலவரத்தில் தன்வாழ்நாள் முழுவதும் அலைந்து தேடிய அரிய நூல்களையும் இழந்து தன் உடமைகள் எல்லாவற்றையும் இழந்து அகதியாக வடக்கே தன் இனத்தை நாடி வந்தார்.

நம்மில் அவரை அறியாதவர் இருக்கவே முடியாது. அநாதைப் பிள்ளைகளுடன் தூய பிரமச்சாரியாகவே வாழ்ந்து இறைவனை திரிகரண சுத்தியுடன் வணங்கி, சமயப் பணிக்கென்றே தன்னை அர்ப்பணித்து கனடாவில் நம்மவர் மத்தியில் எங்களை எல்லாம் கண்ணீர்க் கடலில் தவிக்கவிட்டு மறைந்த பற்றற்றதுறவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிற்கின்ற நின்னை நினைக்கின்றேன் யான்

வடிவேலு ஞானகாந்தன்

"தமிழன் தவம் செய்தானா? ஆம் செய்தான்! அதற்குச் சந்தேகம் எதுவும் வேண்டாம். தமிழனின் தவமே உருவாக உதித்தவர் யோகி சுத்ததானந்த பாரதியார் அவர்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே உள்ள தமிழர்களின் தவத்தால் பிறந்தவர் வள்ளுவர். உலகம் தோன்றிய நாள் தொட்டு இன்றுவரை உள்ள தமிழனின் தவத்தாலும் இனிமேல் வரும் தமிழன் செய்யும் தவத்தாலும் பிறந்தவர் சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்கள்"

மேலே காட்டிய பந்தி ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகளினால் 'பாரதசத்தி' என்ற தலைப்பிலே சுவாமி சுத்தானந்தரின் மறைவை யொட்டி எழுதிய கட்டுரையின் முதல் பந்தியாகும். அடியேன் ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகளைப் பற்றி எண்ணும் தோறும் மேற் காட்டிய பந்தி ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகளுக்கே பொருத்தமாக இருப்பதை நன்கு உணர்வேன்.

யாருக்கும் அஞ்சாமல் அன்பறங் காப்பவன்
யாரவனே மனிதன்
பேருக்கும் கீர்த்திக்கும் பேராசை யில்லாப்
பெரியவனே மனிதன்
வேருக்கு வார்த்திடு நீரினைப் போல
விருப்புடன் வாழ்க்கை யெல்லாம்
ஊருக்கு பகாரமாக உதவிடும்
உத்தமனே மனிதன்.

என்ற சுத்தானந்தரின் பாடலுக்கு ஏற்ப வாழ்ந்து காட்டிய உத்தம புருடரே ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகள் ஆவர்.

ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகள் பாலர் கல்வியில் மிக்க கவனமாக இருந்தார். குழந்தைகளுக்கு சரியான முறையில் பாடம் புகட்டவேண்டும் என்பதில் மிக்க கவனமாக இருந்தார். அதன் வெளிப்பாடு தான் அவர் எழுதிய மாணவருக்கேற்ற மான்புறு கதைகள் என்ற நூலாகும். "கதைகளை இனிமையாகச் சொல்லவும் வேண்டும். அந்தக் கதைகளைக் கற்கும் பிஞ்சு நெஞ்சங்களிலே நல்லறிவுச் சுடர்களையும் ஏற்றவும் வேண்டும்" என்று குழந்தைகளின் உள்ளப்பாங்கு குறித்து எழுதுகிறார்.

காணுகின்ற எல்லோரையும் குழந்தைகளாகவே காண்பது அவரது பார்வை. குழந்தைகளாகி என்னிடத்தில் வாருங்கள் என்ற யேசுபிரானின் உள்ளம். ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகளின் உள்ளம். பட்டினத்து சுவாமிகள் ஞானிகளின் உள்ளம் குழந்தைகளின் உள்ளம் போல் இருக்கும் என்று பாடியது ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகளுக்கு மிகப் பொருத்தம்.

"பிரார்த்தனை ஒரு மனிதனை பூரணமாக்கிறது. இறைவன்பால் அவனைக் கொண்டு செல்கிறது" என்று" மக்கள் மத்தியிலே கூட்டு வழிபாடுகளை ஏற்படுத்தி குடும்ப சமுதாய ஒற்றுமைக்கு பாடுபட்டார்.

"உலகம் ஒன்று; உலக மக்கள் அனைவரும் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள்; ஆதலால் யாருடனும் பகைமை பாராட்டக்கூடாது யாரையும் வெறுக்கக் கூடாது; இவ்வுலகில் உள்ள எல்லா ஊர்களையும் நமது ஊர்களாகவே எண்ண வேண்டும்; இவ்வுலகில் உள்ள எல்லா மக்களையும் எமது உறவினராகவே நினைக்கவேண்டும்" என்று மக்கள் மத்தியில் உபதேசித்து பிரதேசவாதங்களைக் களைந்து சமுதாய ஒற்றுமையை நிலைநாட்டினார்.

இந்நலம் பொருந்திய ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகளோடு அடியேனும் சேர்ந்து பணி செய்ததை பெரும் பேறாகக் கருதுகின்றேன். தெளிதேனில் தெளிந்தேன் என்ற தலைப்பில் அவரது வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை நூலாக எழுதி அவரின் பார்வைக்கு கொடுத்தபோது என்னை ஆசீர்வதித்துப் பாராட்டினார். எனது அறிஞர்களுடன் அடியேன் என்னும் நூலுக்கு அணிந்துரை தந்து என் தலையிலே தனது கையை வைத்து என்னை ஆசீர்வதித்ததை இன்றும் பெரும் பேறாகக் கருதுகின்றேன். ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகள் இன்றும் என் நினைவில் ஓர் ஞான வெள்ளமாக காட்சி தருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழாலையூர் ஆன்மீக வள்ளல் நாகமணி முத்தையா

**திரு. அ. சிவானந்தநாதன்**
**கனடா**

யாழ்ப்பாணத்து ஏழாலை ஊர் சான்றோர்களின் உறைவிடமாகத் திகழ்ந்தது. இவர்களின் தமிழ்ப் பணியும் சமயப் பணியும் வான்புகழ் கொண்டு விளங்கியது. இறை வழிபாட்டிலும் நம்பிக்கை உடையவர்கள். இவர்களின் அறிவுச் சிறப்பு பாரெங்கும் புகழ்ந்து விளங்கியது. இவ்வரிசையில் புகழ்மிக்கவராக நற்பணி செய்த ஏழாலை ஆன்மீக வள்ளல் நா.முத்தையா சுவாமிகளின் தொண்டும் பெருமைக்குரியது. இவர் நாகமணி பொன்னுப் பிள்ளை தம்பதிகளுக்கு தவப் புதல்வனாகப் பிறந்தார். 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்ற திருவள்ளுவர் வாக்கிற்கமைய 25.05.1918 ஆம் திகதி பிறந்தார். இப்பெரியார் நல்லாசிரியராகவும் அதிபராகவும் மலையகத்தில் உள்ள நாவலப்பிட்டியில் கடமையாற்றி மலையக மக்களின் நன்மதிப்பினைப் பெற்றார். வள்ளலார் இராமலிங்க அடிகளார் போல அறிவொளியை வழங்குவதில் முன்னோடியாகத் திகழ்ந்தார். திருமுருகு மல்லையா கிருபானந்த சுவாமிகள் (09.08.1906 - 7-11-1993) போல சமயப்பணியிலும் முன்னோடியாகத் திகழ்ந்தார். இவர் நாவலப்பிட்டியில் ஆத்மஜோதி நிலையம், ஆத்மஜோதி அச்சகம், ஆத்மஜோதி இதழ் ஆகிய வற்றைத் திறம்படச் செய்து தமிழ்த் தொண்டும் சமயத் தொண்டும் செய்தார். இவர் நேர்மையும் தூய்மையும் கொண்ட உத்தமர். திருமுறை, திருக்குறள், சங்க இலக்கியம் ஆகியவற்றில் தோய்ந்த நாவுடைய பெரியாராக, தெய்வீகப் பெரியாராகத் திகழ்ந்தார். தமிழ் பெரியார்களும் சித்தர்களும் இவரின் நற்பணியை வாயாரப் புகழ்ந்துள்ளார்கள். அடக்கம் உடையவர். இவரின் உயர்வான நற்பணிக்கு நல் ஆதரவை சைவ சமயத் தொண்டர்கள் நல்கினார்கள். திருக்கோயில் வழிபாட்டிலும்,சிவ வழிபாட்டிலும் மிக்க ஆர்வம் உடையவர். நல்லை நகர் நாவலர் பெருமான் காட்டிய நற்பாதையில் தன் பணியைச் சிறப்பாகச் செய்தார். மெய்யடியார்களுக்கும், தன்னை நாடி வரும் அன்பர்களுக்கும் முகமலர்ச்சியோடு உணவளித்து விருந்தோம்பல் செய்தவர். தன்னுயிர் போல எல்லா உயிரையும் நேசிப்பவர். கருணை உள்ளம் கொண்டவர். ஆத்மீக வள்ளல் நா.முத்தையா சுவாமிகள் தனது பணியால் மக்கள் மத்தியில் வானுறையும் தெய்வமாகப் போற்றப்பட்டார். இவரின் சமயப் பதிப்பு நூல்கள் மக்கள் மத்தியில் நற்பெயர் பெற்றுள்ளது. ஆத்மீக வள்ளல் முத்தையா சுவாமிகள் ஆரம்பித்த இந்து சமயப்பேரவை இவரின் குறிக்கோளை நிறைவு செய்வதில் மிக்க ஆர்வம் காட்டியது. 03.07.1994 ஆம் திகதி கனடா மண்ணில் ஒன்ராறியோ இந்து சமயப்பேரவையை சமயப் பெரியார் திரு.நா.முத்தையா அவர்கள் திருமுறைச் செல்வர் சிவசுப்பிரமணியம் சிவமுத்துலிங்கம் இல்லத்தில் ஆரம்பித்து அகம் மகிழ்ந்தார்.

24.09.2004 ஆம் திகதி றிச்மன்ஹில் ஆலயத்தில் நாவலர் சிலை விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவைத் தொடர்ந்து 20 நாவலர் விழாக்களை மொன்றியல், மிசிசாகா, ரொறன்ரோ போன்ற இடங்களில் இந்து சமயப் பேரவை நடத்தியது. இந்துசமயப் பேரவையின் பணிகளில் இப் பணி முக்கியமானதாகும்.

ஆத்மீக வள்ளல் திரு. நா. முத்தையா சுவாமிகள் உத்தமர், நல்லார், பெரியார், ஆத்மீக வள்ளல் என்று மக்கள் போற்றிப் பாராட்டியுள்ளார்கள். 1948ஆம் ஆண்டு திரு. நா. முத்தையா அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட ஆத்மஜோதி இல்லம் கனடா மண்ணிலும் நிலைபெற்றுள்ளது. இது வேர்ச் மவுண்ட் வீதியில் உள்ளது. இங்கு நாவலர் சிலை வழிபாடு தினமும் இடம்பெறுகின்றது. இந்து சமயப்பேரவைத் தொண்டர்கள் இறைவனின் அருளாளர்கள் அருளிய திருப்பாடல்களை முற்றோதி மனநிறைவு பெறுகிறார்கள். அன்பர்கள் செய்யும் தமிழ் நாட்டு தலயாத்திரையிலும் திருமுறை முற்றோதல் சிறப்பாக இடம்பெறுகின்றது. இதில் தமிழ் நாட்டு மெய்யன்பர்கள் பங்குகொள்வது பாராட்டத்தக்கது. மலையகத்தில் வெளியிடப்பட்ட ஆத்மஜோதி இதழ் கனடா மண்ணில் தொடர்ந்து வெளிவருவது குறிப்பிடத்தக்கது. கனடா ஆத்மஜோதி நிர்வாகம் இதன் வளர்ச்சியில் மிக்க அக்கறை கொண்டுள்ளது. ஆத்மஜோதி இல்லத்தில் நூல் நிலையமும் இடம்பெற்றுள்ளது. மாணவர்கள் சமயத்திலும் தமிழிலும் ஆர்வம் கொள்ளக்கூடிய விழாக்கள் மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியில் புகழ்பெற்றுள்ளது. கனடா முருகன் புத்தகசாலை அதிபர் திரு. க. மகேசன் மாணவர்களுக்கு சமய நூல்களை அன்பளிப்புச் செய்து ஊக்கும் தன்மை பாராட்டத்தக்கது. போட்டியில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படுகின்றது.

உலகமெங்கும் தமிழ் மொழியையும் சமயத்தையும் மேன்மைபெறச் செய்வதில் இந்து சமயப்பேரவை தொண்டுப் பணியும் சிறப்பிற்குரியது. ஆத்மீக வள்ளல் திரு.நா.முத்தையா அவர்கள் இறையருள் பெற்ற உத்தமர். அவர் அருளால் சமயப்பணி மேன்மை பெற்று ஓங்கு புகழ் பெறுவதைக் காணலாம். கனடாவிற்கு வருகை தந்த திரு.நா.முத்தையா அவர்கள் 08.09.1995ஆம் திகதி கனடா மொன்றியலில் இறைவன் திருவடியைச் சேர்ந்தார். இறுதி யாத்திரை கனடா ரொறன்ரோவில் இடம்பெற்றது. இதில் பெருந்திரளான தமிழ் மக்கள் பங்குகொண்டு அஞ்சலி செலுத்தி கண்ணீர் மல்கினார்கள். என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற அப்பர் வாக்கினை இறுதி மூச்சு வரையும் காத்து ஒழுகிய உத்தமர். அன்னாரின் (25.05.1918 - 25.05.2018) நூறாவது ஆண்டின் பிறந்த நாளாகும்.



அதிபர் சேவையில் ஓய்வு பெற்றபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றாண்டு காணும் குருதேவர்

**சிவ முத்துலிங்கம்**
**செயலாளர், இந்துசமயப்பேரவை**

என் போன்ற அறிவிலிகளுக்கு குருதேவரின் தரிசனம் அறியாமையைப் போக்கிற்று. அவரின் நயன தீடசை என் உள்ளத்தை புனிதமடையச் செய்தது.அவரின் உபதேசம் என் மனதில் உள்ள மாசுகளை அகற்றியது. அவருடைய ஸ்பரிச தீட்சை என்னையே மெய்மறக்கச் செய்தது. உலகியல் வாழ்விலே உழன்று தடுமாறி பல வாழ்வியல் சிக்கலில் அகப்பட்டு வெளியில்வரமுடியாமல் தவித்து அல்லல்உற்ற வேளையில் அடியேனை ஆட்கொண்டு ஆத்மீகப்பணியை செய் எனஉணர்த்தாமல் உணர்த்தி என்னை ஈடேற்றிய குருதேவர் அவர்களுக்கு பலகோடி வணக்கங்கள். ஐயா எக்காலமும் என்னை கை விடமாட்டேன் என மலேசியாவில் இருந்து கடிதம் எழுதினீர்கள். இன்றுவரை சூக்கும நிலையில் இருந்து என்னை பாதுகாத்துவருவதை நான் உணருகின்றேன். அடியேன் உங்கள் அனபுக்கட்டளையை ஏற்று ஆன்மீகப்பணிசெய்ய நீங்கள் என் குடும்பச் சுமை களை சுமக்காமல் சுமந்து என்னை மெய்சிலிக்க வைத்தீர்கள் ஐயா எண்ணும்போது என்னை அறியாமல் கண்கள் கலங்குகின்றன. ஊழ்வினையின் பிரகாரம் நான் பலநோயினால் அவதியுற்றாலும் நோயின் தாக்கம் தெரியாமல் என்னை காத்து என்உணர்வில் கலந்து என்னை வழிநடத்துகிறீர்கள். உங்கள் அன்பை எண்ணிப் பெருமிதம் அடை கின்றேன். ஐயா நீங்கள் பூத உடலை விட்டு 23 வருடங்களாகின்றன. எங்கள் இந்துசமயம் ஆத்மா நித்தியமானது அழிவில்லாதது என பகருகின்றன. நீங்களோ ஜீவன் முத்தி அடைந்த ஆன்மா. உங்களுடைய நிலைப் பேற்றை அடியேன் தியானம் இருக்கும்பொழுது இரண்டு முறை அககாட்சியாகக் கண்டு மகிழ்ந்தேன். 12வருடங்களுக்கு முன்பு இறிச்மன்கில் இந்து ஆலயத்தில் நடராசர் சந்நிதியில் நடராசப் பெருமானுக்குக் கீழ் பத்மாசனததில் வீற்றிருந்து காட்சி அளித்தீர்கள். அடியேனும் தங்களின் கட்டுரைத் தொகுதிகளை தொகுத்து தெய்வீகவாழ்க்கை என்னும் நூலை வெளியிடும் பொழுது அக் காட்சியை அதன் அட்டைப் படமாகப்பதித்து மனத்திருப்தி அடைந்தேன். உங்கள் ஆச்சிரமத்தில் அடியேன் சிவபூசை செய்த பின்பு தியானத்தில் இருந்த பொழுது நீங்கள் சிவனுடன் ஐக்கியமான காட்சியை காட்டினீர்கள். உங்கள் அருட்கடாட்சம் எங்களுடன் நிறைந்திருப்பதை அடியேனும் என்னை சார்ந்தவர்களும் உணருகிறோம்.

ஐயா நீங்கள் 1939 ஆம்ஆண்டு மலை யகத்தில் நாவலப்பிட்டியில் அமைந்துள்ள சென்மேரீஸ் வித்தியாலையத்தில் ஆசிரியப்பணியை ஏற்றீர்கள் அப்பொழுது உங்களுக்கு 21 வயது. மலையகத்தில் வாழ்ந்த மக்களோ பாமரமக்கள் கல்வி அறிவில்லாதவர்கள். 79 வருடங்களுக்கு முந்திய நிலையைத்தான் எழுதுகின்றேன். எங்கள் யாழ்குடா நாட்டில் இருந்து மலையகத்தில் பல ஆசிரியர்கள் கல்வி கற்பித்தார்கள். யாராகிலும் தொடர்ந்து மலையகத்தில் தங்கியிருந்து கல்வி கற்பித்தது கிடையாது. தான் உண்டு தன் குடும்பம் உண்டு என யாழ்ப்பாணத்திற்கு மாற்றம் எடுத்துத் திரும்பி விடுவார்கள். மலையகத் தேயிலை றப்பர் தோட்ட நிர்வாகப் பாடசாலைகளில் கல்வி கற்பித்த ஆசிரியர்களும் தங்கள் கடமையை ஒழுங்காகச் செய்தது குறைவு. 43 வருடங்கள் மலையகத்தில் வாழ்ந்து 37 வருடங்கள் ஆசிரியராகவும் அதிபராகவும் பணியாற்றினீர்கள்.உங்கள் தன்னலமற்ற சேவையால் கல்வியிலும் சமய அறிவிலும் அற வாழ்விலும மலையகம் மேன்மை அடைந்தது. உங்களிடம் கல்வி கற்ற பலர் ஒழுக்க சீலர்களாகவும் ஆத்மீக விழிப்புணர்வு உள்ளவர்களாகவும் கல்விமான்களாவும் பலநாடுகளில் வாழுகிறார்கள்.உங்களை ஆசிரியராக மாத்திரம் அல்ல தங்கள் ஞானகுருவாகப் போற்றி துதிக்கும் மாணவர்களையும் நான் சந்தித்திருக் கின்றேன். மலையகத் தொழிலாளிகளுக்கும் மாலைநேரங்களில் வகுப்புக்களை நடத்தி கல்வி அறிவுட்டியுள்ளீர்கள். ஒவ்வொரு லயன் லயன் ஆக ஏறிப் பெருந்தோட்டத் தொழிளாளிகளுக்கும் நல்லறிவுச்சுடர்களை ஏற்றியிருக்கிறீர்கள்.கூட்டு வழிபாடுகளையும் கூட்டுப்பிரார்த்தனைகளையும் நடத்தியுள்ளீர்கள் இன்று மலையகத்தில் மதுபானம் அருந்திய பலர் மது அருந்துவதை உங்களால் நிறுத்தியுள்ளார்கள். அங்கே ஒரு ஆத்மீக ஒளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீசுகின்றது என்றால் அதற்கு நீங்களே காரணம். 1948 ஆம் ஆண்டு தொடக்கம் 1983ஆம் ஆண்டு வரை 35 வருடங்கள் இல்லறஞானி திரு க. இராமச்சந்திராவுடன் சேர்ந்து ஆத்மஜோதி சஞ்சிகையை வெற்றிகரமாக நடத்தியுள்ளீர்கள். 1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தின்பொழுது உங்கள் அச்சுகூடமும் ஆத்மஜோதி நிலையமும் நூல் நிலையத்தில் உள்ள பலஇலட்சம் பெறுமதியான நூல்களும் தீக்கிரையாயின. நீங்கள் பற்றற்ற துறவியாகையால் எல்லாம் வல்ல இறைவனிடம் ஒப்புக்கொடுத்திட்டு சாவகச்சேரிக்குச் சென்று உங்கள் தம்பியார் வீட்டில் வாழ்ந்தீர்கள். 43 வருடங்கள் உங்களை உருக்கி மலையகத்திற்கு நீங்கள் செய்தபணிகள் காணும் என இறைவன் நினைத்தார் போலும்.

1983 ஆம் ஆண்டு சாவகச்சேரியில் குடியேறியபின் போராட்டச்சூழலால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு மத்தியில் அமைதியை ஏற்படுத்த விரும்பினீர்கள். கிராமங்கள்தோறும் சற்சங்கவட்டத்தை தொடங்கிஅந்தந்த ஊரில் உள்ளசைவப்பெரியார்கள் மூலம் சற்சங்கத்தை நடத்தி ஆன்மீகப்புரட்சியை செய்தீர்கள்.ஆலயங்கள் தோறும் அடியார்களையும் பக்தர்களையும் அழைத்துக்கொண்டு பாதயாத்திரை சென்றீர்கள். அதனால் எமது மக்களின் மனதில் அமைதி பிறந்தது.தங்களை எந்தவித பிரச்சனை களிலும் கடவுள் காப்பாற்றுவார் என்ற மன உறுதி பிறந்தது. வீடுகளிலும் ஆலயங்களிலும் கூட்டுப் பிரார்த்தனை நடத்தியதால் அந்த ஆன்மீக அலை எங்கும் ஆன்மீக சுபீட்சத்தை ஏற்படுத்தியது.

ஐயா நீங்கள் ஒரு நைட்டிகப் பிரமச்சாரி. ஒரு கொள்கைவாதி. நேரியபாதையில் உன்னத தெய்வீக இலட்சியத்துடன்வீறுநடைபோட்ட ஆத்ம பெலமுள்ள வீரத்துறவி. சுவாமி விவேகானந்தரின் வீரமும் அஞ்சாநெஞ்சமும் உங்களிடம் இருந்தது. ஐயா நீங்கள் அழகான வசீகரமான ஆண்பிள்ளை. பலர் பெண் கொடுப்பதற்கு தயாராய் இருந்த காலம். சரித்திரப்பிரசித்திபெற்ற திருக்கேதீஸ்வர ஆலயத்தில் நடைபெற்ற அந்தர்யோக நிகழ்வில் பங்குபற்றியபின் சகலருக்கும் முன்னிலையில் வாழ்நாள் முழுவதும் பிரமச்சாரியாக இருந்து ஆத்மீக சமூகப்பணி செய்வேன் என்று சபதம் எடுத்தீரே! என்னே உங்கள் வீரம். மகாபாரதத்தில் வரும் பீஸ்மர் போன்று ஐயாவையும் எணணத் தோன்றுகின்றது. ஆங்கிலேயர் தங்கள் ஆடசிக்காலத்தில் எப்படி திட்டமிட்டு சைவத் தமிழ் மக்களை சமயம் மாற்றுகிறார்கள் என்பதை கண்டறிந்து வெகுண்டு எழுந்தார் நாவலர்பெருமான். தன் வாழ்நாள் முழுவதும் பிரமச்சாரியாக இருந்து சைவத் தமிழ்ப் பணி செய்வேன் என்று தீர்மானித்து தனித்து நின்று நிறுவனம் செய்யமுடியாத பணிகளைச் செய்து சைவத்தின் காவலரானார். ஐயா அவர்களும் நாவலருக்குபின் நாவலர் வழி வந்த சைவத்தின் காவலரே ஆவார். ஐயா அவர்கள் ஒரு நவீன நாவலர். இருவரின் நோக்கம் ஒன்றுதான் நாவலர்பெருமான் கண்டித்து மக்களை திசை திருப்பினார். நீங்கள் உங்கள் உள்ளத்தில் பீறிட்டு எழுந்த அன்பினால் போதனைகளை செய்து உங்கள் வழிக்கு திசை திருப்பினீர்கள். உங்கள் குடும்பத்துக் காகவோ உங்களுக்காகவோ வாழாமல் தமிழ் சமுதாயத்திற்காக உங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்த பெருமகன் ஐயா நீங்கள்!

கனடாவில் சைவ சித்தாந்த மகாநாட்டிற்கு 1994 ஆம் ஆண்டில் நீங்கள் வருகை தந்திருந்த பொழுது கனடாவில் 45 நாட்கள் தங்கியிருந் தீர்கள். ஆலயங்களில் சொற்பொழிவுகள்செய்தும் வீடுகளில் கூட்டுப் பிரார்த்தனைகள் செய்தும் ஆன்மீக விழிப் புணர்வை ஏற்படுத்தீனீர்கள். அடியேனின் வீட்டிற்கும் கூட்டுப்பிரார்த்தனைக்காக வந்திருந்த பொழுது உங்கள் அருளுரையின் பொழுது எங்கள் மொழி சமயம் பண்பாடு கலாச்சாரம் ஆகியன எமது தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் காப்பாற்றப்படவேண்டும் என்று வற்புறுத்தி உரையாற்றுனீர்கள். அதன் எதிர் ஒலிப்பாக இங்கே ஒருசமய ஸ்தாபனம் வேண்டுமென்ற எண்ணம் ஓங்கி ஒலித்தது. அங்கே கூடியிருந்தவர்களுக்கு மத்தியில் அன்றே சமய ஸ்தாபனம் அமைக்கவேண்டும் என்று முடிவு செய்யப்பெற்று அமைப்பதற்கான கலந்துரை யாடல் நடைபெற்றது. ஐயா அவர்கள் யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவைக்குத் தலைவராக இருப்ப தாலும் அநாதைப்பிள்ளைகளை சைவச்சிறுவர் இல்லத்தில் வளர்த்துக்கொண்டிருப்பதாலும் தொடங்கும் நிறுவனத்திற்கு இந்துசமயப் பேரவை என்று பெயர் வைப்பதாக முடிவு செய்து நிர்வாகமும் தெரிவு செய்யப்பெற்றது. 3-7-1994 இல் ஆரம்பிக்கப் பெற்ற பேரவை 30-7-1994 அன்று ஆத்மீகவள்ளல் ஐயா அவர்களுக்கு பெரிய அளவில் மண்டபம் நிறைந்த சனக்கூட்டத்துடன் பாராட்டுவிழாவை நடத்தியது. அன்று தொடக்கம் இந்து சமயப் பேரவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த 24 வருடங்களாக பலதரப்பட்ட சமயப் பணிகளை ஆற்றி வருகின்றது.ஆன்மீக சமய சம்பந்தமான 56 நூல்களை வெளியிட்டு உள்ளது. ஆத்மஜோதியை காலாண்டு சஞ்சிகையாக 3000 பிரதிகளை வெளியிட்டுவருகின்றது. 2004 ஆம் ஆண்டு நாவலர் பெருமானின் வெண்கல திரு உருவச்சிலையை செய்து 20 விழாக்களை ரொறன்ரோ, மிசிசாக, மொன்றியல் ஆகிய இடங்களில் நடத்தியிருந்தோம். 2000 ஆம் ஆண்டு தொடக்கம் கடந்த 19 வருடங்களாக பன்னிரு திருமுறைகளை முற்றோதி திருமுறை விழாக்களை வருடந்தோறும் நடத்திவருகின்றோம். 2003, 2005, 2007, 2010, 2013 ஆகிய வருடங்களில் பேரவையின் சார்பில் அடியேனின் ஒருங்கிணைப்பில் இந்திய திருத்தல யாத்திரை அழைத்துச் சென்றிருந்தோம். ஐயா நாங்கள் செய்த இவ்வளவு பணிகளும் நீங்கள் எங்களைக் கருவிகளாக வைத்துக்கொண்டு நீங்கள் உள்நின்று இயக்குகிறீர்கள் என்றே உணருகிறேன். ஐயா நீங்கள் எங்களின் அழைப்பை ஏற்று 1995 ஆம் ஆண்டு திரும்பவும் கனடாவிற்கு வருகை தந்திருந்த பொழுது இரண்டு நாட்கள் முழுநாள் அந்தர் யோக நிகழ்ச்சிகளை நடத்தியிருந்தோம். நீங்கள் உரையாற்றியிருந்த 90 நிமிட ஒலி இழை நாடாவை வெளியிட்டு இருந்தோம். 4-9-1995 அன்று நீங்கள் எழுதிய பத்து மகான்களைப்பற்றிய தரிசனம் என்ற நூலும் பேரவையின் தலைவர் கந்தவனம் ஐயா எழுதிய குருதேவரின் வாழ்க்கை வரலாறு அடங்கிய முத்தானதொண்டர் என்ற நூலும் உங்கள் முன்நிலையில் வெளியிட்டு இருந்தோம்.விழா நாயகனாகிய ஐயா அவர்கள் பதிலுரை வழங்கும் பொழுது அடியேன் சுமக்க முடியாத பாரத்தை சுமந்து கொண்டு இங்கே வருகை தந்தேன். இறக்கிவைக்க இடம் இல்லையே எனக் கவலை கொண்டிருந்தேன். கனடாவில் இறக்கி வைக்க இடம் கிடைத்து விட்டது. இனி அவர்கள் பார்த்துக்கொள்ளுவார்கள் எனக்கூறியிருந்தார். நீங்கள் இறக்கி வைத்த பாரத்தை பேரவை நிர்வாகிகளாகியநாம் கடந்த 23 வருடங்களாகச் சுமந்து நீங்கள் எங்களுக்கு கூறிவிட்டுச் சென்ற பல பணிகளை நிறைவேற்றியுள்ளோம். 1995 ஆம் ஆண்டு முத்துலிங்கம் எக்காரணம் கொண்டும் இந்துசமயப்பேரவையை விட்டு வெளியேறாதே இது என் அன்புக்கட்டளை எனக்கூறியிருந்தீர்கள். என் உள்ளம் கவர்ந்த உங்களின் கூற்றை சிரமேற் கொண்டு கடந்த 24 வருடங்களாக பலநோய்களுக்கு ஆளாகியும் விசமிகளின் பல தொல்லைகளை அனுபவித்தும் பேரவையை கட்டிவளர்த்து எங்களுக்கென ஒரு சொந்த இடத்தையும் வாங்கி தெய்வீக அருள் மிளிரச் சைவ ஆச்சிரமம் போன்று நடத்துகின்றோம். ஆத்மஜோதி நூல்நிலையம் என்ற பெயரில் 4000 **க்குமேறபட்ட** நூல்களையும் ஆத்மஜோதி இல்லம் என்று நாம் அழைக்கும் ஆச்சிரம அடித்தளத்தில் சேகரித்து வைத்துள்ளோம் என்பதையும் குறிப்பிடவிரும்புகின்றேன் உங்கள் ஆசிகளும் உங்கள் அன்பும் எங்களுடன் நிறைந்திருப்பதால் நாங்கள் செயற்படுத்துகின்றோம் உங்களுக்கு என் பலகோடி வணக்கங்கள்

**தமிழ் மொழி வளர்ந்தால் சைவம் வாழும்!**
**சைவம் வாழ்ந்தால் தமிழ் மொழி வளரும்!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒவ்வொரு ஆத்மாவும் ஜோதியாகப் பிரகாசிக்க வேண்டும்

நா. நடேசன், ஆசிரியர்
இலங்கை

ஈழம் எங்கள் நாடடா. அது எங்கள் வீடடா என்றான் ஒரு கவிஞன். ஈழத்தின் தலையாக விளங்குவது வடமாகாணம். அப்பதியில் உள்ள ஒவ்வொரு ஊருக்கும் கிராமத்தின் மண்ணிற்கும் ஒவ்வொரு தனிச் சிறப்பும் உண்டு. பாடுபடுவோருக்கு பொன் அள்ளிக் கொடுக்கும் பூமி. அங்கு ஏழாலை என்னும் கிராமம் கிராமங்களுக்குள் பெரிய நிலப்பரப்பைக் கொண்ட கிராமமாக விளங்கியது.

பூமி பொன்னையும் பொருளையும் மட்டும் கொடுக்க வில்லை மாசில்லாத பொன் மனம் படைத்த அறிஞர்களை, ஞானிகளை, அருள் வாக்கு வழங்கும் தவச் செல்வர்களையும் வழங்கிய பெருமையும் சிறப்பும் உடைய கிராமம்தான் ஏழாலை. ஏழு ஆலயங்கள் சிறப்பாக ஆதியில் அக் கிராமத்தில் அமைந்திருந்ததால் ஏழு ஆலயங்கள் மருவி ஏழாலையானது. இன்று அக்கிராமத்தில் ஒவ்வொரு ஒழுங்கையிலும் பல ஆலயங்கள் முளைத்து எழுந்து அருள் ஒளி வீசுகின்றன.

டாக்டர் நந்தி அவர்களின் கூற்றுப்படி பொன்னுப்பிள்ளைக்கும் நாகமணிக்கும் கிடைத்த முத்தாக திகழ்பவர் ஆத்மஜோதி முத்தையா. அன்னாரின் பிறந்த நூற்றாண்டை சீரும் சிறப்புமாகக் கொண்டாடும் கனடா இந்து சமயப் பேரவை சகல உறுப்பினர்களும் பெருமைக்குரியவர்கள். பாராட்டத்தக்கவர்கள்.

தங்கமான மனம் படைத்த அன்னாரின் பொன் மொழிகளைத் தொகுத்து ஆத்ம ஜோதியில் வெளியிடும் சிவ முத்துலிங்கம் ஐயா அவர்களை மறக்கமுடியாது.

இறையருள் பெற்ற ஆத்ம ஜோதியார் ஒவ்வொரு ஆத்மாவும் ஜோதியாகப் பிரகாசிக்க வேண்டும் என்பதற்காக தன் மனம், வாக்கு, காயம், ஆகிய முக்கரணங்களையும் அர்ப்பணித்த பெருந்தகையாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஜோதி ஒரு அணையா ஜோதி

திருமதி இராசலட்சுமி சண்முகலிங்கம்

ஆத்மஜோதி ஐயா அவர்கள் யாழ்ப்பாணத்தில் ஏழாலைக் கிராமத்தில் 25-5-1918 ஆம் ஆண்டு நாகமணி - பொன்னுப்பிள்ளை தம்பதியினருக்கு உத்தம புத்திரனாய் அவதரித்தார். அவர் தமது ஆசிரிய பயிற்சிக் கல்வியை திருநெல்வேலியில் பயின்றார். பின் நாவலப்பிட்டியில் ஆசிரியராக தனது பணியைத் தொடர்ந்தார்.

நாவலப்பிட்டியில் ஆசிரியராகப் பணிபுரியும் காலத்தில் அவர் பிள்ளைகளுக்கும், மக்களுக்கும் கல்வி அறிவு ஊட்டியது மட்டுமல்லாது கஷ்டப்பட்ட குடும்பங்களுக்கும் உதவி புரிந்தார். அவர் மக்கள் மனதில் என்றும் நிலைதிருக்கும் மகான் என்றால் மிகையாகாது. அவர் அங்கு ஓர் அச்சுயந்திர சாலையை நிறுவி ஆத்மஜோதி சஞ்சிகையை திரு. இராமச்சந்திராவுடன் சேர்ந்து வெளியிட்டார். அவரின் ஆத்மஜோதி சஞ்சிகை உலகம் அறியும், போற்றும் ஓர் சஞ்சிகையாக மிளிர்கின்றது. இன்றும் கனடாவில் அவரின் உத்தம சீடராகிய இந்து சமயப் பேரவையின் செயலாளர் சிவ. முத்துலிங்கம் அவர்களின் பெரு முயற்சியால் வெளியிடப்பெற்று வருகிறது.

முத்தையா சுவாமிகள் ஒரு பெரிய மகான். அவரின் பிறந்த இடத்தில் உள்ள ஞானவைரவர் ஆலயத்தை பரிபாலித்து அங்கு கூட்டுப்பிரார்த்தனை, சமயச் சொற்பொழிவு ஆகியவற்றை மக்கள் மயப்படுத்தினார். பாதயாத்திரை செய்து மக்களுக்கு சைவ சமயத்தின் பெருமையை உணர்த்தினார்.

இவர் இலங்கையில் மட்டுமல்லாது இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, சுவிற்சலாந்து, கனடா ஆகிய நாடுகளுக்குச் சென்று தமது சமயப் பணியை மேற்கொண்டார். தமிழுக்கும் சைவ சமயத்துக்குமாக தம்மை அர்ப்பணித்த ஓர் மகான். அவர் கம்பீரமான நெடிய தோற்றம், பார்த்தவர்கள் மயங்கும் அழகு, நித்திய பிரமச்சாரி. வெள்ளை வேட்டி, நைசனல், சேட், சால்வை அணிந்திருப்பார் அவரின் முகத்தின் வசீகரம் பார்ப்பவரை கவரும்.

இலங்கையிலும், கனடாவிலும் இந்து சமயப் பேரவையை நிறுவினார். கனடாவில் அவர் நிறுவிய இந்து சமயப் பேரவையில் அடியேனும் ஆயுட்கால உறுப்பினர், நிர்வாக சபை உறுப்பினராக இருப்பதையிட்டு பெருமைப்படுகிறேன். 1994ஆம் ஆண்டு ஆத்மஜோதி ஐயா கனடாவிற்கு வந்த பொழுது 'இந்து சமயப் பேரவையை' அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். அவர் தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்தவர். பாதயாத்திரையை உருவாக்கி திறம்பட நடத்தினார். பாதயாத்திரை மக்களுக்கு ஓர் எழுச்சியை உருவாக்கியது. ஆத்மஜோதி சுவாமிகள் இல்லாவிட்டால் நாங்கள் திருமுறை ஓதும் பழக்கததை அடைந்திருக்க மாட்டோம். பல வருடங்களாக நயினாதீவு நாகபூசணி அம்மன் கோவிலில் இருந்து பாதயாத்திரையைத் தொடங்கி யாழ்ப்பாணம் நல்லூர் கந்தன், தேர்த்திருவிழாவில் வந்தடையும். பாதயாத்திரையில் பல எண்ணிக்கையான பக்தர்கள் கூடி வருவார்கள். பாதயாத்திரையை வழிநடத்தும் எங்கள் ஆத்மஜோதி சுவாமிகள் தாளத்துடன் பல தேவாரத் திருமுறைகளைப் பாடி முன்செல்ல பின்னே பல நூறு பக்தர்கள் பின் தொடர்வார்கள்.

அவர்தான் பிறந்த ஊரான ஏழாலையில் தனது குலதெய்வமான ஞானவயிரவர் கோயிலில் தன் சிறு வயதில் சரியைத்தொண்டைச் செய்தார். ஏழாலையில் அவரின் திருஉருவச் சிலையை புணருத்தானம் செய்து வைத்தார்கள். அவரின் நினைவாக ஓர் மணி மண்டபம் கட்டியுள்ளார்கள்.


அவர் நிறுவிய இந்து சமயப் பேரவை கனடாவில் இன்றும் பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறது. அவரின் பெயரால் ஆத்மஜோதி நிலையம் என்ற இல்லம் ஒன்று வாங்கி அதில் பல தொண்டுகளை செய்து கொண்டு வருகிறது. பன்னிரு திருமுறைகளை வருடம் தோறும் முற்றோதி பூர்த்தி விழாவை செய்து வருகிறார்கள். பத்தொன்பதாவது வருடம் இப்பொழுது முற்றோதி வருகிறோம். பல மகான்களின் குருபூசைகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்புகழ் முற்றோதல், யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை முற்றோதல், சித்தர் பாடல்கள் முற்றோதல் முதலியன செய்து வருகிறோம். அவரின் சீடர் சிவ. முத்துலிங்கம் அவர்கள். பல நூல்களை பெற்று நூல் நிலையத்தில் வைத்தல், பல மகான்கள் ஜெயந்தி விழாக்கள், குருபூசைகள், திருமுறை முற்றோதல், கனடா வரும் மகான்கள், சுவாமிகளை வரவேற்று உபசரித்தல் முதலிய பல அரிய தொண்டு களை இந்து சமயப் பேரவை உறுப்பினர்கள், மற்றும் பல பெரியோர் களுடன் சேர்ந்து செய்து வருகிறார். ஒவ்வொரு திருமுறைப் பூர்த்தி விழாவின் பொழுதும் ஒவ்வொரு சமயப் புத்தகங்களை வெளியிட்டு வைக்கிறார். ஆத்மஜோதி சுவாமிகளை பேரவை அடியார்கள் என்றும் மறக்கமுடியாது. அவரின் சமய நூல்கள் பல எமது இந்து சமயப் பேரவை நூல் நிலையத்தில் இருக்கிறது. எங்கள் அனைவரின் மூச்சே அவரின் நினைவு. காலத்தால் அழியப்படாது. இவற்றிற்குக் காரணம் எங்கள் பேரவைச் செயலாளர் சிவ. முத்துலிங்கம் ஐயா அவர்களே.

யாழ்ப்பாணம் ஏழாலையில் பிறந்து வளர்ந்து நாவலப்பிட்டியில் ஆசிரியத்தொழில் புரிந்து, அங்கு தனது ஆன்மீகத் தொண்டைத் தொடர்ந்தார். சைவ சமயத்தைப் பேணி வளர்த்தார். மக்களின் மனத்தில் நிலையான இடத்தைப் பிடித்தார். பல நாடுகளுக்குச் சென்று தமிழையும் சைவ சமயத்தையும் வளர்த்தார். இன்று அகில உலக மக்களின் மனதிலும் நிலையான இடத்தைப் பிடித்திருக்கிறார். அவர் 1995ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 8ஆம் திகதி தனது பூதஉடம்பு நீங்கி புகழ் உடம்பு எய்தினார். அமமகானின் பணிகளைத் தொடர்வோமாக. அதுவே நாம் அவருக்குச் செய்யும் அஞ்சலியாகும். அவரின் ஆத்மீக ஒளி எமது பணிகளுக்கு என்றும் அணையா ஜோதியாக இருந்து வழிகாட்டும்.



சிரசில் தேங்காய் உடைக்கும் சித்தருடன்



இந்தோனேசியாவில் ஒரு அடியாருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் உள்ளம் கவர்ந்த ஞானி

சு. திருச்செல்வம்

இந்து மதம் மனிதன் மனிதனாக வாழ்வதற்குரிய நெறி முறைகளைச் சொல்கிறது. வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய பண்பகளைச் சொல்கிறது. மனிதப் பண்புகளே அதன் ஆதார சுருதியாகும். ஆதி காலத்தில் இப்பண்புகள் குரு சிஷ்ய பரம்பரை மூலம் பின்பற்றப்பட்டன. பொய், கொலை, களவு, காமம், மது போன்ற பஞ்சமா பாதகங்களிலிருந்து விலகி இருக்கவேண்டிய தேவையை குருவாயிருப்பவர்கள் போதித்தார்கள். இப்பாதகங்களில் ஈடுபட்டால் ஏற்படும் விளைவு களையும் கூறி நெறிப்படுத்தினார்கள்.

பின் திண்ணைப் பள்ளிகளிலும், பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் சமய பாடங்களினூடாக இவை போதிக்கப்பட்டன. இந்தக் கல்வி நிலையங்களில் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு உதாரண புருசர்களாய் விளங்கினார்கள்.

சிறு வயதில் இருந்தே ஆத்திசூடி கொன்றை வேந்தன் போன்ற நீதி நூல்கள் கற்பிக்கப்பட்டன. வாழ்க்கை முறையும் போதிக்கப்பட்டது. பெற்றோர் ஆசிரியரிடையே நட்புறவும் இருந்தது. அதனால் பிள்ளைகள் வீட்டிலும் வெளியிலும் கண்காணிக்கப் பட்டார்கள். மாணவர்களின் பண்பு,கல்வி பற்றிய முன்னேற்றங்கள் பெற்றோருக்கு அறிவிக்கப்பட்டன. எனவே பிள்ளைகளின் ஒழுக்கமும் கல்வியும் பேணப்பட்டன.

கல்வியின் நோக்கம் பிள்ளைகள் எதிர் காலத்தில் தனிப்பட்டும் சமூகமாகச் சேர்ந்து வாழவும் நெறிப்படுத்துவதாக இருந்தது. பண்பாளர்களாக வாழ்க்கையை முன்னெடுக்க வேண்டுமென எதிர் பார்க்கப்பட்டது. வள்ளுவரும் 'கற்கக் கசடறக் கற்பவை கற்ற பின் நிற்க அதற்குத் தக' என்று தானே சொன்னார்.

சுதந்திரத்தின் பின் கல்விக் கூடங்கள் தேசிய மயமாக்கப்பட்டன. கல்வி முறையில் மாற்றம் ஏற்பட்டது. வாழ்க்கை நெறிமுறை போதிப்பது நிறுத்தப்பட்டது. பொருள் தேடுவதற்கான கல்வி முறை முன் நிலைப்படுத்தப்பட்டது.

ஒழுக்கம்,தர்மம் படிப்படியாக மாற்றம் அடைந்து நிலைகுலைந்தன. முத்தையா சுவாமிகளே இதைத் தன்னுடைய சுயசரிதையிலே சொல்கிறார். அவருடைய பேரனார் பசுக்கள் வளர்த்தார். பால் விற்பது பாவம் என்பதாலே காசுக்கு விற்பதில்லை. கோயில், குழந்தைகள், சுகவீனமுற்றோருக்கு இலவசமாகவே வழங்கப்பட்டது. அவருடைய தந்தையார் காலத்தில் பால் விற்றார்கள். ஆனால் சுத்தமான பாலை தண்ணீர் கலக்காமல் விற்றார்கள். இவருடைய காலத்திலே பால் வாங்கிப் பாவித்தார். பால் கொண்டு வந்த பையனிடம் ஒருபோத்தல் பாலில் எவ்வளவு தண்ணீர் கலப்பீர்கள் எனக் கேட்டார். ஒரு போத்தல் பாலுக்கு கால் போத்தல் தண்ணீர் கலப்போம் என்றானாம். தண்ணீர் கலக்காவிட்டால் பாலுக்கு மானம் இல்லை என்றானாம். மூன்று தலைமுறைக்குள் தர்மம் எவ்வாறு வளர்ந்துள்ளது என்பதற்கு இது ஒரு அத்தாட்சியாகும் என்று சொல்கிறார்.

கல்வி நிலையங்களில் நன்னெறிப் போதனை நிறுத்தப்பட்டதால் ஏற்பட்ட இடைவெளியை நிரப்ப வேறு மார்க்கங்கள் தேவைப்பட்டன. ஒழுக்கமுறை சம்பந்தமான விழுமியங்களை மக்கள் அறிந்து கடைக்கொள்வதற்கு மாற்று வழிகள் தேவைப்பட்டன. இந்தத் தேவைகளை முன்னெடுப்பதற்காகத் தோன்றிய ஞானி தான் ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள்.

பக்தியை வளர்க்க பாத யாத்திரை செய்தார். திருக்கோயில்கள் தோறும் பக்தர்களுடன் பாத யாத்திரை சென்று பஜனைகள் செய்தார். அந்த யாத்திரைகளில் பங்கு பற்றியவர்கள் தங்கள் அநுபவங்களைச் சொல்லி பரவசமடைகிறார்கள். இன்றும் அந்த யாத்திரைகள் மற்றவர்களால் முன்னெடுக்கப்படுகின்றன.

குடும்ப வழிபாடு,வீட்டு வழிபாடு,கூட்டுப் பிரார்த்தனை என்பவற்றை முன்னெடுக்குமாறு ஆலோசனைகள் கூறியதோடு முடிந்தவற்றில் தானும் பங்குபற்றினார். சத்சங்கங்கள் நடத்துமாறு அடியார்களை வேண்டிக்கொண்டார். தானும் பங்கு பற்றினார். சொற்பொழிவுகள் மூலம் சமயப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பிரச்சாரங்களை மேற்கொண்டார். இவருடைய சொற்பொழிவுகள் தமிழ் பேசும் மக்கள் வாழ்கின்ற பல தேசங்களிலும் இடம்பெற்றன.

ஆத்மஜோதி சஞ்சிகை மூலம் சமயக் கருத்துக்களை பரப்பினார். நாவலப்பிட்டியில் அவர் தொடங்கிய ஆத்மஜோதி தற்போது கனடாவில் பிரசுரமாகி பிரகாசிக்கிறது.

அவர் தாபித்த இந்த சமயப் பேரவை யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி கனடாவிலும் சிறப்புற இயங்குகின்றன. அவர் தொடங்கிய தமிழ்ப்பணி சைவப்பணியும் தளராது முன்னெடுக்கப்படுகின்றன.

சமகால ஞானிகளின் தரிசனமும் தொடர்பும் அவருக்கு கிட்டியிருந்தது. அந்த அனுபவங்கள் கட்டுரைகளாயும் நூல்களாயும் பிரசுரமாகியுள்ளன.

ஆசிரியராய், பள்ளிஅதிபராய், சொற்பொழி வாளராய், சமயப்பிரசங்கியாய், எழுத்தாளராய், பத்திராதிபராய், நாவலப்பிட்டி தமிழ் ஆசிரியர் சங்கச் செயலாளராய், மத்திய மாகாண தமிழ் ஆசிரியர் சங்கச் செயலாளராய் பன்முகத் திறமை கொண்ட ஆத்மீக வள்ளல் ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் 77 ஆண்டுகள் எம்மிடையே வாழ்ந்தமை நாம் செய்த பெரும் பேறாகும். அவரைக் குரு முதல்வராகக் கொண்டும் அவருடைய பிரதம சீடர் திரு சிவ முத்துலிங்கம் அவர்களை செயலாளராகவும் கவிஞர் கந்தவனம் அவர்களைத் தலைவராகக் கொண்டும் இயங்கிவரும் ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை அவர் விட்டுச்சென்ற பணியை முடிந்தவரை முன்னெடுக்கின்றது. மேலும் பணிகள் தொடரும்.



வீரகேசரி ஆசிரியர் ஹரன் ஐயா குடும்பத்தினருடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீகச் சிரிப்பின் மகிமையை உணர்ந்தேன்

திருமதி தனசக்தி சிவகுருநாதன்

சிறு வயதில் இருந்தே எனக்கு ஐயாவுடன் பழகும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. எனக்கு கிடைத்த பெரும் பாக்கியமாகவே கருதுகின்றேன்.. அதற்காக எனது தந்தைக்கும் எனது அம்மாவின் தகப்பனுக்கும் தான் நான் நன்றி சொல்ல வேண்டும். சிறு வயதில் இருந்தே எனது அம்மாவின் தந்தை ஐயாவின் 'ஆத்மஜோதி' புத்தகத்தின் ஆயுள் அங்கத்தவர். புத்தகம் தபாலில் வரும் சிறு வயதிலேயே அந்தப் புத்தகங்களை வாசிக்கும் வாய்ப்பு கிடைத்தது. ஐயா யாழ்ப்பாணம் வந்து உரை நிகழ்த்தும் இடங்களுக்கு எல்லாம் அநேகமாக நாங்களும் சென்றிருக்கிறோம். எங்கள் வீட்டில் வந்தும் தங்கிச் சென்றும் இருக்கிறார். ஆனால் அப்போது எல்லாம் ஐயா என்ன கூறுகிறார் என்பதை அறியும் வயது எனக்கு இருக்கவில்லை. ஆனால் 1973ம் ஆண்டு நானும் அப்பாவும் நாவலப்பிட்டிக்குச் சென்று தங்கித் திரும்பினோம், அப்போது அவர்தான் எங்களை புகையிரத நிலையத்துக்கு அழைத்து வந்தார். அப்போது அப்பா அவரின் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கும்படி கூற அவர் **எனது முதுகில் தட்டி எல்லா வெற்றியும் கிடைக்கும் அதற்காக தோல்வியைக் கண்டு கலங்கக்கூடாது என்று கூறினார்.** என்னுடைய பிற்காலம் அவருக்கு தெரிந்திருக்குமோ என்று நான் நினைப்பது உண்டு. அதற்குப் பின் 1975ஆம் ஆண்டு நான் மஸ்கேலியாவில் இருக்கும்போது மலையகத்தில் ஒரு அம்மன் கோவிலில் தனது சொற்பொழிவு இருப்பதாக வரும்படி கடிதம் எழுதியிருந்தார். நானும் எனது மூத்த சகோதரியும் அங்கு சென்று இருந்தோம். எங்களையும் அவர் மேடைக்கு அழைத்து அமர வைத்தார். என்னைப் பாடும்படி கூறி நான் "சீரணி கொன்றை மலர்த்தொடை ஆட சிதம்பரத்தேர் ஆட காரணி காளி முன் எதிர்த்து நின்றாட கனகசபைப் நடுவே" என்ற கீர்த்தனையைப் பாடினேன். கண்களை மூடி ரசித்துக்கொண்டு இருந்தார். பின் மேடையால் இறங்கி கீழே வந்ததும் உன்னுடைய பாடலைக் கேட்டு நான் சிதம்பரத்தில் நிற்பதாக உணர்ந்தேன் என்று கூறிச் சிரித்தார். இன்னும் அவரின் தெய்வீகச் சிரிப்பு என் கண்ணுக்கு முன் இருக்கிறது.

எனது தந்தை காலமான பின் சில அடியார்களுடன் பொன்னாலை கிருஷ்ணன் கோயில்த் தேருக்குச் சென்றுவிட்டு சில அடியார்களுடன் வந்து மதிய உணவு அருந்திவிட்டு சென்றார். எனது தாயார் தான் அவர்களுக்கு உணவு பரிமாறினார். அதைச் சமையல் செய்யும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அதற்குப் பின் ஐயாவை சந்திக்கும் வாய்ப்பு எனக்கு கிடைக்கவில்லை. ஆனால் இறுதியாக கனடாவிற்கு வந்தபோது எனது சகோதரியிடம் தனம் இப்போ எங்கு இருக்கிறாள் என்று கேட்டுவிட்டு கொழும்பில் இருப்பது எனக்குத் தெரியாமல் போய்விட்டது தெரிந்திருந்தால் அவளைச் சந்தித்து வந்திருப்பேன் எனக் கூறி தொலைபேசி எண்ணைத் தாருங்கள் நான் போகும்போது அவளைச் சந்தித்து விட்டுப் போகலாம் என்று கூறி இருக்கிறார். ஆனால் அவருக்கு திரும்பி வந்து என்னை சந்திக்கும் வாய்ப்பை இறைவன் வழங்கவில்லை. யோகர்சுவாமி கூறியது போல் எல்லாம் எப்பவோ முடிந்த காரியம் என்பது போல எல்லாம் முன்பே எழுதப்பட்டு விட்டது.

ஆனாலும் எனக்கு அவரின் அடியாருடன் சேரும் வாய்ப்பை எவ்வளவோ காலம் கடந்த பின் வந்து அமைந்திருக்கிறதும் இறைவனின் கொடை. அதற்காக நான் இறைவனுக்கு நன்றி சொல்கிறேன்.

சிவ முத்துலிங்கம் ஐயா மிகப்பெரிய தொண்டர். அவரைப் பார்க்கும்போது இறைவனே மானிட வடிவில் குருவாக வந்துள்ளார் என சில சந்தர்ப்பத்தில் எண்ணுவேன். எத்தனையோ பேருக்கு வழிகாட்டியாகவும் ஆன்ம ஈடேற்றத்திற்கு வழிகோலியாகவும் இருந்து சேவையாற்றுகிறார். இது எமக்குக் கிடைத்த தவப் பாக்கியமாகக் கருதுகின்றேன். எல்லோரையும் ஊக்குவித்து எல்லோரையும் சமமாக நடத்தும் பக்குவம் அவரிடம்தான் உண்டு. ஐயா மூலம் ஒவ்வொரு வெள்ளியும் தேவார,திருவாசகம் முதல் 12 திருமுறைகளையும் பாடவும் மாதத்திற்கு இரண்டு முறை திருவாசகத்தை முற்றோதும் வாய்ப்பும் ஐயாவின் அடியேனுக்கு கிடைத்த பெரும் பாக்கியமாகவே கருதுகின்றேன்.இன்னும் தொடர்ந்து வந்து பல ஆண்டுகள் இத் திருமுறையை முற்றோதி பிறவிப் பிணியில் இருந்து மீண்டு இறைவனின் திருவடி மலர்ப் பாதத்தை அடைய வழிகாட்டுவான் என்று நம்புகிறேன். அதற்கு சிவ முத்துலிங்கம் ஐயா பல்லாண்டு பல்லாண்டு காலம் இருந்து எங்களுக்கு வழிகாட்ட வேண்டுமென்று இறைவனை வேண்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னான முத்து

திருமதி சந்திராதேவி கணேசராசா

ஆத்மஜோதி முத்தையா ஏழாலை என்னும் கிராமத்தில் நாகமணிக்கும் பொன்னுப்பிள்ளைக்கும் 1918ம் ஆண்டு வைகாசி மாதம் விசாக நட்சத்திரத்தில் சூரியன் உதயமாகும் நேரத்தில் பொன்னான முத்து உதயாமாகினது. அவரின் பெற்றார் முத்தையா என்னும் பெயர் சூட்டினார்கள்.

தாய் தந்தையர் குல தெய்வமாகிய ஞானவைரவப் பெருமானுக்கு பொங்கல் அபிடேகம் செய்தார்கள். அவர்களின் பாட்டன்,பேரன்,தந்தை.தாய் சைவ சமயத்தில் உறைந்த பெரிய குடும்பம். கமம்,தோட்டம்,மாடுகள் வளர்த்து அதில் வருகிற வருமானத்தை தான தருமம் செய்யும் வள்ளல்மார். பசுவின் பாலை பணத்திற்கு விற்கமாட்டார்கள். ஏழு கோயில் கொண்ட கிராமம் ஆனபடியால் ஏழாலை என்ற பெயர் கிராமத்திற்கு ஏற்பட்டது.

செல்வச் சிறப்பும்,சிவந்த மண் உள்ள கிராமத்தில் பிறந்தார். தாய் தந்தையர் தோட்ட வேலைக்குப் போகும் வேளையில் சகோதரங்களின் அரவணைப்பில் வளர்ந்தார். அவர் ஆரம்பப் படிப்பை ஏழாலை கத்தோலிக்க பாடசாலையிலும் மயிலணி சைவ வித்தியாசாலையிலும் படித்து வந்தார். பலாலி பொன்னம்பல ஆசிரியரிடம் சமய தத்துவங்களை கற்றார் எங்கள் முத்தையா சுவாமி.

1937ம் ஆண்டு திருநெல்வேலி சைவாசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு தெரிவு செய்யப்பட்டார். நாவலப்பிட்டியில் உள்ள சென் மேரீஸ் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பதவி ஏற்றார். அதன் பின்னர் கதிரேசன் மகா வித்தியாலயத்திலும் ஆசிரியராகவும் அதிபராகவும் 1976ம் ஆண்டு வரையும் கடமை ஆற்றினார். முத்தையா அவர்கள் நாவலப்பிட்டிப் பகுதியில் இந்து சமயத் தொண்டர் படையை உருவாக்கி சமயப் பணிகளில் ஈடுபடுத்தி குடும்பங்களின் பிரச்சனைகளை தீர்த்து ஒற்றுமையை வளர்த்து கோயில்களில் பலிக்கடா செய்வதையும் நிறுத்தினார்.

திருவெம்பாவை காலத்தில் வீடு வீடாக பஜனைக் கூட்டத்தாருடன் தானும் சேர்ந்து படிப்பார். நாவலப்பிட்டியில் 1960ம் ஆண்டு ஆத்மஜோதி என்னும் அச்சுக்கூடத்தை உண்டாக்கிய பெருமை அவருக்கே உரித்தாகும். மலைநாட்டுப் பிள்ளைகளுக்கு நல்ல தமிழையும் சமயத்தையும், கலாசாரத்தையும், பண்பையும் வளர்த்தவர். ஏழாலையில் இருந்து நல்லூர் கந்தசுவாமி கோயில்த் தேருக்கு 1954ம் ஆண்டு அடியார்களோடு நடைபவனி யாத்திரை செய்தார். சிறியவர், பெரியவர், சாதி பேதம் பார்க்காமல் இன்னும் பல கோயில்களுக்கு யாத்திரை செய்யும்போது பஜனை படிப்பார்கள்.

இந்தியா, சிங்கப்பூர், இந்தோனேசியா போன்ற பல நாடுகளிலும் தன்னார்வ சமயச் சொற்பொழிவுகள் ஆற்றி தமிழ் கலாச்சாரத்தை பரப்பிய பண்புள்ள மகான்.

சைவ சித்தாந்த மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக 1994ம் ஆண்டு கனடாவிற்கு வந்தபோது அங்கு சைவசமயம் பரப்பி வீடு வீடாக தேவாரம், திருவாசகம், திருமுறை படித்தார். இங்கே இந்து சமயப் பேரவையை உருவாக்கினார். திரும்பி இலங்கைக்குப் போய் 1995ம் ஆண்டு மீண்டும் கனடாவிற்கு வருகை தந்தார். இந்து சமயப் பேரவையை சிவ முத்துலிங்கம் பொறுப்பேற்று பத்தியுள்ள திருக்கூட்டம் ஒன்றை அமைத்து நடாத்திக் கொண்டிருக்கிறார்கள்.

முத்தையா சுவாமிக்கு இந்து சமயப் பேரவையினர் ஞானசுரபி என்னும் பட்டம் அளித்தார்கள். இந்தோனேசியாவில் அவருக்கு சுவாமி முத்தையா சுவாமி என்று அழைப்பார்கள்.

அவருக்கு சித்தானைக்குட்டிச் சுசுவாமிகள், யோகர்சுவாமி ஆகிய குருமார்களின் தரிசனம் கிடைத்தது. பெரிய மகான்களிடமும் சென்று தரிசனம் பெற்றவர். ஏழை எளியவர்களுக்கு நிறைய உணவு அளித்து, பண வசதி, கல்வி வசதி, கலாச்சாரம், நீதி, ஒற்றுமை, பண்பாடு எல்லாம் வளர்த்த பெருமை அவருக்கு உரியது.

கைதடியில் சைவச் சிறுவர் இல்லத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பேற்று நடாத்தி வந்தார். அவர்களின் மூதாதையர்கள் தான தர்மம் செய்த பரம்பரையில் ஊறின இரத்தம் எங்கள் ஞானசுரபியாருக்கும் இருக்கிறது. சரவணை சுவாமி ஒரு காலத்தில் ஆசிரியராக இருப்பாய் என்று சொன்ன வார்த்தையை ஞான சுரபி நிறைவேற்றிவிட்டார்.

முத்தையா சுவாமி காவியுடை தரியாதவர். வெள்ளை வேட்டி, நாஷனல், சால்வை, நெற்றியில் விபூதி, பொட்டு தரிப்பவர். அவருக்கு யோகர் சுவாமியின் அன்புக்குப் பாத்திரமான சுன்னாகம் செல்லாச்சி அம்மையாரின் தரிசனமும் கிடைத்தது. முத்தையா சுவாமி இரக்கமுள்ளவர், மென்மை யானவர், ஆன்மீகத்தில் உள்ளவர், சைவ சமயத்தில் உறைந்தவர், சொற்பொழிவு ஆற்றும் திறமை உள்ளவர்.

மொன்றியலில் இருக்கும் துர்க்கை அம்மன் கோயில் கும்பாபிசேகத்தில் அன்று சொற்பொழிவு ஆற்றுவதற்கு போயிருந்தார். அங்கு நோய் வாய்ப்பட்டு சுகயீனத்தால் ஆஸ்பத்திரியில் இருந்தார். சுகயீனம் மாறாத காரணத்தால் ஆண்டவன் அடி சேர்ந்தார்.

முத்தையா சுவாமி என்னும் ஞான சுரபி உண்டாக்கிய இந்து சமயப்பேரவையை எங்கள் குரு சிவ முத்துலிங்கம் நடாத்திக்கொண்டு இருக்கிறார். கோயில்களில் முற்றோதல்களை ஓதியவர்கள் அடியார்களின் உதவியால் வீடு வாங்கி அந்த இல்லத்துக்கு ஆத்மஜோதி இல்லம் என்று பெயரிட்டு நடாத்தி வருகிறார்கள். முத்தையா சுவாமி ஆசீர் வாதத்தால் ஆறுமுக நாவலர், சிவன், அம்மன், நடேசரும் சிவகாமி அம்மனும், பிள்ளையார், முருகன், வைரவர் மற்றும் கிருஷ்ணர் போன்ற தெய்வங்களின் பெரிய சிலைகளும் சீரடி, சித்தர்மார்களின் உருவப்படங்கள், முத்தையா சுவாமியின் உருவப்படம் வைத்து நித்திய பூசை எல்லா மூர்த்திகளுக்கும் திருவுருவப் படங்களுக்கும் பூஜை நடைபெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் என்ன புண்ணியம் செய்தோனோ

திருமதி இராஜேஸ்வரி பத்மநாதன்

ஓம் நமச்சிவாய

தமிழ்த்தந்தை கந்தமுருகேசன் போன்ற பெரிய கல்விமான்கள் பிறந்த புலோலி பருத்தித்துறையில் நான் பிறந்ததையிட்டு நான் பெருமைப்படுகிறேன். நானும் மற்றவர்களைப் போல கோவிலுக்குப் போவது விரதம் இருப்பது தேவாரங்கள் படிப்பது என்று சைவ முறையில் தான் வாழ்ந்தேன். நான் கனடா வந்த பின் ஒரு நாள் எனக்குத் தெரிந்த அம்மாமூலம் இங்கு 'இந்து சமயப் பேரவை' என்ற அமைப்பு திரு கந்தவனம் ஐயா தலைமையில் அதை நிர்வகித்து நடத்துவது திரு முத்துலிங்க ஐயா எனவும் அறிந்து இதில் ஆயுட்கால உறுப்பினராக வந்து சேர்ந்தேன். இந்தக் திருக்கூட்டத்தில் வந்த பின் தான் உண்மையான ஆத்மீகம் எது எப்படி இவைகளை படித்து அறியவேணும் எப்படி பின்பற்றி வாழவேணும் என்றும் முறையாக திருமுறைகளைப் படிப்பதற்கும் பழகிக்கொண்டேன். நான் செய்த புண்ணியம் நான் வந்து சேர்ந்த நேரம் திருமுறைப் படிப்பு தொடங்கி நடந்துகொண்டிருந்தது. அதில் நானும் கலந்து படிக்கத் தொடங்கினேன். இன்று எவ்வளவோ என் வாழ்வில் முன்னேற்றங்களையும் ஆத்ம திருப்தியையும் தெரிந்து கொண்டேன்.

திருவாசகம் எனது உயிர் திருவாசகம் தேன் என்று சொல்லுவார்கள். அதுவே உண்மை படிக்கும்போதே நெஞ்சில் இனிக்கும்; உடம்பு புல்லரிக்கும்; கண் கலங்கும் அந்த உணர்வை சொல்லி விபரிக்க முடியாது. அடைக்கலப்பத்து அதில் இருக்கும் பத்துப் பாடல்களிலும் சொல்லும் கருத்து ஆண்டவனிடம் போய் அடைக்கலமானால் செய்த பாவங்கள் கரையும் என்று நினைத்து மனமுருகிப் பாடவேணும். அடுத்தது திருவாசகத்தில் எனக்குப் பிடித்தது திருவம்மானை.

**மேலான வேதியனை மாதிருக்கும் பாதியனை**
**நாயான நந்தம்மை ஆட்கொண்ட நாயகனை**
**தாயான தத்துவனை தானே உலகேழும்**
**ஆயான ஆழ்வானை பாடுதுங்காண் அம்மானாய்**

நாங்கள் பாவங்களில் உழலும் ஆன்மாக்கள். இவைகளை முறையோடு உணர்ந்து பாராயணம் செய்தால் பாவங்கள் குறைந்து ஆண்டவனின் அனுக்கிரகம் கிடைக்கும். அடுத்து திருமந்திரம்.

அதில் ஆன்மாக்கள் முத்தியை அடைவதற்கு வழியைக் காட்டுகிறார் திருமூலர். பாமர மக்களும் விளங்கிப் படிக்கிற மாதிரி அவருடைய பாடல்கள் இருக்கும். கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு என்று சொல்வார்கள். இதில் எங்களால் ஒரு துளியளவு கூட படிக்க முடியாது ஆனால் ஆண்டவனிடம் உண்மையான அன்புடனும் ஆத்மார்த்தமாகவும் இருந்தால் எல்லாம் கிடைக்கும். நான் வந்த நேரம் காளி கோயிலில் திருமுறைப் பாராயணம் நடந்துகொண்டிருந்தது. அதில் அம்மாக்களும் ஐயாக்களும் படித்துக்கொண்டிருந்தார்கள். எவ்வளவு தெளிவாகப் படிக்கிறார்கள் என்று பிரமிப்பாக இருந்தது. என்றாலும் படிக்க முடியுமா என்று நினைத்தேன். எங்கள் ஆத்மஜோதி ஆச்சிரமத்தில் சூக்குமமாக இருக்கும் யோகர் சுவாமிகள், முத்தையா சுவாமிகள், ரமண மகரிஷி மற்றும் பெரியார்களின் ஆசியும் கிடைத்து. இன்று அவர்களின் முன் இருந்து படிப்பதற்கு என்ன புண்ணியம் செய்தேனோ என்று நினைக்கிறேன். இதற்கெல்லாம் எனக்கு ஊக்கமும் உதவிகளும் அளித்த சிவ. முத்துலிங்க ஐயாவை மறக்க முடியுமா அவருக்கு நான் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன். இப்போ என் குடும்பத்தில் இருப்பவர்கள் என்ன செய்தாலும் சிவபெருமானே என்று தான் சொல்லுகிறார்கள். ஐயா சொல்லுவார் நீங்கள் செய்த புண்ணியம் தான் இந்த இடத்திற்கு அழைத்து வந்திருக்கிறது என்று அதை மறுக்க முடியுமா அது சத்தியமான வார்த்தை. முத்தையா சுவாமிகளின் 100வது ஆண்டு நினைவு விழாவில் கலந்துகொள்வதையிட்டு பெருமையாகவும் ஆனந்தமாகவும் இருக்கிறது.

அவனருளாலே அவன் தாழ் வணங்கி திருவாசகத்தில் சொல்வது போல வணங்கி விடைபெறுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஒளி

**திருமதி தவனேஸ்வரி சாம்பசிவம்**

ஏழாலை கிழக்கிலே தோன்றியது அது யாருமல்ல சைவ சமயம் போற்றும் ஆத்மஜோதி நூலை முதன் முதலில் எழிலுறு பூமியாம் இலங்கையிலே நாவலப்பிட்டி என்னும் நந்நகரில் 1948ஆம் ஆண்டு வெளியீடு செய்து ஆன்மீக ஒளியைப் பரப்பிய முத்தையா ஆசிரியர் அவர்களே. இவர் சிவநெறி நின்று ஒழுகி உற்றார் சுற்றம் உறவைப்பேணி வாழ்ந்த திருவாளர் நாகமணி பொன்னுப்பிள்ளை இருவருக்கும் மகனாகப் பிறந்தார். பெற்றோரின் வார்த்தையை தேவவாக்காக மனதிற் கொண்டு வாழ்ந்தவர். சிறுவயதில் பக்கத்தில் எழுந்தருள்பாலித்துக் கொண்டிருக்கும் இலந்தைக் கட்டி வயிரவர் ஆலயத்தில் தாயாரோடு கூடிச்சென்று ஆலயச் சுற்றுப்புறங்களைத் துப்புரவு செய்தல்,மலர் பறித்துக்கொடுத்தல்,மணி அடித்தல் போன்ற சரியைக் கிரியைகளைச் செய்து வந்தார். வெண்ணீறு சிறுவனின் நெற்றியை அலங்கரித்துக்கொண்டிருக்கும். சிறுவயதில் பள்ளியில் படிக்கும்வேளை பேச்சுப் போட்டிகளில் பங்குபற்றிப் பரிசில்கள் பெறுவார். சிறந்த ஆன்மீகச் சிந்தனையாளர். படித்துக் கலாசாலைப் பயிற்சிபெற்று ஆசிரியராகப் பணிபுரிந்தார். இவருக்கு முதன் முதலாக நாவலப்பிட்டியில் ஆசிரியராகப் பணிபுரியும் வாய்ப்புக் கிடைத்தது. ஆசு + இரியர் ஆசிரியர் எனும் வரைவிலக்கணத்திற்கு ஏற்ப குற்றம் அற்றவர் என்னும் பண்போடு கற்பித்தல் தொழில்புரியும் ஆசிரியர். மாணவர்களுக்கு மிகவும் அன்போடு கல்விப் பயிர் வளர்த்து அவர்களைக் கல்வியில் சிறந்தவர்களாக ஆக்கினார். இன்னும் பெற்றோருக்கும் பள்ளிக்கும் இடையில் பாலமாக இருந்தார். குடும்பங்களில் ஏற்படும் இன்ப துன்பங்களில் கலந்து தன்னாலான உதவிகளைச் செய்து பெற்றோரின் நன்மதிப்பைப் பெற்றார். நாவலப்பிட்டியில் ஆத்மஜோதி அச்சகத்தை நிறுவி ஆயிரம் ஆயிரம் நூல்களை வெளியிட்டு இலங்கையிலும் இந்தியா,மலேசியா,சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கும் அனுப்பினார். ஆத்மஜோதி நூல் பலராலும் போற்றப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு மக்கள் மனதில் ஆன்ம ஒளியைப் பரப்பியது. பல சைவப் பெரியார்களின் ஆக்கங்கள் வெளியிடப் பட்டன. ஆத்மஜோதி ஐயா அவர்கள் இலங்கை யிலுள்ள பல சைவத் தலங்களுக்கு தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்னும் பெரு நோக்கோடு சிவனடியார்கள் பலரையும் பாதயாத்திரையாக அழைத்துச்சென்றார். பக்தி நெறியைப் பரப்பினார். சத்சங்கம் அமைத்து வீடுகள்தோறும் அடியார்களை அழைத்துச் சென்று திருமுறைகள் ஓதும் பெரிய கைங்கரியத்தைச் செய்தார்.

இறையருள் நிரம்பப்பெற்ற பல ஞானிகளின் தரிசனம் பெற்றார். ரமண மகரிஷி,சுவாமி சுத்தானந்தர்,சாயி பாபா,யோகர் சுவாமிகள்,சிவானந்தர் போன்ற பல ஞானிகளின் தரிசனம் பெற்றார். அவர்களின் தரிசனம் பற்றியும் தான் பெற்ற இன்பம் பற்றியும் தரிசனம் எனும் நூலை கனடா இந்துசமயப் பேரவையில் எழுதிப் பலரும் படித்துப் பயன்பெறும் வகையில் எழுதி வெளியிட்டார். சைவத்துக்காக, ஆன்மீகத்துக்காக, அநாதைகளுக்காகத் தன்னை அர்ப்பணித்து இல்லற பந்தத்தில் இணையாது இறை சிந்தனையோடும் வாழ்ந்த ஐயா அவர்கள் சிங்கப்பூர், மலேசியா, இந்தியா போன்ற இடங்களுக்குச் சென்று ஆன்மீக ஒளியைப் பரப்பினார். காலமெல்லாம் ஆத்மீகஜோதியைப் பரப்பி வாழ்ந்த ஐயா அவர்கள் கனடா நாட்டிலே தன் பூத உடலை நீத்துப் புகழுடல் எய்தினார். இன்று ஆத்மஜோதி ஆச்சிரமம் திருமுறைச்செல்வர் சிவ முத்துலிங்கம் அவர்களால் இனிதே நடத்தப்பட்டுக்கொண்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மீக வள்ளல் ஆத்மஜோதி

**வே. பரமேஸ்வரி**

யாழ்ப்பாணத்தில் உள்ள பெரிய பட்டினங்கள் சிற்றூர்கள், கிராமங்கள் என்பவற்றுள் ஏழாலை ஒரு தலை சிறந்த கிராமமாகும். இங்கு தான் அவதரித்தார் எங்கள் ஆத்மீக வள்ளலார். இக்கிராமம் ஆனது செம்மண் செறிந்த பூமியாகும்.

இங்கே தோட்டப் பயிர்கள் நிறைந்த ஓர் உன்னத பூமியாகவும் செல்வம் செழித்த கிராம மாகவும் நாம் பாரக்க முடிகிறது. ஆத்மீக வள்ளலார் பிறந்த திகதி 25.05.1918 ஆகும். இவர் சிவபதம் அடைந்த நாள் 08.09.1995.

இவர் தந்தையார் பெயர் நாகமணி, தாயார் பெயர் பொன்னுப்பிள்ளை. இவருக்கு நான்கு சகோதரர்கள் உண்டு. மூத்தவர் அண்ணர், அண்ணனுக்கும் தம்பிக்கும் இடையில் பிறந்தவர் தான் வள்ளலார். அடிகளாரின் பேரனாரின் பெயர் சின்னத்தம்பி பெரியார் ஆவர். இவர் பெரிய கமக்காரர் ஆவர். இவரிடம் இரண்டு பட்டி மாடுகள் இருந்தன அதாவது 60 மாடுகள் ஆகும். இவற்றுள் 30 பசுக்கள் கட்டாயம் பால் கொடுத்துக்கொண்டே இருக்கும். இக்குடும்பம் எப்போதும் தர்மம் செய்து வளர்ந்த பரம்பரை. பேரனாரைப் போலவே தந்தையார் நாகமணியும் தர்ம சிந்தை உள்ளவர்.

இவர்கள் பால் கறந்து விற்பது இல்லை. இலவசமாகக் கொடுத்து மிகுதிப் பாலை பாட்டி காய்ச்சுவா, ஓர் இடத்தில் இருந்து முருகா முருகா என்று பாடிப் பாடி மத்தினால் மோர் கடைவா, கடைந்த மோரை ஒரு பெரிய பானையில் ஊற்றி வெளித் திண்ணையில் வைப்பார்கள். அந்தப் பானையில் அருகில் 2 பேணிகள் இருக்கும். ஒன்று மோர் அள்ளுவதற்கு மற்றையது மோர் குடிப்பதற்கு வழிப்போக்கர்கள் தாகம் தீர குடித்து திண்ணையில் இளைப்பாறிப் போவார்கள்.

வள்ளலார் வெள்ளைக் குழந்தையாக இருந்த படியால் வீட்டில் உள்ள எல்லோரது அன்புக்கும் பாத்திரம் ஆனார். பேரனார் வள்ளலாரின் வளர்ப்பில் அதிக கவனம் செலுத்தி வந்தார். நீதி, நியாயம், தர்ம சிந்தனை இவற்றை அடிகளாரின் மனத்தில் பதித்து வைத்தவர் இவரே ஆவார்.

கோயிலுக்குச் சென்றால் கோயிலை சுற்றி வலம் வந்து வணங்கி விட்டு ஓரிடத்தில் இருந்து நாம ஜெபம் செய்வார். வள்ளலார் ஏழாலையில் பிறந்தார், நாவலப்பிட்டியில் வாழ்ந்தார், தனது கடைசி காலத்தில் சாவகச்சேரியில் வாழ்ந்தார்.

வள்ளலார் ஐந்தாம் வகுப்பு வரை கிறிஸ்தவ பாடசாலையில் படித்தார். பின்னர் சுன்னாகம் மயிலணிச் சைவப் பாடசாலையில் கல்வி பயின்றார். காரணம் ஜோதி அவர்கள் சைவம் அல்லவா அதனால் விபூதி பூசிச் செல்வதை வகுப்பில் மாணவர்கள் கேலி செய்வதை தாங்காதுதான் பாடசாலை மாறினார்.

சுமார் 10 ஆண்டுகளின் பின் நாவலப்பிட்டியில் உள்ள சென் மேரிஸ் பாடசாலையில் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். காலையில் தமிழ்ப் பாடசாலை யிலும் மாலையில் ஆங்கிலப் பாடசாலையிலும் தமிழ் படிப்பித்தார். சுவாமிகள் யாருடனும் போட்டியோ பொறாமையோ கொள்வது இல்லை. தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருப்பார். மாணவர் களைப் பார்த்து அறிவுக் கதைகள் பல கூறி பொன் மொழிகள் பல கூறி அவர்களை தன் வயப்படுத்தி அவர்களை நன் மாணாக்கர் ஆக்குவார். இவரை ஏழாலைக் கிராமத்து முத்து என்று தான் கூற வேண்டும்.

சுவாமி அவர்கள் தனது கிராமத்துக்கு மட்டும் தொண்டு செய்யவில்லை. பிற நாடுகளுக்கும் சென்று தனது பணியை நல்ல முறையில் செய்து முடித்தார். ஈழத்தின் தலைசிறந்த ஆத்மீகவாதியும் ஆத்ம ஜோதி ஆசிரியருமாகிய அமரர் நா.முத்தையா ஆசிரியர் அவர்கட்கு ஏழாலையில் இலந்தைக்கட்டி என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தில், வைரவர் ஆலயத்தின் வளவில் இவரின் 85 ஆவது பிறந்த தினத்தன்று ஒரு மணி மண்டபமும் கட்டி அன்று ஜெயந்தி விழாவும் கொண்டாடித் தியான வகுப்பும் அறநெறிப் பாடசாலையும் அந்தக் கட்டிடத்தில் ஒரு பகுதியில் நடத்தப்படுகிறது.

எமது நாட்டில் 20ம் நூற்றாண்டில் பிறந்த ஆன்மீகச் செல்வர்களில் அடிகளார் ஆத்மஜோதி அவர்களும் ஒருவர் ஆவர். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற தாரக மந்திரத்தை குறிக்கோளாகக் கொண்டு இயங்கினார். மானிட சேவையே மகேஸ்வரன் சேவை எனக் கொண்டு உணர்ந்து கைதடியில் உள்ள சிறுவர் இல்லத்தை பொறுப்பேற்று உடல் மட்டும் வளர்த்தால் போதாது என்று ஆத்மஜோதி மிளிர்ந்தும் அதன் வளர்ச்சிக்காக தமது உடல், பொருள், ஆவி என்பவற்றை அர்ப்பணித்தார். திருவாசகம், திருமுறை முற்றோதல் போன்ற நிகழ்ச்சிகளில் மக்களை ஊக்கப்படுத்தினார்.

அடிகளார் இப்படி இருக்கும் காலத்தில் கனடாவில் சைவ மகாநாடு நடக்க இருந்தது. ஆத்மீக வள்ளலார் 1994 ஆம் ஆண்டு வந்து சேர்ந்தார். அத்தோடு நில்லாமல் வள்ளலார் அவர்களை பல சிவத்தலம், ஆச்சிரமங்கள், ஆன்மீகவாதிகளின் வீடு என்பவற்றுக்கு சிவத் தொண்டர்கள் கூட்டிச்சென்று அவரின் போதனைகளையும் நற் சிந்தனையையும் கேட்டார்கள்.

போன இடங்களில் மொன்றியலில் உள்ள துர்க்கை அம்மனும் ஒன்றாகும். திடீரென வந்த தொய்வு நோய் காரணமாக திடீரென மொன்றியலில் சிவபதம் அடைந்தார். இவர் தாம் பிறந்த நாட்டிலோ அல்லது தான் சேவைகள் புரிந்த இடத்திலோ தனது இறுதி மூச்சை விடவில்லை. அந்நிய நாடான கனடாவில் உயிர் நீத்தார். இவரின் பூத உடல் மொன்றியலில் இருந்து எடுத்துவரப்பட்டு ரொறன்ரோவில் தகனம் செய்யப்பட்டது.

இவரின் நினைவாக திருமுறைச்செல்வர் சிவ. முத்துலிங்கம் அடியார் அவர்கள் ஆத்ம ஜோதி என்ற பெயர் பதித்த ஒரு இல்லத்தை தனது முயற்சியினால் பல அடியார்களின் உதவியுடன் கொண்டு நடாத்தி வருகின்றார்கள். தற்போது வர வர அடியார் கூட்டம் பெருகி வருகிறது. பெண் அடியார்கள் தான் கூட பங்குகொள்கிறார்கள். வள்ளலாரின் விருப்பப்படியே திருவாசகம், திருமுறை முற்றோதல், நாயன்மார் குருபூசை, அடியார்க்கு காலையில் தேனீர் கொடுப்பது மத்தியானம் அன்னதானம் வழங்குவது யாவும் குறைவின்றி நடந்து வருகிறது.

இல்லத்தின் முன் வாசலில் வள்ளலாரின் திரு உருவப்படம் பெரிதாக மாட்டப்பட்டு இருக்கிறது. இதற்கு ஒவ்வொரு பூசையின்போதும் பூ வைத்து தீபம் காட்டப்படும். ஆத்மஜோதி அவர்களின் பிறந்த நாளையும் குருபூசையையும் திருமுறைச் செல்வர் முத்துலிங்கம் ஐயாவும் பேரவையின் திருக் கூட்டத்தினரும் சிறப்பாகச் செய்து வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயாவின் நிர்மலமான உருவம் என் மனதில் பதிந்துள்ளது

**அருள்சக்தி வாமதேவா**

கனடா ஆத்மஜோதி இல்ல அடியார்களுடன் சேர்ந்து ஒரு வருடத்திற்கு மேலாக திருமுறை முறறோதுவதில் ஆர்வமாக உள்ளேன். எனது சகோதரியே இதற்கு வழிகாட்டினார். ஆத்மஜோதி இல்லம் இலங்கையில் நாவலப்பிட்டியில் அமைந்திருந்த காலத்தில் திரு. முத்தையா ஐயா பரிபாலித்த சமயத்தில் எனது தந்தையாரின் நண்பராக இருந்தார். ஐயா அவர்கள் எனது ஊரில் உள்ள பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயில் தேருக்கு வருகை தந்திருந்தார். அந்த நேரத்தில் சிறுமியாக இருந்த நான் ஐயா குழுவினரால் தேரின் பின்னால் பஜனைப் பாடல்கள் பாடும் போது நானும் பாடியிருந்தேன். தேர் முடிந்ததும் ஐயா குழுவினருடன் வீட்டிற்கு வரும் போது நாங்கள் அவர் கூறும் கதைகளைக் கேட்டிருக்கின்றோம். அவருடன் உட்கார்ந்து உணவு உட்கொண்டிருக்கின்றோம். நான் சிறுமியாக இருந்தமையால் அவருடன் பழகவோ உரையாடவோ சந்தர்ப்பம் அவ்வளவாக இருக்கவில்லை. ஆனால் எனது பெற்றோர்களும், மூத்த சகோதர சகோதரிகளும் அவருடன் உரையாடுவார்கள். அவர்கள் பல சமய நிகழ்வுகளிலும் ஐயா அவர்களுடன் பங்குபற்றி இருக்கிறார்கள். நான் சிறுமியாக இருந்தாலும் ஐயாவின் நிர்மலமான உருவம் இன்னும் என் மனக்கண்களில் பதிந்துள்ளது.

# ஆன்மீகத் தொண்டர்

**திருமதி தவமணி தியாகராசா**

ஏழாலை கிழக்கிலே இலந்தை கட்டி ஆலயத்திற்கு தெற்கு திசையில் அன்பும் பண்பும் நிறைந்தவரும் கண்ணிய மிக்கவரும் உறவினரைப் பேணும் உத்தமரான நாகமணி அவர்களுக்கும் அவர் பத்தினி பொன்னுப்பிள்ளை அவர்களுக்கும் 1918ம் ஆண்டு வைகாசி மாதம் 25ம் திகதி விசாக நட்சத்திரத்தில் வந்துதித்தார் ஆன்மீக வள்ளல் ஆத்மஜோதி முத்தையா அவர்கள். சின்ன வயதிலே வேட்டி கட்டி நெற்றியிலே நீறணிந்து பள்ளிக்குச் சென்று படித்தார். இவர் ஐந்தாம் வகுப்புவரை கத்தோலிக்க பாடசாலையில் படித்தார். இவர் ஆறாம் வகுப்பில் மயிலணி சைவ வித்தியாசாலையில் கல்வி கற்றார். அக்காலத்தில் சமயக் கல்வி, ஆன்மீகத் தொண்டில் ஆர்வம் காட்டினார். பின்னர் திருநெல்வேலி முத்துத்தம்பி பாடசாலையில் கற்று ஆசிரிய தராதரப் படிப்பை மேற்கொண்டு பரீட்சையிலும் சித்தி பெற்றார். அவர் படிக்கும் காலத்தில் யாழ்ப்பாண கந்தர் மடத்தில் வேதாந்த மடத்தை ஸ்தாபித்த மகாதேவ சுவாமிகளின் ஆசியுடன் வேதாந்த ஞானத்தை வளர்த்துக் கொண்டார். 1937ம் ஆண்டு ஆசிரிய தராதர பரீட்சையில் சித்தி எய்தி திருநெல்வேலி சைவாசிரியர் பயிற்சி கலாசாலையில் பயிற்சி பெற்று வெளியேறினார். அக்காலத்தில் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களின் ஆசியும் பெற்றார். 1939 ஆண்டு நாவலப்பிட்டியில் ஆசிரியை பணியேற்று பணி புரிந்தார். அங்கு ஆத்மஜோதி என்னும் சஞ்சிகையை தொடங்கினார். பக்தி நெறி வளர்ச்சிக்காக ஊர் ஊராகச் ஆலயங்கள் தோறும் பாதயாத்திரை செய்து மக்களைக் கூட்டிச்செல்வார். 1994ம் ஆண்டு கனடாவில் நடைபெற்ற சைவ மகாநாட்டுக்கு சொற்பொழிவாளராக அழைக்கப்பட்டார். ஐயா வருகையால் இந்து சமயப் பேரவை தொடங்கப்பட்டு சிறப்பாக இயங்குகிறது. அவர் ஞாபகார்த்தமாக ஆத்மஜோதி ஆச்சிரமம் ஆரம்பிக்கபெற்று நன்றாக இயங்கிக்கொண்டிக்கிறது. ஐயாவின் அருந் தொண்டைப் போற்றுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை வழிபாட்டுக்கு குரு ஒருவரின் வழிகாட்டல் அவசியம்

வ. மனோகாந்தன்
நிர்வாகசபை உறுப்பினர்

முத்தையா சுவாமிகளை அடியேன், *1983*,தைத்திங்கள் *30*, ஞாயிற்றுக்கிழமை முதன் முறையாகப் பார்க்கும் பலன் இறை அருளால் பெற்றிருந்தேன்.என் வயது அப்போது பதினொன்று. புங்குடுதீவில் ஸ்ரீ சதானந்த சுவாமிகள் விதேகமுத்தி அடைந்து விட்டார். இவர் ரிஷிகேசத்தில் சுவாமி சிவானந்தரிடம் சந்நியாசம் பெற்று ஸ்ரீ சதானந்த சுவாமிகள் எனும் திருநாமம் சூட்டப் பெற்று செல்வச்சன்னிநிதி ஆனந்தாச்சிரமத்தில் மயில்வாகனம் சுவாமிகளுடன் தவக் கோலம் பூண்டு தங்கியிருந்தவர். ஸ்ரீ சதானந்த சுவாமிகளை சமாதி வைக்கும் நிகழ்வில் முத்தையா சுவாமிகள், நமசிவாய தேசிகர், விசாலாட்சியம்மையார் சுவாமிகள், காரைக்கால் தியாகராஜ சுவாமிகள், உட்பட பல ஞானிகள் கலந்து கொண்டனர். முத்தையா சுவாமிகளுக்கு அமோக வரவேற்பு ஊர் மக்களால் கொடுக்கப்பட்டது. மாலை மரியாதை, பாத பூஜை என அமர்க்களம். என் சிற்றறிவில் ஒரு சிந்தனை எட்டிப் பார்த்தது. துறவி என்றால் எல்லாவற்றையும் துறக்க வேண்டுமல்லவா?மாலை மரியாதையை துறக்காதவர் எல்லாம் சாமியா? நான் நின்ற இடம் பதினைந்து அடி தள்ளி. முத்தையா சுவாமிகளைச் சுற்றி பெருங்கூட்டம். என் மனதில் அந்தக் கேள்வி எழுந்ததுதான் தாமதம் தலையை உயர்த்தி என்னை நோக்கிச் சிரித்தார். அந்தச் சிரிப்பை என் உயிர் உள்ளவரை என்னால் மறக்கவே முடியாது. அந்தத் தருணம் என் மனதில் பசுமரத்தாணி போல பதிந்து அழியாத வண்ணம் உள்ளது. இனம் புரியாத மன அமைதி அதில் இப்போதும் உள்ளது.அது எப்போதும் இருக்கும். அது தியான வடிவாக எனக்குள் ஓடிக் கொண்டிருக்கிறது.நயன தீட்சை என்ற பதம் அடியேன் அவ் வயதில் அறிந்திலேன்.காலங்கள் கடந்த பின்னர் தான் நயன தீட்சை ஒரு ஞானியிடம் பெறுவது எத்துணை இன்பம் எனவும் அது ஒரு பெருஞ்சுவை என்பதையும் அறிகிறேன். ஸ்ரீ சதானந்த சுவாமிகளின் சமாதிக் கோயிலுக்கு முத்தையா சுவாமிகளின் வருகை என்பது அவ்வூர் மக்களுக்கு ஒரு இனிமையான அனுபவம் தான். எவ்வளவு அருளைப் பெறமுடியுமோ அவ்வளவையும் அம்மகானிடமிருந்து பெற்று விட வேண்டும் என்பது போல முத்தையா சுவாமிகளின் தரிசனத்தை மக்கள் பயன்படுத்தினார்கள்.முத்தையா சுவாமிகள் ஒரு சொற்பொழிவில் "எமக்கு திருவடி யாத்திரைக்காரர்கள் என்றொரு பெயர் உண்டு. எல்லா உயிர்களும் அறிந்தோ அறியாமலோ இறைவன் திருவடியை நோக்கி யாத்திரை செய்கின்றன' என்றார். நயினாதீவு- நல்லூர் பாதயாத்திரையில் பல துறவிகளோடு, ஞானிகளோடு,தேசிகரோடு,யோகிகளோடு இறைவன் புகழ் பாடியபடி இறைவன் நாமத்தை உரக்கச் சொல்லியபடி தெருக்களில் நடந்து ஊர்களைக் கடந்து நல்லூரை அடைவதென்பது நல்லதொரு ஆன்மீகப் பயிற்சியாக இருந்தது. உடற்சோர்வை இறைவனின் திருப்பெயர்களைச் சொல்லிச் சொல்லி விரட்டி, மனத்திற்குள் நல்லூர் கிட்டி விட்டது, நல்லூர் இன்னும் சிறிது தூரத்தில் தான் உள்ளது,இன்னும் கொஞ்ச நேரத்தில் போய்ச் சேர்ந்து விடலாம் என்று அடி எடுத்து நடப்பதும் ,சக யாத்திரிகர்களின் பாரச் சுமைகளை பகிர்ந்து தூக்கிச் செல்வதும், இறுதியில் நல்லூரான் திருவடி சேர்வதும் பாத யாத்திரையில் மட்டுமே முடியும்.இறைவன் திருவடியை உயிர்கள் அடைய காலம் எடுக்கலாம்,அதுவாயினும் மன உடல் உபாதைகள் இறைவன் திருவடியைச் சேரத் தடையாக இருக்க உயிர் அனுமதிக்கக் கூடாது, எனும் படிப்பினை நல்லூர் திருத்தல பாத யாத்திரையில் உணர்ந்தேன். இப்படியான ஆன்மீக பாத யாத்திரைகளை ஊக்குவித்து முன்னின்று நடத்திய முத்தையா சுவாமிகள் நாமம் வாழ்க!

முத்தையா சுவாமிகளைக் குருவாக ஏற்று பயணிக்கும் பக்குவம் கனடாவில் தான் அடியேனுக்கு வாய்த்தது. கருணை நிறைந்த குருவிடமிருந்து பத்தி என்றால் என்னவென்று கற்றுக் கொண்டேன். அன்பர்களே! இறை வழிபாட்டிற்கு குரு ஒருவரின் வழிகாட்டல் அவசியம்! மனித உடல் என்னும் கப்பலில், வாழ்க்கை எனும் துன்பக் கடலில் பயணம் செய்யும் நாம், குரு என்னும் கலங்கரை விளக்கின் துணையோடு,இறைவனடி எனும் அக்கரை சேரவேண்டும் என எல்லாம் வல்ல சிவபெருமானின் கருணையும் முத்தையா சுவாமிகளின் ஆசிகளும் கிடைக்கப் பெற வேண்டுகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஜோதி நா. முத்தையா

சித்தாந்த வித்யாநிதி, திருமுறைச்செல்வர், தமிழ் அருட்சுனைஞர்
இ. செல்லையா

சிவாய நம

சிவநேயச் செல்வர்களே, கனடா நாட்டில் வாழும் சிவனடியார்களே, சிவாயநம, ஆத்ம ஜோதி ஆத்மீகவள்ளல் நாமுத்தையா அவர்களைப் பற்றி அடியேனுக்கு தெரிந்தது - கூவல் ஆமைக்கு தெரிந்தது போன்றதே.

அடியேன் ஐயா அவர்களைப் பற்றித் தெரிந்துகொண்டது 2001 ஆம் ஆண்டு, அடியேன் ஸ்கார்புரோவிற்கு வந்த காலத்தில்தான், ஆனால் அதற்கு முன்பாகவே ஐயா அவர்கள் சிவபெருமானின் திருவடிக்கீழ், சாயுச்சிய முத்தியில், பிறவா நிலை பெற்றுவிட்டார்கள்.

ஐயா அவர்கள் பலநூல்கள் எழுதியுள்ளார்கள் - பல தொடுப்பு நூல்களை வழங்கியுள்ளார்கள் - பல கட்டுரைகளை மக்களின் நல்வாழ்வுக்காக எழுதி வழங்கியுள்ளார்கள் - என்பதை ஓரளவு அறிந்துள்ளேன்.

அறிவுரைகளை ஐயா அவர்கள் வழங்கும் விதம் - எளிமை, இனிமை, நுண்மை - படிப்பவர் உள்ளத்தில் உடனடியாகச் சென்று வாழ்நாள் முழுவதும் ஞாபகத்தில் இருக்கும்.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்று ஓர் பழமொழி உள்ளது.

'தெய்வீக வாழ்க்கை' என்னும் நூலில் 'தெய்வீக வாழ்க்கையின் இயல்பு' என்ற முதல் கட்டுரை.

கை நகத்தை பல்லால் கடிக்கும் மகனை 'கடிக்காதே' எனச் சொல்லும் தந்தை - தொடர்ந்து செய்யும் மகனை கோபம் கொண்டு அடித்துவிட்டார் - வெளியில் சென்றுவிட்டார் - அரவணைக்கும் தாயிடம் 'தந்தை மது அருந்துவதும் - புகை பிடிப்பதும் கெட்ட பழக்கம் தானே' என்று கூறிவிட்டு, உணவு உண்டு, உறக்கம் கொள்கிறான். தாமதமாக வந்த தந்தையிடம், மகன் கூறியவற்றை தாய் தெரிவிக்கிறாள் - தந்தை ஓர்ந்து கொள்கிறார். மது, புகை பழக்கத்தை கை கழுவுகிறார். அன்று வரை அவ்வீட்டிலிருந்த மூத்தவள் (மூதேவி) சென்றுவிடுகிறாள். இலக்குமி வந்து குடிபுகுந்தாள். - இது தான் தெய்வீக வாழ்வு.

திருவள்ளுவர் போல், சேக்கிழார் போல் விரிவான செய்தியை சுருங்கச் சொல்வதில் ஆத்ம ஜோதி முத்தையா அவர்கள் முன் நிற்கிறார். அவரது அறிவுரைகளை ஏற்று வாழ்ந்தால் நம் வாழ்வும் ஏற்றம் பெறும்தானே!

சிவாய நம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஜோதி வித்தக விலாசம்

## தொகுத்தவர்: வ. ஞானகாந்தன்

இந்து சமயக் கருத்துக்களையும் தத்துவங்களையும் ஆத்மஜோதி பத்திரிகை வாயிலாக ஸ்ரீலங்காவில் நா. முத்தையா அவர்கள் வெளியிடுவதை அறிந்து சந்தோஷிக்கிறோம்.

**– காஞ்சிப்பெரியவர்**

ஆத்மஜோதியால் தான் உலகம் வாழ முடியும். ஆத்மஜோதியை வளர்ப்பதையே குறிக்கோளாகக் கொண்டு பணிசெய்து வருகின்ற நல்லன்பர் இராமச்சந்திரா அவர்களும் திரு முத்தையா அவர்களும் அவர்களுடைய 'ஆத்மஜோதியும்' வாழ்க.

வையகம் வாழ்வதற்காக வாழ்க

**– தவத்திரு குன்றக்குடி அடிகளார்**

ஆத்மஜோதி இதழ் இந்த நாட்டில் தொல்லைகள், சிரமங்கள், கஷ்டங்கள் மத்தியில் சமயப்பணி ஆற்றிவருகிறது. அதன் ஆசிரியர் நா. முத்தையா அவர்களை பன்நெடுங்காலமாக நான் அறிவேன். அவர் தனக்கென வாழாதவர். பிறருக்காக வாழ்பவர். சமய உண்மைகளைப் பரப்புவதிலும் சமய வளர்ச்சியிலும் மிகுந்த ஈடுபாடு உடையவர்.

**செ. இராசதுரை**
**பிரதேச அபிவிருத்தி, இந்துசமய இந்து கலாச்சார தமிழ் அலுவல்கள் அமைச்சர்**

இந்து மதத்தின் உயர்ந்த தத்துவங்களை பாமரர்க்கும் எளியோருக்கும் குறிப்பாக மலையகத்து பாட்டாளி மக்களுக்கு தங்களாலியன்ற முறையில் எடுத்துப் புகட்டி ஆன்மீக வளர்ச்சிக்கு அயராது உழைத்து வரும் ஸ்ரீ ஆத்மஜோதி நிலையம் இந்த அகில உலக இந்து மகாநாடு பற்றி ஆர்வமும் அக்கறையும் கொள்வது இயற்கையே.

**மாண்புமிகு செள. தொண்டமான்**
**கிராமிய தொழில் ஆணை அபிவிருத்தி அமைச்சர்**

ஆத்மஜோதியின் அரும் பெரும் நற்பணிகளின் சிகரமாகத் திகழும் வகையில் வெளியிடவிருக்கும் இவ்வரலாற்று பெரும்புகழ் மிக்க சிறப்புமலர் தமிழ் அன்னைக்குச் சூட்டும் கிரீடமாகவும் உலக இந்துக்களுக்களின் நல்வாழவுக்கோர் புகழாரமாகவும் விளங்க வேண்டும் என்ற கொள்கையில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு இரவு பகல் பாராமல் எத்தனையோ இடையூறுகளுக்கும் இடர் பாடுகளுக்கும் இடையே அயராது ஆர்வத்துடன் தொண்டாற்றி வரும் ஆத்மஜோதி ஆசிரியர் தவத்திரு நா.முத்தையா அவர்களுக்கும் இராமனுக்கு இலக்குவன் வாய்த்தது போல முத்தையா அவர் களின் இளவல் திரு நா.அருமைநாயகம் அவர்கள் வாய்த்தது மகிழ்ச்சிக்கும் பாராட்டுதலுக்கும் உரிய ஒன்றாகுமே ஆகும்.

**த. ஏகாம்பரம்**
**தலைவர், இறைபணி மன்றம்**
**தாம்பரம், சென்னை**

இறையருள் பூங்காவிலே அருட்கலைகள் பல உண்டு. அவற்றுள் ஒளி மயமாக விளங்கும் உன்னத நிலையே ஆத்மஜோதி. மாறுகின்ற வையகத்திலே வாழுகின்ற நமக்கு நொடிப்பொழுதில் பலதரப்பட்ட பிரச்சனைகள் உண்டாகின்றன. அவ்வேளையில் வழிகாட்டுவது என்றும் அணையா விளக்காகிய ஆத்மஜோதியே.

***Dr. K. M. P.* முகம்மது காசிம், *P.H.D.***

அந்தர் ஜ்ஜோதில் பஹிர் ஜ்யோதி
ப்ரத்யக் ஜ்யோதி: பராத்பர:
ஜ்யோதிர் ஜ்யோதி: ஸ்வயம் ஜோதி:
ஆத்ம ஜ்யோதி: சிவோ ஸ்ம்யஹம்:

'ஆத்மஜோதி' என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்தில் மேற்கூறிய மந்திரம் தான் நினைவிற்கு வந்தது.

**– ஸ்வாமி தேஜோமயாநந்தம்**
**ரிஷிகேசம்**

தாங்களும் ஆத்மஜோதியும் ஈழத்து இறையன்பர் களுக்கு பற்பல நல்லருட் பணிகளை ஆற்றி வருகின்றீர்கள். என்னுடைய அன்பான வாழ்த்துக் களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபத்தைந்து ஆண்டின் இறையருட் பணி என்பது நினைந்து,நினைந்து,அளந்து பார்க்கப் பெரியது, அரியது. அவற்றையெல்லாம் நீங்களும் நினைப் பீர்கள். 'ஆத்மஜோதி' வாசகர்களும் நினைப்பார்கள், பாராட்டுவார்கள். கதிர்காமக்கந்தன் அருளால் தங்களுக்கும் 'ஆத்மஜோதி'க்கும் சகல நன்மைகளும் சித்திக்க வேண்டி வணங்கி வாழ்த்துகிறேன்.

**நா. பார்த்தசாரதி**
**ஆசிரியர் – தீபம்**

ஆத்மஜோதி நிலையம் என் இல்லம்
அதில் எப்போதும் என் உள்ளம்

ஆத்தும ஜோதியைப் பணிவோம்
அருள்வழி வாழ்ந்திடத் துணிவோம்
சாத்வீகத் தினை யணிவோம்
சமயோகத்தினை பயில்வோம்

உள்ளத்தி லுள்ளது கடவுள்
ஊனுடலே அதன் கோயில்
தென்னறி வன்பினை வளர்ப்போம்
சிவமய வாழ்வினை யுகப்போம்

**– கவியோகி சுத்தானந்த பாரதி**

மூன்று முறை நாவல் நகருக்கு விஜயம் செய்தேன். ஆத்மஜோதி நிலையத்தையும் அதன் பணிகளையும் கண்டு மகிழ்ந்தேன். இது என் இதயத்தைப் போன்றது. அனைவரையும் கண்டு மகிழ்கிறேன். வாழ்க ஆத்மஜோதி சமயப் பணிகள்.

**நா. கிரிதாரி பிரசாத்**

நாவலர் போற்றிமகிழ் நாவலப்பிட்டி யுறை
ஆவலார் முத்தையா அண்ணலின் - மாவிளங்கும்
சீராரும் ஆத்மஜோதி தித்திங்கள் செய்ய இதழ்
நேராக வாழ்க நெடிது.

**கிருபானந்தவாரியார் சுவாமிகள்**

ஆத்மஜோதி நிலையத் தலைவர் நா. முத்தையா அவர்கள் இலங்கையில் சமய உலகில் மிகவும் பிரசித்தமானவர்கள் சமயப் பணிக்கு தம் வாழ் நாளை அர்ப்பணித்தவர்கள். சொற்பெருக்காலும் தம் எழுத்து வளத்தினாலும் சமயத் தொண்டாற்றிச் சீரிய முறையிற் சமயக் கருத்துக்களை பாமர மக்களிடையேயும் பரப்பி வருபவர். இவ் அருட்சாதனைகளால் அவர் செய்து வரும் தொண்டு கல்வியறிவினை வளர்க்க வாய்ப் பில்லாதவர்களாய் இருக்கும் பாமர மக்களுக்குப் பெரிதும் பயன்பட்டு வருவது கண்கூடு.

**கா. கைலாசநாதக் குருக்கள்**
**இலங்கைப் பல்கலைக்கழகம்**
**யாழ்ப்பாண வளாகம்**
**திருநெல்வேலி – யாழ்ப்பாணம்**

போகிற போக்கிலே சுவையான கதைகளையும் சம்பவங்களையும் கூறிச் செல்லும் போக்கு ஆசிரியரின் நூல்களுக்கு அமைந்த தனிச்சிறப்பு. தொண்டர் சீர் பரவும் மெய்யடிமைத் தினத்தில் மிக்க ஈடுபாடு கொண்டு பல வருடங்களாக மேலான சேவை செய்துவரும் ஆசிரியர் நா.முத்தையா அவர்கள் இது போன்ற நூல்களை மேலும் மேலும் எழுதுவார் என்பதில் ஐயமில்லை.

**க. கைலாசபதி**
**கலைப்பீடாதிபதி**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

சீர்மிகு இலங்கை ஸ்ரீலங்கா எனத் தெய்வப் பொலிவுடன் விளங்கிட மேலும் ஒரு காரணமாக ஆத்மஜோதி பல ஆண்டுகளாக விளங்கி வருகிறது. புலமை மிக்க ஆசிரியர் குழாம் ஆத்மஜோதியின் பெயரையும் புகழையும் பெருக்கி வருகிறார்கள் என்பதையும் யாரும் மறக்கமுடியாது. ஆதன் சமயப் பணிகளே தமிழர் சமுதாயத்தை நல்ல பாதையில் இட்டுச்செல்கிறது எனலாம்.

**ஸ்ரீ ஞானசம்பந்த தேசிகர்**
**மதுரை ஆதீனம்**

பல அரிய சமயப் பணி ஆற்றி தன் வாழ் நாள் பூராகவும் பணி ஒன்றையே தனது இலட்சியமாகக் கொண்டு விளங்கிவரும் ஆத்மஜோதி நிலையம் முருகப்பெருமான் கிருபையால் பல ஆண்டுகாலம் ஆலமரம் போல் தழைத்து ஓங்கி சமயப்பணி மென்மேலும் ஆற்ற வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஸ்ரீ திருப்புகழ் சபை**
**தெற்காடி வீதி**
**மீனாட்சி திருக்கோயில் – மதுரை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவலி கங்கை ஓரம் - மலர்மண மிறைக்கும் காசி
நாவலப் பிட்டி யாவில் ஞானசெங் குமுத மான
காவலன் முத்தை யாவின் - கருணையில் பிறந்து தேவ
ஜீவனம் ஊட்டும் ஆத்மஜோதியே! சிறந்து வாழி!

**பி. மூ. ஞானப்பிரகாசம்**

ஆத்மஜோதி ஆசிரியரும் அருட்பணித் தொண்டரும் எனது அருமை நண்பருமான அன்புமணி திரு.நா.முத்தையா அவர்கள் எனது கவிதைகளை வெளியிடுவதில் பல ஆண்டுகளாக பேரார்வம்காட்டி வந்திருக்கிறார்கள். அதன் தொடர்பாக இத் தீங்கனிச் சோலையைத் தமது ஆத்மஜோதி வெளியீடாகவே வெளியிட்டுள்ளார்கள்.

**கவிஞர் பரமஹம்சதாசன்**

அன்பின் உருவம் பண்பின் வடிவம்
ஆத்மஜோதி முத்தையா
துன்பம் மறையச் சுகங்கள் நிறையச்
சுத்த சைவத் தத்துவத்தை
இன்பம் பொங்க இதயம் குளிர
எளிய முறையில் எடுத்துரைக்கும்
அன்புப் பணிக்கு தன்னை முழுதாய்
அர்ப்பணித்த அழகையா

**– கவிஞர் வி. கந்தவனம்**

அரசியல் சிக்கல்களும் வகுப்புவாதப் பூசல்களும் மலிந்து தெய்வ பக்தி குன்றி அன்பும் அருளும் அருகி உலகத்தை அழிக்கும் சாதனத்தை பெருக்குவதிலேயே இன்பமிருப்பதாக கருதி அறிவைப் பெருக்கி அமைதியைக் கெடுத்துவரும் இந்நாளில் 'ஆத்மஜோதி'யின் உயரிய பணியும், சிறந்த சேவையும், தன்னலமற்ற தியாகமும் செப்பும் தரமன்று. மக்களும் காலத்தில் உணரும் தகையதே.

**திரு .டி. எம்.குமரகுருபரன்**
**நிர்வாக ஆசிரியர்**
**குமரகுருபரன் தமிழ்த் திங்கள்**

ஆத்மஜோதி நிலையம் ஈழநாட்டில் அமைதியும் எழிலும் நிறைந்த சூழலில் விளங்குகின்றது. அன்பர்களை வரவேற்றுப் போற்றுவதும் அருளாளர்களை வாழ்த்தி வணங்குவதுமாகிய உயரிய பண்புகளை வளர்க்கும் நிலையம் இது. இந் நிலையத்தின் தொண்டர்களாக விளங்கும் நாவன்மையும் அருள் நெறிப் பண்பும் மிக்க சைவத்திரு முத்தையா அவர்கள் நாடறிந்த நல்லறிஞர். இவரது இளவல் அருள்நெறித்தொண்டர் சைவத்திரு அருமைநாயகம் அவர்கள் அண்ணனின் வழி நின்று ஆத்மஜோதிப் பணிகளை செவ்வனே ஆற்றும் திறன் மிக்கவர்.

**– வித்துவான் தவத்திரு சாந்தலிங்க ராமசாமியடிகள்**
**பேரூராதீனம்**
**கோயமுத்தூர் – 641010**

காலத்தால் அழியாத கற்பகஜோதி
கருணையின் வடிவில் கலந்திடும் ஜோதி
மேலத்தேயவரும் மெச்சிடுஞ் ஜோதி
மேன்மை கொள் சைவத்தில் மிதந்திடுஞ் ஜோதி
பாலத்தை அமைத்திங்கு பவனிவருஞ் ஜோதி
படித்தவர் கேட்பவர் பற்றிடுஞ் ஜோதி
ஞாலத்தே வலம் வரும் நற்குண ஜோதி
நால்வேதம் நவின்றிடும் நல்லாத்ம ஜோதி

**– அங்கவை**

ஆத்மஜோதி என்ற வார்த்தையே இன்பம் பயக்கிறது. நமது ஆத்மஜோதி நிலையத்தாரும் தலைவரும் - பத்திராசிரியரும் இறைவன் கருணையினால் உண்மையோடு தொண்டுச் சேவையாய் செய்தமையால் தான் இன்று முப்பது ஆண்டைத் தொட்டு நின்று மலர்கின்றது. உயிருமுடம்புமாம் முப்பது முதலே என்று ஒரு பழைய கதையுமுண்டு. அப்படியே மலர நமது அன்னை நாகபூஷணி அம்பாளை வணங்கி வாழ்த்துகின்றேன்.

**– நயினை சிவஸ்ரீ ஐ.கைலாசநாதக்குருக்கள்**

இது இன்னும் பல்லாண்டு காலம் நிலைத்து உண்மை அடியார்கள், அநுபூதிமான்கள், அவதார புருஷர்கள் முதலியோரின் வாழ்க்கை வரலாறுகள், அநுபவங்கள், அறிவுரைகள்,ஆன்மார்த்த விடயங்கள் போன்ற பெருநெறி காட்டும் அரும் கருத்துக்கள் தாங்கி மனுக்குலத்தை தெய்வீக வாழ்வுக்கு ஆளாக்கும் பாதையில் பெருந்தொண்டாற்ற வேண்டுமென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளங்கனிந்த ஆசிகள் நல்கி இதற்காக இறை யருளையும் வேண்டிநிற்கின்றேன்.

**சுவாமி பிரேமாத்மானந்தா**
**தலைவர் இராமகிருஷ்ணமிஷன்**
**கொழும்பு**

தர்மம் மற்றுள சமயமும் தமிழும் துலங்க சமரசமான பணிகள் ஆற்ற பக்தர்கள், சித்தர்கள், தத்துவ ஞானிகள், தவச்செல்வர்கள் ஆகியோரின் ஆசிகள் பெற்றனை ஆத்மஜோதியே! பக்தர்கள் சொத்தாம் முத்தையா என்னும் முழுமனதுடையோன் அயரா உழைப்பால் ஆக்கம் பெற்றனை! அவர் பரநல தியாகி பண்புடன் போற்றினர் பண்டிதர், பாமரர், என்றில்லாது எல்லோர் உள்ளத்திலும் புகுந்து பாவங்களைத் தீர்க்க வல்ல பக்தியைப் புகட்டி வேதனை அகற்றி விளக்கொளி ஏற்றி அறிவையும் அன்பையும் கலந்து நற்பணி புரிய பல்லாண்டு வாழ்க வெனப் பல்லாணடு கூறுதுமே என்று ஆசீர்வதிக் கிறோம்.

**ஸ்ரீ வடிவேல் சுவாமி**
**ஸ்ரீ மகாதேவ ஆச்சிரமம்**
**கிளிநொச்சி**

நாவலப்பிட்டி ஆத்மஜோதி ஆசிரியர் தவச்செல்வர் நா.முத்தையா அவர்கள் எங்களை அழைத்து அடியவர்களைக் குருவழிபாடு செய்வித்த நாளில் ஆத்மஜோதி நிலையத்தில் சிலமணி நேரம் இருக்க நேர்ந்தது. அன்று எண்ணிய ஒன்று இன்று கூடுகின்றது.

**– சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்**
**காஞ்சிபுரம்**

இத்தரையோ ரெந்நாளு மிறைவனடி
மறவாம லிருப்ப தொன்றே
புத்தியென நனியுணர்ந்து புவிக்குணர்த்தும்
பொறுப் பேற்றுப் பொலியு மீழத்
ஆத்தமவாத் துமசோதி நிலையமொன்று
கண்டதனை யுவந்து காக்கு
முத்தையவே ளருமைநா யகமிவர்கள்
தொண்டினிதே யோங்கு மன்றே

**ஸ்ரீலஸ்ரீ தற்புருஷ தேசிகர்**

ஆத்மா வேறு ஜோதி வேறு அல்ல. தெளிவின் ஆத்மா ஜோதி எனப்படுவது இவ் ஒளி ஒவ்வொரு ஆன்மாவிற்கும் பொது. இவ்வொளியை உணர்வால் அதாவது சொரூபத் தியானத்தால் அடையலாம். அதன் முதிர்ச்சி கேவலகும்பதும் எனப்படும். இந்நிலை ஒவ்வொரு ஜீவனும் பெற்று பேரானந்தம் பெருவெள்ளத்தில் அழுந்தி எல்லாம் வல்ல நிறைவாம் பிரம்ம நிலையை அடைய வேண்டுமென்பதே ஆத்மஜோதி ஆசிரியரின் உள்ளக்கிடக்கை. அவ் உள்ளம் கடந்த கால் நூற்றாண்டாக செயற்பட்டுள்ளது.

'ஆத்மஜோதி'யின் வெள்ளி விழாவிற்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள் சமர்ப்பணம், 'ஆத்மஜோதி' என்றும் ஆதவனைப் போல ஒளிரட்டும். வாழ்க 'ஆத்மஜோதி' வளர்க ஆத்மஞானம்!

**– சுவாமி நிர்மலாநந்தா**

இருபத்து ஐந்து ஆண்டுகளைப் பூர்த்தி பண்ணியிருக்கிற 'ஆத்மஜோதி' யாண்டும் அமர ஜோதியாய் இருந்து அன்பர்கள் உள்ளத்தில் அருள் விளக்கை ஏற்றி வைத்து வருவதாகுக!

**சுவாமி சித்பவானந்தர்**
**ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்**
**திருப்பராய்த்துறை**
**திருச்சிராப்பள்ளி**

தென்மறைப் பொருளைப் பேசி
தமிழ்மறை இனிமை பேசி
தன்மயத் தொண்டர் முனிவர்
தகவுடைச் சரிதம் பேசி
உண்மையை உரத்த குரலில்
பேசிடும் 'ஆத்மஜோதி'
சின்மயப் பொருளின் அருளால்
சிறந்துபல் லாண்டு வாழ்க!

**சுவாமி மதுரானந்தா**
**கன்யாகுமரி**

ஆத்மாவின் ஜோதி அருட்பெருக்கை பறை சாற்றும் 'ஆத்மஜோதி" என்னும் திங்கள் ஏடு மாந்தர்க்கு பல வகையாலும் ஆன்மீக ஒளிகாட்டி பணிபுரிகின்றது.

**சுவாமி சீதாலெட்சுமி அம்மாள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் இதை உணர்ந்து அதற்கு ஆக்கம் அளிப்ப தாருக.

**ஜகத்குரு ஸ்ரீலஸ்ரீ முனீஸ்வரர்**

ஆத்ம சோதிமுத் தையன் அவரிளவல்
ஏத்தி வரவேற் றினிதுவப்பர் - தோத்திரங்கள்
சாத்திரங்கள் கற்ற சமயப் பெரியோரைக்
கோத்திரம் கொண்ட குணம்

**– சிதம்பரம் பழ சண்முகம் செட்டியார்**

ஆத்மஜோதியின் ஒளியின் கருவியாக இயக்குநராக இருக்கும் உயர்திரு இராமச்சந்திரா ஐயா, அன்பன் முத்தையா அவர்களும் அவரின் சகோதரர் திரு. அருமைநாயகம் அவர்களும் மற்றும் அச்சக நிர்வாகிகள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் நீடூழி வாழ்ந்து இப்பணி தொடர்ந்து நடைபெற பிரார்த்திக்கிறேன்.

ஒருமைப்பாடு 'சன்மார்க்க நீதி' பத்தியோக ஞான தத்துவங்கள் - தேச வளர்ச்சி 'மக்கள் திருப்தி' ஆகியவற்றிற்காக நீண்ட காலம் பணி செய்யும் பலத்தையும் தெளிவையும் யாவருக்கும் அருள ஆத்மஜோதி எங்கும் பிரகாசிக்குக.

**– பித்துக்களி ஸ்ரீ முருகதாஸ் சுவாமிகள்**

ஆத்மா அழிவற்றது. குறைவற்றது. அணையா விளக்கு. அஞ்ஞானத்திரை அதை அறிய வொட்டாது மறைக்கின்றது. எனவே தான் மக்கள் அவ்வுட் கலந்த ஜோதியை வெளியே நாடி நாடி ஓடி ஓடி வாடி வாடி வருந்துகின்றனர். திருவருளால் விரைவில் மக்கள் உன் நாடி உள்ளே ஒளி பெற நோக்கிக் கண்ணாடி போலக் கலந்தானைக் கண்டு களிப்புற நம் ஆத்மஜோதி அரும்பணி புரிவதைத் தொடர்ந்து செய்து வருக.

இதுவே எமது பிரார்த்தனை
இதுவே எமது செய்தி

**– ஸ்வாமி சச்சிதானந்தா**
**நியூயோர்க்**

பாடுதல் பாடி ஆடுதல் ஆடிப்
பணிதல் பின் ஒருமையுற்றடங்கி
நாடுதல் நாடித் தியான யோகத்தில்
நண்ணுதல் நண்ணுமந் நிலையிற்
கோடுதல் இன்றி குறி குணங் கடந்து
கூம்பிய சோதியிற் கலந்து
கூடுதல் என்னும் படிகளை ஏறிக்
குலவுவார் இன்பமே ஆர்வார்!

இத்தகை யருள்சேர் நெறியினில் மக்கள்
இயங்குதல் வேண்டுமென் றவாவில்
பத்தியை விதைத்துப் பாடுதல் என்னும்
பணியினைப் பயிர்செய்து மோனச்
சித்தியில் சாந்தம் பெற வரும் பயிற்சி
சேரத் தொண்டுகள் செய்யும்
உத்தியில் ஆத்ம ஜோதியாம் நிலையம்
ஒளிர் வதைக் கண்டு வந்தேனே!

ஆத்மஜோதி தன் ஆன்மீகப் பணியைத் தொடர்ந்து சிறப்புற நடாத்திட பால முருகன் அருள் பொலிக!

**பாலமுருகனடிமை**
**இரத்தினகிரி**

மக்களை நல்வழிப்படுத்தி ஆன்ம ஈடேற்ற வழியில் செல்லச் செய்யும் தொண்டே எல்லாத் தொண்டு களிலும் சிறந்த தலையாய தொண்டாகும். ஆத்ம ஈடேற்றத்திற்காக அறிஞர்கள் பல முறைகளைக் கையாண்டு வந்திருக்கிறார்கள். அம்முறைகளில் ஒன்று சஞ்சிகைகள் மூலம் ஆத்ம ஈடேற்ற வழிகளை அறிவுறுத்துவதாகும். ஆத்ம ஈடேற்றத்திற்காக நமது நாட்டில் பல சஞ்சிகைகள் தொடர்ந்து தொண்டாற்றி வெளிவருகின்றன. அவ்வாறு தொண்டாற்றி வரும் சஞ்சிகைகளில் முதன்மை பெற்று விளங்குவது ஆத்மஜோதி என்னும் மாத ஏடாகும்.

**– ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள்**
**நல்லை ஞானசம்பந்தர் ஆதீன முதல்வர்**

இலங்கையில் நாவலப்பிட்டி எனுமிடம் சூழ்பகுதி
இருப் பிடமாகக் கொண்டமைந்த எழிலாத்ம ஜோதி
வலங்கிளரும் நிலையத்தில் இருபதாம் நூறு
வாய் நாற்பத் தெட்டாம்ஆங் கிலஆண்டிற் பிறந்து
நலங் கொள்கௌரவ ஆசான் ராமச்சந்திரன் அவர்கள்
நா.முத்தை யாஎனும் பேர் நிர்வாக ஆசான்
துலங்கு தந்தை தாய்போல வளர்க்கவளர்ந் துமதி
தொறுமுறவி மக்களன்பால் விளையாடும் ஜோதி

**– ஸ்வாமி ஸாதுராம் ஸ்ரீ வைகஷ்ணவி**
**சத்சங்கம் – வேலும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மதமும் சம்மதமாய் ஏற்கும் வகையாக
தம்மதமே சிறந்ததெனும் தாழ்மை மன இருளகற்றி
அம்மதத்திலுள்ள அரிய பல விஷயங்கள்
விம்மி மனம் விரிவடைய விளங்க வைக்கும்
ஆத்மஜோதி நீ வாழ்க!

**- ஆண்டவன் பிச்சை**
**ஸ்ரீ வைஷ்ணவிகுடீர் – சென்னை**

சைவமும் தமிழும் வளர்க்கும் பணியில் சைவத் தமிழர்களுக்கு வழி காட்டும் ஜோதியாக 'ஆத்ம ஜோதி' விளங்கட்டும் என வாழ்த்துகிறேன்.

**– செ. குமாரசூரியர்**
**முன்னாள் தபால் தந்தித் தொடர்பு அமைச்சர், இலங்கை**

பூமாந்தும் வண்டெனவே வாழும் மக்கள்
பூமியிலே மயக்கேறி வாழ்க்கை தன்னில்
ஏமாந்து போகாமல் இனிமை யாக
ஈர்த்தவரைத் திருத்துகிற பெரியீர்! பக்திப்
பாமாந்தும் வகையினிலே மாந்தர் வாழப்
பண்ணுகின்ற பெருமானே! இதுநாள் மட்டும்
ஏமாந்த மாந்தரெல்லாம் தங்கள் பேச்சால்
இனிமேலே உயர்ந்திடுவர் வாரீர்! வாரீர்!

அரவிந்தர் ரமணரிஷி போன்ற நல்ல
'ஆத்மஜோதி' சீலர்களின் ஆசி பெற்றுப்
பரவைசூழ் உலகினிலே பண்பி னோடு
பாங்குடனே வாழ்கின்ற பெரியீர்! ஓங்கும்
அரனாரின் ஐந்தெழுத்தை நித்தம் நித்தம்
அன்புடனே ஓதிவரும் அறிஞர் ஏறே!
தரமான மாந்தர்குலம் சிறக்க வேண்டித்
தக்க பணி ஆற்றி வரும் சான்றோய் வாரீர்!

அருளாந்த நம்மன்னை தண்டு மாரி
அகிலாண்ட நாயகிக்கு வெள்ளி யாலே
பொருளார்ந்த நற்கவசம் பொருத்துகின்ற
பொன்னான இவ்விழாவில் கலந்து கொண்டு
தெருளாந்த வகையினிலே சிறக்கப் பேசத்
தென்புடனே வந்தவரே! தங்கள் பேச்சால்
மருளார்ந்த பாழ்பிறவி நோயும் நீங்கும்
மாமருந்தே1 மாமலையே! வாரீர் வாரீர்!

**– வீசூர் ஸ்ரீ தண்டுமாரியம்மன் கோயில்**
**மானாம்பதி – தமிழ் நாடு**

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் கடைப்பிடித்த வழிகளில் நன்கு ஊறித் திளைத்தவர். வெறும் சமயச் சடங்கு களில் அதிகம் ஈடுபடாது பாதயாத்திரை பஜனை யோடு பெருமானை வழிபடுவதையே பெரிதும் கையாண்டவர்.

**– திருமதி இ. கைலாசநாதன்**
**மேலதிக செயலாளர் (இந்து விவகாரம்)**
**கலாசார சமய அலுவல்கள் அமைச்சு – இலங்கை**

நாவலப்பிட்டியில் இருந்து சமய சமூகப் பணிகளை ஆற்றி வந்துள்ள ஆத்மஜோதி முத்தையா அவர்கள் தமது வாழ்நாளில் பெரும்பகுதியை சமயப் பணிக்காகவே அர்ப்பணித்தவர். சொற்பெருக்காலும் தமது எழுத்து வளத்தினாலும் சமயத்தொண்டு ஆற்றி எளிய முறையில் சமயக் கருத்துக்களை பாமர மக்களிடையேயும் பரப்பியவர். இவரது நூல்களில் ஒன்றான பன்னிரு மாத நினைவுகள் என்னும் நூலினை எமது திணைக்களத்தினால் நிர்வகிக்கப் படும் அறநெறிப் பாடசாலைகளுக்கு வழங்குவதற்காக மறுபதிப்புச் செய்து இலவசமாக வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

**– சாந்தி நாவுக்கரசன்**
**பிரதிப் பணிப்பாளர்**
**இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்**

ஆத்மஜோதி ஐயாவின் நாமம் என்றும் எம்முள்ளத்தில் என்றும் ஒலித்துக்கொண்டே இருக்கும். இந்து சமயப்பேரவையின் இணையற்ற தலைவராக இருந்து பெரும்பணியாற்றிய இப் பெருந்தகையின் அப்பழுக்கற்ற சிரிப்பு ஒன்றே எமது இனத்தையும் எமது மதத்தையும் வாழ்விக்கும் சக்தி வாய்ந்தது.

**– பண்டிதை, சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
**தெல்லிப்பழை**

தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்து தம் வாழ்நாள் முழுவதையும் இறைபணிக்கே அர்ப்பணித்து உத்தம ஞானியாக விளங்கியவர். இருளில் ஒளியாய் எல்லோர்க்கும் வழிகாட்டியாய் நின்ற ஞானகுருவை இழந்துவிட்டோம். ஏழை எளியவர்களுக்கும் அநாதைக் குழந்தைகளுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊன்றுகோலாய் நின்ற பெரும் தர்மவானை இழந்து விட்டோம்.

**– ஆ. மகாலிங்கம்**
**பிரதேச செயலர்**
**உபதலைவர் இந்துசமயப்பேரவை**
**யாழ்ப்பாணம்**

காலத்தின் தேவையறிந்து இப்பெரியார் செய்த சேவைகள் போற்றுதற்குரியன. நல்லொழுக்கம், தெய்வ பக்தி ஆகியவற்றை வளர்ப்பதில் தளராத உறுதியுள்ளவராக விளங்கினார். அன்பாலும் பண்பாலும் அனைவரையும் அரவணைத்து மலையகத்தில் பத்தி மார்க்கத்தை வளர்த்தார்.

**– வி. கைலாசபிள்ளை**
**– தலைவர் அகில இலங்கை இந்துமா மன்றம்**

ஆத்மஜோதியை வெளியிட்டதோடு அமையாது உலகின் பல பாகங்களிலும் நடைபெற்ற சைவ மகாநாடுகளிலும் பங்குபற்றிச் சைவசமயத்தின் பெருமையை உலகறியச் செய்தார்.

**– யோகேந்திரா துரைசுவாமி**
**தலைவர்**
**இலங்கை இந்துப்பேரவை**

நலம் பல நல்கும் சமயக் கருத்துக்களை தாய் நாட்டிலும் வெளிநாடுகளிலும் பரப்பியதோடு மட்டுமல்லாது ஆத்மீக நெறி பரப்பிய ஆத்மஜோதி பத்திரிகையின் ஸ்தாபகராகவும் ஆசிரியராகவும் நாவலப்பிட்டி கதிரேசன் பாடசாலை முன்னாள் அதிபராயும் சமயத் தொண்டராயும் முன்னாள் இந்துப் பேரவைத் தலைவராயும் வாழ்ந்து சிறப்புறத் தொண்டாற்றியவர் ஆத்மஜோதி நா.முத்தையா அவர்கள்.

**– பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை**
**துணைவேந்தர்**
**யாழ். பல்கலைக்கழகம்**

மலையக மக்களின் ஆத்மீக உணர்வுகளை கூர்மைப்படுத்த அன்னாரது சொற்பொழிவுகளும் எழுத்துக்களும் தூய்மையான வாழக்கை மட்டுமன்றி அவர் வரவழைத்த சுத்தானந்த பாரதி போன்ற பெரியார்களின் தரிசனமும் உதவின. இவரது தன்னலமற்ற நீண்ட காலச் சமயப்பணி மலையக மக்களின் ஆத்மீக வாழ்க்கையிலும் சிந்தனையிலும் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்ததை மறுக்க முடியாது.

**– பி. பி. தேவராஜ்**
**இந்துகலாச்சார இராஜாங்க அமைச்சர்**

நமது காலத்தில் பத்தியோடும் சிரத்தையோடும் தமிழ்ப்பணியும் சைவப்பணியும் ஆற்றியவர்களுள் ஆத்மஜோதி ஐயா அவர்கள் தலைசிறந்தவர். குறிப்பாக சமயத்தையும் சமூகத்தையும் இணைப்பதில் அவர் அரிய தொண்டாற்றியுள்ளார். தமது சமயப் பிரசங்கங்களின் மூலம் சமுதாயச் சீர்கேடுகளை நீக்கி மக்களிடம் அன்பு கருணை புரிந்துணர்வு அற உணர்வு ஆகியவை ஏற்பட அயராது உழைத்தார்.

**– க. சண்முகநாதன்**
**அரசாங்க அதிபர்**
**யாழ்ப்பாணம்**

இலகு தமிழில் பிரசங்கங்களை நிகழ்த்தி மலையகத்தில் சைவப்பணியையும் ஆன்மீக விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தினார். யுத்த நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட எம் மக்களுக்கு உதவ வேண்டும் என்ற கோரிக்கையை உள்நாட்டிலும் வெளிநாடுகள் பலவற்றிலும் முன்வைத்தார்.

**– வே. பொ. பாலசிங்கம்**
**மாநகர ஆணையாளர்**
**யாழ்ப்பாணம்**

எந்த விடயத்தை எடுத்தாலும் அந்த விடயத்தைப் பற்றித் தெளிவாகவும் அழகாகவும் பேசவும் எழுதவும் வல்லவர். தமது பேச்சுத் திறமையையும் எழுத்துத் திறமையையும் நமது சமய வளர்ச்சிக்காகவே தம் வாழ்நாள் முழுவதும் அர்ப்பணித்து வருபவர்.

**– கி. இலக்ஷ்மண ஐயர்**

எழுத்திலும் பார்க்க மென்மையும் மேன்மையும் கொண்டவை அவருடைய பேச்சுக்கள். பேச்சுக்களில் அன்பின் அரவணைப்பும் இருக்கும். அவர் சென்ற நாடுகளில் எல்லாம் மக்கள் அவரால் கவரப்பட்டார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றால் அதற்குக் காரணம் அவரது ஆத்மீக அன்பின் ஆளுமை தான். அவ் அன்பு அவர் வாழ்வின் அடிநாதம். அவருக்கு ஆத்மஜோதிக்கு அடுத்ததாக அன்பு மணி என்ற காரணப் பெயரே பொருத்தமாகும்.

**– பேராசிரியர். செ. சிவஞானசுந்தரம்**
**வைத்தியபீடம் – யாழ் பல்கலைக்கழகம்**

இள வயதிலிருந்தே தனது பிறந்த இடத்திலுள்ள ஞான வைரவர் ஆலயத்தில் சரியைத் தொண்டு புரிந்து வந்த முத்தையா அவர்கள் புராண படனம் சமயச் சொற்பொழிவு ஆகியவற்றில் கூடிய ஈடுபாடு இருந்தபோதிலும் அவர் அடியார் புடை சூழ கூட்டுப்பிரார்த்தனை செய்வதில் பெருவிருப்புக் கொண்டவர்.காலப் போக்கில் பாத யாத்திரை செய்து மக்களுக்கு சைவ சமயத்தின் தொன்மையை உணர்த்தியவர்.

பேராசிரியர் கா. குகபாலன்
தலைவர் - புவியியற்துறை
யாழ் பல்கலைக்கழகம்

ஒருவருக்கு இளம் பருவத்தில் ஆத்மீக சிந்தனை முளை கொள்ளுமாயின், அது பூர்வ ஜென்ம தவ விஷேசம் என்றே கூற வேண்டும். திரு. நா. முத்தையா அவர்களின் ஆத்மீக சிந்தனை இளம் பருவத்திலேயே முளைகொண்டுவிட்டது.

**– பண்டிதமணி. சி. கணபதிப்பிள்ளை**

இந்துமத மோங்கிட மெங்கெங்கும் சென்றுலவி
முந்துபணி யாற்றும் முதுதொண்டன் - சந்தமுறும்
ஞானசித்த வித்தகனார் நா. முத்தை யாநற்சீர்
ஆனதெரிந் தேத்தவல்லார் ஆர்

செந்தமி ழீழம் வாழி செறிகுலத் தமிழர் வாழி!
அந்தமில் சைவம் வாழி அரன்புகழ் மலிந்து வாழி!
இந்துவாம் ஞானசித்தர் எங்கள்முத் தையனார் சீர்
பைந்தமிழ்ச் சீர்போ லோங்கிப் பல்லாண்டு வாழி வாழி!

**– பண்டிதர் மு.கந்தையா, ஏழாலை**

புனிதமான சேவை உணர்வுடன் மக்களை ஆழமாக நேசிக்கும் மனிதப் பண்புடன் நோயாளிகளை அணுகும் மருத்துவரே என்றும் மக்கள் மனத்தில் வாழ்ந்துகொண்டிருப்பார். தொழிலிலும் வெற்றிகளைச் சந்திப்பார் என்பது அவர் எனக்கு அடிக்கடி போதிக்கும் வாசகங்கள். தாங்க முடியாத பல் கொதி வலியால் துடிக்கும் நோயாளிகள் சில நேரங்களில் இரவு நடுச் சாமங்களிலும் கூட தொலைபேசியில் அழைக்கும்போது அவர்களுக்காக நான் விரைந்து செயற்படும் முறையினை எங்கள் இல்லத்தில் தங்கியிருந்த போது பல தடவைகள் அவதானித்து விட்டு எங்களுக்கு பல உதாரணங்களுடன் பல பழைய கதைகள் கூறுவார். அவர் கூறும் ஒவ்வொரு கதையிலும் தர்ம நெறிகள்,அற வழிகாட்டல்கள் புதைந்து கிடக்கும்.

**– டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம்**

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் இலங்கையில் நாவலப்பிட்டியில் ஆசிரியராக இருந்த காலத்தில் நான் அவருடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவர் மலைநாட்டுத் தமிழ் மக்களின் நல்வாழ்வுக்காக உழைத்ததை நான் நன்கு அறிவேன். பிரதானமாகச் சமயத்துறையில் அவர் செய்த தொண்டுகளை அப்பகுதி மக்கள் பாராட்டிப் பேசக் கேட்டிருக்கிறேன்.

**– தி. மாணிக்கவாசகர்**
**முன்னாள் கல்விப்பணிப்பாளர்**
**யாழ்ப்பாணம்**

நான் செய்த தவப் பேற்றின் விளைவாக எனது தந்தையாரின் மூலம் ஐயா அவர்களுடைய தொடர்பு ஏறத்தாழ 47 வருடங்களுக்கு முன்னரே கிடைத்தது. ஆத்மீக சொற்பொழிவுகளும் மனதைக் கொள்ளை கொண்டு ஆழமாகப் பதியும் அவரது கதைகளும் என் ஞாபகத்திற்கு வந்தன.

**– சு. சிவபாலன்**
**பிரதம கணக்காளர்**
**செயலகம், யாழ்ப்பாணம்.**

எமது பெருந் தலைவர் ஆத்மஜோதி நா.முத்தையா அவர்கள் சிறு பராயத்திலிருந்தே சைவ மகானாக வளர்ந்தது மட்டுமல்லாது சிவ சம்பந்தமுள்ள அனைத்து துறைகளிலும் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்.

**மஹா ராஜ ஸ்ரீ**
**சு. து. சண்முகநாதக் குருக்கள்**
**மாவை ஆதீனகர்த்தா – மாவிட்டபுரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநெறிச் செல்வர்களான நாயன்மார்கள் தமது பாதங்களால் நடந்து திருத்தலங்கள் தோறும் சென்று திருப்பதிகங்கள் பாடினர். இதனால் எமது சமயம் தழைத்தது. மக்கள் உயர்ந்தனர். திருநீற்றின் மகிமை எங்கும் பரவலாயிற்று. இப்படியான புனிதச் செயற் பாடுகள் எமது சைவ சமயத்தின் அழியாச் சொத்து. அதற்கு சான்றாக அமைவது ஆத்மீக வள்ளல் உயர்திரு நா.முத்தையா அவர்களின் தலைமையில் நடைபெறும் இத்திருத்தல பாதயாத்திரை.

இன்றைய இடுக்கண் நிறைந்த காலகட்டத்தில் சோதனையும் வேதனையும் சூழ்ந்த எம் மக்களின் இதயத்திற்கு ஆறுதலாக அமைவது இது. எமக்கு மேம்பட்ட பொருள் இறைவன். அவனின்றி அணுவும் அசையாது. இதைப் பலர் மறந்து விட்டனர். திருக் கோயில் வலம் வராமல் வருபவர்கள் எத்தனைபேர். இறை நாம ஜெபம் செய்யாமலும் அப்படியானவற்றை கேளாமலும் வாழ்நாளை வீணாக்குபவர் பலர். இப்படிப்பட்டவர்கள் தமது நிலைப்பாடுகளில் இருந்து நன்னிலை எய்தவும் மக்கள் சைவத்தின் தொன் மையை உணரவும் திருத்தலங்களில் நடைபெறும் பூசைகள் விழாக்கள் முதலியவற்றில் முறைப்படி ஈடுபட்டு பயன் பெறவும் வழிவகுக்க வல்ல இப் பாதயாத்திரையை வாழ்த்துகிறோம் வணங்குகிறோம்.

**– வசந்த நாகபூஷணி அம்பாள்**
**திருத்தல சபையினர், ஏழாலை**

ஆத்மஜோதி ஆசிரியர் ஸ்ரீ நா.முத்தையா அவர்கள் இலங்கையில் விசேடமாக மலை நாட்டில் செய்து வரும் சைவ சமயப்பணி பெரிதும் போற்றத்தக்க தொன்றாகும். இன்று அவர்களுடைய பணியையும் பணியின் பயனையும் சைவ நன்மக்கள் உணரத் தொடங்கிவிட்டார்கள். அவர்கள் பல சமய சமூகப் பணிகளை ஆற்றியும், கலகலக்காமல் அடக்கமாக வாழும் நற்குண சீலர். நல்லார் என்ற பதத்திற்கு இலக்கணமாக வாழும் நல்லார் அவர்.

**நா. இரத்தினசபாபதி**
**மெய்கண்டான், கொழும்பு**

இளகிய நன்மனமும் இன்பப்பே ரின்ப
வளமிகு நல்லறம்சேர் வாஞ்சைக் களம்புகளும்
நாளை உலகத்தை யாழ்ப்பாணம் கையளித்த
ஆளுமைவான் முத்தையா அன்பு!

சாதுகுரு என்குரு சாயலைத் தாய்தமிழ்
ஓதுகுரு ஆத்மஞானி முத்தையா - நீதிகுரு
ஓங்குவாழ்வு முற்றும் உணர்த்துகின்ற இந்நூலே
வீவகு அருள் கோயில் வியப்பு

**– பெருங்கவிக்கோ வா . மு. சேதுராமன், சென்னை**

இந்துமதம் வளர்க்கவென இங்கே வந்து
இறைவனடி சேர்ந்து விட்டார் ஆத்மஜோதி
எந்தமதம் என்றாலும் இந்துக் கொள்கை
இருக்குமதில் என்பதனை வாழ்வில் காட்டி
அந்தமதம் இந்தமதம் என்றே பேசா
ஆத்மநெறி காட்டியவர் மறைந்து போனார்
சொந்தமதம் வளரவெனச் சுழன்றே சுற்றிச்
சுகந்த மணம் பரப்பியவர் மறைந்தார் ஐயா!

**– இரா.சம்பந்தன்**

கடல் கடந்து தமிழர் வாழும் நாடுகளெங்கும் சென்று தமிழையும் சைவத்தையும் அவர்கள் மறவாதிருக்க பெரியார் நிகழ்த்திய சொற்பொழிவுகள் மூலம் நாம் பெற்றுக்கொண்ட அறிவுரைகள் பல்லாயிரம். தமிழ் பேசத் தெரியாமலும் தமிழ் மொழியில் உரையாடு வதை விளங்காமலும் பெயரளவில் மட்டும் தமிழர் களாக எமது எதிர்கால சமுதாயம் வளர்க்கப்படுவது கண்டு அவர் உள்ளம் வருந்தினார். அதனைப் பகிரங்கமாகக் கண்டித்தும் வந்தார்.

இவ்வாறான தமிழ்க் குழந்தைகளை ஊமைத் தமிழர்கள் என்றும் செவிட்டுத் தமிழர்கள் என்றும் தமது சொற்பொழிவுகளில் பெரியார் முத்தையா அவர்கள் சாடினார். ஒவ்வொரு தமிழரினதும் வீட்டு மொழியாக தமிழே அரசோட்ட வேண்டுமென்று அவர் வலியுறுத்தி வந்தார். தமிழ் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளுடன் எப்போதும் தமிழிலேயே பேச வேண்டும் என்று சொல்லி வந்தார். நீங்கள் உங்கள் வீட்டில் தமிழைப் பேசுவதையும் தமிழில் பேசுவதையும் யாரால் தடுக்க முடியும்? என்று ஒவ்வொரு கூட்டங்களிலும் கேட்டுவந்தார்.

**– சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள்**
**புங்குடுதீவு**

உலகத் தமிழர்கள் மத்தியில் கடந்த ஐம்பது ஆண்டுகளாக தமிழும் சைவமும் காத்து வளர்க்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மஜோதியாகத் திகழ்ந்து குன்றின் தீபமாக மிளிர்ந்து வந்த பெரியாரைத் தமிழ் கூறும் நல்லுலகு இழந்துவிட்டது.இறைவனோடு பிறவியாகி விட்ட அணையா விளக்கு ஆத்மஜோதி நா.முத்தையா அவர்கள் பிறவிப் பெருங்கடலைத் தாண்டி முத்திப்பேறு பெற்றுவிட்டார். பெரியாரது ஆத்மா சாந்தி பெறுவதாக!

**சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜக்குருக்கள்**
**புங்குடுதீவு**

சிவத்திரு க.இராமச்சந்திரா அவர்கள் இலங்கையில் ஓர் இல்லற ஞானியாக திகழ்கின்றார் என்று உலகமறியத் தெளியத் தருகிறார் நாவலப்பிட்டி மாதாந்த வெளியீடாகிய 'ஆத்மஜோதி' இதழின் ஆசிரியர் திரு.நா.முத்தையா அவர்கள் தாம் எழுதிய 'இலங்கையில் ஓர் இல்லற ஞானி' என்று அதீத பெயர் கொண்ட நூலினால்.

இந்நூல் வாசகர்களுக்குப் படிக்கப் படிக்க தெவிட்டாத சுவை பயக்கும் இனிய தெள்ளிய தமிழ் வசன நடைப்பாணியில் மிளிர்வது, அதனால் அதனை வாசிப்போர் சோர்வடையாமல் ஊக்கங் கொள்வதற்கு ஏற்ற விறுவிறுப்பான நடையுமுடையது, தொடர்ந்து மேன் மேல் வாசிப்பதற்கும் பேரவாவினை எழுப்பும் தன்மையுடையதாயும் திகழ்கின்றது. இந்நூலைப் பெற்று வாசிப்போர், தற்காலத்தே தமக்கு சகபாடியாய் இல்லற ஞானியாக வாழ்க்கை நடாத்தும் சிவத்திரு க. இராமச்சந்திரனாரது தூய ஒழுகலாற்றினைப் பின்பற்றி தமது இலௌகீக விஷயம் பற்றிக் கொண்டொழுகும் கருமங்களோடு கூடவே மற்றைய ஆன்மீக ஞான விஷயக் கருமங் களையும் தமக்கு இலட்சியமாகக் கொண்டு வாழும் வாழ்க்கையும் விருப்பமும் மேற்கொள்வோராவர் என்பது எமது கருத்தும் நம்பிக்கையுமாகும்.

இத்தமிழ்ப் பெருமகனார் தமிழும் சைவமும் நாவலர் போல் சமரசக் கொள்கையும் மேலோங்க சேவை செய்து கீர்த்தியுடன் இனிது வாழ, அவருக்கு நீண்ட ஆயுள் ஆரோக்கிய ஐசுவரிய ஞானங்களை ஈந்தருளும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவனாகிய கதிர்காம வேலாயுதக் கடவுளை வந்தித்து வாழ்த்து வோமாக!

**வித்துவான் ந. சுப்பையாபிள்ளை**

ஆத்மஜோதி நா.முத்தையா அவர்கள் ஸ்ரீ இராம கிருஷ்ண மடத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்கள். அவர் இந்தியாவிற்கு விஜயம் செய்யும் போதெல்லாம் இங்குள்ள இராமகிருஷ்ண மடங்களை சென்று தரிசிப்பதையும் தமது ஒரு வழக்கமாக வைத்திருந்தார்கள். அந்த நாளில் ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தின் நூல் நிலையத்தில் 'ஆத்மஜோதி' பத்திரிகையை பல சமயம் படித்ததுண்டு. அது ஒரு நல்ல பத்திரிகை என்பதில் சந்தேகமில்லை.

**இராமகிருஷ்ண விஜயம் – ஆசிரியர்**
**சுவாமி கமலாத்மானந்தர்**
**ஸ்ரீ இராமகிருஷ்ண மடம் – மயிலாப்பூர்**

முத்தையா மாஸ்டர் பல விழுமியங்களைக் கொண்டவர். கண்ணியம் மிக்கவர். திருப்பணிக்காகப் பெற்ற பணத்தை அப்படியே உரியவர்களிடம் ஒப்படைப்பவர். பிரயாணச் செலவைக்கூட தன் கணக்கிலேயே போட்டுக்கொள்வார். கனடா இந்தோனேசியா பயணத்தின்போது பெற்ற அனைத்தையும் கைதடி இல்லத்திற்கே கொடுத்துதவியவர்.

**– அட்வகேட் ஆர். சிவகுருநாதன் எம்.ஏ**
**ஆசிரியர் – தினகரன், கொழும்பு**

முத்தாய் சேவை முனைந்தே ஆற்றும்
முத்தை யாவெனும் முனிவரே! வருக
அகிலம் அனைத்தும் அன்புடன் வாழ
ஆவன செய்யும் ஆன்றோய் வருக!

ஆத்ம ஜோதி எனுமிதழ் நடத்தும்
ஆத்ம ஜோதி ஐயனே! வருக!
தங்கள் வருகையால் தனிப்பே ருவகை
எய்திநி ற்கின்றோம் ஏந்தலே! வருக!

தோன்றிற் புகழொடு தோன்றுக என்ற
குறள்வழி தோன்றிய கோவே! வருக!
தமிழாய் இனிக்கும் தலைவா! நீடு
வாழ்க நீவிர் வருக! வருகவே!

**கனியாம் பூண்டி அரசினர் உயர்நிலப்பள்ளி**
**தமிழ்நாடு**

அருமையான அற்புதமான தேவாரப் பாடல்களை உள்ளீடு பொருளாகக் கொண்டு 'ஆத்மஜோதி' யின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணையினால் மக்களின் அறியாமை இருளை அகற்றி அரும் பணியாற்றிய சைவப் பெரியார் நா.முத்தையா அவர்கள் சிறுவர்களின் உள்ளங்களிலும் சென்று தங்கும் வண்ணம் சிறு சிறு கதைகளாக்கித் தந்துள்ளார். அவருக்கே உரித்தான எளிமையான நடை, நகைச்சுவை கலந்த சிந்தனைப் போக்கு,தெளிந்த நோக்கு, வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போன்று மிக மென்மையாக வலிய கருத்துக்களை புகுத்தும் பாங்கு திரு முத்தையா அவர்களுக்கு கைவந்த கலை. இப்பெரியாரது கருத்துக்கள் காலங் கடந்தும் அழியாதவை. அழிக்க முடியாதவை.

**– வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன்**

நாம் ஒருவரின் குணாதிசயங்களை நன்கு அறிந்திருந்தாலோ அவருடன் சமயத் தொண்டிலும் சமூகசேவையிலும் நெருங்கிய அத்யாத்ம தொடர்பு பூண்டிருந்தாலோ, அவரைப் பற்றி பாராட்டிப் பேசுவதோ எழுதுவதோ கஷ்டமான விடயம். திருவாளர் முத்தையா அவர்களுடன் சென்ற முப்பது ஆணடுகளாக அருமையான ஆத்மீகத் தொடர்புகளுடன் வாழ்ந்தவனாகையால் எனக்கு இந்தக் கஷ்டம் பெரிதுமுண்டு. எனது சமயத் தொண்டை உலகறியச் செய்ய, எனது நூல்களையும் பாடல்களையும் அச்சேற்றிப் பரப்புவதற்கு தெய்வத் திருவருளும் நான் போற்றி வழிபட்ட மகாத்மாக்களின் ஆசியும் அவரை எனக்கு ஓர் அருந்துணையாகச் சேர்த்துள்ளது என்ற நம்பிக்கையுடன் வாழ்பவன் யான்.

**– நயினை க. இராமச்சந்திரா**

1947ம் ஆண்டு தொடக்கம் 40 ஆண்டுகளாகச் சைவப் பணியாற்றி வந்த 'ஆத்மஜோதி' என்னும் சஞ்சிகைக்கு எதிர்பாராத விதமாக தடை ஏற்பட்டமை குறித்துச் சைவப்பேருலகம் கவலைக் கடலில் ஆழ்ந்திருந்தது. அச் சஞ்சிகையை மீண்டும் தொடர்ந்து வெளியிட வேண்டுமென்று நேரிலும் கடித வாயிலாகவும் ஆன்மீக வள்ளல் திரு நா.முத்தையா அவர்களுக்குச் சைவ அன்பர்கள் வேண்டுகோள் விடுத்துக்கொண்டே இருந்தனர். அவர்களுடைய வேண்டுகோள் வீண் போகவில்லை 'ஆத்மஜோதி' புத்தாண்டு தொடக்கம் வெளிவரவிருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

ஈழத்திலுள்ள சைவசமயப் பத்திரிகைகளுள் முன்னணியில் திகழ்கின்றது 'ஆத்மஜோதி'யே என்பது ஒரு சிறிதும் மிகையாகாது. அது உறங்கிக் கொண்டிருந்த சைவ மக்களை முக்கியமாக மலைநாட்டு மக்களை தட்டியெழுப்பி அவர்களைச் சைவ நெறியில் வாழச்செய்தது சைவக் கருத்துக்களை அவர்கள் மனதிற் பதிய வைத்தது. இதனாலேயே சைவர்கள் சைவர்களாகவே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

இப்போது மதமாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் 'ஆத்மஜோதிக்கு' முன்னரிலும் பன்மடங்கு வேகத்துடன் பணியாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதற்கு வசதியாக மக்கள் 'ஜோதிக்கு' கைகொடுத்து உதவவேண்டுமென்பதை தெரிவித்து, என் ஆசியைக் கூறி அமைகின்றேன்.

**– கலாநிதி, பண்டிதர் க. வைத்தீஸ்வரக் குருக்கள்**
**செயலாளர்**
**தமிழ் வளர்ச்சிக் கழகம் – காரைநகர்**

திருகோணமலையில் எனது திருமணம் சர்வோதய முறைப்படி நடந்தபோது எனது ஆசிரியர் பண்டிதர் க.பொ.இரத்தினம் அவர்கள் காந்தி இராஜகோபால் அவர்கள் செயலாளராகப் பணி புரிந்தார்கள். ஆத்மஜோதி ஐயா அவர்கள் குருவாக இருந்து திருமுறைகளை ஓதினார்கள். பெரியோர்கள் வாழ்த்தினார்கள். திருமண விழா இனிது நிறைவேறியது.

**– பொ. கந்தையா (காந்தி ஆசிரியர்)**
**திருகோணமலை**

அருளுணர்வைத் தூண்டுகின்ற ஆத்ம ஜோதி
ஆசிரியன் அருட்கொடையன் அனைத்துலகின்
பொருளுரைக்கும் பேராளன் பொதுமை ஞானி
பொங்குந்தமிழ் சைவசீலன் பிரம்மச்சாரி
மருளுணர்வை வேம்பாக்கி வாழ்வுயர்த்தும்
மாபணியை மலேசியாவில் மணிலா எங்கும்
பெரு நிலவாய் வலம் வந்தாய் பிறந்த மண்ணும்
பேருவகை அடைந்ததின்று புகழைக் கேட்டு

**– கவிஞர் எஸ். பி. தங்கவேல்**
**மலையகம் – ஸ்ரீ லங்கா**

மலையகத் தமிழ்மக்களிடையே சமய விழிப்புணர்வுக்கு சொற்பொழிவு பெரிதும் உதவும் என்பதை அநுபவபூர்வமாக அறிந்த அவர் தான் ஆற்றும் சொற்பொழிவுகள் மாத்திரம் போதாது என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ந்தார். தமிழகத்திலிருந்து குன்றக்குடி அடிகளாரையும் கவியோகி சுத்தானந்த பாரதியாரையும் பலமுறை வரவழைத்து தோட்டங்களில் சமய சொற்பொழிவுகளை நடத்துவித்தார்.

**– சாரல் நாடன்**
**எழுத்தாளர்**

இந்த மானிலம் பயனுற வாழவென்று தமிழீழத்தின் ஏழாலையிற் பிறந்து இலங்கையில் மட்டுமின்றி உலகில் தமிழர் எங்கெங்கு பரந்து வாழ்கிறார்களோ அங்கெல்லாம் சைவத்தையும் அதன் மூலம் தமிழையும் வளர்த்த சமயப் பெரியார் ஆத்மஜோதி நா.முத்தையா அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு கியூபெக் சைவமகாசபை அதிர்ச்சியடையும் அதே வேளை ஆற்றொணாத் துயராலும் அல்லலுறுகின்றது.

தன்கடன் அடியேனையுந் தாங்குதல்
என்கடன் பணி செய்து கிடப்பதே

என்று நவீன நாவுக்கரசராய் பிரமச்சரியம் காத்து தன் வாழ்வையே சைவத்திற்கும், தமிழிற்கும் சைவப்பணிக்குமென்று அர்ப்பணித்த ஒரு ஆலமரம் அடிசாய்ந்த செய்தி அனைத்துலக சைவசமயிகளையும் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டது.

சமகாலத்தில் சைவத்தின் கண்ணாய் மிளிர்ந்த தன்னலமற்ற சமயத்தொண்டன் எமன் வலையில் சிக்கியதை எண்ணி எண்ணிக் கலங்குகின்றோம். சைவத்தின் முத்தாய் விளங்கிய முத்தையாவின் ஆத்மா ஜோதியாய் இன்று ஆண்டவனோடு சங்கமமாகியதால் எத்தனை சைவ அடியார்கள், சைவப்பெரியார்கள், நண்பர்கள், அன்பாகள், ஆர்வலர்கள், எத்தனை அநாதைச் சிறுவர்கள், எத்தனை சீடர்கள் எத்தனை தேசங்களில் நெஞ்சுருகிக் கண்ணீரும் கம்பலையும் கலந்த வழிபாடு ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் ஆத்மாவைச் சாந்தியடையச் செய்யுமென நம்பி இறைவன் தாழ் பணிகின்றோம்.

கனடா வந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கியூபெக் சைவமகாசபை முயற்சியிலும் வளர்ச்சியிலும் இன்முகத்தோடு பங்குகொண்ட முத்தையாவே உங்கள் முத்தான வார்த்தைகளை ஜோதி வீசும் முகப்பொலிவை இனி என்றுதான் காண்போம் ஐயா!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**கியூபெக் சைவமகா சபை**
**மொன்றியல், கனடா.**

சிவமு ணர்த்து சைவநெறி சிறந்து வாழ்க!
சிறுவயது முதல் அருளின் சிந்தை தோய்ந்து
தவமுனிவர் மலரடிகள் தலைமேற் கொண்டான்!
தரணியுளோர் உய்யஅருட் பணிகள் கண்டான்!
அவமுறுமிவ் வாழ்வில்அரன் அடிகள் போற்றி
அறமுரைக்கும் முத்தையா ஆத்ம ஜோதி!
பவமதனை மாற்றுசிவ ஞானம் கூறப்
பணியாற்றும் அருட்பழமே, நீடு வாழ்க!

ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்த அப்பர்
அருள்வழியில் சமுதாயப் பணிகள் செய்வோன்
பூழிமிசை வாழும்வழி உணர்த்தி ஞானப்
புகழியர்கோன் போல்தமிழால் சிவம் வளர்ப்போன்!
யாழிசைத்த நாடுதித்து சைவம் காத்த
நாவலனின் வழிநின்று சீலத்தோடு
வான் விழியார் கூடுமண வாழ்வு மின்றி
வளர்பணியே வாழ்வாகக் கண்டோன் வாழ்க!

தளர்வுற்று வயதேறி முதிர்ந்த மேனி!
தளர்வறியா உளம் வையம் நலங்கள் மேய
உளம்விழைந்து பணியாற்றும் கா்மயோகி!
உயிர்குடிக்கும் குண்டுகளின் இடையில், ஈழம்
தழைத்துவிட, அமைதிபெற அழிவுநீங்க
தளராது தொடர்பாத யாத்தி ரைகள்!
வெளியுலகில் மேல்நாட்டுப் பயணம் இன்று!
வேதியனின் இன்னருளால் என்றும் வாழ்க!

**– சித்தாந்தரத்தினம்**
**க. கணேசலிங்கம் (பொறியியலாளர்)**
**குப்பிழான்**

ஈழநாட்டுத் தமிழர் பிரதேசங்கள் பற்றிய நுணுக்கமான விபரங்கள் தரும் நூல்கள் மிகக் குறைவாகவே வெளிவந்துள்ளன. மாவட்டங்கள் பற்றிய நூல்கள் சில வெளிவந்துள்ளனவெனினும் ஊர்கள் பற்றிய நூல்கள் வெகு அருமையாகக் காணப்படுகின்றன. அத்தகைய குறையினைப் போக்கும் வண்ணம் அமைந்ததே திரு நா.முத்தையா அவர்கள் எழுதிய ஏழாலை அப் பெயரிய நூல்.

**- பேராசிரியர் சு.வித்தியானந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980 களில் தென்மராட்சியில் மதமாற்ற அலை வேகமாக அடித்தது. பணத்திற்காகவும் சலுகைக் காகவும் பலர் கிறிஸ்தவர்களாக மாற முயன்றனர். அக்காலத்தில் நா. முத்தையா தனி ஒருவராக உழைத்தார். கிராமம் கிராமமாக பயணித்தார். சைவசமயப் பரப்புரைக் கூட்டங்களை நடத்தினார். தேவார திருவாசகங்களை ஓதுவித்தார். தென் மராட்சியில் மதமாற்ற அலையை முற்றாக முறியடித்தார். இதை நான் நேரடியாகப் பார்த்தேன். இத்தகைய பெரும் சாதனையாளர் அருளாளர் நா.முத்தையா.

**– மறவன்புலவு க. சச்சிதானந்தன்**

'மக்களுக்கு இன்று கடவுள் நம்பிக்கை இல்லை பக்தியுமில்லை. நீ சென்று நம்பிக்கையைப் பற்றியும் பக்தியைப் பற்றியும் பேசு,எழுது'

**– சுவாமி ஸ்ரீ சத்திய சாயி பகவான்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயப் பேரவையின் வெளியீடுகள்

| | |
|---|---|
| அகத்தியரும் விநாயகரும் | கவிஞர் வி. கந்தவனம் |
| முருகப்பெருமானும் அவ்வையாரும் | கவிஞர் வி. கந்தவனம் |
| சிந்தனைத் தேன் துளிகள் | மாதாஜி புலவர் சி. விசாலாட்சி |
| ஞானவிளக்கு | சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் |
| விநாயக வெண்பா | கவிஞர் வி. கந்தவனம் |
| விநாயக விருத்தம் | கவிஞர் வி. கந்தவனம் |
| சுவாமி சதானந்தர் நற்போதனை | தொகுப்பு: சபா சிவானந்தன் |
| கந்தனே கலியுகத்தில் கண்கண்ட தெய்வசம் | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| தெய்வீக வாழ்க்கை | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| முப்பெரும் சித்தர்கள் | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| திருமுறைக்காட்சி | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| கேதார பத்திரி யாத்திரை | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| கந்தக் கதம்பம் | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| மூன்றாவது கண் | இரசிகமணி கனக செந்திநாதன் |
| பயன்தரவல்ல திருமுறைப்பாக்கள் | சைவதுரந்தரர் வி. கந்தவனம் |
| மகான் காசிவாசி செந்திநாத ஐயர் | மூதறிஞர் க. சி. குலரத்தினம் |
| ஞானவிளக்கம் | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| நாவலர் வழியில் தமிழ் அறிஞர் | யோகேஸ்வரி கணேசலிங்கம் |
| ஈழத்துச் சித்தர்கள் | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| நிழலின் பின்னே மனிதன் | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| தரிசனம் | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| அர்ச்சனை மாலை | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| என்னை எனக்கறிவித்த எங்கள் குருநாதர் | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| திருமுறைக் கதைகள் | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| முத்தான தொண்டர் | கவிஞர் வி. கந்தவனம் |
| புதிய சைவ வினாவிடை (முதலாம் புத்தகம்) | கவிஞர் வி. கந்தவனம் |
| தங்கம்மா நான்மணிமாலை | கவிஞர் வி. கந்தவனம் |
| சிவயோக சுவாமிகள் அருள்மொழிகள் | மார்க்கண்டு சுவாமிகள் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


| | |
|---|---|
| பன்னிருமாத நினைவுகள் | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| கனடாவிற் சைவ சமயம் | கவிஞர் வி. கந்தவனம் |
| ஈழத்துச் சித்தர் குடைச்சுவாமி | பேரறிஞர் முருகவே பரமநாதன் |
| சைவத் திருமுறைகளின் விழுமியம் | பேரறிஞர் முருகவே பரமநாதன் |
| புதிய சைவ வினாவிடை (இரண்டாம் புத்தகம்) | கவிஞர் வி. கந்தவனம் |
| நல்லூர் நாற்பது | கவிஞர் வி. கந்தவனம் |
| யோகி ராம் சரத்குமார் | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| திருமுறைச்செல்வம் | சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் |
| தேவைக்கேற்ற திருமுறைத்திரட்டு | கவிஞர் வி. கந்தவனம் |
| விதியை வெல்வது எப்படி | கு. வைத்தியநாதன் |
| கந்தன் கதை | கவிஞர் வி. கந்தவனம் |
| குரு வழிபாடு | கவிஞர் வி. கந்தவனம் |
| மாணவருக்கு ஏற்ற மாண்புறு கதைகள் | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| புதிய சைவ வினாவிடை | கவிஞர் வி. கந்தவனம் |
| இந்தோனேசியாவில் இரண்டு வருடங்கள் | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| SAIVA SAINTS | KUMAR PUNITHAVEL |
| திருநின்ற செம்மை | சைவசித்தாந்த கலாநிதி க. கணேசலிங்கம் |
| உலக ஒழுக்கம் | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| திருவடிப் பெருமை | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| இலங்கையில் ஓர் இல்லற ஞானி | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| ஈழத்துச் சைவ சித்தாந்தப் பேரறிஞர்களும் | |
| சைவ சித்தாந்த தத்துவமும் | சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் |
| அருள்தரவல்ல திருமுறைப்பாக்கள் | திருமுறைச் செல்வர் சிவ முத்துலிங்கம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12 JUN 2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளமைக்காலத்தில்
ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org